# சங்கீத மும்மணிகள்

கனம் கிருஷ்ணையர்

கோபாலகிருஷ்ண பாரதியார்

மகாவைத்தியநாதையர்



3093

# சங்கீத மும்மணிகள்

கனம் கிருஷ்ணையர்

கோபாலகிருஷ்ண பாரதியார்

மகா வைத்தியநாதையர்

ஆசிரியர் :

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

**டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள்**

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட்நகர், சென்னை - 600 090

1987

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண் - 101

மறுபதிப்பு 1987 - 1200 பிரதிகள்

(C) மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட்நகர், சென்னை - 600 090

விலை : ரூ. 20

Printed at Vijay Print Services, Madras-600 034.

# INTRODUCTION

Dr. U. V. Swaminatha Aiyar was a legend in his own time. He bridged the age of traditional scholarship with that of modern, editing of literary classics and combined the depth and width of the former and the accuracy and critical perception of the latter. He was also one of the early writers of modern Tamil prose, with a style easy, simple and characteristically eclectic.

Dr. Aiyar was as much interested in music as in Tamil. Dr. Aiyar's interest in music was a part of his heritage. Ghanam Krishnaiyer was his grand-uncle. Dr. Aiyar's father Venkatasubbaiyer was himself a performing musician.

It occurred to him naturally to write the biographies of three of the great musicians-composers of the 19th century. Krishnaiyer was the earliest and he had specialised in the Ghana style of singing, full of depth and svaraprastara (akin to the Thanam style currently in vogue), enveloping the fullest range of the mandira, madhyama and Thara (lower, the middle and the upper octaves). It required intensive practice and voice-culture and physically so taxing, as there should be no movement of any limb or any part of the body while singing. The singing in full-throated ease and for long had to be nurtured by proper nourishment. Ghanam Krishnaiyer was a composer as well in Tamil, mostly *Padams* or songs with an erotic appeal, characteristic of the century. But there are songs of devotion especially on the deities in Kumbakonam and other places of pilgrimage. There are also songs on *Advaita* and his patrons like Kapistalam Ramabhadra Muppanar and the zamindars of Udayarpalayam. The Mahrata Raja of Tanjavur also patronised him and was instrumental in making Krishnaiyer undertake the study and practice of Ghanam style, to match an acknowledged master of that style Bobbili Kesavayya. While Ghanam Krishnaiyer specialised in this difficult form

of art, his compositions are couched in colloquial Tamil, with slangs and the meaning and content, as very justly and impartially pointed out by Dr. Aiyar himself, had little value or aesthetic beauty, so utterly unlike Thyagaraja's. But in the musical form and tunes set, they brought out the *Bhava* or the true characteristics of the (Raga) moods and the *murchana* or the *svara* differentias and *gamakas* or graces of the raga fully.

Ghanam Krishnaiyer and Gopalakrishna Bharati were both contemporaries of Thyagaraja and had paid obeisance to the master. Both of them were composers in Tamil. Gopalakrishna Bharati's style too adopted simple, spoken Tamil, and where appropriate the slang and the idiom of the characters whose sentiments the songs expressed. But his diction was distinctly superior to Krishnaiyer's and the content and meaning intensively sincere, full of devotion, especially when invoking his favourite deity Nataraja. Bharati's command of Tamil was as facile as his musical form and tune-setting was moving. Here, the form and content matched, merged and got consummated.

He was particularly performing Kathas or musical expositions or discourses on the Nayanmars (the Saiva apostles) for which drawing freely from the Periya Puranam of Sekkizhar, he himself composed several pieces. Of these the most favourite and popular was the story of Nandanar, the Harijan devotee of Nataraja. The dialogues in verse between Nandan and his caste elders, and that between him and his intolerant Brahmin landlord are full of repartees, humorous sometimes, philosophical and sublime at other times, but always stirring and striking in its phrasing. He composed similar songs on Tiruneelakanta Nayanar and others; but some of them have not survived. The merit of his Tamil compositions both in the musical form and content can compare favourably with those of Thyagaraja who had greatly appreciated Bharati's devotional songs. He had also adopted Hindustani tunes which he had imbibed from his Guru, Ramadas of Thiruvidaimarudur.

He had lived for a ripe old age of 95, a bachelor and a man of great worldly wisdom which seeps through his songs. He also composed light verses for festivals, domestic auspicious ceremonies, easy to memorise and repeat for the children. Dr. Aiyar's father had noticed Aiyar's interest in music and inducted him as a disciple of Bharati; but he had to discontinue it on account of the firm decision of his Tamil preceptor Mahavidvan Minakshisundaram Pillai to choose between Tamil and music as one muse could not tolerate the other's votary.

Maha Vaidyanatha Sivan was a senior contemporary of Dr. Aiyar and was in some respects his preceptor. Sivan and his elder brother Ramaswami were both great scholars in Tamil and Sanskrit, and also underwent discipleship under Manambuchavadi Venkatasubbaiyer, a direct disciple of Thyagaraja. The Sivans too, like Gopalakrishna Bharati composed songs for musical discourses mainly on Saiva devotees and saints and occasionally for Harikatha or on devotees of Vishnu. Maha Vaidyanatha Aiyar was a great genius, precocious even when young and mastered the 72 Melakarta scheme of Karnatic music originally adumbrated by Venkatamakhin, and later developed by Govinda with modifications Sivan's *magnum opus* was a Sanskrit composition with appropriate svaras subjointed on every one of the 72 melakartas, ragas in chakras, with the lakshanas and the name of every raga incorporated within. They are as it were a grammar of music set to musical tune and the quick changes in the svaras and anusvaras and plain notes occurring in between would demonstrate the dexterous mastery of the composer, and the difficult and arduous practice required of the performer. He always began his concerts invoking his favourite deity, Pranatarthihara of Tiruvayyaru. He hailed from a nearby village Vaiyaicheri, famous for musical savants. The brothers were composers of a number of Tamil songs as well, full of rhythm and rhyme, of *Edugai* and *Monai*, or concatenation oflines in verse or a part of it having the same or corresponding assonant letters. The diction is full of *Prasas*, or appro-

priate felicity of expression and sound-patterns and combined with the tune and the tonal effect of Sivan's voice, which his arduous practice and austere life had gifted him with, left the audience spell-bound. Sivans were (like Dr. Aiyar himself) patronised by the heads of Tiruvavaduturai Adhinam and the zamindars of Ramnad and the Maharajas of Travancore and Mysore. His accompanists like Tirukkodikaval Krishnaiyer (Violin) and Narayanaswami Appa (Mridhangam) had left legacies in musical tradition. Purity in style, fidelity to the Karnatic musical tradition, Tamil diction of a high order impregnated with devotion to Siva and Ambika were characteristics of his composition. A straight and direct delving into the life-breath (*murchana*) of the Raga and an exposition of its range in all the reaches full of originality and depth were his traits as a performing musician. He was a beacon for generations to come. Dr. Aiyar had special attachment to the Sivans for their profound learning in Tamil and *impromptu* improvisation in verse they could often indulge in.

The three biographies revive not the memories, but the experience of an age of musical excellence that Dr. Aiyar has had. He has brought out the personalities with an authentic vividity born of his personal association with the latter two and the family-traditions and memories regarding the first.

Dr. Aiyar has woven the biographies of these three great savants of an age to recall, with Tamil as its warp and music as its woof. The fabric is enriched by his personal memories and incidents which embroider his account.

R. TIRUMALAI,
Chairman
Dr. U.V.S. Iyer Library

Madras,
21st March 1987

உ

# பதிப்பாளர் குறிப்பு

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய் ; எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகல கலாவல்லியே !

— குமரகுருபரர்

பழங்காலத்தில் தமிழ்ச்சங்கங்களில் முத்தமிழையும் ஆராய்ந்து வந்தனர். இசைத்தமிழ் ஆராய்ச்சியும், இசைப் பயிற்சியும் அக் காலத்தில் இயல் நாடகங்கள்போல மிகச்சிறப்புடன் விளங்கின. இசைத் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டுப் பல இசைவல்லுனர்கள் இசைத்தமிழை வளர்த்து வந்தார்கள் என்று தெரிகிறது. ''ஏழிசைச் சூழல்புக்கோ'' எனவரும் திருச்சிற்றம்பலக்கோவை யாரால் இசைச்சங்கங்களும் இருந்தன என்று தெரிகிறது. சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுகாதையின் மூலம் இசை யைப்பற்றி அறியலாம். கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை ஆகிய பாடல்கள் பண்ணோடு பாடப்பட்டவை. பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் ஐவகை நிலங்கட்குரிய யாழ்களும், பண்களும் கருப்பொருள்களாகக் கூறப்பட்டுள்ளன. இசைப்பகுதியில் கந்தர்வமார்க்கம் என்ப தொன்றுண்டு. இடைமடக்காகப் பாடப்படுவது அது. காந்தர்வ சாத்திரம் என்று சங்கீத சாத்திரத்திற்குப் பெயர்.

இசையும் தமிழும் கலந்த குடும்பத்திலே பிறந்தவர் ஐயர வர்கள். ஐயரவர்களுடைய தந்தையாருடைய ஆசாரசீலமும், சிவபூசையும், பரிசுத்தமும், சங்கீதத் திறமையும் அவரைத் தெய்வ மாக எண்ணும்படி செய்தன. ''எப்போதும் சிவபக்தி பண்ணிக் கொண்டிரு'' என்னும் தாரக மந்திரத்தை ஐயரவர்கள் தந்தை யார் உபதேசித்ததை ஐயரவர்கள் வாழ்நாள் முழுவதும் கடைப் பிடித்தார்கள் என்பதை அவருடைய நாட்குறிப்பிலிருந்து அறிய லாம்.

**கனம் கிருஷ்ணையர்** 19-ஆம் நூற்றுண்டில் தமிழ்நாட்டில் புகழ்பெற்ற இசைப்புலவர்களுள் ஒருவர். கனம் கிருஷ்ணையர் ஐயரவர்களுடைய தந்தையாரின் அம்மான் பாட்டனுர் (தந்தை யாரின் தாயாரின் அம்மான்). இவருடைய இயற்பெயர் **கிருஷ்ணை யர்** என்பது. சங்கீத மார்க்கங்களாகிய கனம், நயம், தேசிகம்

என்னும் மூன்றனுள் ஒன்ருகிய கனமார்க்கத்தை மிக்க ஊக்கத் துடன் பயிற்சி செய்து அதிற்சிறந்த திறமையைப் பெற்ருர். இவர் இளமையில் தம் தந்தையாரிடத்திலும், தஞ்சாவூர் சமஸ்தான சங்கீத வித்துவாஞக இருந்த பச்சைமிரியன் ஆதிப்பை யரிடத்திலும் சங்கீதம் பயின்ருர். பிறகு சிலகாலம் தஞ்சாவூர் சமஸ்தானத்துச் சங்கீத வித்துவான்களுள் ஒருவராஞர். பொப்பிலி கேசவையாவிடம் கனமார்க்கத்தின் இயல்புகளையும் அதனைச் சார்ந்த சக்கரதானத்தைப்பாடும் முறையையும் தெரிந்து கொண்டு கபிஸ்தலம் சென்று இராமபத்திர மூப்பஞருடைய ஆதர வில் பயிற்சி செய்ய ஆரம்பித்தார். அந்தப் பயிற்சி முதிர்ச்சி யடைந்து தஞ்சை அரசர் முன்னிலையில் பொப்பிலி கேசவையாவே வியக்கும்படி பாடிக்காட்டி, அது முதல் இவர் **கனம் கிருஷ் ணையர்** என்றே வழங்கப்பெற்ருர். திருவையாறு சென்று ஸ்ரீ தியாகையரைக் கண்டு அளவளாவி அவர் விருப்பப்படி அடாணு ராகத்தில் ''சும்மா சும்மா வருகுமா சுகம்'' என்னும் கீர்த்தனம் ஒன்றை இயற்றியிருக்கிருர்.

**கோபால கிருஷ்ண பாரதியார்:-** ஐயரவர்களை அவர் தந்தையார் மாயூரத்திற்கு அழைத்துச் சென்று திரிசிரபுரம் மகா வித்துவான் மீஞட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் கல்வி கற்க ஒப்படைத்துவிட்டு மூன்று நாட்கள் மாயூரத்திலேயே தங்கி யிருந்தார்; அப்போது வீதிவழியே கோபாலகிருஷ்ண பாரதியார் சென்று கொண்டிருந்ததைப் பார்த்துப்பேசி ஐயரவர்களை அறி முகப்படுத்தி வைத்தார். பாரதியார் ஐயரவர்களுக்குச் சங்கீதத்தில் எந்த அளவு பயிற்சி செய்து வைத்திருக்கிறீர்கள்? கனம் தனங்கள் வருமா என்று கேட்க, அவரும் எனக்குத்தெரிந்தவை களைச் சொல்லிக் கொடுக்கிறேன் என்று சொல்ல, உடனே பாரதியார் ''குசும குந்தளாம்பிகையே'' என்ற கீர்த்தனத்தைப் பாடச்சொல்ல ஐயரவர்களும் பாடிஞர்கள். அன்று முதல் பாரதி யாரோடு பழகும் வாய்ப்பு ஐயரவர்களுக்கு ஏற்பட்டுப் பல கீர்த்த னங்களைக் கற்றுக் கொண்டார்கள். நந்தஞர் சரித்திரக் கீர்த்தனங் களுக்கு உரிய மெட்டையும் ராக தாளங்களையும் பாரதியார் சொல்லிக் காட்டிஞர். பாரதியார் இயற்றியுள்ள இசைநூல்களுள் நந்தஞர் சரித்திரக் கீர்த்தனைகள் இன்றும் எல்லோராலும் பாடப் பட்டு வருகின்றன. பாரதியார் ஐயரவர்களின் தந்தையாருக்கு முக்கியமான நண்பர். தாது வருஷத்தில் ஏற்பட்ட பஞ்சகாலத் தின்போது வேதநாயகம்பிள்ளை செய்த தர்மச்செயலைக் கண்ட பாரதியார் மனமகிழ்ந்து வேதநாயகம்பிள்ளை மீது ''நீயே புருஷ மேரு'' எனத் தொடங்கும் ஒரு கீர்த்தனத்தை இயற்றிஞர்.

பாரதியார் பாடிய கீர்த்தனங்களுள் இஃதொன்றே நரஸ்துதியாக அமைந்துள்ளது. இதன் மூலம் பாரதியாரின் பரந்த மனப் பான்மையைத் தெற்றென அறியலாம்.

**மகா வைத்தியநாதையர்:-**

சுப்பிரமணியதேசிகர் அவர்கள் முன்னிலையில் சங்கீத வித்து வான்கள் வந்து வினிகை நடத்துவார்கள். அவரவர்கள் ஆற்றலுக்கு ஏற்றபடி சம்மானங்கள் செய்து கௌரவப்படுத்துவார்கள். ஐயர வர்கள் சங்கீதத்தில் நல்ல பயிற்சியுடையவர் என்பதைத் தேசிகர வர்கள் அறிந்தவராதலின் சங்கீத வித்துவான்களைப்பற்றிப் பல அரிய செய்திகளைச் சொல்லுவார்கள். ஒருநாள் ''மகாவைத்திய நாதையரைத் தெரியுமோ?'' என்று தேசிகரவர்கள் கேட்டார்கள். ''அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; நேரே பார்த்த தில்லை'' என்று ஐயரவர்கள் சொன்னார்கள். தேசிகர் அவர்கள் ''நீர் அவசியம் பார்த்து அவருடன் பழக வேண்டும். இந்த மடத்திற்கு வேண்டியவர்களுள் அவர் முக்கியமானவர். தமிழ் விஷயத்தில் பிள்ளையவர்கள் எப்படியோ அப்படியே சங்கீத விஷயத்தில் அவரைச் சொல்லவேண்டும். அவர் தமிழிலும் நல்ல பயிற்சியுடையவர்'' என்று சொன்னார்கள். ''ஒருநாள் கல்லிடைக்குறிச்சியில் மகாசபை கூட்டிப் பெரிய வைத்தியநாதை யர், சின்னவைத்திய நாதையர், வையை வைத்தியநாதையரையும் பாடச்சொன்னோம். மற்றவர்களைவிட வையை வைத்தியநாதை யருடைய சக்திதான் சிறந்ததாக இருந்தது. அவையில் இருந்த எல்லோருமே ஒப்புக்கொண்டு 'மகா' என்ற பட்டம் அளிக்கப் பெற்று அன்று முதல் **மகா வைத்தியநாதையர்** என அழைக்கலாயினர்'' என்று தேசிகரவர்கள் ஐயரவர்களுக்குக் கூறினார்கள். மேலும் சுப்பிரமணியதேசிகரவர்கள் மகாவைத்திய நாதையரைப்பற்றி ஐயரவர்களிடம் கூறும்போது 'சாதகம் மாத்திரம் போதாது என்பது உண்மைதான். அவர் நல்ல சிவபக்தர். சிவ கிருபை அவருக்கு நல்ல சாரீரத்தை அளித்திருக்கிறது. அவர் செய்துவரும் அப்பியாசம் அந்தச் சாரீரத்திற்கு வளப்பத்தைத் தருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது தூய்மையான ஒழுக் கம் அந்தத் திவ்விய சாரீரத்தின் அழகு கெடாமல் பாதுகாக்கிறது' என்று சொல்லிவிட்டு 'அவர் தமிழறிவு புலப்பட்டிருக்குமே' என்றார். மகா வைத்தியநாதையரைப் பார்ப்பதே ஐயரவர்களுக்கு மகிழ்ச்சி யாக இருந்தது. அவர் முகத்திலே இருந்த ஒளியும் அமைதியும் அவர் உள்ளத்தின் இயல்பை விளக்கின. அவருடைய இசையைக் கேட்கும் வாய்ப்பு ஐயரவர்களுக்கு ஏற்பட்டது. அது முதற்கொண்டு

அவரோடு பழகும் வாய்ப்பு ஐயரவர்களுக்குக் கிடைத்தது. அவர் திருவாவடுதுறை மடத்திற்கு வரும் பல சங்கீத வித்துவான் களுடையகோஷ்டியில் ஒரு சூரியனைப் போல் விளங்கினார்.

ஐயரவர்கள் இத்தகைய சிறந்த மூன்று இசைப்புலவர்களு டைய வரலாற்றை தனித்தனியே 1936-ஆம் ஆண்டில் முதன் முறையாக வெளியிட்டார்கள். இம்மூவருடைய வரலாற்றை யும் அறிய ஆவல் கொண்டு பல காலமாகத் தமிழன்பர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றாக இணைத்து ஐயரவர்கள் கொடுத்த தலைப்புப்படி **''சங்கீத மும்மணிகள்''** என்ற பெயரில் வெளியிடலானோம். ஸ்ரீ தியாகையர், சாமாசாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் இவர்களைச் **சங்கீதமும்மூர்த்திகள்** என்று குறிப்பிடுவது போலவே கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ணபாரதியார், மகா வைத்தியநாதையர் இவர்களுக்குச் **சங்கீத மும்மணிகள்** என்று ஐயரவர்கள் பெயர் சூட்டியுள்ளார்கள்.

ஐயரவர்களுடைய அடிச்சுவட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் நூல்நிலையம் இம்மூவருடைய வரலாற்றையும் அவர்களுடைய 133-ஆவது பிறந்தநாளில் வெளியிடுகிறது. ஐயரவர்கள் கிட்டத் தட்ட 400 சங்கீதவித்துவான்களைப்பற்றிக்குறித்து வைத்துள்ளதை நூல்நிலையவெளியீடாகக் கூடிய விரைவில் வெளியிடக்கருதி யுள்ளோம்.

இந்நூலை அச்சிட ஊக்கம் அளித்த நிர்வாகக்குழுத்தலைவர் அவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் நன்றி. நல்லமுறையில் இதனை அச்சிட்டுக் கொடுத்த விஜய் பிரின்ட் சர்விஸெஸ் உரிமையாளர் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறைப் பிரிவு
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

சென்னை-90
2-3-1987

## பொருளடக்கம்


**கனம் கிருஷ்ணையர்**

| | |
|---|---|
| ஐயரவர்களின் முகவுரை | 1 - 4 |
| கனம் கிருஷ்ணையர் வரலாறு | 5 - 42 |
| கீர்த்தனங்கள் | 43 - 89 |
| கீர்த்தன உருப்படிகளின் அகரவரிசை | 90 - 94 |

**கோபாலகிருஷ்ண பாரதியார்**

| | |
|---|---|
| ஐயரவர்களின் முகவுரை | 95 - 96 |
| கோபாலகிருஷ்ண பாரதியார் வரலாறு | 97 - 159 |
| கீர்த்தனங்கள் | 160 - 176 |
| கீர்த்தனங்களின் முதற்குறிப்பகராதி | 177 |

**மகா வைத்தியநாதையர்**

| | |
|---|---|
| ஐயரவர்களின் முகவுரை | 178 |
| மகா வைத்தியநாதையர் வரலாறு | 179 - 234 |

| | |
|---|---|
| சிறப்புப் பெயர்கள் முதலியன | 235 - 236 |



டாக்டர் ஐயரவர்கள்

**1855 - 1942**

# முகவுரை

தமிழ்நாட்டில் கர்நாடக சங்கீதத்தை நிலைநிறுத்துவதற்குக் காரணராக இருந்த பெரியார்கள் பலர். அவர்களுள்ளே சிலருடைய வரலாறுகள் சிலரால் எழுதி வெளியிடப்பட்டிருக் கின்றன. இக்காலத்தில் சங்கீத சம்பந்தமான ஆராய்ச்சியும், சங்கீத சபைகளும், சங்கீதக் கலாசாலைகளும், சங்கீதப்பரீக்ஷை களும் நாடெங்கும் அதிகரித்து வருகின்றன. சங்கீத வித்துவான் களுடைய வரலாற்றை அறிவதிற் பலர் விருப்பத்தோடு முயன்று வருகிறார்கள்.

என் முன்னோர்கள் சங்கீதத் தொடர்புடையவர்களாதலி னாலும், என்னுடைய தந்தையாரும் சிறிய தந்தையாரும் சங் கீதத்திலேயே தங்கள் வாழ்நாளை ஈடுபடுத்தினவர்களாதலினாலும், இளமையிலிருந்து சங்கீத சம்பந்தமான விஷயங்களையும் சங்கீத வித்துவான்களைப்பற்றிய செய்திகளையும் நான் அறிவதற்கு வாய்ப்பு இருந்தது. நானும் இளமையிற் சங்கீதப்பயிற்சி பெற்ற வனாதலின் தமிழ்த்தெய்வத்தின் வழிபாடு செய்துவரும் காலத் திலும் சங்கீதத்தை மறந்தேனல்லன். திருவாவடுதுறை யாதீனம், திருவண்ணாமலையாதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், இராமநாதபுரம், உடையார்பாளையம், ஊற்றுமலை முதலிய இடங் களிலுள்ள பழக்கத்தினால் அங்கங்கே நிகழும் விசேஷகாலங்களிற் சென்று பல சங்கீத வித்துவான்களோடு பழகி அவர்களுடைய இசைவிருந்தை நுகரும்பேறு எனக்குக் கிடைத்ததுண்டு. இவ் வளவும் சங்கீதத்தொடர்பு என்பால் விடாது அமைவதற்குக் காரணங்களாயின.

நான் பிரசங்கம் செய்யுங்காலங்களிலும், பாடஞ்சொல்லுங் காலங்களிலும், அன்பர்களோடு பேசும் காலங்களிலும் இடை யிடையே சங்கீதவித்துவான்களைப்பற்றிய செய்திகளைச் சொல்ல நேரும். அவற்றைக்கேட்ட அன்பர்கள் பலர் அவற்றைத் தொகுத்து வெளியிட்டால் யாவருக்கும் பயன்படுமென்று கூறினார்கள். ஆதலின் சில இசைப்புலவர்கள் வரலாறுகளை, **'கலைமகள்'** என்னும் தமிழ்ப்பத்திரிகையின் வாயிலாக வெளியிட்டுவந்தேன். அவ்வரலாறுகளுள் ஒன்றே இப்பொழுது தனியே இப்புத்தக வடிவிற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இச்சரித்திரத்தலைவரான கனம் கிருஷ்ணையரவர்கள் என் தகப்பனாரவர்களுடைய தாயாரின் அம்மானவர். அவரைப்பற்றி என் தந்தையாரவர்கள் பலபடப் பாராட்டிப் பேசுவார்கள்.

அவருடைய கீர்த்தனங்களைப் பாடி மனம் உருகுவார்கள். அவர்கள் பால் அக்கீர்த்தனங்களைக்கேட்டு மனனம்செய்து பாடிய பலரை எனக்குத் தெரியும். இந்த வரலாற்றை எழுதியதற்குத் துணையாக இருந்தவை எந்தையாரவர்கள் அவ்வப்போது கூறி வந்த செய்திகளும் என் சிறியதந்தையார் குறித்துவைத்த சில குறிப்புக்களுமேயாகும்.

கனம் கிருஷ்ணையருடைய கீர்த்தனங்களில் சில இப்போது வழங்கிவருகின்றன. அவற்றிற்கு அக்காலத்தில் இருந்த மதிப்பு அதிகம்; இப்பொழுதும் சிலர் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர் களாக இருக்கிறுர்கள். தஞ்சாவூர் ஆதிமூர்த்தி ஐயர் போன்ற பலர் அக்கீர்த்தனங்களைப் பாடி இன்புறுவதை நான் நேரிற் கேட்டிருக் கிறேன். என் சிறிய தந்தையார் தம்முடைய கீர்த்தன புஸ்தகத்தில் எழுதி வைத்திருந்த கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்களை இச்சரித் திரத்தோடு சேர்த்து வெளியிட்டிருக்கின்றேன். என் தந்தையார் இருந்த காலத்தில் இக்கீர்த்தனங்களைத் தொகுப்பதில் எனக்கு விருப்பம் இருந்திருப்பின், இன்னும் பலவற்றைச் சேர்த்திருக்கலாம். அக்காலத்தில் இவற்றின்பால் என் கருத்துச் செல்லவில்லை. முதுமை மிகமிகப் பழம் பொருள்களினிடத்தே மதிப்பு அதிகரிக் கின்றது. பழம்பொருளைப் பழைய உருவத்திலே வெளியிடல் என் நோக்கமாதலின் இக்கீர்த்தனங்களை உள்ளவாறு வெளியிட்டேன். தமிழ்க்கீர்த்தனங்களின் வரலாற்றை ஆய்பவர்களுக்குச் சில செய்திகளை உதவுமளவிலாயினும் இவை பயன்படுமென்பது எனது கருத்து. இவற்றை நான் பாடும்பொழுதும், பிறர் பாடக் கேட்கும்பொழுதும், பொருள் தெரியாத வேறுபாஷைக் கீர்த்தனங் களைப் போலவே எண்ணிக்கொள்வேன். பொருளிற் கருத்துச் செல்லின் இவை ஒன்றுக்கும் உதவாதனவென்பதை அறிவேனு யினும் மெட்டின் அமைப்புமுறை சங்கீத அளவில் ஒரு மேல்வரிச் சட்டமாக இருத்தலின் முற்றிலும் புறக்கணிக்கக் கூடவில்லை.

இக்கீர்த்தனங்களிற் சிலவற்றை முன்பு கலைமகளில் வெளியிட்ட போது முன்னுரைகளாகச் சில எழுதியிருந்தேன். அவை வருமாறு:—

தமிழ்க் கீர்த்தனங்களிற் பெரும்பாலன இயற்றமிழ் இலக்கண அமைதியில்லாதனவாக இருக்கின்றன. சங்கீதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பெரியோர்களிற் பலர் தம்முடைய முழுநோக்கத் தையும் சங்கீதத்திலேயே நிறுத்திவிடுவதால் அவர்களுடைய இயற்றமிழறிவு சுருங்கியதாக அமைகின்றது. தாமே கீர்த்தனங் களை இயற்றும் பல சங்கீதவித்துவான்கள் எதுகையும் மோனையும்

பொருத்தமாக இருந்தால் போதுமென்ற அளவிலே தங்கள் கீர்த்தனங்களை அமைத்திருக்கின்றனர். சிலரே இயற்றமிழறிவும் நன்கு பெற்று நன்மணம்பெற்ற பொன்மலர்போன்ற கீர்த்தனங்களை இயற்றியுள்ளார்கள். கனம் கிருஷ்ணயருடைய கீர்த்தனங்களில் இலக்கணப் பிழைகள் உள்ளன. வாக்கியமுடிபுகள் சரியாக இரா. ஒருமை பன்மைகள் மயங்கிவரும். இவ்வளவு குறைபாடுகள் உடையனவாக இருப்பினும் அவற்றின் வர்ணமெட்டுக்கள் அருமையான அமைப்பை உடையன; சங்கீத வித்துவான்களால் பெரிதும் பாராட்டப்படுவன. ஆதலால், இக்கீர்த்தனங்களைச் சங்கீதக்கண் கொண்டு பார்ப்பதோடு நிற்றல் நலம். தமிழ்ச் சாகித்தியங்களில் இவற்றைப் போன்ற சங்கீதப் பொருத்தமுள்ள கீர்த்தனங்கள் மிகச் சிலவே.

கனம் கிருஷ்ணயர் கீர்த்தனங்களில் உலகவழக்குச் சொற்களும் பழமொழிகளும் பயின்றுவரும். 'குத்திரமும் குடிலமென்றும் தன்தலையில் எழுத்தென்றும் குமுறிக்குமுறி உருகுருள் மிகவாடி' என்பது இலக்கண அமைதியில்லாவிடினும் பெண்பாலார் தங்களுக்குள் பேசும் பேச்சுக்களை அந்த அந்த உருவத்திலேயே வெளியிடும் ஆற்றல் இவருக்குண்டென்பதைக் காட்டுகின்றது. 'வாட்டுதே லூட்டி கோட்டி கொள்ளுதே' என்பதிலுள்ள 'லூட்டி' என்ற சொல்லையும், 'வல்லே வல்லே யென்று பார்க்க' என்பதிலுள்ள 'வல்லே வல்லே' என்ற தொடரையும் உலக வழக்கிலே தான் காணலாம்.[1]

ஸ்தல சம்பந்தமான கீர்த்தனங்களில் அந்த அந்த ஸ்தல விஷயங்களை அமைக்கும் இயல்பு இவர்பால் இருந்ததை, 'பாரசகலமும்' என்ற கீர்த்தனம் வெளியிடுகிறது. சாரநாதர், சாரவிமானம், சாரபுஷ்கரிணி, சாரநாயகி, சாரக்ஷேத்திரமென்னும் பஞ்சசாரங்களும் திருச்சேறைக்குரியவை; இவற்றை அக்கீர்த்தனத்திற் காணலாம்.

சங்கீதத்துக்குரிய சாஹித்தியங்களில் தெலுங்குக் கீர்த்தனங்களே பிற்காலத்தில் அதிகமாகத் தமிழ்நாட்டிலே பரவின. தமிழ்பேசும் குடும்பத்திற் பிறந்த சங்கீத வித்துவான்கள் கூடத் தெலுங்கிலே கீர்த்தனம் செய்வதை ஒரு பெருமையாகக் கருதி வந்தார்கள். இதற்கு சாமாசாஸ்திரிகள், பட்டணம் சுப்பிரமணிய

---

[1] செறுக்கி, கிட்டே, ஏகாடம், சக்கந்தம், நின்னையா, உடந்தை, ஒயில், வாடிக்கை, என்னமோ, வ்ரட்டும், பெரட்டு, தோதகம், ஆணிக்கை, வருகுமோ, மேடி, தாரிபாரி, மேட்டிமை என்பனவும் இவ்வகையைச் சார்ந்தனவே.

ஐயர் முதலியவர்களே சாக்ஷி. பாபநாசமுதலியாருக்கும் தெலுங்கினிடத்திற் பிரியமிருந்ததை அவர் இயற்றிய **கும்பேசர் குறவஞ்சி**யால் அறியலாம். அந்தக் குறவஞ்சியிற் பல பாட்டுக்கள் ஒரு பகுதி தமிழும், ஒருபகுதி தெலுங்கும் உடையனவாக இருக்கின்றன. தமிழிலே கீர்த்தனங்கள் இயற்றியவர்கள் கூடத் தெலுங்குக் கீர்த்தனங்களிலே அதிகமாகப் பயிலும் சொற்களையும் சொற்றொடர்களையும் தங்கள் பாட்டுக்களில் அமைத்து வந்தார்கள். சொந்தமாக, சொகுசாய்[1] என்பன போன்ற சொற்களைப் பின் கீர்த்தனங்களிலே இவர் அமைத்திருத்தல் இந்த வழக்கை ஒட்டியதேயென்று தோற்றுகிறது.

'தமிழ் நாட்டு இசைப்புலவர்கள் தமிழில் கீர்த்தனங்களைப் பாடுவதில்லை. பயிலுவிப்பதுமில்லை' என்று சில அன்பர்கள் என்னிடம் அடிக்கடி சொல்வதுண்டு. இக்குறையை இக்கீர்த்தனங்கள் ஒருவாறு நீக்கலாமென்ற நோக்கமே கனம் கிருஷ்ணையருடைய சரித்திரத்தை அவருடைய கீர்த்தனங்களுடன் இப்போது வெளியிட்டதற்கு ஒரு காரணமாகும். சங்கீதம் பயிலும் மாணவர்களும் மாணவிகளும் இக்கீர்த்தனங்களைப் பயின்று பயனுறுவார்களானால் எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கும்.

இதைப்போலவே, நந்தன் சரித்திர ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதியாருடைய சரித்திரத்தையும் அவர் இயற்றிய சில கீர்த்தனங்களோடு வெளியிட்டுள்ளேன்; மகாவைத்திய நாதையர் சரித்திரமும், தனியே வெளிவரும். வேறு சிலருடைய வரலாறுகளையும் எழுத எண்ணியிருக்கின்றேன், இறைவன் திருவருள் துணையிருந்து நிறைவேற்றுவதாகுக.

| | |
|---|---|
| ''தியாகராஜ விலாசம்'' | இங்ஙனம் |
| திருவேட்டீசுவரன்பேட்டை | |
| 16—6—1936. | **வே. சாமிநாதையர்** |

---

[1] கோரும், புன்னமாசந்திரன், மரியாதையென்பவற்றையும் பார்க்க

# கனம் கிருஷ்ணையர்

தாமே முயன்று தம்மை நல்லநிலைக்குக் கொண்டுவந்து புகழ்பெற்றவர்களுள் கனம் கிருஷ்ணையர் என்னும் பெரிய சங்கீத வித்துவான் ஒருவராவர். சங்கீதத்தில் உள்ள கனம், நயம், தேசிகம் என்னும் மூன்றுவகைகளுள் கனம் என்பதில் ஒப்புயர் வற்ற தேர்ச்சி பெற்றதனுல் இவருடைய பெயர் கனமென்னும் அடைமொழியோடு கூடி வழங்கி வரலாயிற்று. இவருடைய காலத்தில் தமிழ் நாட்டில் கனமார்க்கத்தைச் சிறிதளவு பயின்ற வர்கள் கூட மிகச் சிலரே இருந்தார்கள். இளமையிலிருந்து தொடர்ந்து சாதகம் பண்ணிவருபவர்களுக்கே அது கைகூடி வரும். அவ்வழியில் தனிமுயற்சியை மேற்கொண்டு எண்ணியதை எண்ணியபடியே எய்திய மனத்திண்மையை உடையவர் கனம் கிருஷ்ணையரானவர். இவர் இருந்தகாலம் ஏறக் குறைய நூறு வருஷங்களுக்கு முன்னதாகும்.

கிருஷ்ணையர் திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம் தாலூகாவில் உள்ளதாகிய திருக்குன்றமென்னும் ஊரிலே பிறந் தவர்; ஸ்மார்த்தப் பிராமணர்களுள் [1]அஷ்டஸஹஸ்ர வகுப் பினர்; அந்த வகுப்பிலே அத்தியூர்ப் பிரிவைச் சார்ந்தவர்.

## திருக்குன்றம்

திருக்குன்றமென்பது குன்றைவள நாட்டின் தலைநகராகும். அது மிகவும் பழமையானதோர் ஊர். அங்கே ஒரு பழைய சிவாலயமும் விஷ்ணுகோயிலொன்றும் உண்டு. திருவிடைமரு தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி யிடத்தும் பிருகத்குசாம்பிகையிடத்தும் இடையருத அன்புடைய ஒருவருக்கு அவ்வூரில் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி அம்பிகையுடன் காட்சி யளித்தனரென்று கூறுவர்; அதற்கு அறிகுறியாக அங்குள்ள சிவ பெருமான் திருநாமம் ஸ்ரீ மகாலிங்கம் அல்லது மருதீசரென்றும் அம்பிகையின் திருநாமம் பிருகத்குசநாயகி யென்றும் வழங்கும். முன்பு மருத விருட்சம் ஒன்று இருந்ததென்பர்; இப்பொழுது அதுகாணப்படவில்லை. அவ்வூர் விஷ்ணுவாலயத்திலுள்ள பெரு மாளின் திருநாமம் ஸ்ரீ சௌந்தரராஜரென்பது. சிவாலயம் விஷ்ணு வாலயம் இரண்டிற்கும் பண்டைக் காலத்தில் இறையிலி நிலங்கள்

---

1 எண்ணுயிரத்தவர் என்றும் சொல்லுவார்கள்.

(சர்வமான்யம்) மிகுதியாக இருந்தனவென்றும் நித்திய நைமித்தியங்கள் விமரிசையாக நடந்துவந்தனவென்றும் பெரியோர் சொல்லுவர். மருதீசருக்குத் தைப்பூசத்திலும் வருஷப்பிறப்பிலும் திருவிழா நடைபெறுவதுண்டு.

அவ்வூரின் தென்பால் மருதயாறென்னும் பெயருள்ள நதியொன்று ஓடுகிறது; தமிழ் இலக்கண நூல்களில் செந்தமிழ் நாட்டிற்கு எல்லையாக வழங்கப்படும் மருதயாறு அதுவேயாகும். அந்நதி மருதீசருக்கு உரியதென்பர்.

உத்தண்டரென்ற ஐயனருடையகோயில் ஒன்று அங்கே இருக்கிறது. அந்த ஐயனர் மிகவரதராக விளங்குகிருர். அவரைக் குலதெய்வமாகக் கொண்ட சைவவணிகர் பல்லாயிரவர் முன்பு அங்கே வாழ்ந்து வந்தார்கள்; பிற்காலத்தில் வரவர நகரம் வளங் குன்றினமையாலும் தங்கள் தங்கள் தொழிலை விருத்திசெய்து கொள்ள எண்ணினமையாலும் அவர்கள் கும்பகோணம், நாகபட்டினம் முதலிய நகரங்கட்குச் சென்று வாழ்ந்து வருவாராயினர். அவர்களிற் கப்பல் வியாபாரிகளும் உண்டு. அவர்கள் வருஷந் தோறும் தவருமல் அங்கேவந்து அந்த ஐயனருக்கு அபிஷேகம் முதலியன செய்வித்துத் தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொண்டு செல்லுவது இப்போதும் வழக்கமாக இருக்கிறது. அவர் பெயர் உத்தாண்டவரென்றும், ஒத்தாண்டவரென்றும் வழங்குகின்றது.

அவ்வூர் மிகப் பழமையுடையதென்பதற்கு அறிகுறியாக அதனைச் சூழ்ந்துள்ள நிலங்களை வெட்டும்போது *முதுமக்கட்டாழிகள் கிடைத்துவந்தன. அங்கே ஒரு கொல்லையில் ஜைனமுனிவர் பல்லியங்காஸனத்தோடு இருப்பது போன்ற சிலாவிக்கிரகம் ஒன்று காணப்படுதலால் அப்பக்கங்களில் ஜைனமதத்தினர் இருந்ததாகவும் சொல்லுவர்.

திருக்குன்றம் பெரியதிருக்குன்றமென்றும் சின்னத்திருக்குன்றமென்றும் இரண்டுபகுதியாக உள்ளது. பெரியதிருக்குன்றம் மேற்கிலும் சின்னத்திருக்குன்றம் கிழக்கிலும் உள்ளன. பெரியதிருக்குன்றத்திலேதான் மேலே கூறியவை அமைந்துள்ளன. வடமொழி தென்மொழிகளிலும் சங்கீதத்திலும் பயிற்சியுள்ள பலர் பண்டைக் காலத்தில் அங்கே இருந்து வந்தார்கள்.

---

* பண்டைக் காலத்திலே பிராயத்தால் முதிர்ந்தவர்கள் துன்பமின்றி இருத்தற்கு உபயோகிக்கப்பெற்றுவந்த தாழிகள்; அயலிடங்களில் இப்பெயர் மதமதக்கச்சாடியென வழங்குகின்றது.

### தந்தையார்

கனம் கிருஷ்ணையருடைய தந்தையார் இராமசாமி ஐயரென்பவர். பரம்பரைக்கல்வியாகிய சங்கீதத்திலும் தமிழிலும் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது; புதிய கீர்த்தனம் முதலியவை இயற்றும் பழக்கமும் உண்டு. அக்காலத்தில் கபிஸ்தலத்தில் இருந்த பெருஞ் செல்வராகிய முத்தைய மூப்பனாரென்பவர் அவரிடத்தில் அன்பு பூண்டு பலவகையில் அவரை ஆதரித்து வந்தார். இராமசாமி ஐயர் மூப்பனாரைப் புகழ்ந்தும் கடவுளைத் துதித்தும் பாடிய கீர்த்தனங்கள் பல.

### சகோதரர்கள்

இராமசாமி ஐயருக்கு ஐந்து குமாரர்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். சுப்பராமையர், வெங்குவையர், சுந்தரமையர் (சுந்தரண்ணாவெனவும் அவர் சொல்லப்படுவார்), கஸ்தூரி ரங்கையர், கிருஷ்ணையரென்னும் ஐவர்களில் கிருஷ்ணையரே ஐந்தாங் குமாரர். பெண்ணின் பெயர் சுப்பலக்ஷ்மி அம்மாளென்பது.

மேற்கூறிய சுப்பராமையர் முதலிய ஐவரும் முதலில் தந்தையாரிடத்தில் தமிழும் சங்கீதமும் கற்றுக்கொண்டனர். பிறகு, அரியிலூரிலிருந்த சண்பகமன்னாரென்னும் ஸ்ரீ வைஷ்ணவப் பெரியாரிடம் பயின்றுவந்தனர். அவர்களுடைய குடும்பத்திற்குப் பண்டையரசர்களால் அளிக்கப்பட்ட நன்செய் புன்செய் நிலங்களும் தோட்டங்களும் இருந்தமையின் பொருட்கவலையில்லாமல் கல்வி பயில்வதற்கு ஏற்ற அநுகூலம் அவர்களுக்கு இருந்தது. அந்த ஐவர்களுள்ளே சுப்பராமையர், சுந்தரமையர், கிருஷ்ணையராகிய மூவரும் சங்கீதப் பயிற்சியை விருத்திசெய்ய நினைந்து தஞ்சாவூர் சென்றனர். அங்கே அக்காலத்தில் இருந்த அரசர் சரபோஜி மகாராஜா என்று கேள்வியுற்றிருக்கிறேன். அந்த அரசருடைய சபை வித்துவான்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருந்தது. பல வகையிலும் ஆற்றலுடையவர்கள் அந்தச் சபையை அலங்கரித்தனர். அக்காலத்தில் அங்கே இருந்த சங்கீத வித்துவான்களுள் சிறந்தவராகிய பச்சைமிரியன் ஆதிப்பையரென்னும் பெரியாரிடத்தில் சுப்பராமையர் முதலிய மூவரும் சங்கீதத்தில் சிக்ஷை சொல்லிக் கொள்ளத் தொடங்கினர். பரம்பரையாக வந்த வித்தையாதலாலும், குருவாக வாய்த்தவர் சிறந்த வித்துவானாதலாலும், பொருட்கவலை இல்லாமையாலும் அம்மூவரும் சங்கீதத்தில்

வரவர மேலான பழக்கத்தை அடைந்து வந்தனர்; அரசரும் செவ்வனே பாதுகாத்தனர். அம்மூவருக்கும் முருகக்கடவுளின் உபாசனை உண்டு.

கிருஷ்ணையர் அழகும் வன்மையும் பொருந்திய மேனியை யுடையவர்; அஞ்சாத நெஞ்சினர்; மேற்கொண்ட காரியத்தை எவ்வாறேனும் முடித்துவிடும் ஊக்கமுடையவர். அவருடைய முயற்சியை அவரோடு பழகினவர்யாவரும் அறிந்து வியந்தனர்.

சகோதரர்கள் மூவரும் பிறகு அந்த ஸம்ஸ்தானத்திலேயே சங்கீத வித்துவான்களாக இருந்தனர்.

அவர்களுடைய சங்கீதத்திறமை சங்கீதவித்துவான்களாலும் அரசராலும் பலவாறு பாராட்டப்பட்டது. சுப்பராமையர் தமிழிலே பல கீர்த்தனைகளை இயற்றிப் பாடுவதுண்டு. அவற்றை மற்ற வித்துவான்களும் கற்றுக்கொண்டு பாடி மகிழ்வார்கள். தஞ்சாவூர் சம்ஸ்தானத்தில் ஒவ்வொரு வகையிலும் சிறந்த வித்துவான்கள் உள்ள சபையில் பாடிப் பரிசு பெறுவது அக்காலத்திலே பெருமதிப்பாக இருந்தமையால் அடிக்கடி அயல்நாட்டிலிருந்து உயர்ந்த வித்துவான்கள் பலர் அங்கேவந்து சம்மானம் பெற்றுச் செல்வதை ஒரு தனிக்கௌரவமாக நினைத்தனர்.

### கேசவையாவும் கனமார்க்கமும்

பொப்பிலி சம்ஸ்தானத்தில் சங்கீதவித்துவானாக விளங்கிய [1]கேசவையா என்பவர் ஒரு சமயம் தஞ்சாவூருக்கு வந்தார். இளமை தொடங்கி அவர் சங்கீதமார்க்கங்களுள் மிக அருமை யாகிய கனத்தில் உழைத்துப்பயின்று தேர்ச்சி பெற்றவர்; மிக்க மதிப்புடையவர். கனமார்க்கமென்பது மூலாதாரத்திலிருந்து கம்பீர மான ஒலியை உண்டாக்கிப் பாடுவதென்றும் தொடங்கும்போது அந்த ஒலி ஹுங்கார சப்தத்தோடு எழுமென்றும் ஆரோகண அவரோகணத்தில் பலவகையான சங்கதிகள் வரும்படி பாடுவ தென்றும் அங்க சேஷ்டைகள் இல்லாமற் பாடவேண்டுமென்றும்

---

[1] இவர் வைஷ்ணவர்களில் சாத்தரதவர் வகுப்பினரென்று கேள்வி.

சொல்வர். இசைத்தமிழில் உள்ள [1]உள்ளாளப்பாட்டு என்னும் வகை இதைப்போன்றதேயாகும்.

தஞ்சைக்கு வந்த கேசவையா தம்முடைய சங்கீதத்தால் அரசரையும் வித்துவான்களையும் மகிழ்வித்தார்; மன்னருடைய விருப்பத்தின்படி சில மாதங்கள் அங்கே அவர் இருந்துவந்தார். கனமார்க்கத்தைத் தனியே விரிவாக அப்பியாசம் செய்த வித்துவான்கள் அக்காலத்தில் அங்கே இல்லை. ஆதலின் அவரது சங்கீதத்தைக் கேட்ட வித்வான்கள் யாவரும் அவரை மிகவும் மதித்து மரியாதை செய்துவந்தனர். அவருடைய சாரீரம் சிங்ககர்ஜனை போலிருக்குமென்று சொல்வார்கள். அவரது பாட்டில் ஈடுபட்ட அரசருக்கு, ''இவ்வளவு அருமையான மார்க்கத்தைச் சிறப்பாக அப்பியாசம் செய்தவர்கள் இந்தப் பக்கங்களில் இல்லையே!'' என்ற வருத்தம் தோன்றி வளர்ந்துவந்தது.

ஒருநாள் அரசருடைய சபையில் பொப்பிலி கேசவையா பாடினார். சம்ஸ்தான வித்துவான்களும் வெளியூர்களிலிருந்து வந்த வித்துவான்களும் சபையில் நிரம்பியிருந்தனர். சுப்பராமையர் முதலிய மூன்று சகோதரர்களும் இருந்தார்கள். பாட்டு முடிந்த பிறகு அரசர் அங்கிருந்த வித்துவான்களை நோக்கி, ''கனமார்க்கத்தில் இவரைப்போல் பாடக் கூடியவர்கள் யாராவது இங்கே உண்டா?'' என்று கேட்டனர். தங்களுக்கு அப்பியாசமில்லாமையால் அவர்கள் பாட முடியாததென்று சொல்லிவிட்டார்கள்; ''உழைத்துக் கற்றுக்கொண்டாவது பாடலாமா?'' என்று மீண்டும் அரசர் கேட்டார். அவர்களில் முதியவராக இருந்தவர்கள், ''இனிமேல் எங்களால் இது சாத்தியமன்று; இந்த வயஸில் அப்பியாசம் பண்ண முடியாது'' என்று கூறிவிட்டார்கள். வேறு சிலர், ''இவர் எவ்வளவோ காலம் கஷ்டப்பட்டு அப்பியசித்துப் பாடுகிறார். இந்தமாதிரி பாடுவதென்றால் சாமான்யமா? இது நம்மால் ஆகாத காரியம்'' என்று தமக்குள் நினைந்து பேசாமல் இருந்

1 ''உள்ளாளப் பாட்டுப் பாடுங்கால் இடைபிங்கலையை இயக்கமறுத்து மூலாதார முதல் பிரமரந்தரமளவும் இயக்கமாக்கி நடுவுதொழில்வரப்பாடுதலென்றறிக; . . . 'கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா, பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரியா-எண்ணிலிவை, கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர், உள்ளாளப் பாடலுணர் இசைமரபு'' (சீவகசிந்தாமணி, 658, நச்சினார்க்கினியருரை); ''பண்ணென்று'' (சீவக, 735) என்னும் செய்யுளில், ''விண்ணின்றியங்கி'' என்னும் பகுதிக்கு ''விண்ணென்றது முற்கூறிய உள்ளாளத்திற்குரிய மூலாதாரந் தொடங்கிப் பிரமரந்தரத்தளவு நின்ற வெளியை'' என்று நச்சினார்க்கினியர் எழுதிய விசேட உரையும் இதனைப் புலப்படுத்தும்.

தனர். மற்றும் சிலர், ''இவர் ஒரு ராஜகரத்தில் வேண்டிய சௌகர் யங்களை யெல்லாம் பெற்றவர்; பரம்பரையாக அப்பியாசம் பண்ணி யிருக்கலாம்; திடீரென்று கற்றுக்கொள்வீர்களா என்ருல் முடியுமா?'' என்று தம்முட் பேசிக்கொண்டனர். இளம்பிராயத்தினராக இருந்தவர்கள் அஞ்சி ஒன்றும் பேசாமல் இருந்தனர்.

அந்தக்கூட்டத்தில் இருந்த கிருஷ்ணையர் இயல்பாகவே தைரியமுடையவர்; அரசர் வினவியதற்கு எவரேனும் விடை அளிப்பார்களோ வென்று சில நேரம் கவனித்தார். இவருக்கு எவ்வாறேனும் முயன்று அந்த முறையைக் கற்றுக்கொண்டுவிடலா மென்ற நம்பிக்கை ஊழ்வினையின் பலத்தால் உண்டாயிற்று. ஆதலின், யாவரும் மௌனமாக இருத்தலை யறிந்த இவர் உத்ஸா கத்தோடு எழுந்து, ''கேசவையா எனக்குக் கனஜாதியின் லட்சணங்களை விளங்கச் சொல்லித்தந்தால் நான் உழைத்து அப்பி யாசம் செய்து பாடலாமென்று எண்ணுகிறேன்'' என்று விநயத் தோடு சொன்ஞர். அங்கே இருந்த பல்லவி கோபாலையர் முதலிய வித்துவான்கள், ''இவர் நிச்சயமாகப் பாடக்கூடியவர்'' என்று வியந்து சந்தோஷித்தார். கேசவையாவும் சொல்லிக் கொடுப்ப தாக வாக்களித்தார்.

பிறகு வித்துவான்களெல்லோரும் கிருஷ்ணையருடைய தைரி யத்தை மிகவும் பாராட்டினுர்கள். அன்றுமுதல் அரசருடைய கட்டளைப்படி கிருஷ்ணையர் பொப்பிலி கேசவையாவிடம் கன மார்க்கத்தின் விசேஷ லக்ஷணங்களைக் கேட்டுச் சில நாட்களில் தெரிந்து கொண்டார்; அம்மார்க்கத்தில் தானம் பாடும் முறையை யும் அதனுட் சிறந்த சக்ரதானம் பாடும் விதத்தையும் நன்ருக அறிந்தார். எவ்வளவுக்கெவ்வளவு அப்பியாசம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு திறமை உண்டாகுமென்ற உறுதி பெற்ருர்.

### கனமார்க்கப் பயிற்சி

கிருஷ்ணையருடைய தந்தையாருக்கு நண்பராகிய கபிஸ்தலம் முத்தையமூப்பஞருடைய குமாரரும் சிறந்த தருமவானுமாகிய * இராமபத்திரமூப்பஞர் ஒருநாள் தஞ்சைக்கு வந்திருந்தார். கிருஷ்ணையர் கனமார்க்கத்தைக் கற்றுப் பாடிக்காட்டுவதாக அரச ருக்குமுன் உறுதிகூறியிருப்பதை வித்துவான்களால் மூப்பஞர் அறிந்தார். அவர் உடனே கிருஷ்ணையரிடம் போய்ச் சந்தோஷ

* இவர் பெரியப்பு மூப்பஞரென்றும் இவர் தம்பி சின்னப்பு மூப்பஞரென்றும் கூறப் படுவர்.

மாகப் பேசிக்கொண்டிருந்தார்; இவருடைய தைரியத்தை வியந்தார். தங்கள் குடும்பத்துக்குப் பரம்பரை உபகாரியாக உள்ள மூப்பனரிடத்தில் மிகவும் அபிமானத்தோடு இவர் பேசினர்; இடையே, ''ஏதோ முருகன் திருவருளால் அப்பியாசம் பண்ணி நிறைவேற்றலாமென்று நம்புகிறேன். ஆனல் இந்த ஊரிலிருந்து சாதகம் பண்ணமுடியாது. சாதகம் செய்வதால் உஷ்ணம் அதிகமாகும். நாள் தவருமல் வேண்டியபோது பசுவெண்ணெய் சாப்பிட்டு வந்தால் உடம்புக்கு அசௌகரியம் உண்டாகாது'' என்று சொன்னர். உடனே இராமபத்திர மூப்பனர் ''கபிஸ்தலத்துக்கு நீங்கள் வந்துவிடலாம்; அங்கே தனியிடங்கள் இருக்கின்றன; வேண்டிய சௌகரியங்களை நான் கவனித்துக் கொள்கிறேன். உங்களுக்கு உபசாரம் செய்வதற்கு நான் எவ்வளவோ கொடுத்து வைத்திருக்கவேண்டுமே!'' என்று சொன்னர்; மீண்டும் மீண்டும் வற்புறுத்திஞர். அதனுல் மனமகிழ்ந்த கிருஷ்ணையர் அங்ஙனமே செய்வதாகக் கூறித் தம் தமையனர் முதலியவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு கபிஸ்தலம் சென்ருர்.

கபிஸ்தலத்தில் வடபாலுள்ள ஆற்றங்கரையில் நாணற்காடு உண்டு. அது ஜனங்கள் அதிகமாகச் சஞ்சாரம் செய்யாத இடம். அவ்விடமே தமக்கு ஏற்றதென்று அறிந்து கிருஷ்ணையர் நாள் தோறும் விடியற்காலையிலும் மாலையிலும் சென்று சாதகம் செய்து வரலாயினர். அங்கே மூப்பனரால் ஒரு சிறிய குடிசை அமைக்கப்பட்டது. இவர் மிக்க வன்மையுள்ள சரீரமுடையவராதலின் சாதகம் பண்ணும் பொழுது அந்தத் தொனி நெடுந்தூரம் கேட்பதுண்டென்பர். ஒரு காட்டில் சிங்கமிருந்து செய்யும் கர்ஜனையைப் போல இவருடைய கம்பீரமான தொனி முழங்கியதென்று சொல்லிக் கொள்வார்கள். இவர் அப்பியாசம் செய்கையில் இராமபத்திர மூப்பனருடைய வேலைக்காரர்கள் சுத்தமான பசுவெண்ணெயை வைத்துக்கொண்டு அருகில் காத்திருந்து அடிக்கடி வேண்டும் பொழுதெல்லாம் அளித்து வருவார்கள்; வேறு யாரும் அங்கே வாராதபடி பார்த்துக் கொள்வார்கள்; மற்றவேளைகளிலும் இவருக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் மூப்பனர் அமைத்து உபசரித்து வந்தார்.

கிருஷ்ணையர் நாளுக்குநாள் தம்முடைய அப்பியாசத்தால் நற்பயனுண்டாவதை அறிந்தார். இவருடைய ஊக்கம் மேன்மேலும் வளர்ந்தது. இவருடைய திருப்தியையே தமக்குத் திருப்தியாக எண்ணி மூப்பனர் ஆதரித்துவந்தார். பரம்பரை

ஆற்றல், நல்ல சரீரம், சிறந்த சாரீரம், அஞ்சாமை, நல்லொழுக்கம், பாதுகாப்பவரின் மெய்யன்பு, இடம், பொருள், ஏவல் ஆகிய எல்லா நலங்களும் ஒருங்கே கூடப்பெற்று இறைவன் திருவருளும் வாய்த்த கிருஷ்ணையர் நாணற்காட்டிற் செய்துவந்த அப்பியாசம் பழுத்தது. ஒரு நல்லநாளில் தாம் உறுதி கூறியபடி தஞ்சாவூர் சம்ஸ்தானத்தில் அரசருடைய முன்னிலையில் பாடிக்காட்டலா மென்ற தைரியம் இவருக்கு அப்போது உண்டாயிற்று. அதன் பிறகு மூப்பனாரிடம் விடைபெற்று இவர் தஞ்சை சென்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

## அரங்கேற்றம்

மிகவும் அருமையானதும் மற்றவர்களால் இயலாதென்று கைவிடப்பட்டதுமாகிய ஒருமுறையைக் கருமமே கண்ணாக இருந்து கற்றுக்கொண்ட கிருஷ்ணையருடைய சங்கீதத்தைக் கேட்க அரசர் மிக்க ஆவலுடன் இருந்தார். பெரிய சபை கூட்டப்பட்டது. பொப்பிலி கேசவையாவும் இருந்தார்.

கிருஷ்ணையருக்கு நன்றியறிவு அதிகம். அவ்வளவு பெரிய சபையில் தமக்கு வாழ்நாள் முழுவதும் கௌரவத்தைத் தரும் ஒரு காரியத்தில் தைரியமாக முன்வருவதற்கு முதற்காரணம் தம் தந்தை யாருடைய அருளென்பதை இவர் எண்ணினர்; தமக்கு அப் பியாசம் செய்வதற்கேற்ற சௌகரியங்களையெல்லாம் செய்துதந்த மூப்பனாருடைய உதவியும் இவர் மனத்தே குடிகொண்டிருந்தது. ஆகவே, அங்கே சபையில் பாடத்தொடங்குகையில் எந்த உருப் படியைப் பாடலாமென்று யோசித்தபொழுது இவருக்கு,

''ஏற்றகைக்கெல் லாங்கொடுக்கும்
எல்லாக்கி ழத்தையணைக்
காத்திருந் தழைத்து வாடி கன்னியே''

என்பது ஞாபகத்துக்கு வந்தது. இவருடைய தந்தையார், இராமபத்திரமூப்பனாருடைய தந்தையார்மேற் பாடிய ஒரு சிந்தின் முதற் கண்ணி இது; கனராகங்களில் ஒன்ருகிய புன்னாகவராளியில் அமைந்தது அந்தப் பாட்டு. முதலில் அந்தராகத்தை விதிப்படி ஆலாபனம் செய்து அந்த ராகத்தில் தானங்களைப் பாடினர்; பிறகு இந்த ஒரு கண்ணியைப்பாடி இதையே பல்லவியாக வைத்துக் கொண்டு பல சங்கதிகளும் நூற்றுக்கணக்கான கற்பனை ஸ்வரங் களும் பாடி அதன் மூலம் சங்கீதத்தின் விசித்திரங்களையெல்லாம்

காட்டினர். அருகில் இருந்த எல்லாவித்துவான்களும் வேறு ஞாபக மில்லாமல் பரவசமுற்று இருந்தபடியே இருந்து கேட்டனர். அரசருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. கனமார்க்கத்தில் நுணுகிய இடங்களையெல்லாம் அவ்வப்பொழுது மின்னலைப்போலப் பளிச்சுப்பளிச்சென்று கிருஷ்ணயர் காட்டிக்கொண்டு போகவே பொப்பிலி கேசவையாவுக்கு வியப்பு அதிகமாகிக்கொண்டு வந்தது. மூக்கில் விரலைவைத்துக்கொண்டே கேட்டார். எவ்வளவோ சிரமப்பட்டு அவர் கற்ற வித்தையல்லவா அது? அவருக்கல்லவா அதன் உண்மை மதிப்புத்தெரியும்? இடையிடையே சிரக்கம்பத்தா லும் முகக்குறிப்பினுலும் அவருக்கு உண்டான சந்தோஷத்தை யறிந்த கிருஷ்ணயர் மிகவும் உத்ஸாகமுடையவராகிப் பாடினர்.

பாட்டு முடிந்தது. அரசர் பொப்பிலி கேசவையாவைப் பார்த் தார். அவர் சிறிதுநேரம் மனமுருகிப் பேசாமல் இருந்தார்; "இந்த மாதிரியான அசகாயசூரர்களை நான் எங்கும் பார்த்ததே யில்லை. காவிரி மகாநதி பாய்கின்ற இந்த மண்ணுக்கும் தஞ்சாவூர் சம்ஸ்தானத்துக்கும் ஒரு தனிப்பெருமை உண்டென்பதை இப் பொழுதுதான் நன்ருக அறிந்தேன். சிலகாலமே என்னிடம் விஷயத்தைத் தெரிந்து தாமே அப்பியாசம் செய்துகொண்டு ஒழுங்காக இதனை இந்த மகாசபையில் பாடிய இவர் பெரிய தீரர். சர்வேசுவரன் தீர்க்காயுளையும் அரோகதிடகாத்திரத்தையும் இவருக்கு அளிக்க வேண்டும்" என்ருர். தம் நாட்டிலும் சிறந்த கனமார்க்க வித்துவான் ஒருவர் உண்டாகிவிட்டாரென்னும் பெருமையைத் தாம் அடைந்தது குறித்து அரசருக்குப் பெருமிதம் உண்டாயிற்று. கிருஷ்ணயருக்குச் சிறந்த பரிசுகள் வழங்கப் பட்டன. அன்றுமுதல் கிருஷ்ணயரைக் 'கனம் கிருஷ்ணயர்' என்றே யாவரும் வழங்கி வரலாயினர்.

கனம் கிருஷ்ணயருடைய திறமை தஞ்சாவூரில் அக்காலத்தி லிருந்த வித்துவான்களால் மிகவும் கொண்டாடப்பட்டது. இவர் ராஜஸம்மானங்கள் பெற்றுத் தஞ்சையிலிருந்து தம் ஊருக்குச் சென்று சிலதினம் இருந்தார். பிறகு கபிஸ்தலம் வந்து இராமபத்திர மூப்பனரிடம் தம்முடைய நன்றியறிவைப் புலப்படுத்தினர்.

## கீர்த்தனங்கள் இயற்றல்

அக்காலத்தில் இவர் தமிழில் கீர்த்தனங்கள் இயற்றும் பயிற்சியை உடையவராக இருந்தார். தம்முடைய தமையனராகிய சுப்பராமையர் கீர்த்தனங்கள் இயற்றிப் பாடும்போது கவனித்தும்

அவற்றைத் தாம் பாடி மகிழ்ந்தும் வந்ததனால் இசைக்குரிய ஸாஹித்தியசக்தி இவர்பால் வளர்ந்துவந்தது. முதலில் தாம் பிறந்த ஊராகிய திருக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் மீது சில கீர்த்தனங்கள் பாடிப்பழகினார். நாளடைவில் இப்பழக்கம் விருத்தியாயிற்று; மனத்தில் சந்தோஷம் உண்டாகும் பொழுதெல்லாம் புதிய புதிய கீர்த்தனங்களை இயற்றிப் பாடிவந்தார்.

கபிஸ்தலந்துக்கு இவர் சென்றபோது இராமபத்திர மூப்பனார் இவரை மிகவும் உபசரித்து மகிழ்வித்தார். சில காலம் அவ்வூரில் இருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். அவருடைய விருப்பத்தின் படியே இவர் சிலகாலம் அங்கே இருந்து வரலானார்.

அக்காலத்தில் மூப்பனார் கிருஷ்ணையருடைய சங்கீதத்தின் மேன்மையையும் அதனால் விளையும் இன்பத்தையும் உணர்ந்தார். அவ்விருவருக்கும் உள்ள அன்பு முதிர்ந்தது. அப்பொழுது மூப்பனார் மீது கிருஷ்ணையர் சில கீர்த்தனங்கள் பாடினார்; அவை தோடி ராகத்திலுள்ள ''அன்னமே நானென்ன செய்வேன்'', ''எல்லா அருமையையும் எல்லாப் பெருமையையும்'' என்பவையும், பைரவியிலுள்ள ''மாதே அவர் செய்த வஞ்சனை'' என்பன முதலியனவுமாம்.

### கீர்த்தனங்களின் அமைப்பு

இவர் இயற்றிய கீர்த்தனங்கள் அந்த அந்த ராகத்தின் மூர்ச்சைகளை எடுத்துக்காட்டுவதற்கு ஏற்றபடி அமைந்திருக்கும். கனமார்க்கத்தில் அக்கீர்த்தனங்களைப் பாடும்பொழுது அந்தத் தொனியில் கம்பீரமும் அதற்கேற்ற பத அமைப்புக்களும் மிக அழகாகப் பொருந்தியிருக்கும். கீர்த்தனங்களெல்லாம் எளியநடையிலேயே அமைந்தவை. இவர் பெரும்பாலும் உலகவழக்குச் சொற்களை அமைத்தே பாடியுள்ளார். இயற்றமிழிலக்கண அமைதியைக் காட்டிலும் சங்கீதப்போக்குக்கு ஏற்றபடி அமைப்பதையே இவருடைய கருத்து நாடியது. இயற்றமிழ்த்துறையில் இவருடைய கீர்த்தனங்கள் ராகபாவங்களுக்கு இலக்கியங்களாகச் சிறந்து விளங்கினமையால் அக்காலத்தில் சங்கீதமறிந்த பெரும்பாலோர் அவற்றை மனனம் பண்ணிப் பாடிவந்தார்கள். இவர் இயற்றிய கீர்த்தனங்களிற் பல சிருங்கார ரசத்தை மிகுதியாகக்கொண்டு இருக்கும். ஒவ்வொன்றன் இறுதியிலும் முருகக்கடவுளின் திரு

நாமத்தை எவ்வகையாகவேனும் அமைப்பது இவருடைய வழக்கம். இவருடைய தமையனாராகிய சுப்பராமையரும் இவ்வழக்கத்தை யுடையவர்.

## கபிஸ்தல வாசம்

கபிஸ்தலத்தில் இவர் இருந்தகாலத்தில் அங்கே இவருடைய தமையன்மார்களாகிய சுப்பராமையரும் சுந்தரையரும் அடிக்கடி வந்துசெல்வார்கள். சுப்பராமையர் இராமபத்திர மூப்பனாருடைய உயர்குணங்களையும் உபகாரசிந்தையையும் அருமையறியும் தன்மை யையும் அறிந்து மகிழ்ந்து அவர்மீது ஒரு [1]குறவஞ்சி நாடகம் இயற்றி அரங்கேற்றினார். மூப்பனார் அவருக்குத் தக்க சம்மானங் களைச் செய்தார். பிறகு அவர் சுந்தரையருடன் தஞ்சைக்குச் சென்றுவிட்டார்.

மூப்பனார் அடிக்கடி கிருஷ்ணையருக்குப் பலவிதமான மரியாதை களைச் செய்துவந்தார். ஒருமுறை தங்க அரைஞாணும் வைரக் கடுக்கனும் செய்வித்து அணிந்தார். இவர் அவர்மீது சில பதங்களை இயற்றி அணிந்தார்.

## திருவிடைமருதூர் வாசம்

இப்படி இவர் கபிஸ்தலத்தில் இருந்தபோது தஞ்சை மகா ராஷ்டிர மன்னரது வம்சத்தைச்சேர்ந்த அமரசிம்மரென்பவர் திருவிடைமருதூரில் வசித்துவந்தார். கனம் கிருஷ்ணையர் தஞ்சா வூரில் இருந்த காலத்தில் அறிந்து பழகியவர் அவர். அவர் இவரை வரவேண்டுமென்று தக்கவர்கள் மூலம் சொல்லியனுப்பினார்; இவருக்கும் அவரைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் இருந்தது. அதனால் இராமபத்திர மூப்பனாரிடம் விடை பெற்றுக்கொண்டு இவர் திருவிடைமருதூர் சென்றார்.

இவருடைய வரவினால் அமரசிம்மர் மிக்க சந்தோஷத்தை அடைந்தார். அவர் சங்கீதப் பயிற்சியும் அதில் அளவற்ற அன்பும் உடையவர்; சிவபக்தி மிக்கவர். திருவிடைமருதூரிலுள்ள ஸ்ரீ மகாலிங்க மூர்த்திக்கு [2]வெள்ளி ரதமும் மகாரதத்தின் முன்பு

---

[1] இதிற் சிலபகுதிகளை நான் கேட்டிருக்கிறேன். இப்போது இந்த நாடகம் கிடைக்கவில்லை.

[2] அந்த வெள்ளிரதமும் குதிரையுருவங்களும் இப்பொழுதும் உள்ளன.

கட்டும் நான்கு குதிரையுருவங்களும் செய்வித்தளித்தவர்; அவர் செய்த பணிகள் வேறு பலவுண்டு.

கனம் கிருஷ்ணையருடைய சங்கீதத்தைக் கேட்டு அதன் சுவையை நன்ருக அனுபவித்த அவருக்கு 'இந்த வித்துவானை இங்கேயே இருக்கும்படி செய்யவேண்டும்' என்ற எண்ணம் உண்டாயிற்று. கிருஷ்ணையரைப் பலவகையாக உபசரித்துத் தம் விருப்பத்தை அறிவித்தார். அருமையறிபவர்களைக் கண்டால் வித்வான்களுடைய அன்பு பெருகுவதற்கு என்ன தடை? ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியின் தரிசனமும் அமரசிம்மருடைய உபசாரங் களும் கனம் கிருஷ்ணையரை அங்கேயே இருக்கும்படி செய்தன.

நாள்தோறும் அமரசிம்மருடைய சமுகத்தில் இருந்து உரிய காலங்களில் சல்லாபம் செய்வதிலும் தம்முடைய சங்கீதத் திறமையைக் காட்டி மகிழ்வித்தலிலும் கனம் கிருஷ்ணையர் காலங்கழித்துக் கொண்டு சுகமாக இருந்துவந்தார். 'இவரால் தமிழ்நாட்டில் கனமார்க்கம் நன்ருகத் தழைத்தோங்கும்' என்று எண்ணிய அமரசிம்மர் இவரது மனங்கோணுமல் நடந்துவரும்படி தம்முடைய ஏவலாளர்களுக்கெல்லாம் கட்டளையிட்டிருந்தார்.

## ஸ்ரீ ராமதாசர்

அக்காலத்தில் அமரசிம்மரிடம் ஆஸ்தான வித்துவாஞக **ஸ்ரீ ராமதாசர்** என்னும் ஒரு பெரியவர் இருந்துவந்தார். அவர் ஹிந்துஸ்தான சங்கீதத்தில் மிகவும் பயிற்சியுடையவர்; நிராசை கொண்ட உள்ளத்தினர்; அமரசிம்மராலே வலிந்து அழைத்து உபசரித்துப் பாதுகாக்கப்பெற்ற பெருமையையுடையவர். நந்தனர் சரித்திரக்கீர்த்தனத்தை இயற்றிய **ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியாருடைய** முதல்குரு அவரே. கனம் கிருஷ்ணையர் திருவிடைமருதூரில் இருந்த காலத்தில் கோபாலகிருஷ்ணபாரதியார் ராமதாசரிடம் ஹிந்துஸ்தான மார்க்கத்தை அப்பியாசம் செய்து வந்தார். அவர் கிருஷ்ணையரிடமும் அவ்வப்போது கர்நாடக சங்கீதத்தையும் சில கீர்த்தனங்களையும் கற்றுக்கொண்டார். பாரதியாரே இச்செய்தியை என்னிடம் கூறியதுண்டு.

## அமரசிம்மர்மீது கீர்த்தனங்கள்

அமரசிம்மர்மீது கனம் கிருஷ்ணையர் பாடிய கீர்த்தனங்கள் சில உண்டு. அவற்றுள் ஒரு கீர்த்தனத்தின் பகுதியாகிய "இந்த்ரசபை மாடியில்" என்பதுமட்டும் இப்பொழுது என்

ஞாபகத்தில் இருக்கிறது. ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின்மீது ஆனந்த பைரவி ராகத்தில் *''மருதப்பா'' என ஒரு கீர்த்தனமும் வேறு சில கீர்த்தனங்களும் இவர் இயற்றினர்.

## ஸ்தலயாத்திரை

இடையிடையே தம்முடைய ஊராகிய திருக்குன்றத்திற்கும் தம்முடைய உறவினர்கள் இருக்கும் ஊர்களாகிய கும்பகோணம், பொன்வேய்ந்த நல்லூர், உடையாளூர், திருப்பழனம், கார்குடி, திருவையாறு, திருப்பூந்துருத்தி, ஸ்வாமிமலை, திருச்சேறை, உத்தமதானபுரம், மன்னார்குடி முதலிய இடங்களுக்கும் இவர் சென்று வருவதுண்டு. அன்றியும் இவரிடத்தில் சிறந்த அன்பு பூண்ட பிரபுக்கள் பலர் இவரைத் தங்கள் தங்கள் ஊர்களுக்கு வந்துசெல்ல வேண்டுமென்று வற்புறுத்தி அழைக்கும்பொழுது அங்கங்கே சென்று தம்முடைய பாட்டால் அவர்களை மகிழ்வித்து அவர்களுடைய உபசாரங்களைப் பெற்று வருவார். அவ்வவ்விடங்களிலுள்ள ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் விஷயமாகவும் தம்மை ஆதரித்த உபகாரிகளின் விஷயமாகவும் இவர் அப்பொழுது அப்பொழுது பாடிய கீர்த்தனங்கள் பல.

திருக்குன்றத்தில், தெற்குவீதியில் கனம் கிருஷ்ணையருக்கும் அவருடைய சகோதரர்களுக்குமாக வடக்கு நோக்கிய ஐந்து வீடுகள் உண்டு. இவர்கள் திருக்குன்றத்தில் ஒன்று சேரும்போது மாலைக்காலத்தில் வீதியில் விசிபலகையில் உட்கார்ந்து பாடிப் பொழுது போக்குவார்கள். அப்பொழுது சுப்பராமையர் கனம் கிருஷ்ணையரை ஏதாவது பாடும்படி சொல்லுவார். அவர் செய்த கீர்த்தனங்களை இவர் பாடுவதோடு சௌந்தரராஜப் பெருமாள் மீது புதிய கீர்த்தனங்களையும் இயற்றிப் பாடுவார். அங்ஙனம் இவர் இயற்றிப் பாடியவை, ''இன்னமன மிரக்கம்வல்லையோ'' (பைரவி), ''உன்பதமே ஸதாகதி'' (தேசிக தோடி), ''என்னத்துக்கு இந்த'' (கமாசு), ''செருக்கிமயக்க மீறி'' (தர்பார்), ''நல்ல நல்ல நிலவு பறிபோகுதே'' (சங்கராபரணம்), ''படியளக்கும் பெருமானென்று'' (பைரவி), ''சௌந்தரராஜப் பெருமானே உன் திருத்தாள் பணிந்தேன்'' (தன்யாஸி) முதலியனவாம்; அவற்றுள் ஒன்று வருமாறு:

* கனம் கிருஷ்ணையருடைய தமையனாராகிய சுப்பராமையர் இயற்றிய ''முருகையனேபன் னிருகையனே'' என்பதும் ஆனை ஐயா என்பவர்கள் இயற்றிய ''ஐயாரு மிக ஒய்யாரா'' என்பதும் இந்த மெட்டில் அமைந்தவை.

(ராகம்: பைரவி - தாளம்: ஆதி)

### பல்லவி

இன்னமனம் இரக்கம் வல்லையோ
ஏக நாத மகப்பிரபுவே. (இன்னமனம்)

### அநுபல்லவி

பன்னக சயனனே பரந்தாமனே ஸ்ரீ
பரம புருஷனே ஹரிஹரி சௌந்தர ராஜனே
(இன்னமனம்)

### சரணங்கள்

1. பக்தபரா தீனனென்று விருதுபெற்ற வயனமென்ன
பாரமா உனக்கித பாரமா
முக்திதர நீயென்னுள்ளே மூர்த்திகர மாய்நிறைந்த
மூர்த்தியே உனக்கப கீர்த்தியே சூத்ரதாரி
(இன்னமனம்)

2. உருக்குக் கம்பத்தி லிருந்துவந்து பிரகலாதனைக் காப்பாற்றின
ஓராமா உனக்கிந்தப் பேராமா
பெருக்கமாயுன் பாதமன்றிப் பேரின்பமும் வேறுமுண்டோ
பெருமானே என் பெருமானே ஹரிஹரி*

### உடையாளூர்

இவர் ஒருமுறை உடையாளூரென்னும் ஊருக்குச் சென்றிருந்தார். அங்கே செல்வர்களாகிய சில பந்துக்கள் இருந்தார்கள். அருணாசல கவியின் இராமாயண கீர்த்தனத்தைப் பாடிப் பிரசங்கம் செய்து யாவரையும் மகிழ்வித்து அங்கங்கே பரிசுபெற்றுவருபவரும் நாகூரென்னும் ஊரினருமாகிய ஒரு சங்கீதவித்துவான் அங்கே நாள்தோறும் பிரசங்கம் செய்துகொண்டு இருந்தார். இவர் அவ்வூருக்கு வந்திருத்தலையறிந்து அவர் இவர்பால் வந்து மிகவும் பயபக்தியோடு இவரை நமஸ்கரித்து நின்றார். இவர் அவரை இருக்கச் செய்து இன்னாரென்று தெரிந்து கொண்டபிறகு சில கீர்த்தனங்களைப் பாடச்சொன்னார். இவருக்குமுன் பாடுவதற்கு அவர் அஞ்சினார். பின்பு சிலவற்றைப் பாடினார். அப்பால் அவரும்

---

* இதன் மூன்றுஞ் சரணம் கிடைக்கவில்லை.

அங்கே இருந்த பிறரும் இவரை வேண்டிக்கொள்ள இவர், இராமாயண கீர்த்தனத்திலுள்ள சங்கராபரணத்திலமைந்த, ''தொடுத்தானே சரதாரை'' என்பதையும், பியாகடா ராகத்திலமைந்த, ''சொன்னான் ஸ்ரீ ராமன்'' என்பதையும் பாடிக்காட்டினார். அவற்றைக் கேட்ட யாவரும் மனமகிழ்ந்தனர்.

அப்பொழுது அந்தக் கிராமதேவதையாகிய செல்லமாகாளியென்னும் தெய்வத்துக்கு உத்ஸவமாதலின் அந்தத் தேவதை திருவீதியில் வந்தது ; அக்காலத்தில் அந்தக்கிராமத்தாருடைய விருப்பத்திற்கு இணங்கிக் கல்யாணி ராகத்தில், ''வல்லமையுன் வல்லமையே'' என ஒரு கீர்த்தனத்தை இவர் பாடினார். அது வருமாறு:

(ராகம் : கல்யாணி - தாளம் : ஆதி)

**பல்லவி**

வல்லமை யுன் வல்லமையே
சொல்ல எவர்க் குந்தரமா? (வல்லமை)

**அநுபல்லவி**

எல்லாம் உன்செயலே வேறில்லை
*பூபதிராஜ புரந்தனில்வாழும்
செல்ல மாகாளி அம்மையே தேவி பரஞ்சோதி
(வல்லமை)

**சரணங்கள்**

1. பஞ்சமியே பார்வதியே பாவனி பராசக்தி
கஞ்சமலர்ப் பொற்பாதத்தைக் கண்டேன்குறை யொன்றுமில்லை
தஞ்சமென்ற பேர்களையுஞ் சகலரையுங் காப்பாற்றும்
நஞ்சணிகண் டத்தியே நாராயணி பரிபூரணியே
(வல்லமை)

2. அம்மணியே சூலினி கபாலினி ஆநந்தமயீ
நின்மகிமை யேமகிமை நித்தியகல் யாணியே
என்மனதுன் பதியாக எப்போதும் அருளிச்செய்வாய்
உன்மதமா தங்கியே உத்தண்டியேசுக சாமளையே*
(வல்லமை)

---

* இதன் 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

### திருச்சேறை

ஒருசமயம் திருச்சேறையென்னும் விஷ்ணு ஸ்தலத்துக்கு இவர் போயிருந்தார். அப்போது அங்கே எழுந்தருளியுள்ள ஸ்ரீ சாரநாதப் பெருமாளது ஆலய தருமகருத்தாவாக இருந்த *இஞ்சிக் கொல்லை வேங்கடராமையரென்பவர் இவரை மிகவும் உபசரித்துப் பாராட்டி இவருக்கு ஸ்ரீ சாரநாதருடைய தரிசனம் செய்வித்தார். அப்பொழுது இவர் உள்ளம் குளிர்ந்து சில கீர்த்தனங்களை இயற்றிப்பாடினார். பைரவி ராகத்தில், ''முன்னழகும் பின்னழகும்'' என வரும் கீர்த்தனத்தில் முற்கூறிய வேங்கடராமையரைக்குறித்து,

''முன்னேவந்து நின்று எங்கள் வெங்கடராமனைக் காக்கும் முகுந்தனடி எனக்கவர் சொந்தனடி''

எனப்பாடியிருக்கிறார். அன்றியும் அந்தக் கீர்த்தனத்திலும், கல்யாணிராகத்திலுள்ள, ''பாரஸகலமும்'' என்னும் கீர்த்தனத்திலும் அத்தலத்திற்குரிய சாரநாதர், சாரநாயகி, சார க்ஷேத்திரம், சார புஷ்கரிணி, சாரவிமானம் என்னும் பஞ்சசாரப் பெயர்களை அமைத்திருக்கின்றார்.

### மன்னார்குடி

இங்ஙனமே, மன்னார்குடிக்குப் போயிருந்த காலங்களில் ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாள்மீது இவர்பாடிய கீர்த்தனங்கள், ''என்னமோ ஒரு வகையாய் வருகுதே மானே'' (கமாசு), ''மன்னனார் வலைவீசி மயக்கஞ் செய்தாரோ'' (தோடி) ''மன்னனாரொயிலும் வரிசையு மென்சொல்வேன்'' (தன்யாஸி) முதலியனவாம்.

### கிருஷ்ணராஜபுரம்

இவருடைய உறவினர்கள் இருந்தும் அகண்ட காவேரியின் தென்கரையிலுள்ளதுமாகிய கிருஷ்ணராஜபுரமென்னும் ஊருக்கு ஒருசமயம் சென்றிருந்தபோது அங்குள்ள சிவாலயத்தை இவர் தரிசனம் செய்தார்; அப்பொழுது அந்தக் கோயிலின் தர்ம கர்த்தாவாக இருந்த திருக்கண்மாலீசுவர ஐயரென்பவரும் பிறரும் கேட்டுக்கொள்ள, அங்கே எழுந்தருளியுள்ள ஸ்ரீ மதுகரவேணியம்

---

* இஞ்சிக்கொல்லை: திருச்சேறைக்கு அருகேயுள்ளதோரூர்.

பிகை விஷயமாகத் தோடிராகத்தில் *''திருக்கண்மாலீச்வரருக் குகந்ததேவியே'' என்னும் முதலையுடைய ஒரு கீர்த்தனத்தை இயற்றிப் பாடினுர்.

## கும்பகோணம்

இவர் அடிக்கடி கும்பகோணம் செல்லுவார். அங்கே திருக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ ஆதிகும்பேசர், மங்க ளாம்பிகை, சார்ங்கபாணிப் பெருமாள், சக்கரபாணிப் பெருமாள் முதலிய மூர்த்திகளின்மீது அந்தக் காலங்களில் இவர் பாடிய கீர்த்தனங்கள் பல; ''ஈச்வரி ஜகதம்பா'' என்னும் ஆனந்தபைரவி ராகத்தில் அமைந்த கீர்த்தனமொன்று மங்களாம்பிகை ஸ்துதியாக உள்ளது. ஒருமுறை பகற்பத்து விழா நடந்தபோது ஸ்ரீ சக்கர பாணிப்பெருமாளது திருவுலாவைத் தரிசித்து மகிழ்ந்து தன்யாஸி ராகத்தில் இவர் பாடிய, ''பகல்பத்துத் திருநாளில் சக்ரபாணியைப் பார்த்தேன்'' என்னும் கீர்த்தனம் ஒன்று உண்டு. அக்காலத்தில் அவ்வூரில் த்ஸௌகம் சீனுவையங்கார் என்னும் பிரபல சங்கீத வித்துவானும், வாலிஸ் அப்புராயருடைய சமுக வித்துவாஞகிய சங்கராபரணம் நரசையரும் இருந்தார்கள். அவர்களுடைய பழக்கம் இவருக்கு உண்டு. ஆதலின் கும்பகோணம் செல்லுங் காலங்களிலெல்லாம் இவர் அவர்களுடன் சல்லாபம் செய்து வருவது வழக்கம்.

## திருச்சிராப்பள்ளி முதலிய இடங்கள்

திருச்சிராப்பள்ளியிலுள்ள சில செல்வர்கள் இவரை வருவித்துச் சிலநாள் இருக்கச் செய்து உபசரித்து வந்தார்கள். இவருடைய கனமார்க்க சங்கீத அமுதத்தை நுகர்ந்து அப்பக்கங்களிலுள்ள வித்துவான்களும் பிரபுக்களும் இவர்பால் அபிமானம் பூண்டு பாராட்டி வந்தனர். அக்காலத்தில் இவர் திரிசிராமலை, திரு வானைக்கா, ஸ்ரீரங்கம் முதலிய தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்துவருவார். அவ்வக்காலங்களில் இவர் பாடிய சில கீர்த்த னங்கள் உண்டு. வைகுண்ட ஏகாதசியன்று ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீ ரங்கநாதரைத் தரிசனம் செய்த பின்பு கமாசு ராகத்தில், ''சொர்க்கவாசலேகாதசியில் ஸ்ரீ ரங்கராஜரை நான் சுந்தரமாய்ச் சேவித்தேன்'' என்று ஒரு கீர்த்தனம் இயற்றினுர். ''ரங்கமயமான எங்கள் ஸ்ரீ ரங்க ராஜருடன்'' என்று காம்போதி ராகத்திலுள்ள கீர்த்தனம் ஒன்றும் உண்டு.

---

* திருக்கண்மாலீச்வரரென்பது அவ்வூர்ச் சிவபெருமான் திருநாமம்; அம்பிகை ஸந்நிதி விசேஷமானது.

இவற்றையன்றித் தம்முடைய வழிபடுதெய்வமாகிய முருகக் கடவுள்மீது இவர் பலகீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார். பைரவி ராகத்திலுள்ள, ''வேலவரேயுமைத் தேடி'' என்னும் பதம் இப்பொழுது பிரசித்தமாக வழங்கி வருகிறது. ஸ்ரீ ராமபிரான் மீது சில கீர்த்தனங்கள் உள்ளன.

இவ்வாறு பல இடங்களுக்கும் சென்றுசென்று தம்முடைய சங்கீத ஆற்றலைக் காட்டி வந்தமையால் இவருடைய பெரும்புகழ் எங்கும் பரவியது. கனமார்க்கம் இத்தகையதென்பதை வித்துவான்களும் பிறரும் நன்கு அறிந்தனர். பேராற்றல் வாய்ந்தவர்களையல்லாமல் பிறர் அம்மார்க்கத்தில் பயிற்சிபெறல் இயலாதென்பதை அவர்கள் அறியுந்தோறும் கனம் கிருஷ்ணையருடைய மதிப்பு உயர்ந்து கொண்டே வந்தது. இவர்பாற் பொறாமையுள்ள சிலர் மறைவாக, ''இவரது சங்கீதம் மிக அருமையானதோ! ஏதோ காட்டில் இருந்து கத்திக் கற்றுக் கொண்ட சங்கீதந்தானே; அந்தக் கத்தலினால் என்ன பிரயோசனம்?'' என்று சொல்லி வந்தனர். இவருடைய சங்கீதத்தை நேரிற் கேட்ட பிறகுதான் அவர்களுக்குக் கனமென்பது வெறுங்காட்டுக் கத்தலன்றென்பதும் மிக்க கம்பீரமும் அருமையுமுடைய வித்தையென்பதும் புலப்பட்டன. அப்பால் அவர்கள் தங்கள் எண்ணத்தை மறந்து இவர்பால் மதிப்புடையவர்களானார்கள்.

## தியாகையரைச் சந்தித்தது

இவர் திருவையாறு சென்றிருந்த ஒருகாலத்தில் இவருக்கு முன்பே பழக்கமாக இருந்தவரும், ஸ்ரீ ராமபிரானுடைய பக்தியில் ஒப்புயர்வற்றவரும், பல அரியகீர்த்தனங்களை இயற்றிப் புகழ் பெற்றவருமாகிய ஸ்ரீ தியாகையரையும் அவருடைய கோஷ்டியையும் பார்த்துவர எண்ணி அவருடைய வீட்டுக்குச் சென்றார். சென்றவுடன் அவரை நமஸ்கரித்தார். அவரும் அவருடைய சிஷ்யர்களும் இருந்து பஜனை செய்துகொண்டு காலம் கழித்து வரும் அந்தக் காட்சி இவர் மனத்தைக் கவர்ந்தது. தியாகையர் இவரை மிகவும் பிரியமாக வரவேற்றுப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய சிஷ்யர்களாகிய *காமரஸவல்லி நாணுவையர், தில்லைஸ்தானம் (திருநெய்த்தானம்) ராமையங்கார் என்னும் இருவரும் அவரால் அடாணாவில் இயற்றப்பட்ட

* காமரஸவல்லியென்பது கொள்ளிடத்துக்கு வடபாலுள்ளதோரூர்.

''ஏபாபமு'' என்ற கீர்த்தனத்தைப் பாடினார்கள். பிறகு இவரை நோக்கி, ''நீங்கள் ஏதாவது பாடவேண்டும்'' என்று தியாகையர் குறிப்பித்தார். இவர் உடனே அடாணா ராகத்தை ஆலாபனம் செய்துவிட்டு அந்தப்பல்லவியையே வைத்துக்கொண்டு பல சங்கதிகளையும் பல கற்பனை ஸ்வரங்களையும் நன்றாக அமைத்துப் பாடினார். கேட்டு மகிழ்ந்த தியாகையர், ''நீங்கள் செய்த கீர்த்தன மொன்று பாடவேண்டும்'' என்றார். இவர் அப்பொழுதே புதி தாக அடாணா ராகத்தில், ''சும்மா சும்மா வருகுமா சுகம்'' என்று ஒரு பல்லவியை இயற்றிப் பாடலானார். நூற்றுக்கணக்கான சங்கதிகளுடனும் கற்பனை ஸ்வரங்களுடனும் இவர் பாடிவந்தார். அருமை தெரிந்த ஒரு பெரிய சங்கீதவித்துவானும் அவருடைய சிஷ்யர்களும் உள்ள கூட்டத்திலே பாடியதனால் இவருடைய உத்ஸாகம் மிக்கது. இவர் பாடப்பாடக் கனஜாதியின் கம்பீரம் தியாகையருடைய உள்ளத்தை உவப்பித்தது; அவர் கேட்டுக் கேட்டு விம்மிதமுடையவரானார். மிக விரிவாக இவர் பாடிமுடித்த வுடன் தியாகையர் இவருக்குத் தம்மிடம் இருந்த ஒரு சால்வை யைப் போர்த்தச் செய்து மனங்குளிர்ந்து ஆசீர்வதித்தார். இவர், ''ஸதா ஈச்வர ஸேவை செய்துகொண்டு சிஷ்யர்களுடன் பஜனை செய்து காலத்தைப் போக்கிவரும் உங்களுடைய பெருமையே பெருமை. இத்தகைய நிலைமை எல்லோருக்கும் கிடைக்காது'' என்று அவரை மனமுருகிப் பாராட்டி விடைபெற்றுக் கொண்டார். அப்பால் இவர் ஊருக்கு வந்து உடனிருந்தவர்களின் வேண்டு கோளின்படி ''சும்மா சும்மா'' என்னும் பல்லவிக்கு இணங்க அநுபல்லவியையும் சரணங்களையும் ஸ்ரீ ஸௌந்தரராஜப் பெருமாள் விஷயமாக அமைத்து ஒரு கீர்த்தனத்தை முடித்தார்.

## இவருடைய மாணாக்கர்கள்

மாயூரத்திற்கு அருகிலுள்ள திருவழுந்தூரில் (திருவிந்தளூரில்) இவர் சிலகாலம் இருந்து வந்தார். அக்காலத்தில் அடிக்கடி பல்லவராயப்பட்டென்னும் ஊரிலுள்ள செல்வவான்களும் மாயூரத்தி லுள்ள சில பிரபுக்களும் அழைக்க இவர் அங்கங்கே சென்று அவர்களால் ஆதரிக்கப் பெற்றனர். திருவழுந்தூரில் இருந்த காலத்தில் அங்கே கோயில் நாகசுரக்காரராகச் சுப்பிரமணியர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் தஞ்சாவூர் சமஸ்தானத்தில் பல வித்துவான்கள் முன்னிலையில் வாசித்து அரசரால் முதல் முதல் வெள்ளி நாகசுரம் பரிசு பெற்றவர். அவர் கனம் கிருஷ்ணை யரிடம் சில கீர்த்தனங்களை அறிந்ததோடு கனமார்க்கத்தையும்

சக்ரதானம் பாடும் முறையையும் கற்றுக்கொண்டார். அவருடைய முதியபிராயத்தில் அவரை நான் பார்த்திருக்கிறேன்; அப்பொழுது எனக்கு 12-பிராயம் இருக்கும். அக்காலத்தில் மாயூரத்தில் இருந்த கோபாலகிருஷ்ண பாரதியார் அடிக்கடி கிருஷ்ணையர்பால் வந்து கீர்த்தனங்கள் சிலவற்றைக் கற்றுக்கொண்டு சென்றுர். திருவழுந்தூரில் இருந்த காலத்தில் அந்த ஸ்தலத்தில் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ பரிமளரங்கர்மீது இவரால் தர்பார் ராகத்தில் இயற்றப் பட்ட, ''பரிமள நாதா'' எனவரும் பதமொன்றுண்டு.

இங்ஙனம் இவர் அங்கங்கே சென்று மீண்டு திருவிடை மருதூருக்கு வந்து அமரசிம்மரை மகிழ்வித்து வந்தார். அவர் இவருடைய சங்கீத வித்தையின் பயிற்சிமிகுதியை அறிந்து மகிழ்ந் தார். அக்காலத்தில் இவர்பால் தேப்பெருமாணல்லூர் (தேவைப் பெருமாணல்லூர்) வாசிகளாகிய கிருஷ்ணபாகவதரென்பவரும் சுப்பராய ஐயரென்பவரும் சிட்சை சொல்லிக் கொண்டனர்.

### சென்னை சென்றது

சென்னையிலிருந்து வந்த சில செல்வர்கள் கிருஷ்ணையருடைய சங்கீதத்தைக் கேட்டுத் தாம் அதுகாறும் கேட்டிராத அமைப் புடன் அது விளங்குவதை அறிந்து மகிழ்ந்தனர்; ''தாங்கள் இந் நாட்டில் உள்ளவர்களைத் தங்கள் சங்கீதத்தால் மகிழ்வித்தல் போலச் சென்னை முதலிய இடங்களிலுள்ளவர்களையும் மகிழ்வித்தல் வேண்டும்; அவர்களும் தங்களுடைய சிறந்த கானத்தைக் கேட் கும் பாக்கியம் பெறும்படி தாங்கள் ஒருமுறை அந்தப்பக்கத்திற்கு வந்து போக வேண்டும்'' என்று இவரைக் கேட்டுக் கொண்டார் கள். அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்கி இவர் சென்னைக்குச் சென்றுர். அங்கே பல நாட்கள் இருந்தார். இவருடைய சங் கீதத்தின் அருமையை உணர்ந்தவர்கள், இவரைப் பாராட்டி உபசரித்துப் பலவகையான சம்மானங்களைச் செய்தார்கள். அக் காலத்தில் கவர்னராக இருந்த ஸர் தாமஸ் மன்ரோ என்பவருக்கு நகரத்திலுள்ள பிரபுக்கள் ஒரு நாள் விருந்து அளித்தார்கள். அப் பொழுது இவருடைய சங்கீதக்கச்சேரி நடைபெற்றது. அன்று பாடும் பொருட்டுத் தாம் முன்பே இயற்றியிருந்த ஒரு கீர்த்தனத் தையும் இவர் பாடிக்காட்டி மகிழ்வித்தார். அதில் கவர்னரது பெயர், ''மன்ரோ சாஹிபு'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று அக்கூட்டத்தில் இவருடைய திறமை மிகவும் பிரகாசமடைந் தது.

### திருவொற்றியூர் சென்றது

சென்னையில் இருந்தபோது ஒருமுறை திருவொற்றியூருக்கு இவர் சென்றிருந்தார். அங்கே குருமூர்த்தி சாஸ்திரிகளென்ற சிறந்த சங்கீதவித்துவானொருவர் இருந்தார். அவர் கனம் கிருஷ்ணையரைக் கண்டு மகிழ்ந்து உபசரித்தார். இவர் அங்கே அவர் விரும்பிய சில கீர்த்தனங்களைப் பாடும்பொழுது உடல் சிறிதேனும் அசையாமல் நாதம் மட்டும் பலவித விசித்திர அமைப்போடு எழுவதை அறிந்த அவர் இவரை ஒரு தெய்வப் பிறப்பாகவே கருதிப் போற்றினர். பாடும்பொழுது தலையில் எலுமிச்சம் பழமொன்றை வைத்துக்கொண்டு அது கீழே விழாத வண்ணம் சங்கதிகள் முதலியவற்றோடு இவர் பாடிக்காட்டினரென்றும், அக்காலத்தில் தலை அசையவில்லையென்றும், அப்பொழுது குருமூர்த்தி சாஸ்திரிகள் அதிக ஆச்சரியமடைந்து ஸ்தம்பம்போல் நின்றுவிட்டாரென்றும் சொல்வார்கள். திருவொற்றியூர்த்தியாகேசர்மீது அடாணு ராகத்தில், ''திருவொற்றியூர்த் தியாகராஜர் சித்விலாஸ நாதரடி'' எனவரும் கீர்த்தனம் இவராற் பாடப்பெற்றது. சென்னையிலிருந்து மீண்டு திருவிடைமருதூர் வந்தவுடன் அமரசிம்மர் அங்கங்கே நிகழ்ந்த செய்திகளையெல்லாம் இவர்பாற் கேட்டு மகிழ்வுற்றார்.

### இராமபத்திர மூப்பனர் கோபம்

தமக்கு இராமபத்திர மூப்பனர் அளித்திருந்த பொன்னரைஞாணையும் வைரக்கடுக்கனையும் ஒரு சமயம் தம்பால் மிக்க அன்புடையார் ஒருவர் பொருட்டு இவர் விற்க நேர்நதது. அச்செய்தியை யாரோ ஒருவர் மூலமாக அறிந்த மூப்பனர், 'எப்பொழுதும் அணிந்துகொண்டிருக்க வேண்டுமென்று எண்ணியல்லவோ கொடுத்தோம்? பணம் வேண்டுமென்று குறிப்பித்தால் நாம் கொடுக்கமாட்டோமா!' என்று எண்ணி வருந்தினர். அவருக்கு அங்ஙனம் வருத்தம் இருத்தலையறிந்த கிருஷ்ணையர் எங்ஙனமேனும் அதனைத் தீர்த்துவிட வேண்டுமென்றெண்ணியிருந்தார்.

இராமபத்திர மூப்பனர் பாபநாசத்துக்குக் கிழக்கே உள்ள தம்முடைய கிராமங்களில் ஒன்றாகிய உத்தானியென்னும் ஊருக்கு வந்து தமது சத்திரத்தில் தங்கிக் கிராம விசாரணை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியே கனம் கிருஷ்ணையர் செல்ல நேர்ந்தது. அங்கே மூப்பனர் தங்கியிருத்தலையறிந்து

இவர் அந்தச் சத்திரற்குள்ளே சென்றார். இவர் வந்ததை அறிந்தும் மூப்பனார் இவருக்கு முகங்கொடாமல் வேறு வேலைகளைக் கவனிப்பவர் போலப் பராமுகமாக இருந்தார். தம்பாலுள்ள கோபத்தினாலே தான் அவர் அங்ஙனம் இருந்தனரென்பது கனம் கிருஷ்ணையருக்கு அப்போது புலப்பட்டது. உடனே இவர் அடாணா ராகத்தில்,

**''என்னடா சொல்லடா என்சாமி நீயே**
**என்னடா என்மீது கோபம்''**

என்ற கீர்த்தனமொன்றைப் புதிதாகப் பாடத் தொடங்கினார். அந்தக் கீர்த்தனம் மூப்பனாருடைய மனத்தைக் கவர்நதுவிட்டது; இவர் அந்தக் கீர்த்தனத்தைப் பாடும்பொழுது இவரை நிமிர்ந்து பார்த்தார்; தம்மையறியாமல் அவருக்குப் புன்சிரிப்பு வந்து விட்டது; ''உங்கள் மீது கோபம் வரக் காரணம் ஒன்றும் இல்லையே! பரீட்சார்த்தமாக இப்படியிருந்தேன். உங்கள்மீது கோபித்துக் கொண்டு உங்களை வெறுத்து இருக்க முடியுமா? கல்மனத்தையும் இளக்கிவிடும் சக்தி உங்களிடம் இருக்கிறதல்லவா?'' என்றார் மூப்பனார். ''உங்களுடைய பராமுகத்தைக் கண்ட பிறகு என்னால் வேறு என்ன செய்ய முடியும்?'' என்றார் கிருஷ்ணையர். ''உங்கள் மீது வேறு கோபம் இல்லை. உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் தருவதற்கு நான் காத்திருக்கும் போது நான் ஆசையுடன் செய்து அணிவித்த அரைஞாணையும் கடுக்கனையும் இழந்தது பற்றியே எனக்கு வருத்தம் உண்டாயிற்று. உங்கள் காது வெறுங்காதாக இருப்பது என்னுடைய கண்ணை உறுத்துகின்றது'' என்று சொல்லித் தம்முடைய அன்பை மூப்பனார் காட்டினார். பிறகு இவரைக் கபிஸ்தலத்திற்கு அழைத்துச் சென்று சிலநாள் இருக்கச் செய்து மீண்டும் தங்க அரைஞாணும் வைரக்கடுக்கனும் செய்து அணிவித்தார்.

### அமரசிம்மரின் அன்பு

அப்பால் கிருஷ்ணையர் திருவிடைமருதூருக்கு வந்து இருப்பாராயினர். அக்காலத்தில் உடையார் பாளையத்தில் ஜமீன்தாராக இருந்த *கச்சிரங்க உடையாரென்பவர் இவருடைய பெருமையைக் கேள்வியுற்றிருந்தார். அவர் சங்கீதத்தில் சிறந்த பயிற்சியுடையவர்; சங்கீத வித்துவான்களின் ஆற்றலை அளந்தறிவதில் மிக்க திறமையுடையவர். கனம் கிருஷ்ணையரைத் தமது சம்ஸ்தான வித்துவானாக இருக்கச்செய்ய வேண்டுமென்ற விருப்பம் அவருக்கு

---

* இவருடைய சரித்திரத்தை நான் எழுதியுள்ள 'உடையார் பாளையம்' என்னும் கட்டுரையிற் காணலாம்.

உண்டாகி வளர்ந்து வந்தது. அமரசிம்மருடைய பாதுகாப்பில் இருந்த கிருஷ்ணையர் தம்பால் வருவாரோ மாட்டாரோ என்னும் சந்தேகமும் இருந்தது. அதனுல் இவருடைய விருப்பத்தை அறிவதற்காக அந்த ஜமீன்தார் தக்க மனிதர்களை அனுப்பி உடையார்பாளையத்துக்கு வந்து செல்ல வேண்டுமென்று தெரிவிக்கச்செய்தார். கிருஷ்ணையர் கச்சிரங்கரோடு முன்னமே பழக்கமுடையவராதலாலும் அவருடைய சங்கீத ஆற்றலையும் அருமையறிந்து பாராட்டும் தன்மையையும் உணர்ந்தவராதலாலும் சந்தோஷத்தோடு அங்கே சென்ருர். கச்சிரங்கதுரை இவரைச் சிறப்பாக உபசரித்துப் பாராட்டி இவருடைய பாட்டைப் பலமுறை கேட்டு மகிழ்ந்து பிறகு தமது விருப்பத்தை மெல்லத் தெரிவித்தார். அங்கேயிருந்த ஒழுங்கான அமைப்புக்களையும் ஜமீன்தாரின் உயர் குணங்களையும் நல்லன்பையும் உணர்ந்த கிருஷ்ணையருக்கு அங்கே இருத்தல் உவப்பைத் தருவதாகவேயிருந்தது. ஆதலின் தமது உடன்பாட்டைத் தெரிவித்து, அமரசிம்மரிடம் விடைபெற்று வருவதாகச் சொல்லிவிட்டுத் திருவிடைமருதூர் வந்தார். அமரசிம்மருக்கு இவரைப் பிரிந்திருப்பது மிகுந்த வருத்தத்தை விளைவிப்பதாகவேயிருந்தது. ஆயினும் ஒருவாறு அதற்கு உடன்பட்டார்.

கனம் கிருஷ்ணையர் உடையார்பாளையத்துக்குப் புறப்படுவதற்குரிய நல்ல நாளொன்றைப் பார்த்து உத்தரவு பெற்றுக்கொண்டார். அமரசிம்மர் தக்க மரியாதைகளைச் செய்தார். புறப்படும் தினத்துக்கு முந்திய நாளே உத்தரவு பெற்றுக்கொண்ட கிருஷ்ணையர் மறுநாள் விடியற்காலையிற் புறப்படும் பொழுது அமரசிம்மருடைய பேரன்பை நினைந்து உருகி மீண்டும் அவரைப் பார்க்க வேண்டுமென்று அரண்மனைக்குச் சென்ருர். அமரசிய்மர் உள்ளே இருந்தார். இவரைக் கண்டவுடன், ''என்ன விசேஷம்?'' என்று வினுவினர். இவர் உடனே, ''ஊருக்குப் போய்வருகிறேன்'' என்று தொடங்குவதும் பூபாள ராகத்திலமைந்ததுமாகிய ஒரு கீர்த்தனத்தைப் பாடினர். அந்தக் கீர்த்தனம் அமரசிம்மருக்கு இன்பத்தை விளைவித்தது; ஆயினும் அதன் பொருளாகிய பிரிவு அவரைத் துன்பக்கடலிலாழ்த்தியது; 'இவ்வளவு சிறந்த வித்துவாளுேடு இனி அடிக்கடி சல்லாபம் செய்வதற்கு இயலாதே' என்ற நினைவு அவருடைய மனத்தை வருத்தியது; ''உங்களுடைய இனிய கானத்தை இனிமேல் அடிக்கடி கேட்டு மகிழ்ச்சியுற முடியாது; விடைகேட்கும்பொழுதுகூட உங்களுடைய சங்கீத சக்தியை நன்ருக வெளியிடுகிறீர்களே. உங்களை நான்

எப்படி மறக்கமுடியும்? என்னை மறவாமல் அவ்வப்போது இங்கே வந்துபோக வேண்டும்'; என்று அமரசிம்மர் தமது பிரிவாற்ருமையை வெளிப்படுத்தி மீண்டும் இவருக்குச் சில மரியாதைகளைச் செய்து விடைகொடுத்தனுப்பினுர்.

## உடையார்பாளையம் கச்சிரங்கர் ஆதரவு

கனம் கிருஷ்ணையர் உடையார்பாளையத்தையடைந்து அங்கே வசித்து வரலானுர். அப்போது கச்சிரங்கர் இவரைத் தமது ஆஸ்தான வித்துவானுக நியமித்தார். சங்கீதரஸிகராகிய அவர் இவருடைய சங்கீதத்தினுல் அடைந்துவந்த இன்பமும் அதனுல் அவர் இவரை ஆதரித்து வந்த அருமையும் ஒருவர் பால் ஒருவரை ஈடுபடச்செய்துவிட்டன. அந்த ஈடுபாடு முதிர முதிர வேறு இடங்களுக்குச் செல்வதையே கனம் கிருஷ்ணையர் நிறுத்திக் கொண்டார். ஜமீன்தாருக்கு இவரைவிட்டு ஒருதினம் பிரிந்திருத்தல்கூட வருத்தத்தை விளைவித்தது. ஆற்றலுடைய வித்துவானும் அருமை யறிந்த பிரபுவும் பழகும்போது இருவருடைய வாழ்வும் இன்பமயமாகவே இருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? கனம் கிருஷ்ணயருடைய அன்பும் ஆற்றலும் அவ்வப்போது சில சில கீர்த்தனங்களாக வெளிப்பட்டன. கச்சிரங்கருடைய அன்பும் கொடைச்சிறப்பும் அவ்வப்போது கனம் கிருஷ்ணயருக்குரிய சம்மானங்களாக வெளிப்பட்டன.

கிருஷ்ணையர் கச்சிரங்கர்மீது பாடியகீர்த்தனங்கள் சில. ''பச்சிளந்தேமற் படர்ந்த'' என்று தொடங்கும் கீர்த்தனம் ஒன்று உண்டு. அது தோடி ராகத்தில் அமைந்துள்ளது. கச்சிரங்கராகிய தலைவரைப் பெருமையால் வாட்டமுறும் நாயகி ஒருத்தி வருந்துவதை அவளுடைய தோழி தெரிவிப்பதாக அதன் பொருளமைப்பு இருக்கிறது. ''கச்சிரங்க ராஜனடி உச்சிதநற் போஜனடி'' என்று தொடங்குவதும் சகானுராகத்தில் அமைந்ததுமாகிய சிந்து ஒன்றும் உண்டு.

கிருஷ்ணையர் முன்னமே குதிரையேறிப் பிரயாணம் செய்யும் பழக்க முடையவர். இராமபத்திரமூப்பனுரால் அளிக்கப்பட்ட குதிரை ஒன்று இவர்பால் இருந்தது. உடையார்பாளையம் வந்த பின்பு கச்சிரங்கர் வேறு சிறந்த குதிரையொன்றை இ வ ரு க் கு அளித்து அதனைப் பாதுகாத்தற்குரிய ஏவலாளரையும் நியமித்தார்.

கச்சிரங்கதுரையின் சங்கீத அபிமானத்தையும் வித்துவான்களை ஆதரிக்கும் இயல்பையும் அறிந்த வித்துவான்கள் பலர் அடிக்கடி உடையார்பாளையம் வந்து இவரைக்கண்டு இவர் மூலமாக ஜமீன்தாரிடம் தங்கள் தங்கள் திறமையைக்காட்டிப் பரிசுபெற்றுச் செல்வார்கள்; இவருடைய சல்லாபத்தால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். வேறு சம்ஸ்தானங்களிலுள்ள வித்துவான்கள் வந்த காலங்களில் கனம் கிருஷ்ணையருடைய சிறந்த சங்கீதத்தைக் கேட்டு மகிழ்வார்கள்; 'இத்தகைய அருமையான வித்துவான் இந்த இடத்தில் இருக்கிறரே. இவர் பெரிய ராஜசமுகங்களில் இருந்து விளங்கவேண்டியவரல்லவோ' என்று அவர்களிற் சிலர் எண்ணுவதுண்டு.

## கச்சிரங்கேந்த்ரன் சிரக்கம்பம்

ஒருசமயம் வெளியூர்களிலிருந்து சில சங்கீத வித்துவான்கள் உடையார்பாளையம் வந்திருந்தார்கள். அவர்கள் வழக்கம்போல் ஜமீன்தாரைக்கண்டு பாடிப் பரிசுபெற்றுர்கள். பிறகு கனம் கிருஷ்ணையர் இருந்தவீட்டிற்கு அவர்கள் சென்று இவரோடு சல்லாபம் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் இவரைநோக்கி, "நீங்கள் தஞ்சாவூர், திருவனந்தபுரம், மைஸூர் முதலிய பெரிய ராஜகரங்களில் இருக்கவேண்டியவர்கள். இந்த ஜமீன்தாரிடத்திலே இருந்து நீகங்ள் காலங்கழிப்பது போதாது. அந்த சங்ஸ்தானங்களின் வித்வத்ஸபைகளில் அடிக்கடி தங்கள் உயர்ந்த சங்கீத சக்தி பிரகாசிப்பதற்கு மார்க்கங்கள் ஏற்படும்; நல்ல சம்மானங்களும் கிடைக்கும். இந்த ஊர் காட்டுக்குள்ளேயல்லவா இருக்கின்றது?" என்று சொன்ஞர்கள். கச்சிரங்கதுரையின் உண்மையான அன்பையும் பிற குணவிசேஷங்களையும் அவர்கள் உணர்ந்துகொள்ள வில்லையே யென்று இவர்வருந்திஞர்; "நீங்கள் சொல்வதெல்லாம் சரியே; பெரிய ராஜகரங்களில் இருப்பது பெருமைதான்; உயர்ந்த சம்மானங்களும் கிடைக்கலாம்; பட்டமும் கிடைக்கலாம்; இன்னும் எத்தனையோ வகையான பொருள்களும் கிடைக்கலாம்; ஆனல் கச்சிரங்க துரையவர்களுடைய சிரக்கம்பம் அங்கே கிடைக்காதே. கோடி பவுன் கிடைத்தாலும் எனக்கு அது பெரிதன்று; அருமையறிந்த பிரபுவாகிய இவருடைய சிரக்கம்பம் ஒன்றே இந்த லோகம்பெறும்" என்று மனமுருகிச் செல்லி அக்கருத்தை அமைத்து ஒரு கட்டளைக்கலித்துறையை இயற்றிப் பாடிஞர். அதன் ஒருபகுதியாகிய "கச்சிரங்கேந்த்ரன் சிரக்கம்பம் போதும்" என்பது மட்டும் இப்பொழுது

எனது நினைவில் இருக்கிறது அதனைக்கேட்ட வித்துவான்கள் ஜமீன்தாரிடத்தில் இவருக்குள்ள பேரன்பையெண்ணி வியந்தார்கள்; ''இந்த ஜமீன்தார் பெரிய அதிர்ஷ்டசாலியே. ஒரு சிங்கத்தை வசப்படுத்தித் தம்பால் இருக்கச்செய்தது போல உலகமெல்லாம் சஞ்சரித்து வெற்றியடையும் இந்த மகா வித்துவானுடைய மனத்தை வசீகரித்துத் தம்பால் இருக்கச்செய்து விட்டார். ஆகையால் ஜமீன்தார் பெரிய ரஸிகசிரோமணியாகவே இருக்கவேண்டும்'' என்று அவர்கள் தமக்குள் பேசிக்கொண்டார்கள்.

கனம் கிருஷ்ணையர் விரும்பியிருந்தால் ஒரு பெரிய ராஜகரத்தில் இருந்து விளங்குவதற்குரிய நிலையை அடைந்திருக்கக்கூடும். கச்சிரங்கருடைய அன்புக்கு அடிமையாகிய இவர் அத்தகைய நிலையை விரும்பவேயில்லை; 'உடையார்பாளையம் காட்டுக்குள் மறைந்து இருக்கிறாரே. வெளியிடங்களுக்கு வர மறுக்கிறாரே' என்று வித்துவான்கள் அடிக்கடி வருத்தமுறுவார்கள். இவருக்குக் கச்சிரங்கன் சிரக்கம்பமொன்றே பூரணதிருப்தியை விளைவித்தது.

## பெருமாள் திருப்பணி

கச்சிரங்கதுரை அளித்த குதிரையை இவர் உபயோகித்து வருவாராயினர். ஒருமுறை தம்முடைய ஊராகிய திருக்குன்றத்திற்கு இவர் சென்றிருந்த காலத்தில் அவ்வூர் ஸ்ரீ சௌந்தர ராஜப்பெருமாளுடைய ஆலயம் பழுதுபட்டிருப்பதை அறிந்தார். அவ்வூரார் உடையார்பாளையம் ஜமீன்தாரவர்களைக் கொண்டு திருப்பணி செய்விக்கவேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய விருப்பத்தின்படியே இவர் கச்சிரங்கரிடம் ஒருகீர்த்தனையின் மூலமாக அக்கருத்தை வெளியிட்டார். அவர் மகிழ்ந்து உடனே திருப்பணிக்குரிய உதவிகளைச்செய்வித்தார். திருப்பணி நிறைவேறிய பின்பு கச்சிரங்கர் அக்கோவிலுக்குக் கும்பாபிஷேகமும் செய்வித்தார்.

## கச்சிக் கல்யாணரங்கர் ஆதரவு

இங்ஙனம் இருந்துவந்த காலத்தில் கச்சிரங்கர் பூதவுடம்பை நீத்தார். அக்காலத்தில் அவருடைய குமாரராகிய கச்சிக்கல்யாண ரங்கரென்பவர் பட்டம்பெறவில்லை; வேறு ஒருவர் பெற்ருர். கச்சிக் கல்யாணரங்கர் உடையார்பாளையத்தை விட்டு நீங்கித் திருவானைக்கா என்னும் ஸ்தலத்தில் இருந்துவந்தார். ஆதலின் கிருஷ்ணையர் தம் ஊருக்குச் சென்று இருக்கலானுர். பிரபுக்களால்

அழைக்கப்பட்டு இவர் திருச்சிராப்பள்ளிக்குச் செல்லுங் காலங்களில் திருவானைக்காவுக்கும் சென்று கச்சிக்கல்யாணரங்கரோடு சல்லாபம் செய்துவிட்டு வருவார். அவர் இளமைப் பிராயமுடையவராயினும் பரம்பரைக்கு ஏற்றபடி வித்துவான்களிடத்தில் அபிமானம் உடையவராகவே யிருந்தார். தம் தந்தையார் கிருஷ்ணயரை உபசரித்து வந்ததை நேரிற் கண்டவராதலின் இவர்பால் அளவற்ற மதிப்பும் பக்தியும் அவருக்கு இருந்துவந்தன. தமக்குப் பட்டம் கிடைத்தவுடன் இவரை வருவித்து உபசரிப்பதை முதற் கடமையாகக் கொள்ள வேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார்.

1842-ஆம் வருஷம் கச்சிக்கல்யாணரங்கர் உடையார்பாளையம் சம்ஸ்தானுதிபதி ஆனுர். தாம் ஜமீன்தார் பதவிபெறப் போவதை யறிவித்து அவர் கனம் கிருஷ்ணயரை வருவித்தார். அவர் ஜமீன் தலைமையைப் பெற்றுக்கொண்டகாலத்தில் இவர் பாடியகீர்த்தனங்கள் சில உண்டு. அவற்றில் அடாணுவிலுள்ள,

"மகமேரு மகராஜனே சத்ரபதி"

என்ற பல்லவித் தொடக்கத்தையுடைய கீர்த்தனமொன்றில் கச்சீக்கல்யாண ரங்கரது கொடைச்சிறப்பைப் பாராட்டிக் கூறியிருக்கிறுர்; அவர் சங்கீத வித்வான்களிடத்திலும் தமிழ்வித்வான்களிடத்திலும் அதிக அன்புடையவரென்பதை, 'கன நயந் தேசிகந் தமிழைக் கணக்கில்லாமல் ஆதரிக்கும்' என்று புலப்படுத்தியிருக்கிறுர்.

ஜமீன்பதவியைப் பெற்ற பின்பு கல்யாணரங்கர் கனம் கிருஷ்ணயரை உடையார்பாளையத்திலேயே சம்ஸ்தான வித்வானுக இருந்துவரும்படி சொல்லி அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தளித்தார். இவருக்கு எந்தவகையிலும் குறை இராதபடி கவனிக்க வேண்டுமென்று அவர் தம் ஏவலாளர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். பல வகையிலும் இவரை மிகவும் மரியாதையாக நடத்தி வரலானுர்.

கனம் கிருஷ்ணயருக்குப் பிராயம் அதிகமாக ஆகக் குதிரை ஸவாரி செய்ய முடியாமல் இருக்குமென்றறிந்த கல்யாணரங்கர் ஓர் அழகிய பல்லக்கை வழங்கி வேண்டிய போகிகளையும் அமைத்தார்; அவர்களுக்குரிய மாதச்சம்பளம் அரண்மனையிலிருந்தே கொடுக்கப்பட்டு வந்தது. ஜமீன்தாருடைய பேரன்பு கிருஷ்ணயருடைய உள்ளத்தைக் குளிர்வித்தது. ஆதலின் மகிழ்ச்சி

அதிகமாக உண்டாகும் பொழுதெல்லாம் அவர் விஷயமாக இவர் கீர்த்தனங்கள் பாடிவந்தார். இப்பொழுது கிடைக்கும் இவருடைய கீர்த்தனங்களிற் பெரும்பாலன கச்சிக்கல்யாணரங்கர் விஷயமானவைகளே.

## சில கீர்த்தன வரலாறுகள்

கல்யாணரங்கர் எங்கே போனாலும் கிருஷ்ணையரையும் உடன் அழைத்துக்கொண்டே செல்வார். ஸ்ரீ முஷ்ணம், கும்பகோணம், சிதம்பரம் முதலிய ஸ்தலங்களுக்கு அவர்போய் ஸ்வாமிதரிசனம் செய்து வருவார். அக்காலங்களிலெல்லாம் கிருஷ்ணையரும் உடன் சென்று தரிசனம் செய்துவிட்டுச் சில கீர்த்தனைகளை இயற்றிப் பாடுவார். இங்ஙனம் இருவருடைய பொழுதும் இனிதாகப் போய்க் கொண்டிருந்தது. ஸ்ரீ முஷ்ணத்துக்குப் போனகாலங்களில் இவர் பாடிய கீர்த்தனைகள், ''தேவரொயிலும்'' (கமாசு), ''பூவராகரே'' (அடாணு) முதலியன. 'தேவரொயிலும்'' எனவரும் கீர்த்தனத்தில் 'பெருமையுடனே கச்சிக்கல்யாணரங்கன்றன் பேரும் ஊரும் விளங்கத்தருவார்' என்று கச்சிக்கல்யாணரங்கரைப்பற்றிக் கூறி யிருக்கிறார். மற்றொரு கீர்த்தனம் வருமாறு:-

(இராகம் : அடாணு - தாளம் : ஆதி)

பல்லவி

பூவராகரே பரி பூர்ண போத மாதவரே
பூவராகரே

அநுபல்லவி

சேவையுந்தந்து ஆதரித்துவெகு
திவ்யமாய்ச் சிரஞ்சீவி யாகவே
ஈவில்கர்ணன் கச்சிக்கல்யாண
ரங்கனுக்கே கிருபைசெய்யும் (பூவ)

சரணங்கள்

1. வைபவமும்வெகு செல்வமும் தழைக்க வல்லபமும்
மகிமையு மிகக்கொடுத்து
வாசுதேவரே வைகுந்தரே வடமலையாரே முகுந்தரே
தெய்வம் நீரல்லாமல் ஜெகதீசனும்வேறே யுண்டோ மாதவ
சீலமாய் ஜயமாய் வரமும் ஸ்திரமுடனேயும் விளங்கக்
கிருபைசெய்யும் (பூவ)

2. வாமனரூபரே எங்கள் வனத்துளப மாலையாரே
 கோமளரே கோவிந்தரே கோகுல தாரியே உயர்
 சாமள வர்ணரே செந் தாமரைத் திருக்கண்ணரே
 நேமம் உந்தம் பக்தனையும் நிலையாகச் சவரட்சனை
 செய்யும் (பூவ)

3. எம்பெருமானே எப்போதும் ஏகநாதரே
 உம்போலே தெய்வம் உலகத்தில் வேறுண்டோசொல்லும்
 அன்புடனே மிச்சமாக அர்ச்சனைசெய்த அடிமைக்குத்
 தென்புடனே வச்சிரகாயம் ஸ்திரமுடன் விளங்கச்செய்யும்
 (பூவ)

4. வேல்முருகர் மாமனே வேதாந்த வேத்தியரே
 மாலம்புஜவல்லியுடன் மாயவரே என்றைக்கும்
 மேன்மைக்கச்சிக் கல்யாணரங்கனுக்கே கடாட்சம் உம்மைப்
 போலெவர்க்குக் கிடைக்குமோ பூமண்டலத்தில்
 உண்டோசொல்லும் (பூவ)

கும்பகோணத்துக்குக் கச்சிக்கல்யாணரங்கருடன் ஒருமுறை போயிருந்தகாலத்தில் இவர் ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாளை அவருடன் தரிசனம் செய்த பின்பு கல்யாணி ராகத்தில், ''பாரெங்கும் பார்த்தாலும்'' என்ற கீர்த்தனத்தை இயற்றிப் பாடினார். அதில் 'கச்சிக்கல்யாணரங்கனை ஸௌக்கியமாகக்காத்து' என்று அமைத்திருக்கிறார்.

கச்சிக்கல்யாணரங்கனைப் பாதுகாக்க வேண்டுமென்று உடையார்பாளையம் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ குஸுமகுந்தளாம்பிகையைப் பிரார்த்தித்துப் பியாகடை ராகத்தில், ''குஸுமகுந்தளாம்பிகையே கொஞ்சுகிளியே பஞ்சமியே'' எனவரும் ஒரு கீர்த்தனையைப் பாடினார்.

ஸ்ரீ தியாகையருடைய சிஷ்யரொருவர் ஒருசமயம் உடையார்பாளையத்துக்கு வந்திருந்த காலத்தில் ஜமீன்தாருக்குமுன் சில கீர்த்தனங்களைப் பாடினார். அவற்றுள் காம்போதிராகத்தில் உள்ள ''மாஜானகி'' என்ற கீர்த்தனத்தைக் கேட்டு மகிழ்ந்த ஜமீன்தார் அருகிலிருந்த கிருஷ்ணையரை நோக்கி, ''இந்த வர்ணமெட்டில் ஏதேனும் கீர்த்தனம் உண்டோ?'' என்று கேட்டார். அவருடைய குறிப்பை யறிந்த இவர், ''எங்கள் ஜானகியை மணஞ்செய்த''

என்று அவர் விஷயமாகவே ஒரு கீர்த்தனையை இயற்றிப் பாடினார். ஜானகி யென்பது ஜமீன்தாருடைய மனைவியாரின் பெயர். ஜமீன்தாருக்குப் புத்திரபாக்கியம் உண்டாக வேண்டு மென்று பிரார்த்தித்து ஸ்ரீ முற்கபுரீசர் விஷயமாக அடாணு ராகத்தில், ''வகுளவனவாசரே முற்கபுரீசரே, வளமாய்ப் புத்திரசந்தானம் வண்மையாகக் கொடுக்கும்'' எனவரும் கீர்த்தனமொன்றை இயற்றிப் பாடினார்.

உடையார்பாளையம் கோயிலுக்குத் தென்புறத்தே உள்ள காண்டீப தீர்த்தத்தைச் செப்பஞ் செய்வித்துக் கச்சிக்கல்யாண ரங்கர் தெப்போத்ஸவத்தை மிகவும் சிறப்பாக நடத்தினார். அந்த உத்ஸவச் சிறப்பை இவர் பாராட்டி ஒரு கீர்த்தனம் இயற்றிப் பாடினார். கொள்ளிடத்துக்கு வடகரையிலுள்ளதும் கும்பகோணத்துக்கு நேர் வடக்கிலுள்ளதுமாகிய மதனத்தூரென்னும் இடத்தில் ஜமீன்தார் ஓர் அன்னசத்திரம் கட்டினார். அக்காலத்தில் இவர் பாடிய கீர்த்தனம் ஒன்று உண்டு.

## தத்தனூர்த் தோட்டம்

தத்தனூர் என்னும் ஜமீன் கிராமத்தில் ஜமீன்தாருடைய கட்டளையின்படி ஓர் அழகிய தோட்டம் விசாலமாக அமைக்கப்பட்டது. அதில் பலவகையான கனிவிருட்சங்களும் மலர்மரங்களும் செடிகளும் வைத்து வளர்க்கப்பட்டிருந்தன. பழமரங்கள் நன்றாகப் பழுத்துவிளங்கிய காலத்தில் தத்தனூரிலிருந்த குடிகள் கல்யாண ரங்கதுரையை அழைத்தார்கள். அவர் பரிவாரங்களுடன் சென்றார். பூசாரம் பொருந்திய அவ்விடத்தில் மலர்களையும் பழங்களையும் தாங்கிக்கொண்டு பல மரங்கள் விளங்கிய காட்சி யாவருடைய கண்களையும் கவர்ந்தது. ஜமீன்தாருடன் சென்றிருந்த கிருஷ்ணையர் அந்தத் தோட்டத்தின் வளப்பத்தையும் கச்சிக்கல்யாண ரங்கர் சென்ற வைபவத்தையும் குடிகள் அன்புடன் வரவேற்று உபசரித்ததையும் கண்டு மகிழ்ச்சியுற்றார். அதன் பயனாக ஒரு கீர்த்தனம் இவரால் தர்பார் ராகத்தில் வெளிவந்தது. அது, ''டாப்பும் சிறப்புமாகப் பவனி வந்த வரிசை'' என்று தொடங்குவது. அதன் அநுபல்லவியாகிய,

''மாப்பழுக் குஞ்சோலைசூழ் தத்த நகர்தனிலே
மகிபன் கச்சிக்கல்யாண ரங்கமஹாராஜன்''

என்பது மட்டும் இப்பொழுது என் ஞாபகத்தில் இருக்கிறது.

இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை அநேகர் பாராட்டிய துண்டு. அரியிலூரில் இருந்த *சடகோப ஐயங்கார் இந்தக் கீர்த்தனத்தில் ஈடுபட்டுத் தாம் இயற்றிய ஜீவப்ரம்ம ஐக்கிய சரித்திரம் என்னும் வேதாந்த நாடகத்தில் இந்த மெட்டில் ஒரு கீர்த்தனத்தை இயற்றியமைத்திருக்கிறார்; ''சுத்த விருத்தியினாலே'' என்னும் தொடக்கத்தையுடையது அது.

## செல்வத்திற் பங்கு

தத்தனூரில் உள்ள கரும்புத் தோட்டத்தைப் பார்ப்பதற்காக வேறொரு சமயம் கல்யாணரங்கர் கிருஷ்ணையருடன் சென்றிருந்தார். நல்ல வளம்பெற்றுக் கரும்புகள் தழைத்து நின்றன. அதைப் பார்த்த கிருஷ்ணையர், ''இத்தகைய பாக்கியம் சம்ஸ்தானாதிபதிகளுக்கன்றி வேறு யாருக்கு உண்டு? கண்ணுக்கு எட்டிய வரையிலும் கருப்பந் தோட்டமாகவே இருக்கின்றது. இந்தக் காட்சியொன்றே மனத்துக்கு மிக்க இன்பம் விளைவிக்கின்றது'' என்று பேசிக்கொண்டிருந்தார். அதனைக் கேட்ட ஜமீன்தார், ''இந்தச் செல்வத்தில் உங்களுக்கும் பங்கு தருவேன்'' என்று சொல்லி அருகிலிருந்த அதிகாரியிடம் அந்தத்தோட்டத்தில் ஐந்து காணியை இவருக்கு ஸர்வமான்யமாகக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

சில காலம் வரையில் உத்தியோகஸ்தர்களின் பொறாமையினாலோ வேறு காரணங்களாலோ கிருஷ்ணையருக்கு அந்தக் கருப்பந்தோட்டம் கிடைக்கவில்லை. அதைப்பற்றி இவர் உரிய அதிகாரிகளை விசாரிக்கும்போதெல்லாம் அவர்கள் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி வந்தார்கள். இங்ஙனம் அவர்கள் செய்துவந்தது ஜமீன்தாருக்குத் தெரியாது. ஆதலின் இதனை அவருக்கு எப்படியேனும் புலப்படுத்தவேண்டுமென்று எண்ணிய கிருஷ்ணையர் உசேனி ராகத்தில், ''கச்சிக்கல்யாணரங்கராஜன் பட்சமே'' என்ற ஒரு பதத்தையும், ''கன்னலுஞ் செந்நெலும் உன்மனப் பூர்வமாக் காட்டிவிட'' என்று தொடங்கும் ஒரு கட்டளைக்கலித்துறையையும் இயற்றிப் பாடினார். பதத்தில் அதிகாரிகள் செயலை, ''எல்லாருடைய ஹ்ருதயங்களே தெரியும், எவர் சூதும் நடவாது'' என்று குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். இவற்றைக் கேட்டவுடன் ஜமீன்தார் உண்மையை நன்கு விசாரித்தறிந்தார். அவருக்குண்டான

*இவரைப்பற்றிய வரலாற்றை, நான் எழுதிய 'அரியிலூர்' என்னும் கட்டுரையிற் காணலாம். (நல்லுரைக்கோவை-I)

கோபத்திற்கு அளவேயில்லை. அந்தச் சமயத்தில் ஒருவாறு அதிகாரிகளின்மேல் குற்றம் ஏற்படாமல் கிருஷ்ணையர் பேசி அவருடைய கோபம் தணியச்செய்தார். உடனே ஜமீன்தார் சோழங்குறிச்சியென்னுங் கிராமத்தில் விளைச்சலோடு பத்துக்காணி நன்செய் நிலத்தை ஸர்வமான்யமாகக் கொடுக்கும்படி செய்தார். அந்நிலத்தை நேரிற் சென்றுகண்டு மகிழ்ந்துவந்த கிருஷ்ணையர் கல்யாணரங்கரது வள்ளன்மையையும் பேரன்பையும் எண்ணி எண்ணி உருகினுர்; அவரை நேரில் வந்து கண்டார். அப்பொழுது சந்தோஷ மிகுதியால்,

> ''நிறைந்ததே எங்கும் சிறந்ததே - கலி
> பறந்ததே உன் பேரைச் சொன்னுல்
> நிறைந்ததே எங்கும்''

என்று தொடங்கும் கீர்த்தனத்தை இயற்றிப் பாடினுர்.

## திருப்பணிக் கீர்த்தனம்

திருக்குன்றம் ஸ்ரீ செளந்தரராஜப்பெருமாள் கோயிலின் மகாமண்டபம் பழுதுபட்ட நிலையில் இருந்தது. ஆதலின் அதனைக் கல்யாணரங்கரைக் கொண்டு புதிதாகக் கட்டுவிக்க வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. ஒரு சமயம் அக்கருத்தை இவர் புலப்படுத்தவே, ஜமீன்தார் நன்ருகக் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகமும் செய்வித்தார். அதனுல் மனமகிழ்ந்த கிருஷ்ணையர் அடாணு ராகத்தில், ''பணிவிடைக் காகவே பாரிலவதரித்து'' என்று தொடங்கும் ஒரு கீர்த்தனையை இயற்றிப் பாடினுர். மகா மண்டபம் கட்டி வைத்ததை அதில்,

> ''செளந்தர ராஜப் பெருமாள் மகாமண்டபம்
> கட்டிவைக்கும் உன்போல ராஜனுண்டோ''

என்று புலப்படுத்தியிருக்கிருர்;

> ''புல்லர் முகந்தன்னிலே விழியாம லெனக்குப்
> பூர்த்தியாக மகதைச்வரியங் கொடுத்து
> அல்லலில்லாம லேயென்னை
> ஆர்ப்பரித்துக் காப்பாற்றும்''

என்று தம்மை அவர் பாதுகாத்து வருவதை நன்கு சிறப்பித்திருக்கிருர்;

''கல்லாக் கலைகள்கற்ற ராஜரிருந் தாவதென்ன
கானலோலனே கனம் கிருஷ்ணனுடன்
சொல்வாக்கைக் காக்குமெங்கள் துராதுரையே''

தமக்கு வாக்குக்கொடுத்தபடி நிறைவேற்றி வைத்ததைப் பாராட்டியிருக்கிருர்;

''நன்மை தெரிந்தபிரபுவே நவரத்னம் வைத்திழைத்த
பல்லக்குத் தான்கொடுத்துப் பரிவுடன் கீர்த்தி பெற்று''

என்று தமக்குப் பல்லக்கை அளித்ததைப்பற்றி உரைத்திருக்கிருர்.

''பெரியதுரை செய்த திருப்பணிக்குக் குறையில்லாமல்''

என்று கச்சிரங்கர் முன்பு திருப்பணி செய்வித்ததையும் குறிப்பித்துள்ளார்.

## முகாரி ராகக் கீர்த்தனம்

ஒரு சமயம் ஜமீன்தார் அரண்மனை முகப்பின் மேல்மாளிகையில் இவருடன் பேசிக்கொண்டு நின்ருர். அப்பொழுது வீதியில் ஒரு தாதன் கிருஷ்ண விலாஸமென்னும் புத்தகத்திலுள்ளதும் முகாரி ராகத்தில் அமைந்திருப்பதுமாகிய, ''மாதேயசோதை கேளம்மா - உன் மகன் சேதியை'' என்ற கீர்த்தனந்தைப் பாடிக்கொண்டு சென்ருன். அவனுடைய சாரீரம் மிகவும் இனிமையாக இருந்தது. அதைக் கேட்டு இன்புற்ற ஜமீன்தார் கிருஷ்ணையரை நோக்கி, ''இந்தக் கீர்த்தனம் நன்ருயிருக்கிறது; முகாரிராகத்தின் இயல்பை மிகவும் செவ்வையாக இந்த வர்ணமெட்டு விளக்குகிறது'' என்ருர். கிருஷ்ணையர் அவர் கருத்தை அறிந்துகொண்டு உடனே, ''அவர் வருவரோ நான் வரவாளென்னடி சொல்லடி'' என்ற கீர்த்தனையை இயற்றிப் பாடினுர். அது பின்னும் சிறந்த அமைப்புள்ளதாக இருத்தலை அறிந்த ஜமீன்தார் பெரிதும் இன்புற்ருர்.

## மாற்றிப்பாடிய கீர்த்தனம்

கச்சிக் கல்யாணரங்கர் ஒருமுறை சில பொருமைக்காரர்களுடைய சொற்களைக் கேட்டு இவர்பால் சிறிது பராமுகமாக இருக்கத் தொடங்கினுர். இவர் அதனை ஒருவாறு அறிந்து கொண்டார். ஒரு நாள் அரண்மனைக்கு இவர் சென்றபோது ஜமீன்தார் வேறு ஒரு காரியமாக இருப்பதாகவும் பிறகு பார்ப்பதாகவும் சொல்லியனுப்பினுர்.

எந்தக் காலத்திலும் தடையில்லாமல் பார்த்து ஸல்லாபம் செய்வது இவருடைய வழக்கம்; ஆதலின் அப்பொழுது இவர் வருத்தமுற்றுர். மற்றெருநாள் செல்லுகையில் வேறு வேலையைக் கவனிப்பவரைப் போல அவர் இருந்தார். அங்ஙனம் இருப்பதற்கு ஜமீன்தாரது மனவேறுபாடே காரணம் என்பதை அறிந்த கிருஷ்ணையருடைய உள்ளத்தில் வருத்தமும் சினமும் கலந்து வளர்ந்தன. ஜமீன்தார் சிறிது நேரங்கழித்துத் தலை நிமிர்ந்து பார்த்தார். உடனே இவர் கோபக்குறிப்புடன் சுருட்டிராகத்தில்,

''பத்துப்பை முத்துப்பை வச்ரப் பதக்கழம்
பையையாப் பணத்தைக் கொடுத்தவர் போலப்
பாடின பாட்டுக்கும் ஆட்டுக்கும் நீரென்னைப்
பசப்பின தேபோதும் பலனறி வேன்காணும்''

என்ற பல்லவியை இயற்றிப் பாடத் தொடங்கினுர். அதைக்கேட்ட ஜமீன்தாருடைய மனத்தில் தாம் செய்த தவறு உறுத்தியது. 'எவ்வளவோ பெரிய சம்ஸ்தானங்களிலெல்லாம் வலிய அழைத்தும் போகாமல் இங்கே அபிமானம் வைத்து இருந்து விட்ட இவரை அவமதித்தது பெரும்பிழை' என்பதை அவர் உணர்ந்தார்; உடனே எழுந்துநின்று கைகுவித்துக் கொண்டு, ''ஸ்வாமீ, க்ஷமிக்கவேண்டும்; நீங்கள் பெரியதுரை காலமுதற்கொண்டு அபிமானத்தோடு இருந்து எங்களுடைய சம்ஸ்தானத்துக்குப் புகழை உண்டாக்குகிறவர்களல்லவா? இவ்வாறு திருவுள்ளத்தில் கொள்ளக்கூடாது. நான் தெரியாமல் செய்ததை அவமதிப்பாக எண்ணுமல் ஆசீர்வதிக்கவேண்டும். தங்களுடைய அருமை எனக்குத் தெரியாதா? தங்களுடைய அபாரமான திறமைக்கு நான் தரும் சம்மானங்கள் எவ்வளவு? மகாராஜாக்களால் பூஜித்து ஆதரிக்கத்தகும் தங்களுடைய யோக்கியதையை அறியாதவர்கள் யார்? நடந்தவற்றை மறந்துவிட வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். அவருடைய பரம்பரைக் குணமாகிய ஸௌலப்யம் அந்த வார்த்தைகளில் பொங்கிவழிந்தது.

கிருஷ்ணையருக்கு உடனே கோபம் தணிந்தது; ''உங்கள்மேல் வருத்தம் ஒன்றுமில்லை. ஏதோ மனம் நினைத்தது; இப்போது சமாதானம் ஆகிவிட்டது'' என்று சொல்லிவிட்டு இவர் முன் கூறிய பல்லவியையே மாற்றி ஒரு நாயகி கூறுவதாக,

''பத்துப்பை முத்துப்பை வச்ரப்பதக்கமும்
பரிந்து கொடுத்து மிகச்சுகந் தந்துபின்

பஞ்சணமீதினிற் கொஞ்சி விளையாடி
ரஞ்சிதமும் அறிந்த மகராஜனே''

என்று பாடத்தொடங்கி அக்கீர்த்தனையைப் பூர்த்தி செய்தார்.

ஜமீன்தார் கனம் கிருஷ்ணையருடைய சாமர்த்தியத்தை நினைந்து வியந்தார்; ''பெரியவர்கள் கோபித்தாலும் நன்மையாகவே முடியுமென்பார்கள்; தாங்கள் என்மேல் கோபம் கொண்டாலும் அக்கோபம் நீர்கிழிய எய்த வடுப்போல மாறியதோடல்லாமல் ஆசீர்வாதம் போன்ற இந்தக் கீர்த்தனம் ஒன்றையும் புதிதாக உண்டாக்கிற்று. இவ்வளவு திறமையையுடைய தங்களோடு பழகும் பாக்கியம் எனக்கு அமைந்தது பல ஜன்மங்களில் நான் செய்த புண்ணியத்தின் பயனேயாகும்'' என்று பணிவுடன் சொன்னார்; அப்பொழுது உண்டான உள்ளப்பூரிப்பால் சில வகையான சம்மானங்களையும் செய்தார்.

## கீரையர்ச்சனை

இவர் தினந்தோறும் தவருமல் சிவபூஜை செய்துவருவார். ஒருநாள் அவசரமாக அரண்மனைக்குச் செல்லவேண்டியிருந்தமை யால் சிவபூஜையை விரைவில் செய்து முடித்துவிட்டுச் செல்லலா மென்று எண்ணி அதனைச் செய்ய அமர்ந்தார். அப்பொழுது என்ன காரணத்தாலோ பத்திரபுஷ்பங்கள் ஸித்தமாக எடுத்து வந்து வைக்கப்படவில்லை. இவர் இன்னது செய்வதென்று தெரியாமல் சிறிது யோசித்தார். சமையலுக்காக ஆய்ந்துவைக்கப் பட்ட கீரைக்குவியல் அருகிலிருந்தது; அது சுத்தமானதாகவும் கண்ணுக்கு அழகியதாகவும் தோற்றியது. ''போதும் பெருவிடிற் பச்சிலையுண்டு'' என்னும் திருவாக்கு அப்போது இவர் நினைவுக்கு வந்தது. உடனே அந்தக் கீரையை எடுத்து அதனையே பத்திர மாகக் கொண்டு சிவார்ச்சனையை நிறைவேற்றினர். உடனிருந்தவர் கள் இவருடைய மனநிலையின் சிறப்பை அறிந்து வியந்தார்கள்.

## வெண்ணெயில் விருப்பம்

இவருக்கு வெண்ணெயில் மிக்க விருப்பம் உண்டு; 'கிருஷ்ண னுக்கு வெண்ணெயிற் பிரீதி' என்று சிலர் வேடிக்கையாகக் கூறுவார்கள்; இவர் இளமையில் கனமார்க்கத்தை அப்பியாசம் பண்ணிய காலத்தில் தொண்டையில் உண்டாகும் துன்பத்தையும் உஷ்ணத்தையும் நீக்கும்பொருட்டு வெண்ணெயை மிகுதியாக

உபயோகித்தார்; அது முதல் அதனை இடைவிடாது பயன்படுத்தி வந்தார். இவர்பால் அன்புடையவர்கள் இவரைக்காண வரும் போதெல்லாம் நல்ல பசுவின் வெண்ணெயைக் கொண்டுவந்து கொடுப்பார்கள்.

## ஸ்ரீ வேங்கடசுப்பையர்

கச்சிக் கல்யாணரங்கதுரையின் ஆஸ்தான வித்துவானாக இவர் அமைந்த சில வருஷங்களுக்குப் பின்பு என்னுடைய தந்தையாராகிய ஸ்ரீ வேங்கடசுப்பையரவர்கள் இவர்பாற் சென்று பன்னிரண்டு வருஷங்களுக்குமேல் இடைவிடாமல் உடனிருந்து பணிவிடை செய்து சங்கீத வித்தையைப் பெற்றார்கள். அவர் களுடைய தாயாரின் அம்மான் கனம் கிருஷ்ணையர். சக்ரதானம் முதலியவற்றை அவர்கள் நன்றாகக் கற்றுக்கொண்டார்கள். தாம் கற்றுக்கொண்டதைக் காண்டீப தீர்த்தத்தின் தென்கரையிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் விடியற்காலத்திற் சென்று நாள்தோறும் சாதகம் செய்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்களுக்கு ஜமீன்தார் மாதந்தோறும் பொருளுதவிசெய்து ஊக்கமளித்து வந்தார். கனம் கிருஷ்ணையருடைய கீர்த்தனங்கள் பல அவர் களுக்குப்பாடம் உண்டு. பிற்காலத்தில் அவர்களிடமிருந்து அந்தக் கீர்த்தனங்களைக் கற்றுக்கொண்டோர் பலர்.

அவர்கள் சிவபூஜா துரந்தரர்கள். புகை வண்டியில் ஒரு காலத்தும் ஏறியதில்லை. அயல்வீடுகளில் ஒருபோதும் ஆகாரம் செய்யாதவர்கள்; எப்போதும் விபூதி ருத்திராட்ச தாரணத்துடன் இருப்பார்கள். அவர்கள் இவரை அடைந்த சிலகாலத்துக்குப் பின் என் சிறிய தந்தையாரும் உத்தமதானபுரம் கிராம முன்சீபாக இருந்தவருமான ஸ்ரீ சின்னசாமி ஐயரவர்களும் சென்று இவரிடம் அப்பியாசம் செய்து வந்தார்கள்; வீணை வாசிப்பதிலும் அவர் களுக்குப் பழக்கமுண்டு.

கனம் கிருஷ்ணையர் என் தந்தையாருடைய கல்யாணத்துக்குப் பொருளுதவி செய்யவேண்டுமென்று விரும்பிக் கச்சிக் கல்யாண ரங்கர் மீது ஒரு கட்டளைக் கலித்துறையை இயற்றினார்; அதன் முதலடியாகிய,

''வன்ய குலோத்தமன் ரங்க மகீபன் வரிசைமைந்தா''

என்பதுமட்டும் இப்பொழுது என் ஞாபகத்தில் இருக்கிறது. ஜமீன் தார் அங்ஙனமே என் தந்தையாரின் திருமணத்துக்கு வேண்டிய பொருளுதவி செய்தார்.

கிருஷ்ணயருக்குப் பிராயங்கள் ஆக ஆகத்தளர்ச்சி உண்டா யிற்று. வறள்வாயுவென்னும் ஒருவகை நோயால் இவர் வருந்தி ஞர்; கச்சிக் கல்யாண ரங்கதுரைக்கு இவரைப் பிரிந்திருக்க மனமில்லே; ஆயினும் இவருடைய சரீர நிலேயை அறிந்து ஒரு வாறு அதற்கு உடன்பட்டார். இவர் தம் ஊர் சென்று அங்கே இருக்கலானர். இவர் விடைபெற்றுக் கொள்ளுகையில் ஜமீன்தார் பொருளுதவி செய்ததன்றி அதன்பின்பும் அவ்வப்போது வேண்டிய பொருள்களே அனுப்பி உதவி வந்தார். தக்கவர்களே அடிக்கடி அனுப்பி இவருடைய நிலேயைத் தெரிந்து வரச் செய்தும் அறிந்து கொள்வார்.

இவருடைய மிகத்தளர்ந்த நிலேயை உணர்ந்த என் தந்தை யார் அதிக வருத்தத்தை அடைந்தார். அதையறிந்த கிருஷ்ண யர் அவர்களேத்தேற்றி, பைரவி ராகத்தில்,

''கொடுத்துவைத்தது வரும் ஏருசையால்மிகக்
குறைப்பட்டால் வருகுமோ பேய் மனதே''

என்று ஒரு கீர்த்தனேயை இயற்றி அவர்கள்பால் அளித்தார்.

இறப்பதற்கு இரண்டு நாட்களுக்குமுன் தாம் சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜமூர்த்தியைத் தரிசனம் செய்ததாக இவர் கனவு கண்டார். விழித்தவுடன் ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தியை நினேந்து மனமுருகி விபூதியைத் தரித்துக் கொண்டு பந்துவராளி ராகத்தில் ஒரு கீர்த்தனத்தை இயற்றினர்; அதன் பல்லவி,

''தில்லேயப்பா உனது பஞ்சாக்ஷரப்படியில்
சின்மயமாய்த் தினந்தினமும் வந்து தரிசிப்பேன்''

என்பது,

## பிரிவு

இந்த ஸங்கீதசிகாமணி இவ்வுலகை நீத்தகாலத்தில் இவருக்கு அறுபது பிராயத்திற்குமேல் இருக்கும். அக்காலத்தில் என் தந்தை யாரவர்கள் உடன் இருந்தார்கள்.

கனம் கிருஷ்ணயருக்கு ஒரு குமாரியார் மட்டும் இருந்தனர்; அவருடைய பெயர் சங்கரியம்மாளென்பது.

## அன்பர்கள் பரிவு

இவருடைய மாணுக்கர்கள் பலர். அவர்களுள் தஞ்சையில் இருந்த ஆதிமூர்த்தி ஐயரை நான் பார்த்துப் பழகியிருக்கிறேன்.

திருக்குன்றத்திற் கணக்குப் பிள்ளையாக இருந்தவரும் தமிழிலும் சங்கீதத்திலும் ஞானமுள்ளவரும் கார்காத்த வேளாளருமாகிய அருணுசலம் பிள்ளையென்னும் ஒருவர் இவர் பாடுவதைக் கேட்டுக் கேட்டு அன்புற்று ஊக்கமூட்டி வருவாரென்று கேள்வியுண்டு.

இவர் இறந்தபின்பு இவருடைய சகோதரர்களாகிய சுப்பரா மையரும், சுந்தர ஐயரும் மிகவும் வருத்தமுற்று உருகினுர்கள். பாடும் பொழுதெல்லாம் இவருடைய நினைவுவந்து அவர்களைத் துன்புறுத்தும். என் தந்தையார் பாடுங்காலங்களில் சுந்தர ஐயர், ''கிருஷ்ணனை நினைத்துக் கொண்டு பாடு; சங்கதிகள் இன்னும் நன்ருக வரும்'' என்று கூறுவாராம். அவருக்கு இவரிடம் இருந்த பிரேமையும் மதிப்பும் இதனுலும் விளங்கும்.

என் தந்தையார் இவருடைய கீர்த்தனங்களை அடிக்கடி பாடிக்காட்டி மனமுருகி வருந்துவார்கள்; இவருடைய குணங்களை யும் கீர்த்தனங்களைப் பாடும் முறைகளையும் சொல்லிச் சொல்லி, ''இனி அவர்களைப்போல் யாரைப்பார்க்கப்போகிறேன்!'' என்று இரங்குவார். என் சிறிய தந்தையாரும் அங்ஙனமே இரங்குவார்.

கனம் கிருஷ்ணையருடைய வாழ்நாள் முழுவதிலும் சங்கீத சம்பந்தமான நிகழ்ச்சிகளே நிறைந்திருந்தன. இவருடைய மன உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் கருவியாக இவருடைய ஸாஹித் தியம் பயன்பட்டது. இவரால் தமிழ்நாட்டார் கனமார்க்கத்தின் இனிமையை உணர்ந்தனர்; கனமார்க்க ஸாஹித்தியங்களைப் பெற்றனர். சங்கீத வித்துவான்களின் கோஷ்டியில் இவர் ஒரு பிரிவுக்குத் தலைவராக விளங்கினுர். இவருடைய கம்பீரமும் சாமர்த்தியமும் வசீகர சக்தியும் இவருடைய வரலாற்றுல் விளங்கு கின்றன. இந்த அரிய இயல்புகளை நினைந்து நினைந்து பாராட்டி மகிழ்வதையன்றி நம்மாற் செய்யக்கூடியது வேறு யாதுளது?

---

# கீர்த்தனங்கள்

## திருக்குன்றம் ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள்

1. இராகம் : தேசிகதோடி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

உன்பதமே சதாகதி யென்றே
உள்ளபடி நினைந் தவர்க்கு
உன்மகிமை நீமறந்தா
லுன்பெருமை தானென்ன (உன்பதமே)

(அநுபல்லவி)

சின்முத்திரா தாரியாகிச்
செகந்தனிலே விருதுபெற்ற
ஸ்ரீ சௌந்தர ராஜரே
செல்வமாக எப்போதும் (உன்பதமே)

(சரணங்கள்)

1. கருணைபொழிய இன்னந் தெந்தனமா-பக்தர்கள்
கவலையைத் தீர்க்கவும் உனக்கிது கனமா
தருணம் தருணம் வினைய மனமா-நீ
தாமதம் செய்தால் உனக்குத் தனமா - மனமோ கனமா
(உன்பதமே)

2. பன்னக சயனு பரந் தாமா - உன்றன்
பணிவிடை செய்யாமலிருப்ப தாமா
என்னென்னமோ அறியேன் ராமா
ஏகநாதா பூரண காமா கன்னிப ச்யாமா (உன்பதமே)

3. செந்திரு வேல ருக்கனு கூலா - தழைக்கும்
திருக்குன்றம் வாழ் சௌந்தரராஜ லோலா
உன் திருநாமஸ்மரணை மேலா
ஓகோ மாயாவினோத லீலா பாலகோ பாலா (உன்பதமே)

## 2. இராகம் அடாணு ; தாளம் : ஆதி.

(பல்லவி)

சும்மா சும்மா வருகுமா சுகம்
சும்மா சும்மா வருகுமா சுகம் (சும்மா)

(அநுபல்லவி)

அம்மம்மா வென்றிருந் தாவதென்ன
ஆண்டவனைத் தெரிந்துபார்
இம்மாத்திரம் நீ செய்தால் சௌந்தர
ராஜர்க்கு இரங்கும் அமோகம் வைபோகம் திருவடி (சும்மா)

(சரணம்)

அந்திநே ரந்தன்னில் முந்திக்கொள் பெண்கள் கண்ணில்
சந்திக்காமலே நீ வந்து வந்து நின்ருல்
மந்தமாருதமும் அந்தவேளை நேரும் அந்த
நந்த குமாரனை நயந்து வணங்காமலே (சும்மா)

---

## 3. இராகம் : தர்பார் ; தாளம் : ஆதி.

(பல்லவி)

*செறுக்கி மயக்கமீறித் தலைக்கேறுதே
சீறித் சீறித் தூறுவதும்போது மந்தச் (செறுக்கி)

(அநுபல்லவி)

தெறிக்கத் தெறிக்கச் சொல்லுவதும் உம்முடைய
திருக்கும் முறுக்கும் அறிவேன் காணும்
இறுக்கும் ரவிக்கை யெனக்குத் திமிறினுலென்ன
ஏன் பவந்தம் செய்கிறீர் சௌந்தர ராஜரே (செறுக்கி)

(சரணங்கள்)

1. கடைவிழிகள் சிவந்து கண்கள் மிரட்டுமந்தக்
காமியைக் கண்டால் நயமோ சாமி
இடைக்கலங்காரம் உமைப் போலொருவருண்டோ
ஈசனே நேசனே ஜக தீசனே (செறுக்கி)

---

* செறுக்கி - சிறுக்கி.

2. வெண்ணெய் தயிர்பாலுண்டு கோபியர் வீட்டினில்
வேடிக்கை செய்யும் விநோத லீலனே
கண்ணைக்காட்டி யழைப்பதும் போதும்ஜகத்
காரணனே நாரணனே பூரணனே (செறுக்கி)

3. த்வாரகா வாசரே சௌந்தர ராஜரே
தாமோதரா முத்து வேலர் மாமனே
ஸ்வாரஸ்ய மாகவே ஸ்வானுபோகமுமவள்
ஸௌக்கியமே சொக்கியே மனஞ்சிக்கியே (செறுக்கி)

—

4. இராகம் : சங்கராபரணம் ; தாளம் : ஆதி.

(பல்லவி)

நல்ல நல்ல நிலவு பறிபோகுதே
நானென்ன செய்வே னடிபாதகி (நல்ல)

அநுபல்லவி

சல்லாப மாகவே வசந்த காலத்தில்
சௌந்தர ராஜரைக் காணுமல் வீணே (நல்ல)

(சரணங்கள்)

1. செண்டு நகில்கள் திரண்டு விம்முதடி
செண்பகப் பூவாசனையும் கம்முதடி
பண்டு நினைத்த பருவங் கும்முதடி
பார்க்கில் லுடம்பு மயிர்க்கூச் சம்முதடி (நல்ல)

2. காதலென் னெஞ்சினுள் மெத்தவே ஆருதே
காமன் கணையும் கண்முன்னே சேருதே
வேதனை யாகமெய் மெலிந்து சோருதே
மேலென்ன செய்வே னடிமையல் மீறுதே (நல்ல)

3. முருகேசர் மாமன் இங்கேவந்து பாராரோ
முறைமையா கக்கிட்டே நேரே வாராரோ
இருகையா லணைத்து முத்தந் தாராரோ
என்னைப்போ லெத்தனை பேரோ ஆராரோ (நல்ல)

5. இராகம் : பைரவி ; தாளம் : ஆதி.

பல்லவி

படியளக்கும் பெருமானென்று உள்ளபடி பார்த்தவர்க்குப்
பதறுமா - சிந்தை - சிதறுமா (படி)

(அநுபல்லவி)

அடியளந்த மாயவன் திருக்குன்றந் தனில்வாழும் எங்கள்
ஆனந்த வைகுண்ட மூர்த்தி சௌந்தர ராஜர் (படி)

(சரணங்கள்)

1. பேச்சேது மூச்சேது பேரேது ஊரேது
பெண்டிர் மக்களேது பிரபலமும் ஏது
நீச்சேது நிலையேது நிமிஷமுந் தானேது
நித்தம் சகித்திருக்கும் நினைவும் ஏது (படி)

2. போக்கேது வரத்தேது புதுமையுந் தானேது
பொழிவதும் அழிவதும் பொருள் திருவருளல்லால்
வாக்கேது மனமேது மாயகாய மேது
மலைமேலிட்ட விளக்காய் மாயவனும் எல்லவர்க்கும் (படி)

3. முருகன் மாமனைத் தவிர முதலேது பதிலேது
மோகபோக மேது முற்றுந்தத்துவமேது
தருவேது சகமேது சகல ஸாம்ப்ராஜ்யமும்
ஸர்வகாலங்களிலும் சௌந்தரராஜர் (படி)

———

6. இராகம் : கமாசு ; தாளம் : ஆதி.

பல்லவி

என்னத்துக் கிந்த ஏகாடஞ் செய்கிறீர்
எங்கள் சௌந்தர ராஜ கோபாலரே (என்னத்)

அநுபல்லவி

தன்னைத்தான் அறிந்த பேருக்கு நீருண்டு
சகலமுந் திருவடி மகிமையே
கன்னத்தைக் கடித்துப் பின்னலைச் சுழற்றிக்
கறுத்த குமாரியென் றென்னை மயக்கியே (என்னத்)

(சரணங்கள்)

1. நிஷ்டை தவறுமா நேமம் தவறுமா
நீதி தவறுமா ஸ்ரீராம ராமா
நஷ்டமென்ன வுமக் கொன்றுங் குறைவில்லை
பட்டப் பகலிலும் ஒட்டாரம் ஒட்டியே (என்னத்)

2. எவ்விதஞ் செய்தாலும் என்னதான் சொன்னாலும்
எப்போது பார்த்தாலும் கைவல்யந் தானடி
இவ்வித மாகவே க்ருபைசெய்தாலும் ஸாமி
அவ்விதம் அடாபிடி செய்யலாமோடி (என்னத்)

3. சக்கந்தஞ் செய்தாலும் சம்பந்தம் செய்தாலும்
சம்போகஞ் செய்தாலும் முத்துவேலர் மாமன்
வெட்கமாகும்படி என்மனதைச் சொக்கிப்
பக்குவமாகவே தக்கபடி சொல்லி (என்னத்)

---

## கும்பகோணம் ஸ்ரீ சாரங்பாணிப்பெருமாள்

7. இராகம் : சௌராஷ்டிரம்; தாளம்: ஆதி.

(பல்லவி)

ஆராவமுதரை அணைத்தணைத்தனு போகஞ் செய்ய
அனுதினந் தோணுதே (ஆரா)

(அநுபல்லவி)

நேராமோ நெருக்கத் தோடே நெருக்கம்
நேர்ந்துகொண்டு காமமாரி பொழியாரோ
ஆராரோ போதனை செய்தாலும் எங்கள்
அச்சுதனை மறவேனே எந்நாளும் (ஆரா)

(சரணங்கள்)

1. செண்டுநகி லிரண்டுந் தழைத்துப் புடைத்துத்
திரண்டு விம்மிக் கும்மியடிக்குதடி
அண்டுமவர் இணங்கினவர்
ஆனாலும் அகம்நினைந் துருகுதடிகற்
கண்டுமொழி மாதே வழி கண்பார்த்துப் பூத்துப்
பண்டு பழகிப்பழகி இரவும் பகலுமாகப்
பஞ்சணைமீதினில் (ஆரா)

2. கொண்டைகுலுங்கவும் காதல் விளங்கவும்
கொஞ்சிக் கொஞ்சியவர் செஞ்சொற் கனியிதழ்
உண்டுருசி மண்டிய பேராசை
உள்ளுக்குள் ளொருவகையாய் மயக்குதடி
சண்டைக்காமதனன் என்
ஸாமி வைகுண்டாதிபதிமுன்
தண்டைக் கொலுசுந் தொண்டையுங் குமுறத்
தாவிக்கொண்டே சுக மேலிக்கொண்ட (ஆரா)

3. நேமமடியாள்பெண் பிறந்த நாளே முதல்
நித்யானந்த சுகமானேனே வேலருக்கு
மாமருகவே திருக் குடந்தை நகர்தனில்
வாழ்ந்திருக்கு மாதி தேவாதி தேவனே
பூமண்டலந்தனிலிப்படி யாகவே
புருஷவேசிகந் தானுமுண்டோடி
நாமம் நினைத்தவர்க்குச் சபலமே
நன்மை தெரியுமோடி அடி கூடி (ஆரா)

---

8. இராகம் : தன்யாசி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

ஆரா வமுதரைப் பாரா மல்மனம்
ஆறுமோ தேறுமோ (ஆரா)

(அநுபல்லவி)

தீராத மையல் கொண்டேன்
தீருமோடி நேருமோடி
பாரெங்கும் ஓடி அளந்து
பன்னகத்தில் பள்ளிகொண்ட (ஆரா)

சரணங்கள்

1. கடைகிழிந்த கருங்குவளைக் கண்களிரண்டுஞ் சிவந்து
மயக்குதே மையல் நோய்
சடையச் செய்தென் அங்கமெல்லாம்
தளர நெஞ்சத் துள்ளே வந்து
குடையுதே மிகக் குமுறிக் குமுறி
ஒருவகையாய் வருகுது நூல்
இடையும் ஒடியுதே யென் செய்வேனடி
இன்னமும் என்னமோ அரிஹரி (ஆரா)

2. அடம்பிடித்தே தனமென் மார்பில்
அம்மானை போலெழும்பி எழவேமுத்து
வடங்கள்நிறைந்த ரவிக்கை வார்தான்
துணுக்குத் துணுக்கா யிரமாகுதே
உடம்பு மெய்ம்மறந்து
ஊணுறக்க மில்லாமலிப்படி
அடைவில்லாமலே மாயவன் செய்ததென்
அங்கமு நொங்குதே நரஹரி (ஆரா)

3. படிப்படியாய்த் தலைச் சொருக்கும்
பாதந்தனிலே அவிழ்ந்து விழுந்துலாவுதே
கொடித்தடம் படித்துறைக் காவேரியிற்
கூவிக்கூவி நின்று குரலும் நோவுதே
அடிக்கடி கோமளமாகி
அணைத்துக்கட்டி யனுபோகஞ் செய்வாரடி
வடிவேலவருக்குக் குடந்தையில்
வாழு மாமனை நேமனை நரஹரி (ஆரா)

---

9. இராகம் : கமாசு; தாளம் : ஆதி.

(பல்லவி)

ஆரா வமுதரைப் போலெனக்கு
ஆண்டவ னுண்டோ நில்லடி சொல்லடி (ஆரா)

(அநுபல்லவி)

பாராமலிருக்க அரைநாழிகை சகிக்குமோ
பாக்கியமே திருக் குடந்தையில் வாழும் (ஆரா)

(சரணங்கள்)

1. பொற்ரு மரைக்கரை யருகினிலே ஸாமி
பூஷணமாய்ப் புதுமையாகி
முத்தாரமுங் கொண்டுவந் திங்கே
மூர்த்திகரமாய் எனக்குத் தந்த (ஆரா)

2. சடகோபமுந் திருநாமமும் பார்க்கச்
சகியே சகிக்குமோ சகிக்காதோ

வடமலையா னிங்கே வந்து
வரிவளை கலைகளுஞ் சோருதே நேருதே* (ஆரா)

---

10. இராகம் : கல்யாணி; தாளம் : ஆதி.

(பல்லவி)

பாரெங்கும் பார்த்தாலும் உமைப்போலே
பரிமளமுள்ள பரமபுருஷன் கிடைக்குமோ (பாரெங்கும்)

(அநுபல்லவி)

நீரங்கும் நானிங்கும் இருந்தாலும் எனக்கு
நினைவு திருவடியில் திருக்குடந்தையில் வாழும்
சாரங்கபாணியே கச்சிக் கல்யாண ரங்கனைச்
சௌக்கியமாகக் காத்தே யெனை அருளும் (பாரெங்கும்)

(சரணங்கள்)

1. பெருமையானவுன் தரிசனை நேர்ந்தது
பேரின்பமான தனிமுதலே
கரிமுறையிடும் போது சவரக்ஷணஞ் செய்த
கண்ணனே கைவல்யனே சைதன்யமே
துரியபதமுஞ் சகல சாம்ப்ராஜ்யமுந் தந்து
ஸ்தூலஸூக்ஷ்ம காரணமா யெங்கும் விளங்கும்
அரிஹரி முரஹரி அச்சுதானந்தனே
ஆனந்தமாக எங்கும் நிறைந்த ஜோதியே (பாரெங்கும்)

2. பார்க்கப் பார்க்கப் பதினுயிரங்கண் வேணுமே
பதிதபாவனஞ் செய்துவைக்கும்
ஆர்க்கும் ஸ்வாமி கிருபையல்லாமல் வேறே யுண்டோ
அச்சமுடன் மிச்சமாக அர்ச்சனை செய்து
பார்க்குள் உமக்கு இவரைப் போலேயும் பரம
பக்தி செய்பவர்கள் உலகத்தி லாருமில்லை
தீர்க்கமுடனே சிரஞ்சீவி யாகவே
செயமுந்தந்து நயந்தந்து அபயஸ்தந்தந்து (பாரெங்கும்)

3. கும்பகோண க்ஷேத்திரந்தனிலே வசிக்கும்
கோமள வல்லிக் குகந்தவரே

---

* இதன் மூன்றுஞ் சரணம் கிடைக்கவில்லை.

எம்பெருமானும் கும்பநாதரும் நீரே
ஏதும் பேத மில்லாமல் வாழ்ந்தவரே
அன்புடனே முத்துக் குமாரன் மாமனே
எந்த நாளைக்கும் பூர்ண சந்திரன்போலே
இன்பமுடனே கச்சிக்கல்யாண ரங்கனைக் காக்கும்
ஆண்டவனே வேண்டிய வரங்களைத் தாரும்
(பாரெங்கும்)

---

## கும்பகோணம் ஸ்ரீ சக்கரபாணிப்பெருமாள்

11. இராகம் : அடாணு; தாளம் : ஆதி.

(பல்லவி)

சக்ரபாணி சாமிகிட்டே நின்னையா
தயைவர மிகவும் நீ சொன்னையா (சக்ர)

(அநுபல்லவி)

நிக்ரஹானுக் கிரஹஞ் செய்யும் நீலமேகச் யாமளனை
சுக்ரீவனைக் காப்பாற்றின அச்சுதனைத்ரிவிக்ரம (சக்ர)

(சரணங்கள்)

1. வஸ்து பெருமானைத் தவிர
மகிமை வேறுமுண்டோ
மஸ்துமீறி ஒரு வார்த்தை
வாய்பதறி நீ சொல்லடி
பக்த த்யாக சன்னிதிக்குப்
பணிவிடை நீ செய்யடி எங்கள்
கஸ்தூரி ரங்கனைப் போல்
காலாகாலங் களிலுண்டோ துணை (சக்ர)

2. வாயைப் பொத்திக் கையைக் கட்டி
வாசமலர்ச் செண்டு கட்டி
மாயன் சுத்த நாதனுக்கு
மாலைநேரத் தில்கொடுத்து
ஞாயம் வெற்றி நீதி தவருத ஜகந்
நாதனுக்குப் பிரியமாகப்
பாயசதானம் தண்டம் உள்ள
படியே நடத்தியன்புடனே (சக்ர)

3. செந்திருவேலவருக்குச்
செங்கண்மால் மாமனடி
சிந்தை மகிழ்ந்த திருக்
குடந்தை தனிலே வாழுமு
குந்தர்க் கடிமை நான்
கோகுலத்துக்குப் போய்வரவுஞ்
சந்தேக மென்னடி இனித்
தாளாதடி பூங்குயிலே (சக்ர)

—

12. இராகம்: தன்யாசி; தாளம்: ஆதி.

(பல்லவி)

சக்ரபாணி சாமியைக் கண்டேன் ஆசை
கொண்டேன் நான் (சக்ர)

(அநுபல்லவி)

சக்கரை சீனி கற்கண்டு
சாந்து புழுகுங் கொடுத்துச்
சுக்ரவார தினத்தி லென்னைச்
சுதினமாக வேமருவும் (சக்ர)

(சரணங்கள்)

1. முத்துக் கொண்டை ரத்னக் குச்சும்
முன்னழகும் பின்னழகும்
பத்துக்கோடி கண்கள் வேணும்
பார்க்கப் பார்க்க முடியாது
சுற்று முற்றும் பார்த்துக் கோபியர்
சூழ்ந்துகொள்ள மதிமயக்கியே
விற்று முதலில்லாமல் அவளவள்
வெண்ணெய் தயிரை வாரியுண்ட (சக்ர)

2. மடந்தையர் கூட்ட மெல்லாம்
மயலாக வேதிருக்
குடந்தையில் வாழுமெங்கள்
குமாரருக்கு மாமனடி

உடந்தை தவருமலே
ஓரஞ்சு நாளைக்குள்ளாகித்
தொடர்ந்து தொடர்ந்து வைகுண்ட நாதர்க்குச்
சொல்லடி கல்யாண குணங்களெல்லாம்* (சக்ர)

---

13. இராகம்: தன்யாசி; தாளம்: ஆதி.

(பல்லவி)

பகற்பத்துத் திருநாளில் சக்ரபாணி ஸ்வாமியைப்
பார்த்தேன் மய லார்த்தேன் ஒன்றும் தோற்ருமல்
நேற்றிந் நேரத்தில் (பகற்பத்து)

(அநுபல்லவி)

சேப்புச் சிந்தூரமும் திருநாமமுந் திலதப்பொட்டும்
சேவை வடிவும் ஆருக்குக் கிடைக்கும்
ச்ருங்கார மென்ன சொல்வேன்
ச்யாமள வர்ணனை (பகற்பத்து)

(சரணங்கள்)

1. துளபமாலையும் மணிமகுடமும்
தோளின் அழகும் பீதாம் பரதரர்
ஒளிர்வுடன் வரும் வேணு நாதருடை
ஒயிலென்ன சொல்லுவேன்
இளகி மனந்தளரக் கோபாலனை
எங்கெங்கு மிருந்தாலும் அங்கெங்குந் தோணுதே
களபச் செண்பகப் பன்னீ ருதிர்ந்த
கஸ்தூரி வாசனை மஸ்து மீறவே (பகற்பத்து)

2. மகரகுண்டலம் அசைந்தசைந் தாட
மார்பிற் பதக்கம் மகிழ்ந்து பதிந்தாட
ஜெகந் நாயகர் வேதாந்த வேத்யரைச்
சேவையுஞ் செய்து கொண்டேன்
சகல ஸ்ம்ருதியுஞ் சகல வேதத்தில்
சச்சிதானந்த கனமய மாகவே
பகவந்த வைகுண்ட வாசரைப்
பார்க்கப் பதிஞயிரங் கண்கள் வேணுமே (பகற்பத்து)

---

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

3. வடியும் அதரம் பாலொழுகுதே
வஞ்சிக் கொடிகளென் னெஞ்சை யுருக்குதே
குடிசிறை பிடிக்கு மெங்கள் வேலருக்குக்
கோமளனே மாமன்
அடியருக்கடியனு யென்னையும்
ஆண்டனு பவித்துக் கொள்ளு முகுந்தனை
விடிய முழுதுந் திருக்குடந்தையில்
வேடிக்கை வாடிக்கை கூடிக்கொண் டேநிற்க
(பகற்பத்து)

---

## இராஜமன்னுர் கோயில் இராஜகோபாலப் பெருமாள்

### 14. இராகம் : கமாசு ; தாளம் : ஆதி

(பல்லவி)

என்னமோ வகையாய் வருகுதே மானே (என்ன)

(அநுபல்லவி)

அன்னமே முன்னமே கன்னங் கன்னமாக
நின்னயஞ் சொன்னேன் ராஜ மன்னரு ரிங்கேவர (என்ன)

(சரணம்)

எந்திடம் போனுலும் அந்திடந் தன்னிலே
இருக்கிருர் மனதை உருக்குருர்
வந்திடமா லென்னிடம் மாயாவ தாரனைச்
சொந்தவிட மெனக்குத் தோகையே தாகமாகி
(என்னமோ)

---

### 15. இராகம் : தோடி ; தாளம் : ரூபகம்.

(பல்லவி)

மன்னருர் வலைவீசி மாயஞ் செய்தாரோ - ராஜ (மன்ன)

அநுபல்லவி

மின்னும் பொன் மதிளழகும் நல்
வீதி விலாசமும்
சொன்ன விமானமுங் கண்டு
துலங்கவே தனங் குலுங்கராஜ (மன்ன)

சரணம்

திருநாமமுஞ் சிந்துரத் திலகப் பொட்டும்
சேவையழகும்
ஒருநாமமும் இணையில்லையே அவர்
ஒருதரம் இங்கே மருவவரவே (மன்ன)

---

16. இராகம் : தன்யாசி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

மன்னனு ரொயிலும் வரிசையும் என் சொல்வேன்
(மன்னனுர்)

(அநுபல்லவி)

பன்னக சயனரைக் கோமளரைப்
பார்க்க இன்னம் வாராமல் ராஜபதிவளர் (மன்னனுர்)

(சரணம்)

நீலமேக ச்யாமளரை லோலமுடன்
நின்று திரும்பிப் பார்த்த கல்யாணகுண
சீலமான கோபாலர் நடந்துவந்து
சின்னக் குமாரி யென்றென் பின்னலைப் பிடித்திழுத்த
(மன்னனுர்)

---

ஸ்ரீ ரங்கநாதர்

17. இராகம் : கமாசு ; தாளம் : ஆதி.

பல்லவி

சொர்க்கவாச லேகாதசியில் ஸ்ரீரங்க ராஜரை நான்
சுந்தரமாய் ஸேவித்தேன் சுகித்தேன் பூரித்தேன் (சொர்க்க)

அநுபல்லவி

கற்கண்டு சீனியென்ன என்றன் ஸாமிசெங்
கனிவாய்க்கிணை யெங்கேதா னுண்டோடி
பொற்கென் றெழுந்து முத்தந்தந்து சந்தனம்
பூசினுர் புண்ய வசந்தானடி (சொர்க்க)

(சரணங்கள்)

1. மட்டுமித மில்லாமலே
கொட்டகைத் திருநாளில்
மெட்டியோசை கலகலென்ன
வட்டமிடும் பெண்களுடன் (சொர்க்க)

2. அஷ்டதிக்கி லும்இருந்து
நிஷ்டைமிகச் செய்திருக்கும்
சிஷ்டர்களெல் லாம்வரவும்
இஷ்டமாய்க் கண்டுமகிழ்ந்தேன் (சொர்க்க)

3. மாணிக்கவை டூரியமும்
ஆணிப்பொன்முத் துச்சரமும்
காணிக்கையான் கொண்டுவர
வேணிக்குள்மலர் வைத்தசாமி (சொர்க்க)

4. முத்துவேலர் மாமனுன
சித்ரவீதி யில்ஜெகத்
கர்த்தருடை திருவடி
உத்தமமாய்க் கிடைத்தது (சொர்க்க)

---

18. இராகம் : காம்போதி ; தாளம் : ஆதி.

பல்லவி

ரங்கமய மான எங்கள் ஸ்ரீரங்க ராஜருடை
அங்கரங்க வைபவங்கள் என்ன சொல்வேனடி (ரங்க)

அநுபல்லவி

பங்கயப்பொற் பதவடிவும் எங்கள்குல தேவரைப்போல்
எங்கெங்கே இருந்தாலும் அங்கெங்கு மவர்தானடி (ரங்க)

சரணங்கள்

1. சித்ரவீ தியில்வெகுவி
சித்ரமாய் மஞ்சள் வெயில்தன்னில்
கஸ்தூரி அரளிமுல்லை
கனகதுளப மணிந்த ஜகத்

கர்த்தன் சேவையுங் கண்டேன்
அகண்டா காரச்சின்
முத்திரைக்கைவல்ய ஸாம்ராஜ்ய
மோக்ஷ மெனக்குக் கிடைத்ததடி (ரங்க)

2. மருமல்லிகை சண்பகமுடன்
வாசமார்கோ பாலனைக்கண்டு
மருவி மருவி அணைந்தவர்போல்
மங்கையரெல் லோருமயங்கி
உருகுகிருர் கும்பரவி
உத்தரவீ தியிலே ஸாமி
வருகிற வேடிக்கையும்
வாடிக்கையும் கோடி ஸூர்யப்ரகாசமான (ரங்க)

3. உபயகா வேரி நடுவில்
உண்மையாய் வேலவர் மாமன்
அபயமபய மென்ற வருக்கு
அபயங்கொடுக்கும் ஸ்ரீதரனை
ஸபலமாகக் கூடினேனுன்
தன்யன் தன்யனுனேன்
தபஸும் ஸ்நானமும் தீர்த்தமும்
ஸகலமும் ஸ்வாமி க்ருபையே தானடி (ரங்க)

---

## ஸ்ரீமுஷ்ணம் பூவராகப் பெருமாள்

19. இராகம் : கமாசு ; தாளம் : ஆதி.

(பல்லவி)

தேவரொயிலும் ச்ருங்காரமும் என் சொல்வேன்
தேனே மானே தானே ஸ்ரீஹரி (தேவர்)

(அநுபல்லவி)

பாவனஞ் செய்யுமெங்கள் பூவராகர்க்ருபை
பக்தன் கச்சிக் கல்யாண ரங்கனைக் காக்கும் (தேவர்)

(சரணங்கள்)

1. மாணிக்க வஜ்ரவை டூரியம் இழைத்தநவ
மணிமகுடமும் க்ரீடமும்

ஆணிப்பொன் னாபரணமும் தொண்டருக்குமிக
அருள் பெருகுங் கருணை விழியுமே
சேணிற் கலந்த பெருமழை மேகமென்னவே
திகழும் ஒளித் திருமேனியும்
வேணிக்குள் மலர்வைத்த அலர்மேலுமங்கை
வேட்டை லீலை விநோதமாகவே (தேவர்)

2. மண்டலம் அனைத்தும் ஓரடியால் அளந்திட
வளர்ந்து நின்றவரும் அவரே
அண்டபகிரண்டப்ரம் மாண்டங்களுக் கெல்லாம்
ஆதார பூதமும் அவரே
தண்டமிழினுக் கிரங்கியே பதின்மர் பாடலைத்
தயவா யுகந்தவர் அவரே
விண்டுவைத் தூதிகோச வரக்ஷணை செய்யும்
வேணுகோபாலர் கோலாகலமாகவே (தேவர்)

3. திருவமார் கந்தர்மாமன் பூவராகரைத்
தினமுந் தினமும் வந்து சேவிப்பேன்
பருவ வயதில் வெகு பெண்களை மயக்கிய
பன்னக சயனரடி
பெருமையுடனே **கச்சிக் கல்யாண ரங்கனது**
பேரும் ஊரும் விளங்கத்
தருவார் சந்ததியான துரந்தர போகமும்
சவுக்யமும் கொடுக்குந் தயாபரரான (தேவர்)

——

### *பெரியமறை ஸ்ரீ நிவாஸப் பெருமாள்

20. இராகம் : தோடி ; தாளம் : ஆதி.

பல்லவி

நீயல்லாமல் வேறே யுண்டோ
நிச்சயமாய் அச்சு தனே தானே (நீயல்லாமல்)

(அநுபல்லவி)

1. நானென்பது காலத்ரயத்திலுமில்லை
நலம் பெரியமறை தனிலே விளங்கிய

* பெரியமறை - அரியிலூருக்குத் தெற்கேயுள்ள ஒரு ஸ்தலம்.

ஞான முனிவரெல் லோரும் பணிந்திடும்
நாதனே ஸ்ரீனி வாச னே ஹரி (நீயல்லாமல்)

2. ஏகமாய்ச் சின்மயமாகவே
எங்கும் நிறைந்து அகண்டா காரமாய்த்
தேகமோக சோகங்க ளேது
தேவாதி தேவனே முரஹரி (நீயல்லாமல்)

3. பெந்துவும் நீயே பேரும் ஊரும் நீ
பேரின்பக்கட லாகிய குணநிதி
உன் திரு வடிக்கிணையாக வோற
ஒருவருண்டோ முரஹரி நரஹரி (நீயல்லாமல்)

---

## *திருவிந்தளூர்ப் பரிமளரங்கப் பெருமாள்

21. இராகம் : தர்பார் ; தாளம் ஆதி.

(பல்லவி)

பரிமள நாதா - உமது
பவந்தமெல்லாம் அறிவேன்காணும் எங்கள் (பரிமள)

(அநுபல்லவி)

துரிதஞ் செய்து தொழில்முறை செய்வதும் இந்தச்
சூதும் வாதும் இதெல்லாம் நடவாது
ஹரிஸர் வோத்தமரே வைகுண்
டாதிபரே நீதி அல்லவே உமக்கு (பரிமள)

(சரணம்)

திரட்டி வெண்ணெ யுண்ட கோபால
தேவாதி தேவரே இப்போது மகள்
வரட்டும் வரட்டும் பதருதேயும் அவள்விதி
வசமும் வழிவசமும் அவளைப்
பெரட்டும் உருட்டும் வேதனை செய்வதும் உமது
பேருக்கும் ஊருக்கும் அழகல்லவே
மிரட்டி மூட்டி ஆசைவலை பூட்டி
வீட்டில் வந்து கோட்டி கொள்ளுகிறீரையா (பரிமள)

---

* திருவழுந்தூர்.

## திருச்சேறை ஸ்ரீஸாரநாதப்பெருமாள்

22. இராகம் : கல்யாணி ; தாளம் : ஆதி

(பல்லவி)

பார ஸகலமும்அ பாரம் அவர் மகிமை
பாரினிலே யாவர்க்குந் தெரியாதடி (பார)

(அநுபல்லவி)

ஸாரநாதர் க்ருபை ஸார விமானமும்
ஸார புஷ்கரிணியும் கழனியும்
ஸார நாயகி தெரிசனே பணிவிடை
சாம்பிராச்சியமோட்ச மெனக்குக் கிடைத்ததடி (பார)

(சரணங்கள்)

1. தேடித் தேடித்திரிந்தாலும் என் சாமி
தேவருக்கிணே ஆருமில்லேயடி
போடி உனக்குத் தெரியு மோடி என்னடி
புஷ்ப விமானத்தில் வைகுந்தரைக்
கூடிக் கூடிக் குலவி அடிமையாகக்
கொஞ்சி விளேயாடி அவருடை நாமத்தைப்
பாடி யாடி ஓடி நாடி வந்து
பரமபுருஷ பக்த பராதீனரடி (பார)

2. சூதும் வாதும் இல்லாமலே சாமிபேரைச்
சொல்லியிருந் தாலதில் சுகம்பெறலாம்
ஏதும் அவர்செய லல்லாமலே வேறே யுண்டோ
ஏந்திழையே உனக்கு மதியில்லேயே
போதும் போதும் சகியேயுன் பழக்க மெனக்குப்
போத நாதரை இணேபிரி யாமலெப்
போதும் ஆதரவு ஸ்ரீதரருடன் பட்சம்
போகபோக்யம் பாக்யமே வெகுச்லாக்யமே (பார)

3. ஒருமையானவடி வேலவர் மாமனே
உள்ளபடி நடத்தும் உண்மையாலே
அருமையான ஸாரக்ஷேத் திரந்தனிலே
அச்சுதானந்தருடன் ஆனந்தமாய்ப்

பெருமையான துளப மாலையாரும்
பேத மில்லாம லுறவாடி
மருமலரணை மீதில் சாரநாதர்
மருவவந்து மனமுவந்து சுகந்தந்து (பார)

---

23. இராகம் : பைரவி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

முன்னழகும் பின்னழகும் ஸாரநாதர் ஸாரநாயகி
மூர்த்தியா டினசொகுஸு முயங்குதுளந் தியங்குதடி (முன்ன)

(அநுபல்லவி)

1. முன்னே வந்து நின்றே யெங்கள்
வேங்கடரா மனைக்காக்கும்
முகுந்தரடி எனக்கவர் சொந்தரடி
இன்னமேன்மேல் சேவைதரும்
ஏகாந்த நாதரைப்போல்
எங்கெங்குந் தோணுதடி சுக்ரவாரதினத்தில் (முன்ன)

(சரணங்கள்)

1. பொற்பூணல் குண்டலதாரி
பொற்றிருவடிக் காளாகி
அற்புதமா யர்ச்சனைசெய்
தானந்த மானேன்
உற்பன மான அந்த மாணிக்கக் கொண்டையும்
ஒளியும் எங்கும் நிறைந்த தடியந்தக்
கற்பனையும் ஆர்க்குத் தெரியும்அ
கண்ட சாகர மான (முன்ன)

2. வில்வந் துளசி மருமுல்லை
வேர்கொழுந்து மேயணிந்து
கல்விக்கடலாய் விளங்கும்
கருணாலயரடி
செல்வ மானதுபோல் புன்னகையும்
சிவப்பும் மெள்ளப் போய்ப் பக்தருக்கு—இந்த
நல்வழியை நாட்டி வைத்து
நாட்டிய மாடிப் பாடி வைக்கும் (முன்ன)

3. ஸாரக்ஷேத் திரந்தனிலே
    ஸச்சிதானந்த கனமாகி
ஸாரபுஷ் கரிணியைச் சேவித்துத்
    தன்யமானேன்
ஸார விமானமுங்கண்டு
    தளருதே மொழி குளறுதடி யெங்கள்
ஆறுமுகன் மாமனடி எனக்
    கார் வேறு துணை சொல்லடி (முன்ன)

---

## திருமால்

24. இராகம் : சௌராஷ்டிரம் ; தாளம் : ஆதி.

(பல்லவி)

நாராயணுவென்று சொல்லுவாயே—இனி
ராகஞ்செய் யாதே வெல்லுவாயே (நாராயணு)

அநுபல்லவி

பாராய ணுநித்ய பரமகல் யாணகுண
    பாகவத சேவை பக்திமிகவுஞ் செய்து (நாராயணு)

(சரணங்கள்)

1. தேகவாழ்வை நம்பித் திகைத்துத் திகைத்தேஅ
    நேகமா யலைந்து நினைந்து மெத்த
மோகாந்த காரத்தில் நில்லாதே மெத்த
    மோசம் போகாதேவெகு பொல்லாதே
சோக மடையாதே சொப்பனம் நடவாதே
    சோகம் சோகமென்று சொரூபந்தான் தாணுகவே
(நாராயணு)

2. தெற்கத்தித் தர்மராஜன் க்ஷணத்தில் கொண்டுபோம்போது
தர்க்கஞ் செய்யவும் உடன் தரமாசீ வெறுமுடமே
சொர்க்கம் வேறேயென்று எண்ணுதே மெத்தத்
    தொல்லையே தாகிலும் பண்ணுதே
மர்க்கடம் போல் செய்யாதே மாயவன் பதம் பொய்யாதே
துர்க்குணத்தைத் தள்ளிஅதில் சூக்ஷ்மாதி சூக்ஷ்மத்தில்*
(நாராயணு)

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

25. இராகம்: சங்கராபரணம்; தாளம்: ஆதி.

(பல்லவி)

லக்ஷ்மி ஸமேத ரென்று மன திலெண்ணி
லக்ஷபக்ஷ பா தஞ் செய்ய லாமோ (லக்ஷ்மி)

(அநுபல்லவி)

லக்ஷ்மி நாராயணு விருது பெற்று
லக்ஷம்பொன் பத்து லக்ஷம் தந்தீரோ (லக்ஷ்மி)

(சரணம்)

பேதமேநானென்று எண்ணிப் பெருமைசெய்யாமலிப்படி
பேதபேதமா விசித்ரம் ப்ரபலமாகச் செய்யலாமா
நீதிதவ ருததிரு நித்யானந்த மூர்த்தியே
ஏதுகாணும் சூதும் வாதும் ஏனிந்தப்புறகடமும்
தோதகம் கட்டி யாடுகிறீர்
தோகையருடை பாவமுமக்கு வேணுமோ (லக்ஷ்மி)

---

## சிதம்பரம் ஸ்ரீ நடராஜமூர்த்தி

26. இராகம்: பந்துவராளி; தாளம்: ஆதி.

(பல்லவி)

தில்லைச் சிதம்பரச் சித்ஸபை தெரிசனை கண்டும்
சிந்தனைகள் உண்டோ—ஆனந்தாதீதமான (தில்லை)

(அநுபல்லவி)

தொல்லைகள் அணுகாது இனியேது
சூதும் வாதும் நடவாது மனமே
அல்லலற்றுப் பரிபூர்ணமான
அருவுரு அகண்ட மயமான (தில்லை)

(சரணங்கள்)

1. செல்லாது ஜெகப் பிரம மயக்கம் வெகு
பொல்லாது புதுமையான வாழ்வு
நில்லாது நிர்க்குண'மே யொன்றே
அல்லாது அனுதினமும் நடராஜர் (தில்லை)

2. எந்நாளும் ஏகபரம ஞானக்
கண்ணாலே கவலை தீர்ந்து
பண்ணாதே பாழ்நரகத்தில் விழவும்
உண்ணாதே உறங்காதே அருளொளியாம் (தில்லை)

3. வையா புரிமுருகனை அருளிய
ஐயா சபாபதி பொன்னம்பலத்
தையா வந்தாடியே அடியவர்க்கு
மெய்யான வேதாந்த நாதாபர (தில்லை)

---

27. இராகம்: பந்துவராளி; தாளம்: ஆதி.

(பல்லவி)

தில்லையப் பாஉனது பஞ்சாக்ஷ ரப்படியில்
சின்மயமாய்த் தினந்தினமும் வந்துதெரிசிப்பேன் (தில்லை)

(அநுபல்லவி)

கல்லாஅப்பா இல்லை கண்ட வெளியும் இல்லை
காரணமும் இல்லை அகண்ட வெளியில்
இல்லாத சங்கற்ப விகற்பங்களுங் கண்டதில்லை
எதிரில்லாமல் வாழ்ந்திருக்கும் ஏகாந்த மயமான
(தில்லை)

(சரணங்கள்)

1. ஆனந்தத் தாண்டவமும் ஆடியே எங்கும்
அருள்திரள் பெருக விளையாடியே
மோனந் தரும் பக்தி முத்தியுந் தான்கொடுத்து
மூர்த்திகர மாகிநல்ல ஆர்த்தியுட னேமிகவும் (தில்லை)

2. பொன்னம்பல சபையைப் போற்றுவேன் எங்கும்
பூர்ண போத மாய்மனத்தை ஆற்றுவேன்
அன்ன நடை யுமைக்குகந்த ஜோதி மயமாகி நின்ற
அம்பர சிதம்பர நிரந்தர நிரஞ்சனமே* (தில்லை)

---

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

## திருவொற்றியூர் ஸ்ரீ தியாகராஜப்பெருமான்

28. இராகம்: அடாணு; தாளம்: ஆதி.

(பல்லவி)

திருவொற்றியூர் த்யாகராஜர்
சித்விலாஸ நாதரடி (திரு)

(அநுபல்லவி)

பருவத்தில் தனத்தில் முலை
பந்தடித்தே தடித்தே யெழும்பும்
உருவத்தில் மகா நடனமும்
ஓகோ ஓகோ நானென்ன செய்வேன் (திரு)

(சரணம்)

பார்த்த கண்கள் பார்த்ததுபோல்
பார்த்தவிடமெல் லாமெனக்குத்
தோற்றுதடி யென்ன சொல்வேன்
தோகை யேயொரு வழி சொல்லடி
ஆத்திரத்தால் மனம்பதறி
ஆசை யாகி மதிமெலிந்தேன்
தோத்திரஞ் செய்தவர்க்கு மெனக்கும்
தொந்தம் விடாமல்செய் சுகிர்தமுண்டு (திரு)

---

## உடையார்பாளையம் ஸ்ரீ முற்கபுரீசர்

29. இராகம்: அடாணு; தாளம்: திரிபுடை.

(பல்லவி)

வகுளவன வாசரே முற்கபு ரீசரே
வளமாய்ப்புத் திரசந் தானம் வலிமையாகக் கொடுக்கும்
(வகுளவன)

(அநுபல்லவி)

மகிழ வரமுதவும் குசுமகுந் தளாம்பிகைக்கு
வரிசையான சோதியே மகிமையுடன் கச்சிக்கல்யாண
ரங்கனுக்கு (வகுளவன)

(சரணங்கள்)

1. கோரும் அடிமைக்கொரு குறைவில்லாமலே
நூறுவயது வாழ்ந்து நோய்பிணிகள் அணுகாமல்
பேரும் ஊரும்விளங்கப் பெருமையும் பிரதிஷ்டையும்
தாரும் தாரும் சாமி தயையுடனேயெப் போதும் (வகுளவன)

2. கற்பனை நீரல்லாமற் காரணம் வேறு முண்டோ
பொற்பதந் தன்னில் நின்று புங்கானு புங்க மாக
அற்புத மாகவே அர்ச்சனைகளுஞ் செய்த
விற்பன னுக்குநன்ருய் வேண்டிய வெல்லாந்தந்து
(வகுளவன)

3. எங்கள்வடி வேலரை ஈன்றஸர் வேசரே
சங்கையில் லாமலே சர்வகாலங் கல்யாண
ரங்கன் மனப்படியே ரட்சிக்கும் நாதரே
சங்கரா சிவசிவ சம்போ மகா தேவரே (வகுளவன)

---

## கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பிகை

30. இராகம்: ஆனந்தபைரவி; தாளம்: ரூபகம்.

(பல்லவி)

ஈச்வரி ஜகதம்பாநின் இணையடிதுணையென நம்பினேன்
எப்படியோ உனதருளென் கற்பகமே தாயே (ஈச்வரி)

(அநுபல்லவி)

வாசவன் போற்றுங் குடந்தை நகர்
வாழும் மனோன் மணியான
தேசமார்கும் பேசரிடம் வாழ்
செல்விஜய மங்கள நாயகி (ஈச்வரி)

(சரணங்கள்)

1. உன் சந்நிதிகண் டாலவர்க்கு
ஒரு சஞ்சல முண்டோ
உலகினில் கஞ்சன் பணியும்
செஞ்சரணியே மஞ்சு பாஷிணி

தஞ்ச மென்றடுத்த பேரை
அஞ்சலென் ருதரித்துக் காக்கும்
ரஞ்சித நவரஸ புஞ்சமே
வஞ்சியர் மோகிநி அஞ்சுகமே (ஈச்வரி)

2. உன்தனை நான் அனுதினமு மென்
சிந்தையில் நினைந்து நினைந்து
வந்தனை புரிந்தும் இன்னமும்
இந்தத் தாமதம் ஏனம்மா
கொந்தலர் குழலியே நினைத்தவர்
அந்தரச் சமயங் கடைக்கண்பார்
மந்தரநிகர் முலை யாளே நி
ரந்தரமுல கெங்கும் நிறைந்திடும்* (ஈச்வரி)

---

## கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீ மதுகரவேணியம்மை

### 31. இராகம்: தோடி; தாளம்: ஆதி.

(பல்லவி)

திருக்கண் மாலீச் வரர்க்குகந்த
தேவியே ஓங் காரி பரஞ் சோதி (திருக்கண்)

(அநுபல்லவி)

பெருக்க மாகவே கிருஷ்ண புரந்தனிலே
பெருமையாக வாழ்ந்திடும் ஆதிஅன்
பருக்கு மிகவும் நினைத்த படிவரம்
கொடுக்கும் அம்மணி மதுகர வேணி சுகபாணி
(திருக்கண்)

(சரணம்)

ஆயுங் கலைக்கிரங்கும் ஆனந்த வல்லியே
மாயவன் றங்கையே மகத்தான ஒளியே
காயக்கி லேசஞ்செய்து கருத்துருக அறியேன்
தாயே சகலத்திலுந் தான்தானே யாய்நிறைந்த
(திருக்கண்)

---

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

## உடையார்பாளையம் ஸ்ரீ குஸுமகுந்தளாம்பிகை

32. இராகம்: பியாகடை; தாளம்: ஆதி.

(பல்லவி)

குஸுமகுந்த ளாம்பிகையே கொஞ்சுகிளியே பஞ்சமியே
குற்றமொன்றும் வாராமலே பக்தனைஸவ ரக்ஷணைசெய்
(குஸும)

(அநுபல்லவி)

அஸமா தானங்கள் இல்லாமல் ஆசந்த்ரார்க்க மாய்விளங்க
அனுக்ரகஞ்செய்து சிரஞ்சீவியா அன்பன் கச்சிக்கல்யாண
ரங்கனைக் காக்கும் (குஸும)

(சரணங்கள்)

1. குங்குமச்சிந் தூரத்தலங் காரியே
கூப்பிட்டா லுன்செவி கேட்கவிலையோ அம்மா
கொங்கைச்சி ப்ரசன்ன வேங்கடே சருடன்
கூடப் பிறந்த துரைச்சி தங்கச்சியே
பங்கமில் லாமலே ஆணிக்கையாகப்
பரிபாலனம் செய்யச் செய்து மிகச்சிவ
சங்கரியே துரந்தரி புரந்தரி
சத்துருக்களைத் தலையெடுக்காமற் செய்யும் (குஸும)

2. நித்யகல்யாணி அளிகுல வேணியே
நிர்மல மான நாத ஸ்வரூபிணி
ஸத்ய ஸ்வரூபிணி பாசாங் குசபாணி
ஸகல லோக ஜீவ தயாபரி
மத்யம மான பலங்களில் லாமலே
மகதைச் வரியங் கொடுத்த அம்மணிஅ
கத்திய மாக உன்றன் திருத்தாளினிற்
காலமெலாந் தொழுதஉன் அடிமைக்கு (குஸும)

---

## மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை

33. இராகம் : பைரவி ; தாளம் ஆதி.

(பல்லவி)

ஜகஜ்ஜனனீ சுகபாணி கல்யாணி (ஜக)

அநுபல்லவி

ஸுகஸ்வ ரூபிணி மதுர வாணி
சொக்க நாதர் மனமகிழு மீனுட்சி (ஜக)

(சரணம்)

பாண்ட்ய குமாரி பாவனி அம்பாசிவ
பஞ்சமி பரமேச்வரீ
வேண்டும் வரங்கள் கொடுக்க இன்னமனம் வல்லையோ
வேத வேதாந்த நாத ஸ்வரூபிணி (ஜக)

---

## முருகக்கடவுள்

34. இராகம் : பைரவி ; தாளம் : ஆதி.

பல்லவி

வேலவரே உமைத் தேடி ஒருமடந்தை
விடியு மளவுங் காத் திருக்கிற வகைஎன்ன (வேல)

(அநுபல்லவி)

வாலிபமும் சேல்விழி வில்லுப்புருவம்
வடிவில் இடையும் மதி வதனமும்
மேலுமவள் மேனி பசும்பொன் னிறமே
மின்னற் கொடியோ அன்ன நடையாள் ஒயிலாகவே (வேல)

(சரணங்கள்)

1. விதம் விதமாகப் பச்சிளங் கொங்கை மீதினிலே
வேணபணி தரித்தவள் பல்லு வரிசையும்
கதலித் தொடையும் அதரக் கனியும் சொருக்கழகும்
கருத்தை உருக்கக் கலகலென நடையில் வந்து (வேல)

2. சித்திரப்பொற் பல்கணி வாசலிலே வந்து நின்று
தியங்கி மதி மயங்கித் திகைத்துத் தவிக்கிருள்
குத்திரம் குடிலமென்றும் தன் தலையில் எழுத்தென்றும்
குமுறிக் குமுறி உருகுருள் மிகவாடி (வேல)

3. கண்களுக்குக் கலநீரை முத்துமுத்தா யுகுக்கிருள்
கையை நெரித்துத் தலேகுனிந்து நிற்கிருள்
பெண்களுக்கு உங்கள் திருவுளம் இரங்காதோ
பேசி மருவி முன்போல வேசேர (வேல)

---

## அத்வைதம்

35. இராகம் : தோடி ; தாளம் : ரூபகம்.

(பல்லவி)

சைதன்ய விக்ரகமே சதானந்த
சைதன்ய விக்ரகமே (சைதன்ய)

(அநுபல்லவி)

கைவல்ய கருணுநிதி யொன்றே
கால த்ரயத்தில் கண்டதும் வேறுண்டோ (சைதன்ய)

(சரணங்கள்)

1. எப்போது பார்த்தாலும்
ஏகமாகி நிர்விகல்பமயமானகாட்சி ஸர்வ சாட்சி
(சைதன்ய)

2. ஊட்டும் சிவபோதம் ஒருமையாய்ப் பெருமையாய்
நாட்டுங்குரு ஸ்வாமி
நாட்டம் நித்தியம் தேட்டம் (சைதன்ய)

3. சக்திசிவமான சத்துச்சித்தானந்தம்
வெற்றி மகா வெற்றிவி
வேக ராஜ யோக (சைதன்ய)

---

36. இராகம் : கமாசு ; தாளம் : ஆதி.

(பல்லவி)

தான்தான் தாஞயிருக்கச் சகலமுந்தா ஞயிருக்கச்
சச்சிதானந்த கனமே நித்தியபரிபூரணமாகி (தான்)

(அநுபல்லவி)

நான்தா னென்று சொல்ல
நானுமில்லே நீயுமில்லே

நாமமில்லை ரூபமில்லை
நச்வரமுந் தானுமில்லை (தான்)

(சரணங்கள்)

1. பேதமில்லையே ஐம் பூதமில்லையே ஜகத்
சூதுமில்லையே ஒரு வாதுமில்லை யேதுமில்லை (தான்)

2. ஸ்நானமில்லையே ஸத் த்யானமில்லையே ஜகத்
ஞானமில்லையே ஒரு மோனமில்லை ஊனமில்லை* (தான்)

---

## நெஞ்சறிவுறுத்தல்

37. இராகம் : பைரவி; தாளம் : ஆதி.

(பல்லவி)

கொடுத்துவைத் ததுவரும் ஏருசை யால்மிகக்
குறைப்பட்டால் வருகுமோ பேய்மனதே (கொடுத்து)

(அநுபல்லவி)

படுத்தால்பின் ஞுலேகூட வருவாருண்டோ
பயறணீசரைநிதம் பக்தியாய்த் தொழுதிரு (கொடுத்து)

(சரணங்கள்)

1. தூரு யொருவரையும் மாருட்டஞ் செய்யாதே
ஆரென்ன செய்வார்கள் கோரி னதுவருமே
தாராள மாகவே நாராய ணன்கிருபை
பாராய ணமும்செய்தால் நேராகக் கிடைக்குமே (கொடுத்து)

2. ராகத்து வேஷஞ்செய்து சாகாதே விஷதுல்ய
மோக பாசத்திலே தேகங்கட் டுப்படாமல்
ஏகாந்த மாகவே யோகச மாதியிலே
சோகஞ் சேர்கம் என்று ஸ்வரூப மாகவிளங்கு (கொடுத்து)

3. வித்துவான் நானென்றே எத்துவாதம் பண்ணுதே
சித்கனமா வேலனை ஸத்பாவ னைபண்ணு
தத்போத முடனேநீ தத்பர மாகவே
முற்கபு ரீசனை அற்புத மாய்நினை (கொடுத்து)

---

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

### 38. இராகம் : தோடி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

மனமேஎந் நாளும்நிர் ணயமே சச்சிதானந்த
கனமே சத்தியம் இன்னம் வேறுண்டோ (மனமே)

(அநுபல்லவி)

வனங்களில் திரிந்தாலும் ஒரு
வஸ்துவைத் தவிர வேறே
மற்ற தொன்றும் இல்லையே
மலைத்து மயங்காதே மூட (மனமே)

(சரணம்)

செகத்தைச் சொப்பனம்போ லெண்ணியே
சிவாகார மாய்ச்சதா விளங்கு
மிகுகோபங் கொண் டொருவருக்கு
வேண்டி வினைசெய்யாதே
அகத்தை யடைந்தே யடைந்
தாசைகொள் ளாதே விஷய
சுகத்தினுல் கெட்டுப் போய்வீணுத்
துர்ப்புத்தியைத் தள்ளு மூட (மனமே)

---

## கபிஸ்தலம் இராமபத்திர மூப்பனுர்

### 39. இராகம் : தோடி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

அன்னமேநான் என்னசெய்வேன் பண்டுபழகி
அருனம யறிந்ததுரை அவனேஎன்னைமறந்தால் (அன்னமே)

(அநுபல்லவி)

மன்னர் புகழும் நுணுவே தன்னில் வாழும் எங்கள்
மகிபன் முத்தையனருள் மகிபாலன்
கன்னல்மொழி யெல்லாக்கி ராமபத் ரேந்த்ரசாமி
கனவிலும் நினைவிலும் கவடுசெய்தால் (அன்னமே)

(சரணங்கள்)

1. என்னகாரணமோ அறிவேனோ
என்னபாவஞ் செய்திருந் தேனோமிகக்காமச்
சன்னதங் கொண்டுதலை சுற்றிஆட்டித்
தழல்போ லுடலுங் கொதிக்குதே
சின்ன வயதினில் நன்னய மாய்வெகு
உன்னதமாய் மெத்த நின்னய மாகவே
சொன்ன விசேஷங்களெல்லாம் கைபோட்டுக்கொடுத்து
இந்நேரம் அநீதம் செய்த (அன்னமே)

2. தாதுபிராதில்லையே பெண்பிறந்துந்
தயங்கித்திரியத் தலையில் பிரம்மதேவன்
ஏதோ விதித்திருப் பானோ விதிவசம்
என்னென்ன மோஅறியேனே
பூதலத்தில்உள்ள மாதர்கள் சொன்னத்தைப்
போதனையாயெண்ணித் தோதகஞ் செய்தென்னை
பேதகமாகிநினைப் பாரோ அவர்க்கினி
ஆதரவார் பாதகிநீயே சொல்லடி (அன்னமே)

3. எத்தனைபேருற வாகியிருந்தாலும்
எல்லோரு மெனக்குச் சரியோஎங்கள் வள்ளி
முத்துவேலரையெந் நாளும்பணிந்திப்போது
மோடி செய்வதேது ஞாயமோ அவர்
வித்தையெல் லாஞ்செய்து குற்றமென்மீதில்சு
மத்துமனதில்நினைத் தெல்லாக்கிராம
பத்திரசாமிஇனி மேலாகிலும்அ
ணைத்தினங்களென் மனத்துயரந்தீரும் (அன்னமே)

---

40. இராகம் : பைரவி ; தாளம் : ரூபகம்.

(பல்லவி)

மாதே அவர்செய்த வஞ்சனை
மறப்பேனா எந்நேரமும்
மருவி அணைந்த சுகத்தை
மனதினிலே எண்ணாமல் (மாதே)

(அநுபல்லவி)

பூதலம் எங்கும் புகழ் படைத்த
புண்ணியவான் முத்தைய பூபாலன் அருளிய
நாதனும் எல்லாக்கி ராமபத்திர சாமிக்கு
ஞாயமாய்ச் சொல்லடி அடியேமாதே (மாதே)

(சரணங்கள்)

1. மங்களமாகச் சுக்ரவாரத்திலே
மாலையிட்டு மலரணையில் என்னைக்
கங்கணங் கட்டியது முதலில் இப்போது
கண்டகண்ட பேர் நகைக்கு இடமாகப்
பெண்கள் எதிரேநான் கண்கலக்கம் எய்தச்
சங்கையில் லாமலே வங்கைகள் செய்தாரே
எங்கே அடுக்கும் இந்த நடத்தைகள்
எனக்கு மிகப் புத்திவரச் சொன்னரடி (மாதே)

௨. சொந்த மாகவே இருந்து மெத்தவே
சொகுசாய்ச் சுரத விநோதங்கள் செய்தார்
அந்தரங்க மென்று எண்ணி நம்பினேன்
ஆனலு மெனக்குத் துரோகம் செய்தாரடி
எந்தநேரமும் மிக விந்தை செய்தாரடி
எந்த நாளிலும் சொந்தம் விடாதடி
வந்தனம் செய்து வணங்கி யிருந்தும்
மனதில்லையோ தலையிலெழுத்தோ அடி* (மாதே)

---

**உடையார்பாளையம் கச்சிரங்கதுரை**

41. இராகம் : தோடி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

பச்சிளந்தே மற்படர்ந்த கச்சிருக்கும் பூண்முலையாள்
பாடியே மாடிமீதில் தேடிவந்து காத்திருக்கிருள்
(பச்சிளந்)

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

(அநுபல்லவி)

முச்சகமும் விலையல்லவே முத்துவிஜயரங்கேந்திரன்
முறையாகத் தவஞ்செய்து பெற்ற மகிபாலன்
கச்சிரங்க மகராஜனே கங்குல்யுக மாகியே
காரிகையாள் மதிமயங்கி காமலாகிரிகொண்டு (பச்சிளந்)

(சரணங்கள்)

1. செஞ்சொல்வாய்க் கனிஇதழும்
செங்கைவளையுஞ் சிறுநகையும்
கொஞ்சுகிளி போல்மொழியும்
குவளைபோல் இருவிழியும்
என்சொல்லு வேனவள் மஞ்சுளமோ உம்மைத்
தஞ்சமென்று விரகம் மிஞ்சித் தயங்குருள்
வஞ்சனை செய்யாமல் பஞ்சணை மீதினில்
வஞ்சியுடனே நீ ரஞ்சித மாய்விளையாடும் (பச்சிளந்)

2. அன்னம் போலே நடையாள்
அவளிருகதலித் தொடையாள்
சின்னஞ் சிறுத்த இடையாள்
சித்திரப்பெண் பட்டுடையாள்
கன்னல் மொழியாள் மின்னற் கொடியாள்
சொன்னமவட்கென் னென்னமாயஞ்செய்தீரோ
மன்னனுக்கு மன்னனே மகப்பிரபுவே
வஞ்சியருக்குள்சிரோ ரத்தினமாகவே (பச்சிளந்)

3. வேலவர் கிருபையும் படைத்து
விளங்குமுத்து விஜயரங்கேந்திரன்
பாலனே இரவும் பகலும்
பைந்தொடியாள்மிக உருகுருள்
வாலப்பருவமே சோலைக்கிளியாளே
மேலும்ஐயாஉனைப் போலேஅவட்குண்டோ
சீலனேகச்சி ரங்கமகராஜனே
சிந்தைமகிழ்ந்துக லந்துமுன்போலவே (பச்சிளந்)

---

## உடையார்பாளையம் கச்சிக்கல்யாணரங்கதுரை

42. இராகம் : முகாரி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

அவர் வருவாரோ நான் வரவா என்னடி சொல்லடி
அலங்க்ருத புருஷ மேரு (அவர்)

(அநுபல்லவி)

தவங்கள் செய்துவெகு பூஜாபலமுடனே
ஸாமிரங்கபூ பாலன் பாலர்
நவமோக ஞுங்கிநானென்று எண்ணுவாரே
நாதன் கச்சிக்கல் யாணரங்கதுரை (அவர்)

(சரணங்கள்)

1. துரையை நிமிஷம் பாராமல் மனமும்
தோணு தெல்லாம் தோணுதேயென் செய்வேனடி
குறையை உன்றனுடன் சொன்னேன் [லுண்டோ
கோகிலமே கூட்டிவைக்கக் கோதையே உனைப்போ
அரையில்கலை இராமற்புறம் பாகுதே
ஆகம் நோகுதே தாகம் உண்டாகுதே
பரெபரென்று தேகமுழுதும் ஊறுதே
பார்க்க மதனன் கணையும்வந்து நேருதே (அவர்)

2. எங்கேயாகிலுங் கிடைக்குமோ அவர் போலவே
என்அருமை அறிந்தமக ராஜரடி
இங்கிதந் தெரிந்த ஸங்கீத லோலர்
ஏந்திழையே எனக்கு மிகவுஞ் சுகந்தந்து
கங்கணங் கட்டின நாள்முதலாகவே
கடிந்துவார்த்தை சொன்னதில்லை பிரிந்ததில்லை
கொங்கைரெண்டுங் கொஞ்சி விம்மிமீறுதே
கொஞ்சிக் கொஞ்சி அபரஞ்சிதமே இங்ஙனே* (அவர்)

---

*3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

43. இராகம் : அடாணு; தாளம் : ஆதி.

(பல்லவி)

இந்து ரவியைப் போலே முளைக்குதே
என்செய்வேன் ஸாமி (இந்து)

(அநுபல்லவி)

கந்தன் துணையுங் கடாக்ஷமுன் மேலுண்டு
கச்சிக் கல்யாண ரங்க மகராஜனே (இந்து)

(சரணங்கள்)

1. மதியை மயக்க மையல் பெருக்க
மதனப் பயலு மீசை முறுக்கச்
சதிசெய்து செய்துஎன்னை உருக்க
சர்வ காலமுங் கணைகள் நெருக்க
பதியை நினைத்துப் பாலனஞ் செருக்க
பாங்கிய ரெல்லோரு மாய்வந் திருக்க
ததிய நிந்துகுயில் கூவி உருக்க
சாமியென் மேல்உனக் கித்தனை சுருக்க (இந்து)

2. கண்கள் கலங்கக் கலசங் குலுங்க
கலைகள் அவிழ்ந்தவிழ்ந்து நலுங்க
தண் களப குங்குமமும் துலங்க
தங்கப் பாதசரங் கிலுகிலுங்கச்
செண்பக மலர்சொருக்கில் இலங்க
தேகங் காமக் காய்ச்சலும் வந்துநலுங்கப்
பண்புடன் மெட்டியோசை கலெகலெங்க
பலன்கைவரமேல் வரலாமிது மலங்க (இந்து)

3. கந்தர் சொந்தனைக் காக்கும் உன்றனைக்
கச்சிக் கல்யாணரங் கேந்த்ரனே
தெந்தனஞ் செய்யாதே யென்றனைத்
தினந்தினம் பாருமே சுகந்தரும்
செந்தேன் மொழியைக் கேட்கவந் தேனே
தேவை யானபோதெல்லாம் வந்திருந்தேனே
வந்தனஞ் செய்து வணங்கி இருந்தேனே
வடிவும் இளமையும் மிகத் தந்தேனே (இந்து)

## 44. இராகம் : வசந்தா ; தாளம் : ஆதி.

(பல்லவி)

இனிஎன்ன செய் வேனடி
இணங்க வருவா ரோடி (இனி)

(அநுபல்லவி)

புனிதன் கல்யாண ரங்க
பூபனைத் தேடுதே (இனி)

(சரணங்கள்)

1. உடம்பொரு வகையாக உயங்கி வருந்தி
வடங்கொண்ட தனம்ரெண்டும் வளர்ந்துவிம் முதேகண்டு (இனி)

2. தாமதஞ் செய்கிருய் மையல் தலைசுற்றி யாடுது
வாமக் குழலாளேநீ வஞ்சனை செயலா மோடி (இனி)

3. பச்சைமயி லேறிவரும் பழனீசர் க்ருபைபெற்ற
கச்சிக் கல்யாண ரங்கன் காட்சிக்கிணை யுண்டோடி (இனி)

---

## 45. இராகம் : காம்போதி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

எங்கள் ஜானகியை மணம் செய்தவர்
ஏக போகரிவர் மகராஜரடி (எங்கள்)

(அநுபல்லவி)

தங்கமெனும் குஸுமகுந்த ளாம்பிகையின் க்ருபைபெற்ற
தயாளர் கச்சிக் கல்யாண ரங்க மகராஜரடி (எங்கள்)

(சரணங்கள்)

1. அகிலந்தனிலே அவர்போலே உண்டோ
சகலமுந் தெரிந்த சார்வ பூமரடி
பகலும் இரவும் பாக்ய வதியுடனே
புகலாக நாடிப் பூஷணங்கள் செய்து (எங்கள்)

2. மண்டலத் தோர்புகழும் மண்டலாதிபனைக்
கண்டதே பாக்யமெனக் கணக்கில்லாமலே
தண்டமிழ்க் குதவுந் தர்மவானைப் போலே
உண்டோடி நீசொல்லு உத்தமி பத்தினியே. (எங்கள்)

3. காலில் சிலம்பும் கையிலயிலும் தோகைமயிலுமுள்ள
வேலன் உடனேவந்து வேண்டியது தந்தேஇனி
மேலுங் கல்யாண ரங்க சாமிசதா
கோலா கலமாய்க் குலாவி விளங்க (எங்கள்)

---

46. இராகம் : சுருட்டி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

எத்தனை நாள் விரகமுடன் எப்படி சகிப்பேன்சாமி
(எத்தனை)

(அநுபல்லவி)

மற்ற மற்றவர் போலே எண்ணி
மங்கையர் போதனை கேட்கலாமோ
சுத்தனே கச்சிக் கல்யாண ரங்கனே
சுமுகனே மாலைப் பொழுதிலே (எத்தனை)

(சரணங்கள்)

1. சிந்தைமிகவும் உருக்குதே
தேகமும் மெத்த இளைக்குதே
மந்த மாருதம் வளைக்குதே
மாரன் கணையுந் துளைக்குதே* (எத்தனை)

3. முத்துவேலரைக் கோரடா
முழுதிலும் என்னைப் பாரடா
கர்த்தன் கல்யாண ரெங்கனே நேரடா
காமலாகிரி மையல் தீரடா (எத்தனை)

---

*2-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

47. இராகம் : உசேனி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

கச்சிக்கல்யாண ரங்கராஜன் பக்ஷமே - அவன்
கருணை கிடைத்த ததுவெனக்குப் பொன்பத்து லக்ஷமே
(கச்சி)

(அநுபல்லவி)

சச்சிதானந்த கனமய மாகிய
சார்வ பூமன் ரங்கசாமி தனயனும்
அச்சுதனைப் பணிந்து பணிந்து
அளவுசங்கைகள் இல்லாமல் அர்ச்சனைகள் செய்த
(கச்சி)

(சரணங்கள்)

1. அருமை அறிந்த மகராஜனுக்கு
ஆர் போதனைசெய் தென்னடி
பெருமையாய் அவன்போல் எனக்குப்
பேரும் ப்ரதிஷ்டையும் ஆர்தருவார்
திருமகள் நிதமும் வாசஞ் செய்யும்
ச்ருங்கார புருஷன் அவனல்லால் வேறுண்டோ
குருகடாக்ஷமெப் போதும் இருக்குது
குவலயத்தில் இதற்கிணை யுண்டோடி (கச்சி)

2. எல்லாருடைய ஹ்ருதயங்களுமே தெரியும்
எவர் சூதும் நடவாது
நல்லோர்கள் கூட்ட மதிலே
நடனம் செய்து விளையாடும்
வல்லபமும் வரிசையும் வண்மையாக
வாசவன் தானடி வேறுண்டோ சொல்லடி
புல்லர் முகந்தன்னில் விழியாமல் இந்தப்
புண்ணிய வானுடன் சல்லாபம் நேர்ந்ததே*
(கச்சி)

---

*3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

48. இராகம்: பியாகடை; தாளம்: ஆதி.

(பல்லவி)

காமதேனு ஐந் தருவென வளர்ந்தே பெருகும்
கையனே சொர்னம் பொழியும் மெய்யனே (காம)

(அநுபல்லவி)

ஸ்ரீமனே நல்ல நேமனே
த்யாகவானுன் போலேயுண்டோ
காம லாப மேதரும் கச்சிக்
கல்யாணரங் கேந்திரனே (காம)

(சரணம்)

தீரனே தேவாம்ச மாய்விளங்குமா
வீரனே அலங்கிருத ச்ருங்
காரனே சீலனேகு பேரனே
ஆரனே உதாரனே* (காம)

---

49. இராகம்: காம்போதி; தாளம்: ஆதி.

(பல்லவி)

கொண்டை குலுங்கவே பண்டு பழகி மருவும்
குமரிப் பருவமே துரையே (கொண்டை)

(அநுபல்லவி)

வண்டரை யடக்கும் மண்ட லாதிபதி யேஎனக்கு
மகராஜனே எங்கள் ரங்கசாமி பாலனே-கற்
கண்டென எணைப்புகழ்ந்து என்றன்மனத் தைஉருக்கும்
கச்சிக் கல்யாண ரங்கனே வஜ்ர சரீரனே (கொண்டை)

(சரணங்கள்)

1. ஆசை வளருதே போஜனே நேசனே
அலங்க்ருத புருஷனே காம

*மற்றச் சரணங்கள் கிடைக்கவில்லை.

பூசை செய்யக் கண்டதுகிலும் சோருதே
 பூபனேப்ர தாபனேஸல் லாபனே
வாசவனே மாயமென்ன செய்தாயோ
 வாட்டுதே லூட்டி கோட்டி கொள்ளுதே
ஈசனென் றன்தலையில் இப்படி எழுதுவாறே
 என்ன செய்வேன் மன்னவனே உன்றன்மயல் மீறுதே
(கொண்டை)

2. மாலைப்பொழுதிலே வாலப் பருவத்திலே
 மதனவிலாஸனே மணக்கோலம் செய்து
சேலை யாபரணமிகக் கொடுத்துக் கொடுத்து
 அடுத்துத் தொடுத்த படியெல்லாம்
சீலமுடன் லோல மாகவே யணைத்துச்
 சீமனே நேமனே பூரண சோமனே
மாலை தந்து கங்கணங் கட்டியேமிகச் சுகந்தந்து
 மாடி மீதில் கூடிவிளை யாடி யேநடனம் செய்து
(கொண்டை)

3. சொல்லும் வேலர்க்ருபை அல்லும் பகலுமுண்டு
 சோலை மாங்குயில் கூவுதே
நில்லுமென்றன் விரகம் சகிக்கக் கூடுமோ
 நீத னேப்ரக் யாதனேஎன் நாதனே
வல்லே வல்லே யென்று பார்க்க மிகவும்
 மயக்குதே கயக்குதே மெத்தத் தயக்குதே
சொல்லிலரிச் சந்திரனே கச்சிக்கல் யாணரங்கனே
 சுரதவி நோதமாய்ப் பலபல லீலைகள்செய்து
(கொண்டை)

---

50. இராகம் : பரசு ; தாளம் : ஆதி.

(பல்லவி)

சொல்லடி என்னடி-துராதுரைக்கிணை உண்டோடி
சொல்லடி என்னடி (சொல்லடி)

(அநுபல்லவி)

சொல்லடி தோகையே எங்கள் ரங்கசாமி அருளிய
சுமுகன் கச்சிக்கல்யாண ரங்கமகா ராஜனைப் போலுண்
[டோடி (சொல்லடி)

(சரணங்கள்)

1. நானே நானே என்பவர்கள் நாடகம் நடக்குமோ என்
வேளை அறிந் தேயுதவும் வீராதிவீரன்போற் கிடைக்குமோடி
(சொல்லடி)

2. எத்தனைபேர் உறவாகி இருந்தாலும் எனக்கவர்போல்
மற்றவரா லாகுமோ மாதேநீ யுள்ளபடி எண்ணிப்பார்
(சொல்லடி)

3. முச்சகமும் நிறைந்துள்ள முருகேசர் கருணைபெற்ற
கச்சிக்கல்யாணரங்கன்போல் காலாகாலங்களிலும் உண்டோடி
(சொல்லடி)

---

51. இராகம் : பந்துவராளி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

துராதுரைகளுக்குத் துரையான துரைத்தனம் உன்
துரைத்தனமே சொன்னேன் சொன்னேனே-வேறே
சொல்லவும் வாய்வர இல்லையே என்செய்வேன் (துரா)

(அநுபல்லவி)

தராதரங்கள் தெரிந்த ரங்கசாமி
தனயனே சகல சாம்ப்ராஜ்ய வாசனே
பராசக்தி பரமேச்வரி க்ருபையும்
படைத்தகச்சிக்கல் யாணரங்கசாமி (துரா)

(சரணங்கள்)

1. கோடானு கோடி மறுமன்னர்கள் நின்று
கும்பிட்டுக் கும்பிட்டுக் கைகட்டி வாய்பொத்தி
மேடான மேடி மனுச்சக்ர வர்த்தியும்
மேதினிக் குள்உனைப் போலே கிடைக்குமோ
சோடாகக் கூடி இணைபிரி யாமல்
சுகித்துச் சுகித்துச் சொகுசுட னேதங்கத்
தோடா சரப்பளி மகர கண்டியும்
துஸ்து தினுசுகள் வாரியாகத் தந்த (துரா)

2. மானம் உன்மானம் சம்மானம் வெகுமானம்
மற்றவர் மானம் அபிமானந் தானென்ன
கான லோலனே சீலனே சகல
கலைகளும் தெரிந்து கனராக
தான வரிசையும் தாள விதங்களும்
சங்கதி சந்தர்ப் பங்களு மேதெரிந்து
ஏனோ தானோவென் றெண்ணுமல் எப்போதைக்கும்
என்றன்மனதுக் கந்தரங்க முந்தந்த* (துரா)

---

## 52. இராகம் - அடாணு; தாளம்: ஆதி.

(பல்லவி)

பணிவிடைக் காகவே பாரினில் அவதரித்துப்
பகவந்தன் க்ருபைஎப் போதும் படைத்தவனே (பணி)

(அநுபல்லவி)

கணிச முடனே தர்மங் களுக்கென்னை யாளாச்செய்து
கருத்துக் குகந்தகச்சிக் கல்யாண ரங்கராஜனே (பணி)

(சரணங்கள்)

1. கல்லுவரிக ளெல்லாங் கலகலத் திருந்தது
கருணை மழைபொழிய வேளையும் வந்தது
அல்லும் பகலும் அச்சுதனைச் சதாநினைந்து
ஆனந்த மாகவே மிகவிளங்கிப்
புல்லர்முகந் தன்னிலே விழியாம லெனக்குப்
பூர்த்தி யாகமக தைச்வரியங் கொடுத்து
அல்லலில் லாமலேஎன்னை ஆர்ப்பரித்துக் காப்பாற்றும்
அகளங்கனே சதுரங்க துங்கனே இங்கிதமாய்ப் (பணி)

2. பின்னும் முன்னும் பாராமல் நான்நினைத்தபடி எல்லாம்
பிரதிஷ்டையாக எனக்கு வரங்கொடுத்தாய்
சன்னந்தோறும் தேனடக்கும் பாவலர்க்கு முன்போலத்
தாராள மாகயார் தனமாரி சொரிவார்

---

* 3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

இந்நிலத் துனைப்போல ராஜனெங்குங் கண்டதில்லை
என் அருமையை யறிந்த என் துரையே என் ப்ரபுவே
புன்னமா சந்திரனைப்போலே பூர்ணமாக வாழ்ந்திருக்கும்
பூப னேபிர தாபனே சல்லாபனே க்ருபாநிதியே (பணி)

3. கல்லாக் கலைகள்கற்ற ராஜரிருந் தாவதென்ன
கான லோலனே **கனம் கிருஷ்ணனுடன்**
சொல்வாக்கைக் காக்குமெங்கள் துராதுரையே உன்போல்
சுகிர்தவானும் ஜகத்தில் ஆருமில்லை
நல்ல கிரீடந் தரிக்கின்ற மகராஜனே
நன்மை தெரிந்த ப்ரபுவே நவரத்னம் வைத்திழைத்த
பல்லக்குந் தான்கொடுத்துப் பரிவுடன் கீர்த்திபெற்ருய்
பண்புடனே அன்புசெய்து தென்புடனே இன்பம்
வைத்துப் (பணி)

4. அரிய தவங்கள்செய்து குமர குருசுவாமி
அருள் புரிந்தே சேர்ந்தே இருக்கும்
பெரிய துரைசெய்த திருப்பணிக் குறைவில்லாமல்
பெருமையாக எனக்குப் பேர்கொடுத்து
மரியாதை களுந்தந்த கச்சிக்கல் யாணரங்கனே
மன்னவனே மகிமையாய் எனை ஆளும்
பரிந்து பிரபஞ்சம் பரமாத்துமமெல்லாம் தெரிந்து
பக்தியுடன் யுக்திசெய்து சித்திபெற்ற சுத்தனே நீ
(பணி)

---

53. இராகம் : சுருட்டி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

பத்துப்பை முத்துப்பை வஜ்ரப் பதக்கமும்
பரிந்து பரிந்து மிகச் சுகந்தந்து
பஞ்சணை மீதினிற் கொஞ்சி விளையாடி
ரஞ்சிதமும் அறிந்த மகராஜனே (பத்துப்பை)

(அநுபல்லவி)

சித்தத்தில் சதாமகிழ்ந்து உனைப்போல்
ஜெகத்தினில் ராஜனில்லைஎன்று நம்பினேன்

உத்தமன் ரங்கசாமி அருள் பாலனே
உண்மையான கச்சிக் கல்யாண ரங்கனே (பத்துப்பை)

(சரணம்)

கட்டுவர்க்கம் கைக் கொலுசு சரப்பளி
கற்கட்டு மோதிரம் தங்கப் பட்டயம்
ஒட்டி யாணமும் நவரத்ன கண்டியும்
ஒயிலாகத் தந்து வேலர் க்ருபைபெற்று
அட்டியில் லாமல்ரங்க சாமி பாலனே
அனுதினமும் அணைந்து தனத்தையும்
கட்டிக் கொடுப்பவர் உன்போலுண்டோ எங்கள்
கச்சிக்கல் யாண ரங்க மகராஜனே (பத்துப்பை)

---

54. இராகம் : அடாணு ; தாளம் : ஆதி.

(பல்லவி)

மகமேரு மகராஜனே—சத்ரபதி (மகமேரு)

(அநுபல்லவி)

வெகுராஜர்களுங் கப்பங்கட்டும் ரங்கபூபன் பாலனே
மேன்மேலும் விளங்குங் கச்சிக் கல்யாண ரங்கசாமி
(மகமேரு)

(சரணங்கள்)

1. பாரினில் துராதுரையே பங்கயக் கண்ணனேஸாமி-தனம்
மாரியாய்த் தங்கக்கையாலே மகிமையாய் வரிசையாய்அவ்
வாரி யாகவே பொழிந்தவரவர் ஆனந்தமாகத்
தாரி பாரிகள் தெரிந்து சகலஸம் மானஞ்செய்யும் (மகமேரு)

2. கலிதான்உனை நினைத்தவர்க்குக் கனவினிலும் அண்டாது
சலியாமல் வஸ்த்ரபூஷணம் சவுக்கியமுந் தந்தப்பல்லக்கும்
வலுவினில் துரிகிதைஜியும் வகைவகையாய்ச் சிஷ்டருக்குப்
பலாபலாவென் றேகொடுத்துப் பண்புடன் கீர்த்திபெற்ற
(மகமேரு)

3. வனமயில்மேல் ஏறும் வடிவேலவர் க்ருபைபடைத்தே
கன நயந் தேசிகந் தமிழைக் கணக்கில்லாமல் ஆதரிக்கும்
தினகரன் போலேஎன்றைக்கும் செல்வம்வளர்ந் தேபெருகி
இனங் கொடுக்குங் கச்சிக்கல் யாணரங்க ச்ருங்காரனே
(மகமேரு)

---

## 55. இராகம் : அடாணு ; தாளம் : ஆதி.

(பல்லவி)

மதனனுக் கெழுதுவள் நிருபம் ஜகமோகன
மாதுவந்து வருந்துருள் துரையே (மதன)

(அநுபல்லவி)

சுதினங் கச்சிக் கல்யாணரங்க மகராஜனே
தோடி பாடி மாடிமீ தினில்வந்து (மதன)

(சரணங்கள்)

1. சுரதத்தில் மகாபீடம்இளைஞரைச்
சொக்கி இழுக்கும் வகைமுக பாடம்
பரத நாட்டியங்கொக் கோகம் படிப்பாள்விசேடம்
பாங்கியர் வந்துகூடும் சித்திரகூடம் (மதன)

2. சிங்கார நடையில் அன்னம் அந்தத்
தேன்மொழி யாளுக்கு மின்னும் அவள் கன்னம்
அங்கம் பத்தரைமாற்றுத் தங்கமே அவள் தனம்
ஆர்க்குத்தெரியும் தீர்க்கமான கண்ணுளின்னம்*
(மதன)

---

## 56. இராகம் : கல்யாணி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

மெய்யனே உனே வேண்டியே
மேலுந் துரையே விரும்பினேன் (மெய்ய)

*3-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

(அநுபல்லவி)

தையல் நாயகி க்ருபை தானே ரங்கன் பாலனே
மையலும் மிஞ்சுதே மன்னன் கல் யாணரங்கனே (மெய்ய)

(சரணங்கள்)

1. நீதா கொஞ்சிமுத்தமும் தாதா அடியாள்மேல்
வாதா என்மீதில் ஏதாகிலும் உண்டோ
தாதா வில்உன்னைப்போல்ஸ்ரீ நாதா கிடைக்குமோசொல்
ஆதாரம் என்றனக்கு நீதானல் லாமலுண்டோ (மெய்ய)

2. உன்னால் இந்தவிரகம் என்னால் சகிக்கப் போமோ
சன்னாகந் தெரிந்தவிற் பன்னா யெந்நாளும்
கன்னா திருக்கண்ணயவ் வன்னா கங்கணங்கட்டிச்
சொன்ன மென்றேமிகவும் நிர்ன்னயங் களுஞ்சொன்ன (மெய்ய)

3. வேலாயு தன்க்ருபையால் மேலாய்ரங் கேந்த்ரன்பெற்ற
பாலா சங்கீதலோலா கோலாகல மாகவே
மாலாய்ப் பஞ்சணைமீதில் லீலாவி நோதஞ்செய்யும்
சீலாகல் யாணரங்கா நாலா கலைதெரிந்த (மெய்ய)

---

57. இராகம் : தோடி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

வாராரோ வந்துமுத்தம் தாராரோ அவரிப்போ
நேராரோ என்னைமிகக் கோராரோ துரைஇங்கே (வாராரோ)

(அநுபல்லவி)

பாராளுஞ் சோலைசூ ழுடையார் பாளையந்தனிலே
பார்த்திப ராகஎங்கும் கீர்த்திபர ராகவே
நாரா யணபஜனை பாராயணமே செய்யும்
நாதன் கச்சிக்கல்யாண ரங்க மகாராஜரும் (வாராரோ)

(சரணங்கள்)

1. பருவ வயதில்என்னை மருவவந் தால்அவர்க்குப்
பலனுண் டாகுமென்று பாங்கியே சொல்லடி

உருகுதே அவரை நினைத்து நினைத்து
உள்ளபடியே ஒருவகையாய்
வருகுதே என்செய்வேனடி மார்பினில்
மாரன் கணையும் வந்து துளைக்குதடி
முருகார் குழலைத்தொடர்ந்து தொடர்ந்து வண்டுகள்
மொய்க்குதடி பாலனமும் கைக்குதடி துரையிங்கே
(வாராரோ)

2. மாமயில் நடனஞ்செய்யும் மாங்குயிலும் கூவுதே
மஞ்ச மீதினில் வரவும் மாலைநேரத்தில்
தாமதஞ் செய்தால் விரகம் தலைக்கேறு தேமதியும்
தழல் போலே தூவுதேயென் ஆவிசோருதே
பூமானே வழிசொல்லடி பாரினிலப்
புரந்தரன் போலெனக்குப் புருஷனுண்டோ
காம ரசவல்லியென்றுங் கண்ணேகண் மணியென்றும்
கற்கண்டதரத்தைச் சுவைத்துமண்டலாதிபருமிங்கே
(வாராரோ)

3. காணுதே எப்போதைக்கும் இருந்தவிடம் நின்றவிடம்
கற்பகமே எந்திடமும் கணவரைப்போல்
தோணுதே என்றன்குறையைத் தோகையே உன்னுடன்
சொல்லி முடியாதடி சுகிர்தமுண்டு [சொன்னேன்
நாணுதே மதிமயங்குதே தியங்குதடி
நாதர் வடிவேலர் க்ருபை நானறிவேனே மனம்
கோணுமோரங்க பூபாலன்பாலர் கல்யாணரங்கரைக்
கூட்டிவந்தா லுன்றனுக்கு மேட்டிமை யுண்டே மன்னவர்
(வாராரோ)

4. எத்தனை விதத்திலோ என்றன் மனதை
எலக் கெலக்கா ஆராய்ந்து குணமுள்ள
பத்தினி யென்றெண்ணிச் சித்தமும் மகிழ்ந்து
பக்ஷம் வைத்துச் சிங்காரித்துச்
சித்தினி சாதிப்பெண்ணே யென்றே எங்குந்தெரியச்
செல்வமாகவே யழைத்து அணைந்திருந்தவர்
முத்து வேலர்க்ருபை பெற்றகச்சிக்கல் யாணரங்கரே
மோகமாகி யென்றன்மீதில் தாகமாகத் துரையவர்
(வாராரோ)

## கனம் கிருஷ்ணையர் இயற்றிய கீர்த்தன உருப்படிகள்

| எண். | பல்லவியின் முதல் | ராகம் | தாளம். | கீர்த்தனத்துக்குரிய தலைவர். |
|---|---|---|---|---|
| 1 | அவர் வருவாரோ நான்வரவோ | முகாரி | ஆதி | கச்சிக் கல்யாணரங்கதுரை. |
| 2 | அன்னமே நான் என்ன செய்வேன் ... | தோடி | ஷை | கபிஸ்தலம் இராமபத்திரமூப்பனார். |
| 3 | ஆராவமுதரை அணைத்தணைத்து | சௌராஷ்டிரம் | ஷை | கும்பகோணம் ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாள். |
| 4 | ஆராவமுதரைப் பாராமல் | தன்யாசி | ஷை | ஷை |
| 5 | ஆராவமுதரைப் போலெனக்கு | கமாசு | ஷை | ஷை |
| 6 | இந்து ரவியைப்போலே ... | அடாணா | ஷை | கச்சிக் கல்யாணரங்கதுரை. |
| 7 | இன்னமனம்இரக்கம் வல்லையோ | பைரவி | ஷை | திருக்குன்றம் ஸௌந்தராஜப் பெருமாள். |
| 8 | இனியென்ன செய்வேனடி ... | வசந்தா | ஷை | கச்சிக்கல்யாணரங்கதுரை. |
| 9 | ஈச்வரி ஜகதம்பா ... | ஆனந்தபைரவி | ரூபகம் | கும்பகோணம் ஸ்ரீமங்காளம்பிகை. |
| | உன்பதமே ஸதாகதி ... | தேசிகதோடி | ஆதி | திருக்குன்றம் ஸௌந்தரராஜப் |
| 10 | | | | பெருமாள். |
| | எங்கள் ஜானகியை ... | காம்போதி | ஆதி | கச்சிக்கல்யாணரங்கதுரை. |
| 11 | எத்தனை நாள் விரகமுடன் ... | சுருட்டி | ,, | ஷை |
| 12 | *எல்லா அருமையையும் எல்லாப் | தோடி | ,, | கபிஸ்தலம் இராமபத்திர |
| 13 | பெருமையையும் ... | | | மூப்பனார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | *என்னடா சொல்லடா ... | அடாணு | ஆதி | ஷை |
| 14 | *என்னடி சொல்லடி ஏதடி | | | திருக்குன்றம் ஸௌந்தரராஜப் |
| 15 | சூதும்வாதும் ... | பியாகடை | ,, | பெருமாள். |
| | என்னத்துக்கிந்த ... | கமாசு | ,, | ஷை |
| 16 | என்னமோவகையாய் ... | ஷை | ,, | இராஜமன்னூர் கோயில் இராஜ |
| 17 | | | | கோபாலப்பெருமாள். |
| | கச்சிக் கல்யாண ரங்கராஜன் | உசேனி | ,, | கச்சிக்கல்யாணரங்கதுரை. |
| 18 | பக்ஷமே ... | | | |
| | *கச்சிரங்கராஜனடி (சிந்து) ... | சஹானு | ,, | கச்சிரங்கர். |
| 19 | *கன்னலுஞ் செந்நெலும் (கலித் | | | |
| 20 | துறை) ... | பைரவி | ,, | கச்சிக்கல்யாண ரங்கதுரை. |
| | காமதேனுவைந்தருவென ... | பியாகடை | ,, | ஷை |
| 21 | குஸுமகுந்தளாம்பிகையே ... | ஷை | ,, | உடையார்பாளையம் குஸுமகுந் |
| 22 | | | | தளாம்பிகை. |
| | கொடுத்துவைத்தது வரும் ... | பைரவி | ,, | நெஞ்சறிவுறுத்தல் |
| 23 | கொண்டைகுலுங்கவே ... | காம்போதி | ,, | கச்சிக் கல்யாணரங்க துரை. |
| 24 | சக்ரபாணி சாமிகிட்டே ... | அடாணு | ,, | கும்பகோணம் ஸ்ரீ சக்கரபாணிப் |
| 25 | | | | பெருமாள். |
| 26 | சக்ரபாணி சாமியைக்கண்டேன். | தன்யாசி | ,, | ஷை |
| 27 | சும்மா சும்மா வருகுமா சுகம் ... | அடாணு | ஆதி | திருக்குன்றம் ஸௌந்தரராஜப் |
| | | | | பெருமாள். |
| 28 | செறுக்கி மயக்கமீறி ... | தர்பார் | ,, | ஷை |
| 29 | சைதன்ய விக்ரகமே .... | தோடி | ரூபகம் | பரப்பிரஹ்மம். |
| 30 | சொர்க்கவாச லேகாதசியில் ... | கமாசு | ஆதி | ஸ்ரீ ரங்கநாதர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | சொல்லடி என்னடி ... | பரசு | ஆதி | கச்சிக்கல்யாணரங்கதுரை. |
| 32 | *டாப்பும் சிறப்பும் ... | தர்பார் | ,, | ஷை |
| 33 | தான்ருன்ருயிருக்க ... | கமாசு | ,, | அத்துவிதானந்தம். |
| 34 | திருக்கண்மாலீச்வரர்க்குகந்த ... | தோடி | ,, | கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீ மதுகர வேணி அம்மை. |
| 35 | திருவொற்றியூர்த் தியாகராஜர் ... | அடாணு | ,, | திருவொற்றியூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி. |
| 36 | தில்லைச்சிதம்பரச் சித்ஸபை ... | பந்துவராளி | ,, | சிதம்பரம் ஸ்ரீ நடராஜமூர்த்தி. |
| 37 | தில்லையப்பாவுனது பஞ்சாக்ஷரப்படியில் ... | ஷை | ,, | ஷை |
| 38 | துராதுரைகளுக்கு ... | ஷை | ,, | கச்சிக்கல்யாணரங்க துரை. |
| 39 | தேவரொயிலும் ... | கமாசு | ,, | ஸ்ரீமுஷ்ணம் பூவராகப்பெருமாள். |
| 40 | நல்ல நல்ல நிலவு பறிபோகுதே | சங்கராபரணம் | ,, | திருக்குன்றம் ஸௌந்தரராஜப் பெருமாள். |
| 41 | * நாராயணமந்திரமே மந்த்ரம் | அடாணு | ஆதி | திருமால். |
| 42 | நாராயணுவென்று சொல்லு வாயே ... | ஸௌராஷ்டிரம் | ,, | ஷை |
| 43 | * நிறைந்ததே எங்கும் ... | ,, | ,, | கச்சிக்கல்யாணரங்க துரை. |
| 44 | நீயல்லாமல் ... | தோடி | ,, | பெரிய மறை ஸ்ரீநிவாஸப் பெருமாள். |
| 45 | பகற்பத்துத் திருநாளில் ... | தன்யாசி | ,, | கும்பகோணம் ஸ்ரீ சக்கரபாணிப் பெருமாள். |
| 46 | பச்சிளந்தே மற்படர்ந்த ... | தோடி | ,, | கச்சிரங்கதுரை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 47 | படியளக்கும் பெருமானென்று ... | பைரவி | ஆதி | திருக்குன்றம் ஸ்ரீ ஸெதரளந் ராஜப் பெருமாள். |
| 48 | பணிவிடைக் காகவே ... | அடாணா | ,, | கச்சிக்கல்யாணரங்கதுரை. |
| 49 | பத்துப்பை முத்துப்பை ... | சுருட்டி | ,, | ஷ |
| 50 | பரிமளநாதா ... | தர்பார் | ,, | திருவழுந்தூர் (திருவிந்தளூர்)ப் பரிமளரங்கப் பெருமாள். |
| 51 | பார ஸகலமும் அபாரம் ... | கல்யாணி | ,, | திருச்சேறை ஸாரநாதப்பெருமாள். |
| 52 | பாரெங்கும் பார்த்தாலும் ... | ,, | ,, | கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணிப்பெருமாள். |
| 53 | பூவராகரே ... | அடாணா | ,, | ஸ்ரீ முஷ்ணம் பூவராகப்பெருமாள். |
| 54 | மகமேரு மகராஜனே ... | ,, | ,, | கச்சிக்கல்யாண ரங்கதுரை. |
| 55 | மதனனுக் கெழுதுவள் நிருபம் ... | ,, | ,, | மேற்படி |
| 56 | * மருதப்பா ... | ஆனந்தபைரவி | ரூபகம் | திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி |
| 57 | மன்னனூர் வலைவீசி ... | தோடி | ,, | இராஜமன்னூர் கோயில் ஸ்ரீ இராஜகோபாலப்பெருமாள். |
| 58 | மன்னனூ ரொயிலும் ... | தன்யாசி | ஆதி | ,, |
| 59 | மனமே எந்நாளும் ... | தோடி | ,, | நெஞ்சறிவுறுத்தல். |
| 60 | மாதே அவர் செய்தவஞ்சனை ... | பைரவி | ரூபகம் | கபிஸ்தலம் இராமபத்திர மூப்பனூர். |
| 61 | முன்னழகும் பின்னழகும் ... | ,, | ஆதி | திருச்சேறை ஸ்ரீ ஸாரநாதப் பெருமாள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 62 | மெய்யனேயுனே வேண்டியே ... | கல்யாணி | ஆதி | கச்சிக்கல்யாணரங்கதுரை. |
| 63 | ரங்கமய மான எங்கள் ... | காம்போதி | ,, | ஸ்ரீ ரங்கநாதர். |
| 64 | லக்ஷ்மி ஸமேத ... | சங்கராபரணம் | ,, | திருமால். |
| 65 | வகுளவனவாசரே ... | அடாணு | திரிபுடை | உடையார்பாளையம்ஸ்ரீமுற்கபுரீசர் |
| 66 | வல்லமையுன் வல்லமையே ... | கல்யாணி | ஆதி | உடையாளூர் செல்லமாகாளி யம்மை |
| 67 | * வன்ய குலோத்தமன் (கலித் | பைரவி | ,, | |
| | துறை) ... | பிருந்தாவன | ,, | கச்சிக்கல்யாணரங்கர். |
| 68 | *வஸ்து இவனேப்போலே ... | ஸாரங்கா | ,, | ,, |
| 69 | வாராரோவந்து முத்தந்தாராரோ | தோடி | ,, | ,, |
| 70 | வேலவ ரேயுமைத் தேடி ... | பைரவி | ,, | முருகக்கடவுள். |
| 71 | ஜகஜ்ஜனனி சுகபாணி ... | ,, | ,, | மதுரை ஸ்ரீ மீனுட்சியம்மை. |
| 72 | *ஷண்மத ஸ்தாபனம் செய்தார் | பியாகடை | ,, | கும்பகோணம் ஸ்ரீசங்கராசார்யர். |
| 73 | *ஸௌந்தர ராஜப்பெருமாளேயுன் | தன்யாசி | ,, | திருக்குன்றம் ஸ்ரீ ஸௌந்தர ராஜப்பெருமாள், |

*இக்குறியிட்டவற்றின் முழுப்பகுதியும் கிடைக்கவில்லை.

## கோபாலகிருஷ்ண பாரதியார்

ஸ்ரீ சிதம்பர ஸபாநாதர் திருவருளால், தமிழ் நாட்டில் இருந்து புகழ்பெற்று விளங்கிய ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியாரவர்களுடைய சரித்திரமாகிய இதனை இப்பொழுது வெளியிடலானேன். இதற்குமுன் சங்கீத வித்துவானாகிய கனம் கிருஷ்ணையருடைய சரித்திரம் வெளியிடப்பெற்றது.

இவருடைய சரித்திரத்தை வேறு சிலர் எழுதியிருக்கின்றனர்.

பாரதியாரிடம் நான் இளமையிலே சங்கீதப் பயிற்சி பெற்றவன். ஆதலின் என்னுடைய மனத்தில் அவருடைய கோலமும் பேச்சும் இயல்புகளும் பதிந்திருக்கின்றன. அவரிடத்தில் எனக்கு இருந்த பெருமதிப்பு, நாளாக நாளாக வளர்ந்து வந்தது. அவர் இயற்றிய நந்தனார் சரித்திரக்கீர்த்தனையானது தமிழுலகத்துக்கு ஒரு புதிய கிளர்ச்சியை உண்டு பண்ணிய அக்காலத்தில் அதற்கிருந்த மதிப்பை நான் அறிவேன்; எங்கே பார்த்தாலும் நாடகங்களும் சினிமாக் காட்சிகளும் மிகுந்துள்ள இக்காலத்திலும் நந்தனார் சரித்திரக்கீர்த்தனம் பக்திச்சுவையால் தனக்கு இணையாக ஒன்றின்றி விளங்குவதையும் அறிகின்றேன். இத்தகைய சிறந்த கீர்த்தனைக் களஞ்சியத்தை நமக்கு அளித்த பெரியாரைப்பற்றித் தெரிந்ததை வெளியிடுவதில் எனக்கு ஒருவகை மகிழ்ச்சி உண்டு; அதனையறிவதில் தமிழ் நாட்டாருக்கும் உவப்பு உண்டென்றே கருதுகின்றேன்.

இந்தச் சரித்திரம் முதல் முதலில், 'கலைமகள்' என்னும் பத்திரிகையில் வெளியிடப்பெற்றது. இப்பொழுது, பாரதியார் கீர்த்தனங்களுள் நந்தனார் சரித்திரக் கீர்த்தனங்களல்லாதனவும் எனக்குக் கிடைத்தனவுமாகிய சிலவற்றையும் சேர்த்துத் தனிப் புத்தகமாக வெளியிடலானேன்.

பாரதியாருடன் நான் பழகிய காலத்தில் நான் அறிந்தனவும் என் தந்தையார், மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர் வாயிலாக நான் தெரிந்துகொண்டனவுமாகிய செய்திகளையும் பாரதியாருடைய மாணாக்கர்களுள் ஒருவரும்

தில்லை வாழந்தணர் மூவாயிரவர் மரபினரும் சிதம்பரம் கிழக்கு ஸந்நிதியில் இருந்து வருபவருமாகிய பிருஹ்மஸ்ரீ ராஜரத்தின தீக்ஷிதரவர்கள்பால் அறிந்த செய்திகளையும் தொடர்புபடுத்தி இவ் வரலாறு எழுதப்பட்டது. மேலே கூறிய தீக்ஷிதரவர்கள் பல அரிய நிகழ்ச்சிகளைத் தெரிவித்ததோடு, பாரதியாருடைய கீர்த்தனங்களை யும் பாடிக் காட்டினார்கள். அவர்கள் திறத்து நான் என்றுங்குன்றாத நன்றியறிவு பாராட்டுங் கடப்பாடுடையேன். பாரதியாருடைய நந்தனார் சரித்திரக்கீர்த்தனங்கள் மற்றக்கீர்த்தனங்களாகியவற்றின் வர்ணமெட்டை அறிய விரும்புகிறவர்கள் அவர்களிடம் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

இதனை முதன் முதலில் வெளிவரச் செய்த 'கலைமகள்' ஆசிரியர் ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்களுக்கும் வேறு வகையில் உதவி புரிந்த அன்பர்களுக்கும் இதன் முகமாக என் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

''தியாகராஜ விலாசம்''
திருவேட்டீசுவரன் பேட்டை
25—6—1936.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையர்**

# கோபாலகிருஷ்ண பாரதியார்

## முன்னுரை

தமிழ்நாடு வளர்த்துவரும் அருங்கலைகளில் சங்கீதம் ஒன்று. தமிழர்களுக்கு உரிய பண்கள், திறங்கள், உருக்கள் என்பவற்றின் இலக்கணங்களும் இலக்கியங்களும் பாடும் முறைகளும் வழக்கற்றுப் போன பின்பு கர்நாடக சங்கீதம் இந்நாட்டில் பரவியது. அரசர்களும் பிரபுக்களும் அந்த இசையில் அதிக விருப்பங் கொண்டு அந்த வகையிலே சிறந்த வித்துவான்களை அன்புடன் பாராட்டி ஆதரித்து வந்தார்கள். அதனால் கர்நாடகப் சங்கீதப் பயிற்சி இந் நாட்டில் மிகவும் பெருகி வேரூன்றியது. தமிழ்நாட்டு வித்துவான்களுள்ளே பலர் இணையற்றவர்களாக விளங்கிக் கர்நாடக சங்கீதத்துக்குரிய தலைமை ஸ்தானமாக இந்நாட்டை ஆக்கினர்.

சங்கீதப் பயிற்சிக்கு ஏற்றபடி சாகித்தியங்கள் முதலில் தமிழ் நாட்டில் உண்டாகவில்லை. தெலுங்கில் பச்சைமிரியன் ஆதிப்பையர், தியாகையர், சாமாசாஸ்திரிகள் முதலியவர்களும்; வடமொழியில் முத்துஸ்வாமி தீக்ஷிதரும் பலவகையான கீர்த்தனங்களை இயற்றினார்கள். ஆனை ஐயா, ஆதிப்பையர், ஸ்ரீரங்கம், ஸ்ரீநிவாஸன், அரியிலூர்ச் சண்பகமன்னார் முதலிய பலர் வேறு பாஷைகளில் கீர்த்தனங்களை இயற்றியிருப்பதோடு தமிழிலும் செய்திருக்கின்றார்கள். தமிழில் மட்டும் கீர்த்தனைகள் இயற்றியவர்களும் உண்டு.

ஹரிகதைகளையும் சிவகதைகளையும் செய்பவர்களுக்கு உபயோகமான கீர்த்தனங்கள் முன்பு தமிழில் இல்லை. இராமாயணம், பாரதம், திருவிளையாடல், காந்தம் முதலிய இதிகாச புராணங்களைக் கீர்த்தனை வடிவமாகச் சிலர் இயற்றினார்கள். ஆயினும் தனியாக ஒரு கதையை விரித்துச் சொல்லுவதற்கேற்ற கீர்த்தனங்கள் இல்லை.

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரென்னும் சங்கீத சாகித்தியமணி அக்குறையை நீக்கித் தமிழில் சரித்திரங்களை இயற்றித் தமிழ் நாட்டாருடைய உள்ளத்தைக் கவர்ந்து கொண்டார். இவருடைய கீர்த்தனங்களிலுள்ள வர்ணமெட்டுக்கள் மிக்க விசித்திரமானவை. இவருடைய பல்லவியெடுப்பே ஒரு தனிச் சிறப்புடையது; பல்லவிக்

கேற்ற சரணங்களைப் பொருத்துவது இவருக்கென வாய்த்த ஓர் ஆற்றல். சரணங்களெல்லாம் அவயவங்களானால் பல்லவி அவற்றின் சிகரமாக இருக்கும். சங்கீதத்துக்கு இயைந்த கமகங்களும் தாளக்கட்டும் இவர் கீர்த்தனங்களில் நன்றாகப் பொருந்தியிருக்கும். எளிய நடையில் அமைந்துள்ள அக்கீர்த்தனங்களில் இயலுக்குரிய இலக்கண அமைதியைக் காட்டிலும் இசை அமைதியே தலைமை வகிக்கும். அவற்றில் பக்தியும் ஞானமும் ததும்பிக்கொண் டிருக்கும்.

## இளமைப் பருவம்

கோபாலகிருஷ்ண பாரதியார் ஏறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு, நாகபட்டினத்துக்கு அருகிலுள்ள **நரிமணம்** என்னும் ஊரிலே பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் ராமசுவாமி பாரதியென்பது. இவர் அந்தணவருணத்தில் வடமர் என்னும் வகுப்பினர். இவருடைய முன்னோர்கள் சங்கீதப் பயிற்சி யுடையவர்கள்.

பாரதியார் இளமையில் நன்னிலத்துக்குப் பக்கத்திலுள்ள முடிகொண்டான் என்னும் கிராமத்திற் சில வருஷங்கள் இருந்தார். பிறகு மாயூரத்திற்குக் கிழக்கேயுள்ள ஆனதாண்டவபுரத்தில் (ஆனந்ததாண்டவபுரத்தில்) இருந்து வரலானார். அவ்விரண்டு கிராமங்களிலும் வாத்திமப் பிராமணர்களாகிய செல்வர்கள் இவரை ஆதரித்து வந்தார்கள். அவர்களுள் அண்ணுவையரென்பவர் இவரிடம் அளவிறந்த அன்புகொண்டு பழகி வந்தார். இளமையில் இவர் வடமொழியை முறையாகப் பயின்று காவிய நாடகங்களைக் கற்றார்; அன்றியும் அத்வைத நூல்களிற் சிலவற்றையும் படித்தார். பிரமசரிய நெறி தவறாமல் ஒழுகி உச்சிக் காலத்தில் பிக்ஷாடனம் செய்து உண்டு வந்தார்.

## ஆசிரியர்

அக்காலத்தில் மாயூரத்தில் கோவிந்தசிவமென்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் அனுபவ ஞானி; அத்வைத சாஸ்திரங் களிலும் யோக நூல்களிலும் பயிற்சியுள்ளவர். பாரதியார் அவரைத் தரிசித்து அவரையே ஞானகுருவாகக் கொண்டு வேதாந்த நூல் களையும் யோக சாஸ்திரங்களையும் பயின்றார்.

முற்பிறப்பிற் செய்த புண்ணிய வசத்தாலும் பரம்பரைப் பெருமையாலும் பாரதியாருக்கு இளமையிலேயே சங்கீதத்தில் விருப்பமும் எளிதிற் பயின்றறியும் ஆற்றலும் உண்டாயின. கிராமந்தோறும் பலவகையான சங்கீத வித்துவான்கள் இருந்த காலமாதலின் கேள்வியறிவு இவருக்கு அதிகமாயிற்று. எங்கே பாட்டுநடைபெற்றுலும் சென்று கேட்பதும், பின்பு கேட்டவற்றில் நயமான முறைகளைப் பயில்வதும் இவருடைய வழக்கம். அதனுல் இவருடைய பயிற்சி விருத்தியடைந்தது.

முடிகொண்டானில் இவர் இருந்தமையால் முடிகொண்டான் பாரதியாரென்றும், ஆனதாண்டவபுரத்தில் இருந்தமையால் ஆனதாண்டவபுரம் பாரதியாரென்றும் இவரை வழங்குவர்.

நல்லோர் இணக்கத்தாலும் சிவபக்திப் பெருக்காலும் இவருக்கு இல்லற வாழ்வில் வெறுப்பு உண்டாயிற்று. அதனுல், பிரமசாரி யாகவே இருந்து காலங் கழிக்க வேண்டுமென்று இவர் தீர்மானம் செய்துகொண்டார்.

ஆனதாண்டவபுரத்தில் இருந்த காலங்களில் இவர் அடிக்கடி மாயூரஞ் சென்று அங்கேயுள்ள சங்கீத வித்துவான்களோடு பழகியும் அவர்களுடைய ஆதரவைப்பெற்றும் சிலகாலம் அங்கே இருந்து வந்தார். தெய்வ ஸ்தோத்திரங்களாகிய கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு உஞ்சவிருத்தி பண்ணுகிறவர்களும் கதை பண்ணு கிறவர்களுமாகிய சில வித்துவான்கள் அங்கே இருந்தார்கள். அவர்களுடைய பழக்கமும் இவருடைய பயிற்சிக்கு உறுதியை அளித்தது.

தமிழிலும் பாரதியாருக்கு ஒருவகையான பழக்கம் இருந்தது. கைவல்ய நவநீதம், பிரபோத சந்திரோதயம், தத்துவராயர் பாடுதுறை, தாயுமானவர் பாடல் முதலியவற்றைப் படித்தமையாலும் பல தமிழ்க்கீர்த்தனைகளைப் பாடிப்பாடிப் பழகியதனுலும் தமிழறிவு இவருக்கு விருத்தியுற்றது. கீர்த்தனைகளை ஆராய்ந்து அவற்றின் அமைப்பு முறையை அறிந்துகொண்டு தாமே புதிய கீர்த்தனங்களை இயற்றத் தொடங்கினுர். இயற்ற இயற்ற அம் முயற்சியில் இவருக்கு அதிக ஊக்கம் உண்டாயிற்று. அக் காலத்தில் தம் ஞான குருவாகிய கோவிந்தசிவத்தின்மீது இவர் பாடிய கீர்த்தனங்களுள் ஒன்று வருமாறு;—

இராகம்—சுருட்டி.

பல்லவி

எங்கள்குரு நாதருடைய
இணையடிதொழு வாய்மனமே (எங்கள்)

அநுபல்லவி

திங்களுதயம் போலே கோவிந்த
சிவமென்றே இந்தப் பூமியில் வந்த (எங்கள்)

சரணங்கள்

1. ஹரிஹரபே தங்கடந்து
அகண்டசச்சி தானந்தமாய்ப்
பரவிநின்றே அபின்னமாய்ப்
பாரடா என்றே
சுருதியுக்தி அநுபவத்தால்
சொல்லிச்சொல்லிப் பலவிதமாய்
விரிந்துநின்ற விஷயவ்ருத்தி
வேரறுத் தாண்டுகொண்ட (எங்கள்)

2. எண்ணித் தொலையாப் பிறவியெடுக்கும்
ஏழைக்கிரங்கி யருளிக்
கண்ணைத் திறந்து பார்த்துக்
கசடுகள் நீக்கி
மண்ணாதி பூதமெல்லாம்
மாய்ந்துவிடும் நாமரூபம்
எண்ணாதே நீ இதையென்
றின்பமுறு வீடுகாட்டும்.* (எங்கள்)

ஆனதாண்டவபுரத்தில் இவர் இருந்த காலங்களிலே கர்நாடக சங்கீதப்பயிற்சி இவருக்கு அதிகரித்து வந்தது. பல பழைய வித்துவான்கள் இயற்றிய கீர்த்தனங்களை அறிந்துகொண்டு

* இதன் மூன்றாஞ் சரணம் கிடைக்கவில்லை.

இடைவிடாமற் பாடி வந்தார். [1] மாயூரத்தம்மாள், [2] பாபநாச முதலியார், [3] பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் முதலியார்களுடைய கீர்த்தனங்கள் பல இவருக்குப் பாடம் உண்டு.

### ராமதாஸிடம் பயின்றது

இங்ஙனம் இருந்துவருகையில் இவருக்கு இந்துஸ்தானி சங்கீதத்திலும் பயிற்சி பெறவேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. அக்காலத்தில் திருவிடைமருதூரில் அமரசிம்ம மகாராஜாவால் ஆதரிக்கப்பெற்று ராமதாஸ் என்னும் ஒரு பெரிய சங்கீதவித்துவான் இருந்து வந்தார். அவர் இந்துஸ்தானி மார்க்கத்திலே சிறந்த திறமையுடையவர். அவரைப் பற்றிக் கேள்வியுற்ற பாரதியார் அவரிடம் கற்றுக்கொள்ள விரும்பித் திருவிடைமருதூர் சென்று அவரை அடைந்து பணிந்து தொண்டு செய்து கற்றுக்கொள்ளலானார். சிவபக்தியும் நிவ்ருத்திமார்க்கத்தில் விருப்பமும் கர்நாடக சங்கீதப் பயிற்சியும் இவர்பாற் பொருந்தியிருப்பதை அறிந்த அப்பெரியார் மனமுவந்து இவருக்கு இந்துஸ்தானி மார்க்கத்தைக் கற்பித்து வந்தார். இவர் அவ்வகையிலுள்ள அருமையான முறைகளையும் சாகித்திய விசித்திரங்களையும் மகாராஷ்டிரம் முதலிய பாஷையிலுள்ள இசைப்பாட்டுக்களின் போக்கையும் உணர்ந்துகொண்டார். எதையும் ஆழ்ந்துபயிலும் இயல்பினராதலின் அவற்றிலுள்ள வேறுபாடுகளும் சிறப்பான பகுதிகளும் இவருக்கு மிக நன்றாக விளங்கின.

### திருவிடைமருதூர் வாசம்

தினந்தோறும் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியை இவர் தரிசித்து [4] அசுவமேதப் பிரதக்ஷிணம் செய்து வருவார். அவ்வப்போது அம்மூர்த்தி விஷயமாக இவர் பாடிய கீர்த்தனங்கள் சில உண்டு.

1. இவர் சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவர். கர்நாடக சுத்தமான அமைப்புடன் அத்வைத சாஸ்திரக் கருத்துக்களையுடையனவாகிய பல கீர்த்தனங்களை இவர் இயற்றியிருக்கிறார். இவருடைய கீர்த்தனங்களை அத்வைசாஸ்திர அறிஞர்கள் கேட்டு மனம் உருகிப் பாராட்டுவர். இவர் ஸ்ரீ அபயாம்பிகையின் திருவருள் பெற்றவர்; இவருடைய பரம்பரையினர் மாயூரம் கோயில் மேலைமடவளாகத்தில் இப்பொழுதும் இருந்து வருகிறார்கள்.

2. இவர் தமிழிற் பல தனிக்கீர்த்தனங்களையும் கும்பேசர் குறவஞ்சி முதலியவற்றையும் இயற்றியவர்.

3. இவர் கனம் கிருஷ்ணையருடைய தமையனார். இவர் பல கீர்த்தனங்கள் இயற்றியிருக்கின்றார்.

4. திருவிடைமருதூரில் வெளிப்பிரகாரம் வலம்வருதலை அசுவமேதப் பிரதக்ஷிணம் என்பர். முறையாகச் சிலகாலம் இப்பிரதக்ஷிணம் செய்து கொடிய நோய்கள், பைத்தியம், பேய்க்கோள் முதலியவற்றிலிருந்து நீங்கினவர்கள் பலர் உண்டு. இத்தகைய நிகழ்ச்சி இன்னும் நடைபெறுதலை அங்கே காணலாம்.

அக்காலத்தில் அமரசிம்ம மகாராஜாவிடம் *கனம் கிருஷ்ணையர் ஆஸ்தான சங்கீதவித்துவானுக இருந்து வந்தார். அவர் பெரிய ரசிகராயும் கன மார்க்கத்தில் இணையற்றவராயும் இருப்பதையறிந்த பாரதியார் அவரோடு பழகலாயினர். பாரதியார்பால் அன்பு வைத்து அவரும் பல கீர்த்தனங்களைக் கற்பித்தார்; தாம் இயற்றிய தமிழ்க்கீர்த்தனங்களையும் சொல்லிக் கொடுத்தார். அதுமுதல் இவருக்குக் கனம் கிருஷ்ணையருடைய கீர்த்தனங்களில் ஈடுபாடு உண்டாயிற்று. ராமதாஸும் கனம் கிருஷ்ணயரும் இவருடைய சங்கீதப்பயிற்சியின் சிறப்பையறிந்து மேலும்மேலும் அன்பு வைத்துப் பாராட்டினுர்கள்.

பாரதியார் பிக்ஷையெடுத்து உண்பதும் சிவதரிசனம் செய்வதும் கீர்த்தனங்களை இயற்றிப் பாடுவதுமாகிய காரியங்களைத் தவருமற் செய்து வந்தார். இவருடைய சங்கீத அறிவு இவருடைய ஒழுக்கச் சிறப்பினுல் மிக்க விளக்கமுற்றது. சங்கீத வித்துவான்களெல்லாரும் இவர்பால் அன்புபூண்டு பழகினர். கும்பகோணம், தேப்பெருமாள் நல்லூர் (தேவைப் பெருமாள் நல்லூர்) முதலிய இடங்களிலிருந்த வித்துவான்கள் இவருடைய கீர்த்தனங்களின் அமைப்பை அறிந்து சந்தோஷித்தனர். இவர் கற்பித்து அமைத்து வந்த கீர்த்தனங்களின் மெட்டுக்கள் சங்கீதத்துக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதை அறிந்து பலர் அக்கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிக் கொண்டு பாடலாயினர்.

## சிதம்பர பக்தி

கோபாலகிருஷ்ண பாரதியார் இளமை தொடங்கியே சிதம்பர ஸ்தலத்தில் அபிமானம் உடையவர். ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு ஆண்டுதோறும் நடைபெறும் ஆறு அபிஷேகங்களுக்கும் தவருமற் சென்று தரிசித்து வருவார். அத்வைத சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவராதலின் சித்ஸபையினுடைய பரமார்த்த உண்மையையும் நடராஜ தத்துவத்தையும் ஆராய்ந்து ஈடுபட்டார். நடராஜ மூர்த்தியைத் தியானம் செய்து உருகுவார்; நாள்தோறும் ஓரிடத்தில் இருந்து நியமந் தவருமல் பிராணுயாமம் முதலியன புரிந்து தியானம் செய்து வருவார்; தம் மனம் ஒருநிலைப் பட வேண்டும் என்னும் கருத்துடையவராணுர். அந்தத் துறையில்

---

1. இவர் சரித்திரம் தனியே வெளியிடப்பட்டிருக்கிறது.

அப்பியாசம் வன்மை பெறப்பெற இவர் அறிவும் வன்மை பெற்றது. இவரிடம் பிறருக்குள்ள மதிப்பும் வளர்ந்து வந்தது.

## அனந்தபாரதியார் பழக்கம்

திருவிடைமருதூரில் அனந்தபாரதியார் என்ற ஸ்ரீ வைஷ்ணவ சங்கீத வித்துவான் ஒருவர் இருந்தார். அவர் பாகவதம் தசம ஸ்கந்தக்கீர்த்தனை, திருவிடைமருதூர் நொண்டி நாடகம் முதலியவற்றை இயற்றியவர். அவருடைய பழக்கமும் கோபாலகிருஷ்ண பாரதியாருக்கு உண்டாயிற்று. தாம் அப்பொழுது அப்பொழுது இயற்றிவரும் கீர்த்தனங்களை இவர் அவருக்குப் பாடிக்காட்டுவார். அவர் இவருடைய மெட்டுக்களின் சிறப்பையும் பல்லவி அநுபல்லவி சரணங்களின் கட்டையும், அறிந்து பாராட்டுவார்.

ஒருநாள் பாரதியார் புதியதாக நாதநாமக்கிரியை ராகத்தில் கீர்த்தனம் இயற்றிப் பாடிக்கொண்டிருந்தார். ஸ்ரீநடராஜமூர்த்தியின் திருவருளை நினைந்து உருகிப் பாடியதாதலின் அது நல்ல பொருளமைதியும் அழகும் உடையதாக விளங்கியது. அது வருமாறு:—

பல்லவி

இனி இனிமேலெனக் கென்ன விசாரம்—இருக்குதையா
இனி இனிமேலெனக் கென்ன விசாரம்.

அநுபல்லவி

[1]பனிமலை தருசிவ காமியின் நேசா
பக்தர்களுக்குநன் களிக்கும்விச் வாசா
தினமு நடம்புரி ஞானப்ர காசா
[2]தில்லையில் வாழும் கனகச பேசா (இனி)

சரணங்கள்

1. ஆசாபாசக் கயிறுகளெல்லாம் அறுத்தேன்
—அகண்டமீறும்
ஆறு குணங்களை [3]நீறு நீருகவே இறுத்தேன்
—அன்னமயாதி

---

பாடபேதம். 1. பனிமலை தருமுமை சிவகாமி நேசா. 2. தென்புலியூர்.
3. நீறுபோலாகவே,

கோசங்களைந்தையும் வேறுவேருகவே [1]குறித்தேன்
—மூலாதாராதி
கோட்டைக்கதிபதிக்காரரைக் [2]கண்டுடல் ஒறுத்தேன்
—அனுதிகர்ம
வாசனையாகிய விதைகளை வறுத்தேன்
மண்டல வாழ்க்கையைக் கண்டு வெறுத்தேன்
நேசமுடனேயடி யார்களை அடுத்தேன்
நிர்விகல்ப சமாதியில் [3]தொடுத்தேன் (இனி)

2. எப்படியும்மெனை ரட்சிக்கும்பொறுப்புனக் கிருக்கும்
—சந்தேகமில்லை
[4]எள்ளளவுங் க்ருபை யிருக்கினும் மனதை நெருக்கும்
—ப்ரபஞ்சமெல்லாம்
சொப்பிடு வித்தைக ளாடுதல் போல்ப்ரமை யிருக்கும்
—[5]கற்பிதமான
சோடச [6]வித்தைக ளோடவே லாகிரி பெருக்கும்
—விஷயம்போக்கி
[7]எப்பொழுதும் உன் திருவடி பணிவேன்
[8]ஏகாகாரமான உறுதியை அணிவேன்
பற்பல யோசனை யெல்லாந் தணிவேன்
பரமபதங் கண்டேனென்று துணிவேன் (இனி)

3. ஏற்றமுடனே **கோபாலகிருஷ்ணன்** நிதம் [9]பாடம்
—துதிகள் செய்தே
ஏறுவேன் ராஜயோ காதிகளான பீடம்
—ஸம்ஸாரக்கடல்
மாத்திரைப்பொழுதிலே தாண்டவேதேடுவேன் ஓடம்
—சிவோகமென்ற
வாக்கிய பாவனை யாகிய ஹ்ருதயக பாடம்
—விஸ்தாரமான
சாஸ்திரவேத புராணங்கள் பார்த்தேன்
சம்சயபாவனை மூன்றையுந் [10]தீர்த்தேன்
காத்திரம் உமதென்று தாரையை வார்த்தேன்
கனகசபாபதி யென்றுனைக் காத்தேன் (இனி)

---

(பா-ம்). 1 பிரித்தேன். 2 கண்டு கண்களித்தேன். 3 படுத்தேன். 4 எள்ளளவுங் கிருபையாகிலு மனத்தினிலிருக்கும். 5. கற்பனையான. 6. விருத்திகள். 7. எப்படியும். 8 ஏகாக்கிரமன உறுதியை. (பா-ம்).
9 பாடும். 10 தோற்றேன்.

இந்தக் கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டேயிருக்கையில் அனந்த பாரதியார் அங்கே வந்தார். அவர் விருப்பத்தின்படி இதை முதலிலிருந்தே அவருக்கு இவர் பாடிக்காட்டினர். பாடும்பொழுதே இவருக்கு உள்ளத்தில் உள்ள அநுபவ உணர்ச்சியையும் பக்தியையும் கண்ணீரும் மயிர்க்குச்செறிதலும் புலப்படுத்தின. சாகித்தியத்தின் அழகும் வர்ணமெட்டிலுள்ள பிராஸங்களும் அனந்த பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்தன. அக்காலம் அவர் உத்தர ராமாயணத்தைக் கீர்த்தனங்களாகச் செய்துகொண்டு வந்த கால மாதலின் இந்த வர்ணமெட்டைப் பின்னுஞ் சிறிது விரித்தமைத்து *''மகிபரி பாலனஞ் செய்தானே ராமன்—அயோத்தி தன்னில்'' என்ற பல்லவியையுடைய கீர்த்தனமொன்றை இயற்றிச் சேர்த்தார். பிற்காலத்தில் அரியிலூர்ச் சடகோப ஐயங்கார் இக்கீர்த்தனத்தில் ஈடுபட்டு இதன் மெட்டைப் பின்பற்றி இராமாயணச் சிந்தென்ற ஒரு நூலை இயற்றியிருக்கிறர்; ''உனதருள் மகிமையை யாதென்றே சொல்வேன்—உதவாவழி புல்வேன்'' என்பது அதன் பல்லவி.

இங்ஙனம் சங்கீத வித்துவான்களும் சாகித்திய வித்துவான்களும் ஒருங்கே வியந்து கொண்டாடும்படி கோபாலகிருஷ்ணபாரதியார் இயற்றிவந்த கீர்த்தனங்கள் விளங்கின. ஸ்ரீ நடராஜமூர்த்தி விஷயமாக மனமுருகி இவர் அப்பொழுதப்பொழுது பாடிய கீர்த்தனங்கள் அளவில்லாதன.

### மாயூரவாசம்

இவர் திருவிடைமருதூரில் இங்ஙனம் சில வருஷங்கள் இருந்த பிறகு ஸ்ரீராமதாஸ் முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் மாயூரத்திற்கு வந்து தங்குவாராயினர். நாளாக நாளாக இவருடைய சங்கீத சாகித்தியச் சிறப்பை யாவரும் மேன்மேலும் பாராட்டி வந்தார்கள். இவரிடம் ஜனங்களுக்குள்ள நன்மதிப்பும் உயர்ந்து வந்தது. இவரை யாவரும் பாரதிகளென்றே வழங்கலாயினர்.

### கீர்த்தனங்கள்

நாளடைவில் இவர் அத்வைதக் கருத்துக்களடங்கிய பல கீர்த்தனங்களை இயற்றினர். அவற்றை மாயூரத்திலும் அதன் அருகிலும் உள்ள வித்துவான்களும் மற்றவர்களும் மனனஞ்செய்து

*ஸ்ரீராமர் அரசுபுரி சருக்கம், 2.

பாடத் தொடங்கினுர்கள். எங்கெங்கே வினிகைகள் நடக்குமோ அங்கங்கெல்லாம் இவருடைய கீர்த்தனங்களைப் பாடும்படி சபையினர் விரும்புவதும் பாடகர்கள் அவற்றைப் பாடுவதும் வழக்கமாயின. முன்பு கூறியபடி இவர் ஸ்ரீ நடராஜமூர்த்தி விஷயமாக இயற்றிய பல கீர்த்தனங்களைத் தமிழுலகம் பெரிதும் பாராட்டியது. அவை யாவும் புதிய புதிய அமைப்புக்களை உடையனவாக இருந்தன. வித்துவான்கள் தங்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற வண்ணம் சில சில கீர்த்தனங்களை இயற்றியளிக்க வேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொள்வார்கள். இவரும் அங்ஙனமே இயற்றியளிப்பார்.

கலியாண காலங்களிற் பாடுவதற்குரிய நலுங்கு, ஊஞ்சல், லாலி, கும்மி முதலிய வகைகளில் இவர் இயற்றிய பாட்டுக்கள் பல. சிறு பெண்கள் கோலாட்ட ஜோத்ரையிற் பாடுவதற்குரிய பாட்டுக்களையும் இவர் இயற்றியளித்தார். தெலுங்கு முதலிய வேறு பாஷைகளிலுள்ள கலியாணப்பாட்டுகளையும் கோலாட்டப் பாட்டுக்களையும் முன்பு பாடிவந்த பெண்கள் அப்பால் இவருடைய பாட்டுக்களையே பாட ஆரம்பித்தனர். எல்லாம் ஸ்ரீ நடராஜமூர்த்தி விஷயமாகவே இருந்தமையால் கேட்பவர்கள் மிகவும் மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

பாரதியாருடைய கோலாட்டப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டு செல்லும் சிறுமியர்களுக்கு வழக்கத்துக்குமேலே பிரபுக்கள் பொருளுதவி செய்தனர். தங்களுக்கு அதிகப் பணம் சேருவது பாரதியார் பாட்டுக்களாலேயே என்பதை அறிந்த அப்பெண்கள் மீண்டும் மீண்டும் இவர்பால் வந்து புதிய புதிய பாட்டுக்களைக் கற்றுக்கொண்டு போவார்கள். உண்மை ஞானமும் பரோபகார எண்ணமும் உடைய பாரதியார் இளங்குழந்தைகள்பாலும் சிறுவர்கள்பாலும் மிக்க அன்பு பூண்டவர்; ஆதலின் அவர்களுடைய ஊக்கத்தை அறிந்து எவ்வாறேனும் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் புகழ் நன்கு பரவவேண்டுமென்றும் இளம்பிராயத்திலேயே கடவுள் வாழ்த்தாகிய பாடல்களை அவர்கள் பாடிப் பழகுதல் அவர்களுக்கு எல்லாவித நன்மைகளையும் உண்டாக்குமென்றும் எண்ணி அவர்கள் விரும்பியபடியே சலிப்பில்லாமல் பாடிக் கொடுத்துவந்தார். இவர் பாடி அளித்தவற்றுள் நலுங்குக்குரிய பாட்டு ஒன்று வருமாறு:—

இராகம் : மத்தியமாவதி

1. நலங்கிடவாரும்நீர் நடராஜமூர்த்தி-சம்போ நடராஜமூர்த்தி
நலங்கிட்டே யெனதிஷ்டம் நிறைவேற்ற வருவீர் (நலங்கிட)

2. உலகேழு முண்டோனும் உணராத வுந்தம்
நலமெல்லாந் தானுணர நானுர்குரு நாதா (நலங்கிட)

3. முன்னமென் கைதொட்ட முத்தேயென் மணியே
இன்னமென் றணைத்தொட்டே இன்பமெலாந் தருவீர் (நலங்கிட)

4. என்னுவித் துணையேநீர் எழுந்திரும் ஐயா
என்னதான் கோபமோ எழுந்திரும் ஐயா (நலங்கிட)

மாயூரத்தில் காவேரிக்கு வடகரையில் உள்ள வள்ளலார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி சந்நிதியில் இவர் இருந்து தியானம் யோகம் முதலியன செய்து வருவார். இவருடைய கீர்த்தனங்களைக் காலமுறையில் ஆராய்ந்தால் இவர் பாரமார்த்திகத்துறையில் குருவின் திருவருளால் மேன்மேலும் நல்ல அநுபவத்தை அடைந்து வந்தாரென்பது தெரியவரும். யோகத்தில் இவருக்கு இருந்த பற்றின் மிகுதியை இவருடைய கீர்த்தனங்களில் அங்கங்கே காணலாம். மாயூரநாதர்கோயிலின் வெளிப்பிராகாரத் தின்தென்மேற்கு மூலையில் ஸ்ரீ அகத்தீசுவரர் என்னும் மூர்த்திக்கு ஆலயம் ஒன்று உள்ளது; அதனருகில் வில்வ மரங்கள் மிகுதியாக உண்டு. அவ்விடம் ஏகாந்தமாக இருக்கும். அதனுல் அங்கே ஒல்வொரு நாளும் தவருமல் இவர் சென்று அந்த மூர்த்தியின் சந்நிதியில் தியானமும் யோகமும் செய்து வந்தார்.

## ஸ்ரீ தியாகையரைக் கண்டது

இங்ஙனம் இருந்து வருகையில் திருவையாற்றில் அக்காலத்தில் இருந்த ஸ்ரீ தியாகையருடைய கீர்த்தனங்களும் அவருடைய ராம பக்தியின் சிறப்பும் எங்கும் பரவியிருத்தலை இவர் பலரால் அறிந்து வந்தார். அப்பெரியாரை எவ்வாறேனும் தரிசித்து வரவேண்டு மென்று இவர் எண்ணினுர். அதனுல் ஒருநாள் இவர் திருவையாறு சென்று ஸ்ரீ தியாகையரை அவர் வீட்டிலேயே தரிசித்தார். அவர் இவரை முன்பு பாராதவராதலால் இவரை நோக்கியவுடன், ''எந்த ஊர்?'' என்று விசாரித்தார். இவர், ''தாஸன் மாயூரம்'' என்ருர்.

தியாகையர்: அங்கே கோபாலகிருஷ்ண பாரதியார் என்ற ஒரு சங்கீத வித்துவான் இருக்கிருராமே: தெரியுமா? அவர் சௌக்கியமாக இருக்கிருரா?

பாரதியார்: தாஸன்தான்.

இங்ஙனம் பணிவுடன் இவர் கூறியதைக் கேட்ட ஸ்ரீ தியாகையர் இவருடைய அடக்கத்தையறிந்து மிகவும் வியப்புற்றார். அப்பொழுது அங்கே அவருடைய மாணுக்கர்கள், ஆபோகியென்னும் ராகத்தில் அவர் இயற்றிய "ஸ்ரீ ராமஸீதா அலங்கார ஸ்வரூபா" என்னும் கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அதனைப் பாடி முடித்த பிறகு ஸ்ரீ தியாகையர் பாரதியாரை நோக்கி, "நீங்கள் இந்த ராகத்தில் ஏதேனும் கீர்த்தனம் செய்திருக்கிறீர்களா?" என்று வினவினர். இவர் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாக இருந்தார். பின்பு மாணுக்கர்கள் வேறு பல கீர்த்தனங்களைப் பாடினுர்கள். முதுமையயுடைய ஸ்ரீ தியாகையர் யாதொரு பற்றுமின்றித் தம் மாணுக்கர்களோடு இருந்து ஸ்ரீ ராமபிரானுடைய புகழைப் பாடுவதிலும் பாடுவித்துக் கேட்பதிலுமே தம் காலத்தையெல்லாம் செலுத்தி வருவதையறிந்து பாரதியார் மனமுருகினர்; அவர் ஒரு சிறிய வீட்டில் இருந்துகொண்டு உண்மையான பக்தியோடு ஸ்ரீ ராமபிரானைப் பிரார்த்தித்துத் துதிக்கும் இன்னிசை இந்த நாடெல்லாம் பரவி முழங்குவது அவருடைய பக்தியின் சிறப்பினலேதானென்பதை இவர் நன்கு உணர்ந்தார். ஞானநெறியிற் செலுத்திய சிந்தையையுடைய இவருக்கு இறைவனுடைய பெரும்புகழைக் கீர்த்தன வடிவமாகச் செய்யும் தொண்டைக் காட்டிலும் சிறந்த தொண்டு வேறில்லை என்றிருந்த எண்ணம் அப்பொழுது வன்மையுற்றது.

அன்று மாலையில் பாரதியார் ஸ்ரீ தியாகையரிடம் விடைபெற்றுக்கொண்டு ஆலயஞ்சென்று ஸ்ரீபிரணதார்த்திஹரரையும் ஸ்ரீ தருமசம்வர்த்தினியையும் தரிசித்து இன்புற்றார். தியாகையர் ஆபோகியில் ஏதாவது கீர்த்தனம் செய்ததுண்டாவென்று வினவியது இவருடைய மனத்திலேயே இருந்து வந்தது. ஆதலின் தியாகையர் வீட்டில் அவர் மாணுக்கர்கள் பாடிய கீர்த்தனத்தை அடியொற்றி இவர் அன்றிரவே ஒரு கீர்த்தனத்தை இயற்றி முடித்தார்.

மறுநாள் பாரதியார் ஸ்ரீ தியாகையருடைய வீடு சென்று பேசிக்கொண்டிருக்கையில், "தாஸன் இயற்றிய கீர்த்தனமொன்றை இப்பொழுது சொல்லிக் காட்டலாமா?" என்று விநயத்தோடு கேட்டார். "அப்படியே; நன்ருகச்சொல்லலாமே. முன்பு சிலர்

உங்களுடைய கீர்த்தனங்களைப் பாடக்கேட்டிருக்கிறேன். ஆயினும் உங்களுடைய கீர்த்தனத்தை நீங்களே பாடக்கேட்பது ஒரு விசேஷமல்லவா?'' என்ருர்.

உடனே பாரதியார் தாம் புதிதாக இயற்றிய பின்வரும் கீர்த்தனத்தை பாடிக் காட்டினுர்:-

இராகம்: ஆபோகி; தாளம்: ரூபகம்.

பல்லவி

சபாபதிக்கு வேறுதெய்வம் சமான மாகுமா-தில்லைச்
சபாபதிக்கு வேறுதெய்வம் சமானமாகுமா?

அநுபல்லவி

க்ருபாநிதி இவரைப்போலக் கிடைக்குமோஇத் தாரணியில்
(சபாபதிக்கு)

சரணம்

ஒருதரம்சிவ சிதம்பர மென்றே உரைத்தாற் போதுமே
பரகதிக்கு வேறுபுண்யம் பண்ண வேண்டுமா

அரிய புலையர்*மூவர்பதம் அடைந்தாரென் றேபுராணம்
பரிந்துசொல்லக் கேட்டோம் கோபாலகிருஷ்ணன் பாடுந்
தில்லைச் (சபாபதி)

இதைக்கேட்ட தியாகையர், "நேற்று நான் கேட்டபொழுது ஒன்றும் சொல்லவில்லையே"என்ருர். இவர், "இதற்கு முன் ஆபோகியில் ஒன்றும் செய்யவில்லை; நேற்று இங்கிருந்து போனபிறகு தான் ராத்திரி யோசித்துச் செய்தேன். எல்லாம் அவ்விடத்து ஆசீர்வாத விசேஷமே; குற்றமிருந்தால் க்ஷமிக்கவேண்டும்" என்ருர். தியாகையர் இவருடைய சாகித்திய சக்தியையும், சங்கீத ஞானத்தையும், நடராஜ பக்தியையும் உணர்ந்து மகிழ்ந்து பாராட்டி ஆசீர்வாதம் செய்தனர். பக்திமானும் பெரியாருமாகிய அவருடைய ஆசீர்வாதம் இவருக்கு ஒருபுதிய ஊக்கத்தை உண்டாக்கிற்று.

### மாயூரம் மீண்டது

அப்பால் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு இவர் மாயூரம் வந்து சேர்ந்தார். அதுமுதல் கோபாலகிருஷ்ண பாரதியார்

*தில்லை வெட்டியான், பெற்ருன் சாம்பான், நந்தனுரென்னும் மூவர்.

இயற்றிய கீர்த்தனங்கள் பின்னும் அதிகமாயின. ஸ்ரீ தியாகையருடைய கீர்த்தனங்களைப் போலவே தமிழில் இயற்றித் தரவேண்டுமென்று சில வித்துவான்கள் வேண்ட அங்ஙனமே இவர் இயற்றித் தந்தார். நாட்டை, வராளி, கௌளை, ஆரபி, ஸ்ரீராகமென்னும் ஐந்து கனராகங்களில் பஞ்சரத்தினம் என ஐந்து கீர்த்தனங்கள் ஸ்ரீ தியாகையர் இயற்றியுள்ளார். அவற்றைப் பின்பற்றிப் பாரதியார் ஐந்து கீர்த்தனங்கள் பாடினார். அவற்றுள் ஒன்று வருமாறு:

இராகம் : நாட்டை.

பல்லவி

ஹரஹரசிவ சங்கரகரு ணாகரபர மேச்வர
ஆனந்தத் தாண்டவ ராயா (ஹரஹர)

(அநுபல்லவி)

புரஹரவ்ருஷ பத்வஜபரி பூர்ணகாம (ஹரஹர)

(சரணம்)

பரமானந்த கூபமும் பஞ்சாட்சரப்படியும் கொடியும்
வரமருள் சந்நிதியும் சிவகங்கையும் மதிலும்
பரவிடுங்கோ பாலகிருஷ்ணன் பாடியகுஞ் சிதபதமும்
தரிசனம்பண்ணித் தெளிந்திடாத ஜன்மம் மனிதஜன்மமல்ல
(ஹரஹர)

இது ஸ்ரீ தியாகையர் இயற்றிய ''ஜகதா நந்தகா'' என்பதற்குப் பிரதியாக இயற்றியது. இவற்றையன்றி இக்கொத்தைச் சேர்ந்தவற்றுள் கௌளையிலுள்ள, ''சரணாகதியென்று நம்பிவந்தேன்'' என்னும் கீர்த்தனத்தையும் ஸ்ரீராகத்திலுள்ள, ''மறவாமல் எப்படியும் நினைமனமே'' என்பதையும் ஆரபியிலுள்ள, ''பிறவாத முத்தியைத் தாரும்'' என்பதையும் கேட்டிருக்கிறேன். ஸ்ரீ தியாகையர் இயற்றியவை இராமபிரான் விஷயமாக இருப்பவை. அவற்றைப் பாடக் கேட்ட சிவபக்திச்செல்வம் வாய்ந்தவர்களுக்கு இவர் சிவபரமாக இயற்றிய கீர்த்தனங்கள் அளவற்ற மகிழ்ச்சியை அளித்தன. அன்றியும் தமிழில் எளிய நடையில் அமைந்திருத்தலின் இக்கீர்த்தனங்களை வருத்தமின்றி யாவரும் மனனம் செய்து பாடுவாராயினர்.

## மாணாக்கர்கள்

பாரதியாரிடம் சிலர் சங்கீதம் பயிலத்தொடங்கினர். இவருடைய கீர்த்தனங்களை அவர்கள் மனனஞ்செய்து தாம் செல்லுமிடந்தோறும் பாடிக்காட்டினர்: அதனால் அவர்களுக்கு மதிப்பும் ஜனங்களுடைய ஆதரவும் உண்டாயின. பாரதியாருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் : (1) சிதம்பரம் பொன்னுசாமி தீக்ஷிதர், (2) சிதம்பரம் ஸ்ரீ ராஜரத்ன தீக்ஷிதர், (3) மாயூரம் இராமசாமி ஐயர், அவருடைய தம்பிகளாகிய (4)நடேச ஐயர், (5) சுப்பிரமணிய ஐயர்.

பாரதியார் அடிக்கடி சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திவ்ய தரிசனம் செய்து சில கீர்த்தனங்களை இயற்றி அம்மூர்த்திக்குச் சூட்டிவருவார்; அப்பழக்கம் இவருக்கு வரவர அதிகரித்தது. சிதம்பரத்திலேயே இவர் சிலமாதங்கள் தங்கியிருப்பதுண்டு. அக்காலங்களில் இவர் அங்கே கீழை வீதியின் கீழ்சிறகிலுள்ள மேற்கூறிய பொன்னுசாமி தீக்ஷிதருடைய வீட்டில் தங்குவது வழக்கம்.

பொன்னுசாமி தீக்ஷிதரும் இவரைப் போலவே பிரமசாரியாக இருந்து காலங்கழித்தவர். பிரமசரியநிலை அவருடைய பக்தி, ஞான வைராக்கியத்திற்கு உதவி புரிந்தது. சங்கீதப்பயிற்சி இயல்பாவே அவருக்கு உண்டு; முத்துத்தாண்டவராயர் கீர்த்தனங்கள் முதலியன அவருக்குப் பாடம். இவரைக்கண்டு பழகிய காலமுதல் அவர் இவர்பால் ஈடுபட்டு இவருடைய கீர்த்தனங்களைப் பாடியதால் அவருடைய இனிய சாரீரம் நற்பயன்பெற்றது. சிதம்பரத்திலுள்ள வேறு பலரும் பாரதியாருடைய கீர்த்தனங்களை அதிக விருப்பத்தோடு கேட்டும் பாடியும் மகிழ்ந்தனர்.

## சிவசங்கர தீக்ஷிதர்

அக்காலத்தில் தீக்ஷிதர்களுள் மிக்க சிவபக்திச் செல்வமும் சங்கீதசாகித்திய சக்தியும் உடைய சிவசங்கர தீக்ஷிதர் என்ற பெரியாரொருவர் இருந்தார். அவருக்கும் பாரதியாருக்கும் பழக்கம் உண்டாயிற்று. அவர் தம் தலையில் ருத்ராக்ஷங்களாலாகிய சிவலிங்கத்தை வைத்துக் கொண்டும் வாகுமாலைகளைத் தரித்துக் காலில் கஜ்ஜை கட்டிககொண்டும் நாள்தோறும் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் சந்நிதானத்தில் நடனம் செய்வார். அவர் சபாநாதர்மீது இயற்றிய

*கீர்த்தனங்கள் பல உண்டு. அவருடைய பக்தி பரவசத்தையும் சங்கீத ஞானத்தையும் கண்டு பாரதியார் அவரை விரும்பினர்; அதனால் இருவரும் நெருங்கிப் பழகினர். ''சான்றோர் சான்றோர் பால ராப'' (புறநானூறு) என்பது உண்மையன்றோ? சிவசங்கர தீக்ஷிதர் பாரதியாருடைய கீர்த்தனங்களில் மிக்க ஈடுபாடுடையவர். எல்லாம் ஸ்ரீ நடராஜமூர்த்தியையே லக்ஷியமாக உடையனவென் பதை உணர்ந்து அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. சிதம்பரவாசம் பாரதியாருக்குச் சிவலோகவாசத்தை ஒத்திருந்தது. தீக்ஷிதர்களுடைய பழக்கம் சிவகணங்களோடு பழகுதல் போன்ற இன்பத்தை அளித்தது. மனமும் செயலும் ஒத்தவர் சேர்ந்து பழகு வதைவிட இன்பம் வேறு என்ன இருக்கிறது?

### நந்தனர் உருவம்

சிதம்பரத்தில் இருக்குங்காலங்களில் இவர் ஆலயம் சென்று, பொன்னம்பலத்துக்குத் தெற்கேயுள்ளதும் கிழக்கு நோக்கி ஊர்த்துவதாண்டவமூர்த்தி யெழுந்தருளி யிருப்பதுமாகிய நிருத்த சபையின் வெளி மண்டபத்தில் ஜபம் செய்வார்; சில சமயங்களில் அதன் தெற்குச் சுவரோரமாக உள்ள நந்தனர் உருவத்துக்கு அருகில் இருந்து பாடிக்கொண்டிருப்பார். நடராஜமூர்த்திக்கு நேரே அம்மூர்த்தியைத் தரிசித்தவண்ணமாக அத்திருவுருவம் அமைக்கப் பட்டிருக்கிறது. அவ்வுருவத்தின் கையில் கடப்பாரையும் தோளில் மண் வெட்டியும் உள்ளன. பாரதியார் நந்தனருடைய சிறந்த பக்தியை நினைந்து நினைந்து உருகுவதற்கு அந்த உருவம் ஒரு தூண்டுகோலாக இருந்தது. இவர் அடிக்கடி நந்தனரைப் பற்றி வியந்து பாராட்டி உரைப்பார். ஒரு சமயம் இவர் அங்கிருந்து பாடிக் கொண்டிருந்தபோது உடனிருந்த அன்பர்கள் சிலர் ''இந்தச் சந்நிதியிலேயே இருந்து தாம் தரிசனம் செய்யவேண்டுமென்று நந்தனர் பிரார்த்திப்பதாக ஒரு கீர்த்தனம் இயற்றித்தரவேண்டும்'' என்று வேண்டினர்கள். அவர்கள் விரும்பியபடியே இவர் [1]''எந்நேரமும் உன்றன் சந்நிதியில் நான் இருக்க வேண்டுமையா'' என்னும் பல்லவியையுடைய கீர்த்தனமொன்றை இயற்றினர். அக் கீர்த்தனம் ஆரபிராகத்தில் அமைந்துள்ளது.

---

*இவை புத்தக உருவில் வெளிவந்துள்ளன.

1. இக் கீர்த்தனம் தனியாகவே வழங்கப்பட்டு வந்தது. பாரதியார் இயற்றிய நந்தனர் சரித்திரக் கீர்த்தனையின் பிற்காலப் பதிப்புக்களிலே இதைச் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறர்கள்.

## சிதம்பரக் கும்மி

இங்ஙனமே சில பெண்கள் விரும்பியபடி [1]சிதம்பரக் கும்மி என்ற ஒன்றை இயற்றினர். அது சிதம்பர ஆலயத்திலுள்ள விநாயகர் முதலியோருடைய சந்நிதிகளை முறையே தரிசித்து வரும் போது அம்மூர்த்திகளைப் பற்றிப் பாடுவதாக அமைந்திருக்கிறது.

''சாந்துப் பொட்டுத் தளதளென்ன நல்ல
சந்தன வாடை குமுகுமென்ன
கூந்த லழகுக் காரியெல் லாங்காலைக்
குவித்துக் கும்மி யடியுங்கடி''

என்று பெண்கள் ஒருவரை ஒருவர் அழைத்துச் குதூகலமாகக் கும்மியடிப்பதற்குப் பாரதியார் வழிகோலுகிருர்.

''தித்தியென் றீச னடனம் புரியமெய்த்
தேவர்கள் பூமழை தான்சொரிய
மத்தளங் கொட்டிய **கோபால கிருஷ்ணனை**
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி''

என்பதில் தம் பெயரை அமைத்திருக்கின்ருர்.

கோவிந்தராஜப் பெருமாளை வழிபடுவதனுல் ஸ்ரீ வைஷ்ணவர் களும் அத்தலத்தில் தொடர்புடையவர்கள்; இதை,

''சிதம்பரமென்று சொல்லாம லேயிதைச்
சித்திரகூட மென்றுசொல்லி
நிதங்கொண் டாடு மையங்கார் கள்வந்து
நின்றிருக்கிருர் பாருங்கடி''

என்று விளக்குகிருர்.

ஏகாந்தமாக இருந்து ஈசுவரத் தியானம் புரிந்து சித்ஸபையில் ஈடுபட்ட இவர் தம் அனுபவத்தை,

''ஆகாய லிங்கத்தைக் கண்டேனடியிங்கே
ஆரு மறியாமல் நின்றேனடி

1. நந்தனர் சரித்திரக் கீர்த்தனையின் பின்பு இது பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

ஏகாந்த மாக இருந்தேனடி மன
தேக்கந் தொலைந்தது பாருங்கடி''

என்று எளிய வார்த்தைகளால் தெரிவிக்கிருர்.

இறைவன் திருவருளையன்றி மற்றவற்றை மதியாத தன்மையை யுடைய பாரதியார் யோகவின்பத்தில் மூழ்கித்தருக்குவதை,

''விதியி னெழுத்தைக் கிழித்தாச்சு முன்னே
விட்டகுறைவந்து தொட்டாச்சு
மதியமிர்தமு முண்டாச்சு தென்று
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி''

என்பதிற் காணலாம்.

## 'பார்த்துக் கடன் கொடுங்கள்'

மாயூரத்தில் ஒருசமயம் ஒருவருடைய வேண்டுகோளின்படி அவருடைய வீட்டிற்குப் பாரதியார் சென்றிருந்தார். காலையில் ஸ்நானம் முதலியன முடித்துக்கொண்டு ரேழியில் (இடைகழியில்) ஜபம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவ் வீட்டிற்குரிய வரும் வேருெருவரும் இரைந்து பேசிக்கொண்டிருந்தனர். ஏதோ விவாதம் நடப்பதுபோலத் தோன்றிற்று. அந்தச் சத்தத்தால் பாரதியாருடைய ஜபத்திற்கு அதிக இடையூறு ஏற்பட்டது. சிறிது நேரங்கழித்து வீட்டுக்குரியவர் இவரிடம் வந்தார். அவரை நோக்கி இவர், ''யாருடனே இரைந்து பேசிக்கொண்டிருந்தீர் களே; என்ன காரணம்?'' என்று கேட்டார். அவர், ''அவன் ஒருகடன்காரன்; என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு பல வருஷங் களாகியும் திருப்பிக் கொடுக்கவில்லை. கேட்டபோதெல்லாம் 'ஆகட்டும், இதோ இரண்டு நாளிற் கொடுத்துவிடுகிறேன்' என்கிருன். அவன் வீதிவழியே போனுன். அவனைத்தான் அழைத்துப் பணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். மடையன்; காரணம் இல்லாமல் இரைச்சல்போட்டான்'' என்ருர். பாரதியார், ''ஒருவருக்குப் பணம் கொடுக்கும்போது பரோபகார மாக அதைத் தருமம் செய்துவிடலாம்; கடன் கொடுப்பதாக இருந்தால் சரியானவர்களைப் பார்த்தே கொடுக்கவேண்டும்'' என்று சொல்லிவிட்டுச் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார். பிறகு அவருக்குக் கூறிய அறிவுரையையே விரித்து ஒரு கீர்த்தன மாக இயற்றிப் பாடினுர். அது வருமாறு:

இராகம் : காபி ; தாளம் : ஆதி.

(பல்லவி)

பார்த்துக் கடன் கொடுங்கள் - மனிதரைப்
பார்த்துக் கடன் கொடுங்கள்

(அநுபல்லவி)

பார்த்துக் கடன்கொடுக் காவிடின் பணம் போகும்
பழுதை போலிருந்து பாம்புபோ லாகும் (பார்த்துக்)

(சரணங்கள்)

1. கொடுத்த கடன் வெறும் அடகுவி சாரம்
கோர்ட்டுக்கச் சேரிக்குப் போவது கோரம்
கடுத்துக்கேட் டாலவர் மனதுவி காரம்
களவு போனல் துன்பம் அதுஒரு வாரம் (பார்த்துக்)

2. வாது வழக்குகள் பேசக் கொண் டாட்டம்
வாரண்டு வந்தால் காரைக்கா லோட்டம்
பாதக மில்லாமல் குடியிருந் தீட்டம்
பகல்சேர் திருடர் களிலிவர்சி ரேஷ்டம் (பார்த்துக்)

3. பல்லைக் காட்டிப் பணங்களை வாங்குவர்
பணத்தைத் திருப்பிக் கொடாமலே தூங்குவர்
அல்லும் பகலு மலைந்தாலும் தந்திடார்
அளித்தவர் வாழுந் தெருவிலும் வந்திடார் (பார்த்துக்)

இதைக்கேட்ட அவ்வீட்டுக்காரர், "உலக அநுபவத்துக்கு இது மிகவும் பொருத்தமாக இருக்கிறது" என்று கூறி வியந்தார்.

## இராமசாமி ஐயர்

நிராசையுள்ளவராதலின் பாரதியார் செல்வர்களிடத்தில் வலியச் சென்று பழகுவதில்லை, அதனுல் இவர் அதிக சௌக்கிய மான நிலையில் அக்காலத்தில் இருக்க இயலவில்லை. ஏழைகளிடத்தில் இவருக்குக் கருணை அதிகம். அவர்கள்பால் அன்பு வைத்துப் பழகுவதும் அவர்களுடைய ஆதரவையே பெரிதாக எண்ணுவதும் இவருடைய இயல்பு. ஸ்ரீமாயூரநாதர் திருக்கோயிலில் வேலையாக இருந்தவர்களுடைய பரம்பரையிற் பிறந்தவராகிய

இராமசாமி ஐயரென்னும் மாணுக்கர் இவரைத் தந்தையிலும் அதிகமாக மதித்துத் தொண்டுபூண்டு கவனித்துவந்தார். இவர் கீர்த்தனங்களிற் பெரும்பாலன அவருக்குப் பாடம் உண்டு அவருடைய வீடு ஸ்ரீ மாயூரநாதர் கோயிலின் தென்மடவளாகத்தில் ஆலயத்தின் தெற்கு மதில்வாயிலின் கிழக்கே வடக்கு நோக்கி உள்ளது. பெரும்பாலும் அவ்வீட்டின் கீழ்ப்புறத்துள்ள சிறிய திண்ணையிலேதான் பாரதியார் தங்கியிருப்பார்.

## தலயாத்திரை

இவர் சில சமயங்களில் சிவஸ்தல யாத்திரை செய்து வருவார். அங்கங்கே நிகழும் விழாக்காட்சிகளைக் கண்டு இன்புற்றுத் தாம் கண்டவற்றைக் கண்டவாறே கீர்த்தனங்களாகவும், சிந்துகளாகவும், வேறுவகையாகவும் இவர் இயற்றிவருவார். இங்ஙனம் இவர் பாடியவை பல.

ஒருமுறை சிதம்பரத்தில் திருவீதிக்கு எழுந்தருளிய பிக்ஷாடன மூர்த்தியைத் தரிசித்தபோது, பெண்கள் அம்மூர்த்தியைப் பார்த்துச் சொல்வதுபோலக் கௌளிபந்து என்னும் ராகத்தில் ''பிச்சைக்காரவேஷங் காட்டுகிறீர்'' என்று தொடங்கும் கீர்த்தனம் ஒன்றை இயற்றிப் பாடினுர். மற்றொருமுறை திருவண்ணுமலைக்குக் கார்த்திகைத்தீப தரிசனத்துக்காக இவர் சென்றிருந்தார். ஒருமுறை கிரிப்பிரதட்சிணம் செய்தார். அக்காலத்தில் அங்கே உள்ள அன்பர்களின் செயல்களும் பிறகாட்சிகளும் இவர் மனதிற் பதிந்தன. அவற்றையெல்லாம் அமைத்து இவர் பின்வரும் கீர்த்தனத்தை இயற்றினுர்:—

இராகம் : நாதநாமக்கிரியை

(பல்லவி)

கண்ணுலே கண்டேன்—வேறொன்றும்
எண்ணுமலே நின்றேன்.

(அநுபல்லவி)

பண்ணுத புண்ணிய பரிபாக மேதிரு
அண்ணு மலையானை உண்ணு முலையுடன் (கண்ணுலே)

(சரணங்கள்)

1. காட்டுத் தழைகளைப் பந்தலா யலங்காரம்
செய்திடும் ஒருபுறம்
கால்கள் கண்க ளில்லாத பேதைகள்
கைவி ரித்திடும் ஒருபுறம்
மாட்டுக் கிடைகள் மந்தை மந்தையாய்
வந்து வழங்குவ தொருபுறம்
வாயி லாதவோ ரூமை நாடகம்
காட்டி மறைந்திடு மொருபுறம்
பாட்டுப் பாடுவார் தாளம் போடுவார்
பசிக்கு தின்ருெரு காசு தாருமென்
ருட்டங் கொள்ளுவார் நின்று வருந்துவார்
அன்ன தாங்கிரிப் பிரதக்ஷி ணந்தனில் (கண்ணுலே)

2. ஹரஹ ராசிவ சிதம்ப ராவென்பர்
அம்ப லப்பர தேசிகள்
அருண கிரியின் மகிமை யைக்கொண்
டாடுவார் ஸ்தல வாசிகள்
அரிய தவங்களைப் புரிந்து மூலத்
தழலெ ழுப்புவர் நேசிகள்
ஆனந் தாம்ருதம் கொண்டு தம்மை
அறிவர் ஞானப்ர காசிகள்
பெரிய கோபுர முந்திரு வீதியும்
பிறங்கு சீர்த்திருத் தேருந் தீர்த்தமும்
பிரிய ராங்குகை நமச்சி வாயராம்
பெரிய பக்தர்தம் மடமும் ஜோதியும் (கண்ணுலே)

3. புந்தி மகிழவே உக்காக் குடித்திடும்
புகையி ஞலா மோதமும்
புரையில் லாதவவ் வந்தணர் கூடிப்
புகழ்ந்தி டுஞ்சதுர் வேதமும்
பந்தி பந்தியாய்த் தேவ தாசிகள்
பாடி வருஞ்சங் கீதமும்
பார ளந்தகோபால கிருஷ்ணன்
பணிந்தி டுந்திருப் பாதமும்

அந்தி வேளையும் மண்ட பங்களில்
ஆரத் திகற் பூரம் புகைந்திடச்
சிந்தை மகிழவே மலைமு கட்டினில்
தீப தரிசனம் தாபம் தீரவே. (கண்ணுலே)

இங்ஙனம் பாரதியாருடைய பாட்டுக்கள் பெருகப் பெருகத் தமிழ்நாட்டில் தமிழ்க் கீர்த்தனங்களுக்கு இருந்த பஞ்சம் நீங்கியது. அடுத்தடுத்து இவர் இயற்றிவந்த கீர்த்தனங்கள் ஒவ்வொன்ருக வெளிவரலாயின. இயற்றிய சில நாட்களுள் அக்கீர்த்தனங்கள் பாகவதர்களாலும் வித்துவான்களாலும் தமிழ்நாடு முழுவதும் பரவின. வேறு இடங்களிலுள்ள சங்கீத வித்துவான்கள் மாயூரத் திற்கேனும் அதன் அருகிலுள்ள இடங்களுக்கேனும் வரநேர்ந்தால் ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் வந்து வணங்கி, ''ஏதேனும் புதிய கீர்த்தனம் இயற்றியிருக்கிறீர்களா?'' என்று கேட்பார்கள். தாம் இயற்றியவற்றை இவர் பாடிக் காட்டுவார். அவர்கள் அவற்றை மனனம் செய்துகொண்டு உரிய காலத்தில் உபயோகப் படுத்திக் கொள்வார்கள்.

### சிவகதை செய்தல்

அங்கங்கேயுள்ள அன்பர்கள் பாரதியாரை அழைத்துச்சென்று சங்கீதவினிகைகள் செய்யச் சொல்லுவார்கள். இவர் சிஷ்யர் களுடன் சென்று, அங்ஙனமே சங்கீதவினிகைகள் செய்வதுண்டு; கதைகளும் செய்வார். அவற்றில் ஸ்ரீ ராமதாஸ் என்னும் பெரி யாரிடம் கற்றுக்கொண்ட இந்துஸ்தானி மார்க்கத்திலுள்ள உருப் படிகளை இவர் பாடுவார்; உபகதைகளையும் சமயத்துக்கு ஏற்ற ஹாஸ்யமான செய்திகளையும் சொல்லி விளக்குவார். அவற்றைக் கேட்ட பொதுமக்கள் எல்லோரும் இவரது வாக்கில் மிகவும் ஈடுபடுவார்கள்.

இவர்பால் வந்த வித்துவான்களிற் பலர், ''சிவகதையாக ஏதேனும் தங்கள் வாக்கினுல் வெளிவந்தால் எங்களுக்கும் தமிழ் நாட்டு ஜனங்களுக்கும் பெரிய உபகாரமாக இருக்கும். தங்களுக்கு மகாராஷ்டிரம் இந்துஸ்தானி முதலியவற்றிலுள்ள பாணியெல்லாம் தெரியுமே. அந்த மார்க்கங்களையெல்லாம் தமிழிற் கொண்டுவந்து அமைக்கத்தக்கவர்கள் தங்களையன்றி வேறு யார் இருக்கிருர்கள்?'' என்று பணிவுடன் வேண்டிக்கொண்டார்கள். மாயூரத்திலிருந்த வித்துவான்களும் சிவபக்திச் செல்வர்களும் அங்ஙனம் செய்வது

எல்லாவற்றிலும் சிறந்ததென்று வற்புறுத்தினார்கள். இவர், "நீங்கள் சொல்லுவது நல்லகாரியந்தான். ஒரு பக்தருடைய சரித்திரத்தை இயற்றினால் ஜன்மசாபல்யமும் உண்டு. ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவருள் கிடைத்தால் அப்படியே செய்யலாமென்று எண்ணியிருக்கிறேன்" என்று கூறினார். அதுமுதல் சிவகதைகளைப்பற்றி ஆராய்வதில் இவருடைய நோக்கம் செல்லலாயிற்று.

சிவகதைகளைப் பிரசங்கம் செய்வதில் ஈடுபட்ட பாரதியார் நாளடைவில் அதன் மூலமாகச் சிறிது சிறிது பொருள்வருவாயையும் அங்கங்கே பெறலாயினர். ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்து இவர் செய்யும் சிவகதைகளைக் கேட்டுவந்தார்கள். சில ஊர்களிலுள்ள பிரபுக்கள் தங்கள் வீட்டில் கலியாணம் முதலிய சுபவிசேஷங்கள் நடைபெறும்போது இவரை வருவித்துச் சிவகதைகளைப் பிரசங்கஞ் செய்வித்துக் கேட்டு மகிழ்ந்து ஆதரித்து வந்தார்கள்.

## நந்தனார் சரித்திரம் இயற்றத் தொடங்கியது

நாகபட்டினத்திலே கப்பல் வியாபாரியும் சிவபக்திச் செல்வருமாக இருந்த கந்தப்ப செட்டியாரென்னும் பிரபுவின் வீட்டுக் கல்யாணத்திற்கு அவர் விருப்பத்தின்படி ஒரு சமயம் இவர் போயிருந்தார். அங்கே சில தினம் இவர் சில சிவகதைகளைப் பிரசங்கம் செய்தார். பிறகு அப்பிரபு இவரிடம், "ஒரு நாயனார் சரித்திரத்தை நீங்கள் கீர்த்தன ரூபமாக இயற்றவேண்டும்; இந்த விருப்பம் எனக்கு நெடுநாளாக உண்டு; உங்களுடைய புகழைக் கேட்ட காலமுதல் இந்த எண்ணம் எனக்குத் தோன்றிவளர்ந்து வருகிறது; நீங்கள் இங்கே இப்பொழுது செய்துவரும் சிவ கதைகளைக்கேட்ட பிறகு அந்த எண்ணம் பின்னும் அதிகரித்துள்ளது; உங்கள் திருவாக்கால் அப்படி ஒரு சரித்திரம் வெளிவருமாயின் என்னால் இயன்ற உதவியை நான் செய்கிறேன்; என்னுடைய நண்பர்கள் சிலரிடமும் சொல்லி அந்தச் சரித்திரத்தை எங்கும் பரவும்படி செய்வேன்; சிவபெருமானது புகழையும் சிவபக்தர்களுடைய சிறப்பையும் அறிந்த நீங்கள் சாதாரண ஜனங்களும் கேட்டு உருகும் வண்ணம் செய்யக்கூடுமென்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உறுதியாக இருக்கிறது,, என்று வேண்டிக் கொண்டனர்.

வேறு பல சங்கீத வித்துவான்களும் பிரபுக்களும் இங்ஙனமே பலமுறை தம்மை முன்னமே வேண்டிக் கொண்டதுண்டாதலால் பாரதியார் அவ்வாறே ஒரு நாயனார் சரித்திரத்தைக் கதை வடிவ

மாக விரைவில் இயற்றத் தொடங்க வேண்டுமென்று நிச்சயித்தார். இறைவன் அருளைத் துணையாகக்கொண்டு ஒருவாறு தொடங்கிவிட்டால் பிறகு எளிதில் நிறைவேறுமென்று நம்பிக்கை இவருக்கு உண்டாயிற்று. எந்தச் சரித்திரம் இயற்றலாம் என்ற யோசனை பிறகு தோன்றிற்று. சிதம்பரம் சென்ற காலங்களில் ஆலயத்தில் நந்தனர் பிம்பத்துக்கருகில் இருந்து சிவத்தியானதிகள் செய்து வந்த பழக்கத்தால் இவருக்கு நந்தனருடைய நினைவு வந்தது. அன்றியும், சிதம்பரத்தில் ஈடுபாடுடையவராதலின் ஸ்ரீ நடராஜப்பெருமானைப் பலவாறு துதிக்கத்தக்க சந்தர்ப்பங்களை உடையதாக அச்சரித்திரம் இருக்கவேண்டுமென்று எண்ணினர். 'சிதம்பரம் போகவேண்டும்' என்று ஒருமையுள்ளத்தோடு இருந்து, "நாளைப்போவேன், நாளைப்போவேன்" என்று எப்பொழுதும் மனமுருகிக்கூறிக்கொண்டே இருந்ததனல், 'திருநாளைப் போவார்' என்னும் காரணப் பெயரையடைந்த நந்தனரது சரித்திரமே தம் மனோபாவங்களை விளக்குவதற்கு ஏற்றதென்று தெளிந்தார். ஒரு நல்லநாள் பார்த்து இவர் தொடங்க எண்ணினர். அந்த நாளும் வந்தது.

அப்பொழுது கந்தப்ப செட்டியார் இவர் இருந்த விடுதிக்குப் பலவகையான பழங்களை யனுப்பினர். கொணர்ந்த வேலைக்காரன் அப்பழங்களை இவர்முன்னே வைத்தான். இவர் அவற்றைப் பார்த்து, "இது நல்ல சுபசகுனம்" என்று மகிழ்ந்தார். இவர் மனத்தில் பழம் வந்தமை பதிந்தது; 'பழம் நம்மருங்கு அணையும்' என்று நினைந்தார்; அதையே தாம் இயற்றப் புகுந்த சரித்திரத்தின் தொடக்கமாக வைத்துக்கொண்டு 'பழனமருங்கணையும்' *என்று தொடங்கினர்.

கீர்த்தனங்களாக உள்ள சரித்திரங்களுக்கு முதலிற் பெரும்பாலும் அந்தச் சரித்திரத்தைச் சுருக்கிக்கூறும் ஒரு பகுதி உண்டு. அதற்கு நிரூபணம் என்று பெயர். காப்பியங்களில் முதலில் கதையைச் சுருக்கிச் சொல்லும் பதிகம் என்னும் பகுதி இருத்தலைப் போல அச்சுருக்கம் கீர்த்தனரூபமாக மகாராஷ்டிர முதலிய பாஷைகளில் அமைந்த கதைகளில் இருக்கும்.

---

*இச்செய்தியை எனக்குச் சொன்னவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரே.

பாரதியார் நந்தனுர் சரித்திரத்தைச் சுருக்கமாக மேற்கூறிய பழனமருங்கணையுமென்பதையே முதலாகக்கொண்ட ஒரு சிந்து வடிவத்தில் அமைத்தார். அந்தச்சிந்தை இயற்றியபின் பலர் கூடிய சபையில் பாடிக் காட்டினுர். அதில் உள்ள சேரியின் இயற்கை வருணனை முதலியன கேட்டோரை மகிழ்வித்தன. அந்தச் சிந்தில் அமைத்த வரலாற்றையே விரித்துச் சரித்திரமாகச் செய்ய எண்ணி யிருப்பதை அன்பர்களிடம் பாரதியார் வெளியிட்டார். கந்தப்ப செட்டியார் முதலியோர் தங்கள் விருப்பம் நிறைவேறும் சமயம் வந்துவிட்டதென்றெண்ணி அளவற்ற மகிழ்ச்சி கொண்டனர்.

பாரதியார் சிலகாலம் நாகபட்டினத்திலேயே இருந்து முறை யாக நந்தனுர் சரித்திரத்தை இயற்றி வரலானுர். அப்பொழுதப் பொழுது இயற்றிய பகுதிகளை அன்பர்களுக்குப் பாடிக்காட்டுவார். கேட்டவர்கள், ''இச்சரித்திரம் நிறைவேறினுல் தமிழ்நாடு முழுதும் ஒரு மலர்ச்சியை அடையும்'' என்று எண்ணினுர்கள். பாரதியார் நாகபட்டினத்திலுள்ள அன்பர்களிடம் தாம் மாயூரம் சென்று சரித்திரம் முழுவதையும் இயற்றி முடித்துக்கொண்டு வருவதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டார். கந்தப்ப செட்டியார் தக்க பொருளுதவி புரிந்து, ''நீங்கள் இந்தச் சரித்திரத்தை இயற்றத் தொடங்கியது சிவபக்தர்கள் செய்த தவப்பயனென்றே சொல்ல வேண்டும்; ஸ்ரீ சிதம்பர சபாநாயகர் திருவருள் நிரம்ப வாய்க்கப் பெற்ற உங்களுடைய பக்தியும் ஞானமும் இதில் பிரதிபலிக் கின்றன; இதனை விரைவிற் பூர்த்தி செய்துகொண்டு இங்கே வந்து பிரசங்கம் செய்து எங்களை உய்விக்கவேண்டும்; எங்களு டைய அளவற்ற ஆசையால் அடிக்கடி வற்புறுத்திச் சொல்வதை நீங்கள் பிழையாக எண்ணுமல் பொறுத்தருள வேண்டும்; மாயூ ரத்தில் எவ்வளவோ அன்பர்கள் தங்களுடைய அருமையான கதாப் பிரசங்கங்களைக் கேட்பதற்குக் காத்திருப்பார்கள்; அவர் களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில் உள்ளத்தைச் செலுத்தி இந்தச் சரித்திரம் இயற்றுவதில் பராமுகமாக இருக்கக் கூடாது; இச்சரித்திரம் முடியும்வரையில் இங்கேயே இருந்தால் உங்களுக்கு யாதொரு கவலையுமில்லாமல் கவனித்துக்கொள்ளு கிருேம்'' என்ருர்.

பாரதியார், ''உங்களுக்கு இவ்வளவு அன்பும் ஆவலும் இருப் பதற்காகவேனும் நான் ஞாபகத்தைச் செலுத்தி இதனைச் செய்து முடிப்பேன், இதனை இயற்றுவதனுல் என்னுடைய மனத்துக்கும்

நாவிற்கும் பரிசுத்த முண்டாகுமே! கரும்புதின்னக் கூலியா? மாயூரத்திற்குப் போனல் தனியே இருந்து சிந்திப்பதற்கும் தியானம் செய்வதற்கும் உரிய இடங்கள் இருக்கின்றன; அன்றியும் இடையிடையே சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜமூர்த்தியையும் தரிசித்து வரலாம்; நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். நான் விரைவில் இதை முடித்துக்கொண்டு வருவேன்'' என்று கூறவே, செட்டியார் பிரிவாற்ருத வருத்தத்தோடு விடை கொடுத்தனுப்பினுர்.

அப்பால் பாரதியார் மாயூரம் வந்து சேர்ந்தார். அது முதல் நந்தனர் சரித்திரத்தை மிக்க ஊக்கத்தோடு இயற்றிவந்தார். பெரிய புராணத்திலுள்ள வரலாற்றை வைத்துக்கொண்டு தமது மனேபாவத்துக்கும் காலத்துக்கும் வேறு சரித்திரப் போக்குக்கும் ஏற்ப அதை விரிவுபடுத்தி அமைத்துக்கொண்டார். அந்த வரலாற்றுக்கு ஏற்றபடி சமயோசிதமான இராகங்களையும் புதிய மெட்டுக்களையும் அமைத்துக்கொண்டு கீர்த்தனங்களை இயற்றினுர். இடையிடையே சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜ தரிசனம்செய்து மீள்வார். தாம் அவ்வப்பொழுது ஸ்ரீ நடராஜப் பெருமான்மீது முன்னமே இயற்றிவைத்திருந்த சில தனிக்கீர்த்தனங்களையும் இந்த நூலில் ஏற்ற இடங்களிற் சேர்த்துக்கொண்டார்.

## அரங்கேற்றம்

சில மாதங்களில் நந்தனர் சரித்திரக் கீர்த்தனத்தை இவர் இயற்றி முடித்தார். பலமுறை நினைந்து நினைந்து இயற்றியதாதலின் அச்சரித்திரம் இவருடைய உலக அநுபவத்தையும் சிவபக்திப் பெருக்கத்தையும் யோகானுபவம் முதலியவற்றையும் புலப்படுத்தியது. அது நிறைவேறியதை இவர் நாகபட்டினத்திலுள்ள கந்தப்ப செட்டியாருக்கு அறிவித்தார். அவர் உடனே தக்க மனிதர் ஒருவரை அனுப்பி இவரை அழைத்துவரச் செய்தார்.

பாரதியார் தம் மாணுக்கர்கள் சிலருடன் நாகபட்டினம் சென்றனர். அங்குள்ள அன்பர்கள் யாவரும் அந்தச் சரித்திரம் பூர்த்தியானதை அறிந்து அதன் அரங்கேற்றத்தை எதிர்நோக்கியிருந்தனர். பெருஞ் செல்வராகிய கந்தப்ப செட்டியார் அந்த அரங்கேற்றம் ஒருபெரிய திருவிழாவைப்போல நடைபெறுவதற்கு உரியமுயற்சிகளைச் செய்தார். வெளியூர்களிலுள்ள சங்கீத வித்துவான்களும் பிரபுக்களும் பிறரும் வந்து கூடினர்; காரைக்கால் முதலிய இடங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பலரும் வந்தனர்.

நல்லநாளில் அரங்கேற்றம் தொடங்கப்பட்டது. மூன்று தினங்கள் அது நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் பெருங்கூட்ட மாக அன்பர்கள் வந்து கதையைக்கேட்டு இன்புற்றனர். யாவரும், "இதைப்போன்ற சரித்திரத்தை இதுகாறும் நாங்கள் கேட்டறி யோம்!" என்று வியந்தனர்.

அதிற் கூறப்பட்ட சேரிவருணனையை வியந்தார் சிலர்; கதை யமைப்பைப் புகழ்ந்தனர் சிலர்; ஹாஸ்யரஸத்தைப் பாராட்டினர் சிலர்; வேதாந்தக் கருத்துக்களைப் போற்றினர் சிலர்; எளிய நடை யைச் சிறப்பித்தனர் சிலர்; அதுவரையில் இந்நாட்டில் வழங்காத புதிய சங்கீத மெட்டுக்களைக் கேட்டு இன்புற்றனர் சிலர்; இங்ஙனம் அச்சரித்திரமானது பலவகையான உயர்வுகளையுடையதாகிச் சிவ பக்தியை ஊட்டுவதற்குரிய இணையற்ற கருவியாக விளங்கியது.

அந்த அரங்கேற்றம் நிறைவேறியவுடன் பாரதியாருக்கு ஸம் மானங்கள் பலவாறு வழங்கப்பட்டன. பொது ஜனங்கள் அந்த மூன்று நாட்களிலும் நந்தனுர் சரித்திரத்தை ஒருமுறை கேட்ட தோடு திருப்தியடையவில்லை. நாகபட்டினத்திலுள்ள பிரபுக்கள் பலருடைய வீட்டில் தனித்தனியே அவரவர்கள் விருப்பத்தின்படி பாரதியார் நந்தனுர் சரித்திரத்தைப் பிரசங்கம் செய்துவந்தார். அதனைக் கேட்கக் கேட்க மேலும் மேலும் கேட்கவேண்டுமென்ற ஆவல் கேட்டவர்களுக்கு உண்டாயிற்று.

நாகபட்டினத்தில் நாள்தோறும் இங்ஙனம் கதை நடைபெற்று வருகையில் காரைக்காலிலிருந்த உத்தியோகஸ்தர்கள் பலர் நாகை வந்து கதையைக் கேட்டு இன்புற்றுத் தங்கள் ஊர்சென்றனர். இரவெல்லாம் கண்விழித்தமையால் அவர்கள் தங்கள் உத்தியோக நிலையங்களில் தூக்கக்கலக்கத்தால் அவஸ்தைப்பட்டார்கள். காரைக்காலிலிருந்த கலெக்டராகிய ஸிஸே துரையென்னும் ஒரு கனவான் தம் கீழிருந்த உத்தியோகஸ்தர்கள் இங்ஙனம் இருப் பதற்குக் காரணமென்ன வென்று விசாரித்தார். நாகபட்டினத்தில் பாரதியார் செய்துவந்த கதாப்பிரசங்கமே அதற்குக் காரணமென்று அறிந்து ஆச்சரியமுற்றார். அவர் சிறிது தமிழ்ப்பயிற்சியும் சங்கீத ஞானமும் உடையவர்; ஆதலின், 'இந்த உத்தியோகஸ்தர்களை மயக்கும் சரித்திரமாக இருந்தால் அதை நாம் கேட்கவேண்டாமா?' என்று எண்ணினர். அதையறிந்த சில தக்க உத்தியோகஸ்தர்கள் பாரதியாரை நாகப்பட்டினத்திலிருந்து அன்போடு அழைத்துவந்து காரைக்காலில் நந்தனுர் சரித்திரம் பிரசங்கத்தை நடத்தச் செய்தனர்.

## நந்தனார் சரித்திரப் பதிப்பு

அப்பொழுது ஸிஸே துரையும் வந்து கேட்டு மிகவும் ஈடுபட்டார். அந்தக் கதையைக் கேட்பதற்காகக் கூடிய கூட்டத்தின் மிகுதியை அவர் அதற்கு முன் ஒருபொழுதும் கண்டதில்லை. அவ்வளவு அருமையான சரித்திரத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினால் உலகுக்கு உபகாரமாக இருக்குமென்று அந்தத்துரை எண்ணினார். பாரதியாரிடம் அக்கருத்தைத் தெரிவிக்கவே, இவர் அச்சரித்திரம் முழுவதையும் நன்றாக எழுதிக்கொடுத்தார். ஸிஸே துரையே அதை முதன்முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

அப்பதிப்பின் முகப்புப் பக்கத்தில்,

'உ சிவமயம். பெரியபுராணம் அறுபத்துமூன்று நாயன்மார் களில் சிதம்பரத்தில் முக்திபெற்றவராகிய திருநாளைப்போவார் சரித்திரக் கீர்த்தனை. இஃது முடிகொண்டான் பாரதி கோபால கிருஷ்ணையரால் நூதனமாக வியற்றியதைக் காரைக்கால் கலெக்டர் ஸிஸேதுரையவர்கள் உத்தரவின்படி மேற்படியூர் ஞானப்பிரகாச பிள்ளையவர்களாலும் பிட்டில் அருணசல பிள்ளையவர்களாலும் பரிசோதித்து, புரசை க. குண்ணப்பமூர்த்தி அவர்களால் கல்வி விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. துன்மதிளு ஐப்பசிமீ உஅஉ'

என்னும் செய்திகள் காணப்படுகின்றன.

காரைக்காலில் பாரதியார் சிலகாலம் இருந்து பின்பு மாயூரம் வந்துசேர்ந்தார். மாயூரம் முதலிய இடங்களிலும் தொடர்ந்து பல நாட்கள் நந்தனார் சரித்திரத்தை இவர் பிரசங்கம் செய்யலானார். அங்கேவந்து கேட்டுச் சென்றவர்களாலே தமிழ்நாடு முழுவதும் நந்தனார் சரித்திரப் பிரஸ்தாபமே நிறைந்திருந்தது. அச்சரித்திரப் புஸ்தகங்கள் எங்கும் பரவின. அதனை யாவரும் வாங்கிப் படித்து மனனம் பண்ணினர். அதைக்கேட்ட பலர் திருப்புன்கூர் சென்று நந்திவிலகிய நிலையையும், திருக்கோயிற்கு மேற்கே யுள்ளதும் நந்தனாரால் வெட்டப்பட்டதுமான திருக்குளத்தையும் கண்டு இன்புற்றுவந்தனர்; சிலர் சிதம்பரம் சென்று நந்தனார் தீக்குளித்த இடமாகிய ஓமக்குளத்தைத் தரிசித்து அதில் ஸ்நானம் செய்து வந்தனர்; மற்ற நாயன்மார்களைப்பற்றி கேட்டும் அறியாதவர்கள் கூட நந்தனாரைப்பற்றி நன்றாக அறிந்துகொண்டனர். நந்தனார்

வரலாற்றுக்கே ஒரு தனி மதிப்பு உண்டாயிற்று. பல ஊர்களில் புதிய பஜனை மடங்களும் பஜனை கோஷ்டிகளும் உண்டாயின; நடராஜ பஜனையைத் தமிழ் நாட்டினர் பாரதியாருடைய கீர்த்தனங்களின் உதவியால் நடத்தினார்கள். தமிழ்நாடு முழுவதும் சிதம்பர நினைவு மலிந்தது.

பாரதியாருக்கு நந்தனார் சரித்திரம் புகழுடம்பை நாட்டியது; கோபாலகிருஷ்ண பாரதியாரை நாமெல்லாம் மறவாமல் நினைக்கப் பண்ணுவது இச் சரித்திரந்தான். இவர் வேறு பலவகையான சிறப்புக்களையுடையவராயினும் நந்தனார் சரித்திர ஆசிரியரென்ற சிறப்பொன்றே தமிழுலகில் இவரை விளங்கச் செய்தது. நந்தனார் சரித்திரமென்று சொல்லும்போதே யாருக்கும் கோபாலகிருஷ்ண பாரதியாருடைய ஞாபகம் உண்டாகாமல் இராது.

இச்சரித்திரம் பலருக்குச் சிவபக்தியையும் தமிழ்க் கீர்த்தனங்களில் சுவையையும் உண்டாக்கியது; சங்கீத வித்துவான்களுக்கு இசையின் வேறுபாடுகளை நன்கு தெரிவித்து நல்ல பயிற்சியை அளித்தது.

### ஒரு கவிராயரின் பொறாமை

மாயூரத்தைச் சார்ந்த கூறைநாட்டில் அக்காலத்தில் இருந்த கவிராயர் ஒருவருக்கும் கோபாலகிருஷ்ண பாரதியார் அடைந்து வரும் பெருமை பொறாமையை உண்டாக்கிற்று. அவர் நல்ல தமிழ்ப்பயிற்சியும் சங்கீதஞானமும் வாய்ந்தவர்; திருநாவுக்கரசு நாயனார் சரித்திரத்தைக் கீர்த்தன உருவத்தில் இயற்றியவர். அவர் பெரும்பாலும் தமிழ் இலக்கண விதிகளைக் கவனித்து அந்தச் சரித்திரத்தை இயற்றினார். சங்கீதப் பயிற்சியுடையவர்கள் அதனை மதிக்கவில்லை. அதனால் அந்தச் சரித்திரம் அதிகமாகப் பரவாமல் அந்தக் கவிராயர் பழகும் இடங்களில்மட்டும் அவரால் பிரசங்கம் செய்யப்பட்டு வந்தது. அவர் எவ்வளவோ முயன்றும் அதற்கு மதிப்பு உண்டாகவேயில்லை. காரணம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனத்தின் வியாபகமே.

இந்த நிலையில் நந்தனார் சரித்திர வெள்ளத்தில் தமிழ்நாடு முழுவதும் அமிழ்ந்து கிடப்பதைக்கண்ட அக்கவிராயருக்குப் பொறாமை உண்டாவது இயல்புதானே? அவர் தம்முடைய மன நிலையையும் பாரதியாருடைய மனநிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தா

ரல்லர். அவர் தம்முடைய கல்விப் பெருமையை யாவரும் அறிய வேண்டுமென்றும் புகழடைய வேண்டுமென்றுமே எண்ணிச் செய்த சரித்திரம் பாராட்டப்படாமற் போயிற்று; பாரதியார் உள்ளத் தூய்மையோடு சிவகிருபையொன்றையே இலக்காகக்கொண்டு இயற்றிய நந்தனுர் சரித்திரமோ மேன்மேலும் விளங்கத் தொடங்கியது.

அதனுல் கவிராயருடைய பொருமைத்தீ கொழுந்து விட்டெரிந்தது. பாரதியாரைப்பற்றிப் பல குறைகளை அவர் கூறத் தொடங்கினுர். இவர்மீது பல வசைக் கவிகளைப் பாடித் தமக்குத் தெரிந்த சிலருக்குப் பாடம் பண்ணுவித்துச் சில இடங்களில் பாடச் செய்தார். அவர் அப்படி இயற்றிய கண்டனங்களுள் பின்வரும் கீர்த்தனம் ஒன்று:

(பல்லவி)

நந்தன் சரித்திரத்தைக் கேளாதே—நாளும்
வந்த தரித்திரந்தான் மாளாதே

(அநுபல்லவி)

தந்தன மாகக்கொள்வான் தடிப்பிரம்ம சாரி
தையலர் மேற்பெருங் காமவி காரி (நந்தன்)

(சரணம்)

பெரிய புராணத்திலே இருப்பதை விட்டுப்
பேய்த்தன மாகஇவன் சொன்னதைத் தொட்டு
அரிய புலவர்க்கு வந்ததே சொட்டு
ஐயையோ அத்தனை யுங்கதைக் கட்டு (நந்தன்)

இத்தகைய கீர்த்தனங்களிலும் செய்யுட்களிலும் அக்கவிராயருடைய பொருமையும் குறுகிய நோக்கமும் வெளிப்பட்டனவேயன்றி இவற்றுல் பாரதியாருக்கு ஒரு குறைவும் உண்டாகவேயில்லை. இந்த வசைப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு சென்றவர்களைப் பலர் கண்டித்துப் புத்திபுகட்டினுர்கள். அது முதல் அவர் தம் செய்கையினின்றும் நீங்கினர்.

அன்பர்களிற் சிலர் பாரதியாரிடம் வந்து ''இதற்குக் கண்டனமாக நீங்கள் சில கீர்த்தனங்கள் பாடித்தரவேண்டும்: துஷ்டர்

களுக்கு இடங்கொடுக்கக்கூடாது; கண்டிக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள்; அவர்களுள் ஒருவர் அந்தத் தமிழ்ப் பண்டிதர் இயற்றிய திருநாவுக்கரசர் சரித்திரத்தைப் பழித்து,

''அப்பன் சரித்திரத்தைச் சொல்லாதே
கப்பறையுங் கையுமாய் நில்லாதே''.

எனவரும் ஒரு கீர்த்தனத்தை இயற்றிச் சொல்லிக் காட்டினுர். பாரதியார் அவரைப்பார்த்து, ''அதை உடனே மறந்துவிடுங்கள்; உங்கள் செயலால் எனக்கு அவமதிப்பு அதிகமாகுமேயன்றி நன் மதிப்பு உண்டாகாது'' என்று கூறினுர். மற்றவர்களைப் பார்த்து, ''நான் சர்வக்ஞனு? என்னுடைய கீர்த்தனங்களில் பிழையிருப்ப தாக அவருக்குத் தோற்றியதனுல் அவர் அங்ஙனம் கூறி வருகிருர். ஆனுல் அநாவசியமாக என்னைக் கண்டபடி தூஷிப்பதாக நான் கேள்விப்படுகிறேன். சிவகிருபையையே துணையாக நான்கொண்டு சரித்திரத்தை இயற்றினேன். எனக்கு வரும் இகழ்ச்சியும் புகழ்ச் சியும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியையே சார்ந்தவை. இதன் கண்டனமாக நான் கீர்த்தனங்களை இயற்றத் தொடங்கினுல் எனது எண்ணம் பாழ்படும். ஈசுவரனையும் அடியார்களையும் பாடியதனுல் புனித மடைந்த என்னுடைய நாவை வேறுவிதமாக உபயோகித்து அழுக்கடையச் செய்யமாட்டேன்? கங்கையில் நீராடிவிட்டுச் சாக்கடை நீரில் மூழ்க யாராவது விரும்புவார்களா? அவர் தம் ஆத்திரத்தை ஒருவிதமாக இந்தப் பாட்டுக்களால் தீர்த்துக்கொள் கிருர். நாமும் அவரைப்போல் செய்ய ஆரம்பித்தால் நமக்கும் அவருக்கும் வித்தியாசம் என்ன? எல்லாம் 'நடராஜப்பெருமானது திருவருள் என்றெண்ணி அமைதியாக இருப்பதையே விரும்பு கிறேன்'' என்று உணர்த்தினுர். கேட்டவர்கள், பாரதியாருடைய உயர்ந்த பொறுமையை அறிந்து பாராட்டினுர்கள்.

## நந்தனுர் சரித்திர அமைப்பு

நந்தனுர் சரித்திரம் பாரதியாருடைய பேராற்றலையும் கற்பனை மிகுதியையும் நன்கு விளக்குகின்றது. பெரிய புராணத்தில் உள்ள சுருக்கமான வரலாற்றை அதில் விரித்து இவர் அமைத்திருக் கின்ருர். வேதியரைப்பற்றிய செய்தியேனும் நந்தனுரை அவர் துன்புறுத்திய விஷய மேனும் பெரியபுராணத்தில் காணப்பட வில்லை. நந்தனுர், பழைய கால வழக்கப்படி தம் குலத்திற்கேற்ப ஒரு பண்ணையாளாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்று

ஊகித்து அவருக்கு ஓர் எஜமானனை இவர் உண்டாக்கிக்கொண்டார். நந்தனருடைய சிவபக்தியும் துறவுநிலையும் சாந்த உள்ளமும் நிறைந்த குணங்களும் பிரகாசிக்க வேண்டுமென்று நினைந்து, அவருடைய இயல்புகளுக்கு மாருக உள்ளவைகளை அவ்வாண்டைக்குப் பொருத்தினர். இந்த இருவகை நிலைகளும் ஒன்றுக்கொன்று சுவைபயந்துகொண்டு உலகியலை வெளிப்படுத்துகின்றன. நந்தனர் மிக்க ஏழை, கூலி வேலை செய்யும் அடிமை; ஆண்டையோ பெருஞ்செல்வர், பல அடிமைகளை உடையவர், இறுமாப்புடையவர். இந்த வேற்றுமைகள் பாரதியாருடைய சரித்திரத்திற்கு அழகைக் கொடுக்கின்றன.

நந்தனருடைய சிவபக்தி பலவகையில் தடையுறுகின்றது. ஆண்டைக்கே அடிமை யென்னும் எண்ணத்தினுலும் நற்பழக்கமில்லாமையாலும் நந்தனருடைய சுற்றத்தார் எல்லாவிதத்திலும் தூய்மையையுடைய அவரை வெறுக்கின்றனர். சிலர் அவரோடு சேர்ந்து பஜனை செய்கிருர்கள். 'இந்த அநியாயத்'தைத் தீர்க்கும் பொருட்டு ஒரு பெரிய கிழவன் நந்தனர் சிறு பயல்களுக்கு உபதேசம் செய்து சேரி முழுவதையும் கெடுத்ததாகக் குறை கூறுகிருன். நந்தனர் அவனையும் வசப்படுத்திக் கொள்கிருர். ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கே அடிமை நாமென்னும் பக்தி வைராக்கியமுடைய அவர் தம் கடமையில் தவறினுரல்லர். ஆண்டையை ஒவ்வொரு காரியத்திற்கும் உத்தரவுகேட்கிருர். "ஆண்டைக் கடிமைக்காரனல்லவே, நான் ஆண்டைக் கடிமைக்காரனல்லவே" என்று தனித்துத் தேம்பிப் புலம்பிய அவர், "காலில் நகமுளைத்த நாள் முதலாய் உமக்கு அடிமைக்காரன் ஐயே" என்று ஆண்டையின் அடியில் வீழ்ந்து கதறுகிருர். இவ்வளவுக்கும் காரணம் தம் பரம்பரையைக் காப்பாற்றிய ஆண்டைக்குத் தாம் அடிமைத் தொழில் செய்வதினின்றும் வேறுபடாதிருப்பது தம் கடமையென்பதை அவர் உணர்ந்திருந்ததே; இந்தச் செய்ந்நன்றி யறிவே அத்தனை வாக்குவாதங்களுக்கும் காரணமாயிற்று. இல்லையாளுல் ஆண்டையை விட்டுவிட்டு ஓடிப்போக எவ்வளவு நேரம் செல்லும்?

இந்தச் செய்ந்நன்றியறிவை நந்தனர் கொண்டிருந்தா ரென்ற குறிப்பைப் பாரதியார் சில இடங்களில் வெளியிட்டுள்ளார்:

"கரசளவு நன்மை செய்தோரை-ஒரு
காலும் மறவாத் தன்மை
தாசனுக் கெப்போது முண்டு"

''அல்லும்பகலுமுங்க ளாதரவாலே
ஆளாகினேனையே
அன்புடனே நல்ல கதிபெறுவாயென்
றனுப்பவேணுமையே''

என்று கெஞ்சிக்கேட்கும் நந்தனுருடைய விண்ணப்பத்தில் இவ்வுணர்ச்சி விளங்குவதை அறியலாம். அவருடைய தீவிர பக்தியை அந்தணர் உணரவில்லை. சேரியே சிதம்பரமென்று அவ்வாண்டை உபதேசிக்கிருர். கல்லுங்கரையும்படி பலவகையாக நந்தனுர் கேட்டுப்பார்க்கிருர். ஆண்டையின் உள்ளம் ஒன்றுக்கும் இரங்கவில்லை.

ஆண்டை வெருட்டுகிருர்; நல்ல வார்த்தை சொல்லுகிருர்· ''உன்னைப் போல நல்லவன் இல்லையே; நீ தொட்டதெல்லாம் பொன்னல்லவா? என்று வரம்பு கடந்து புகழ்கிருர்; ''உனக்குச் சிதம்பர தரிசனம் எதற்கு? அது முனீந்திரர்களுக்கல்லவா?'' என்று சொல்லுகிருர்; 'கண்டாங்கிச் சேலை' முதலியன தருவதாகக் கூறி உத்ஸாகப் படுத்துகிருர். இவ்வளவுக்கும் நந்தனுர் அவர் வழிக்கு வரவில்லை.

நந்தனுர், ''இனி இந்த ஆண்டையின் மனத்தை வசமாக்க நம்மால் முடியாது'' என்று விட்டுவிட்டு, என்றைக்கும் ஆண்டானுகிய ஸ்ரீ நடராஜப்பெருமானை எண்ணி எண்ணி நைகிருர். ''நாற்பது வேலி பூமி நடவுநட்டாகவில்லை'' என்ற குறையை ஆண்டைக்குத் தீர்த்துவைத்தால் சிதம்பரம் போக உத்தரவு கிடைக்குமென்று எண்ணுகிருர். இனி இந்த ஜன்மத்தில் சிதம்பர தரிசனம் இல்லையென்று நிச்சயம் செய்து கொண்டு வருந்துகின்ருர்.

இறைவன் திருவருளால் நாற்பதுவேலி பூமியும் உழுது பயிரிடப் பட்டுக் கதிர் ஒரு முழங்காணும் நிலையில் ஓர் இரவிலே அமைகின்றது. அந்தத் தெய்விக சக்தியின் பயனைக் கண்டபிறகே வேதியர் நந்தனுரிடத்தில் பயமும் பக்தியும் கொள்ளுகிருர்.

அவருடைய நெஞ்சம் கழிவிரக்கத்தாற் கரைகிறது;

''குற்றமெத்தனை செய்தபோதிலும் உன்றன்
சித்தத்தில் நினையாதே—சிவ
பத்தனென்றறியாமல் பதறிவார்த்தைகள்சொன்ன
பாவந் தொலையாதே''

என்று அவர் மன்னிப்புக் கேட்கிருர்.

"நந்தா நீ குருவுபதேசம் நவின்றிடவேணும்
நான்கடைத்தேற"

என்று நந்தனரிடம் கதறி உருகிப் புலம்பும்பொழுது அவருடைய பழைய நிலை அவ்வளவும் மாறிவிடுகிறது; 'கல்லை மென்கனியாக்கும் விச்சை' போல நந்தனுடைய பக்தி விசித்திரம் அவரை உருகச் செய்துவிடுகிறது.

யோகதத்துவங்களாகிய சில அரிய மொழிகளை வேதியருக்கு நந்தனர் கூறி விடைபெற்றுச் சிதம்பரத்துக்குப் புறப்படுகிறார். இவ்வரலாறெல்லாம் பாரதியார் தாமே கற்பித்தவை.

சிதம்பரம் சென்று தீயில் மூழ்கி நந்தனர் முனிவரது உருவம் பெற்று ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய குஞ்சிதபாதத்தை அடைந்த செய்தி பெரிய புராணத்திலே உள்ளது. இவர் அதை விரிவாக்கி அமைத்திருக்கிறார். சிதம்பரம் செல்லும் வழியிலுள்ள காட்சிகளும், சிதம்பரத்தைக் கண்டவுடன் நந்தனருக்கு உண்டாகும் மன எழுச்சியும் படிப்பவர்களைப் பரவசமாக்குகின்றன.

நந்தனருடைய செயல்களை வருணிக்கும் பகுதிகளைப் பார்த்தால் அவர் ஒரு ஜீவன்முக்தரென்றே தோற்றும். வேதாந்த சாஸ்திரப் பயிற்சியுடைய பாரதியார் பக்தியும், யோகமும், ஞானமும் ஒருங்கே வாய்ந்தவராக நந்தனரைக் காட்டுகின்றார். சேரிப்பழக்க மட்டும் உள்ள நந்தனருக்கு 'வாசியாலே மூலக்கனல் வீசியே சுழன்றுவர மாசறக் குண்டலியை விட்டாட்டும்' யோகநிலை தெரிந்திருத்தல் இயல்பென்று தோற்றவில்லை; எனினும் பாரதியார் தாம் எங்ஙனம் இருக்கவேண்டுமென்று நினைத்தாரோ அங்ஙனம் நந்தனரை இருக்கச் செய்தார்; எந்த அநுபவங்கள் உண்மை ஞானியின் இலக்கணங்களென்று கருதினாரோ அந்த இலக்கணங்களை நந்தனருக்கு ஏற்றி உரைத்தனர். நந்தனருடைய கூற்றுக்களிலே யோகநூற் கருத்துக்கள் பல வந்துள்ளன. பாரதியாரே நந்தனராக இருந்து தம் உள்ளத்தை அங்கங்கே திறந்து காட்டியிருக்கின்றார். தமது சொந்த அநுபவ உணர்ச்சிகளையே நந்தனருடைய செயல்களாலும் கூற்றுக்களாலும் விளங்க வைத்த பாரதியாருடைய கற்பனையானது தமிழ்நாட்டை உருகச் செய்கின்றது.

## ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது சிறப்புப்பாயிரம் பெற்றது

இலக்கணப் பிழைகள் நந்தனார் சரித்திரத்தில் அங்கங்கே உண்டு. சிலர் அவற்றை எடுத்துக் காட்டிக்குறை கூறும்பொழுது பாரதியாருடைய மாணாக்கர் பலர், ''பெரிய வித்துவான் யாரிடமேனும் சென்று சிறப்புப்பாயிரம் வாங்கிவிட்டால் இவர்கள் பேசாமல் இருந்து விடுவார்கள்'' என்று வற்புறுத்தி வேண்டினர்.

அக்காலத்தில் மாயூரத்திலே தமிழில் மகாவித்துவானாகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வசித்துவந்தார்கள். பாரதியாருடைய சிவபக்தியையும் ஞானநிலையையும் அறிந்த அவர்களுக்கு இவர்மீது அன்புண்டாயிற்று. இருவரும் அடிக்கடி கண்டு சல்லாபஞ் செய்வதுண்டு. பாரதியார் தம் மாணாக்கர் கருத்தைப் பிள்ளையவர்களிடம் கூறி நிறைவேற்றிக் கொள்ளலாமென்று எண்ணினார். ஒரு நாள் அதனைப் பிள்ளையவர்களிடம் வெளியிட்டனர். பிள்ளையவர்கள் இவர்பால் அன்புடையவர்களாயினும், நந்தனார் சரித்திரம் பெரியபுராணத்திலுள்ளவாறே இயற்றப்படாமையாலும், பிழைகள் உடையதாக இருப்பதனாலும் அதற்குச் சிறப்புப்பாயிரங் கொடுப்பதற்கு விரும்பவில்லை; பாரதியாருடைய விருப்பத்தை மறுப்பதற்கும் மனந்துணியவில்லை. ஆதலின், ''சாம்பவர்களாகிய உங்களுடைய கீர்த்தனத்துக்கு எனது சிறப்புப்பாயிரம் எதற்கு? இசை நூலாகிய அதற்கு இசையறிந்தவர்கள் அளித்தால் பொருத்தமாக இருக்கும். அன்றியும் மிகவும் பிரசித்தமாக வழங்கும் அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வேண்டிய அவசியமே இல்லை'' என்று கூறினார்கள். பாரதியார், ''எவ்வளவோ சில புராணங்களைப் பாடியவர்களும் சிவபக்த சிரோமணிகளுமாகிய உங்களுக்குத்தான் அச்சரித்திர அமைப்பின் அருமை பெருமை தெரியும்; சாதாரண ஜனங்களும் பக்தியில் ஈடுபடும் வண்ணம் அமையவேண்டுமென்று எண்ணிச் செய்த அது நடராஜமூர்த்தியின் கிருபையால் ஓர் உருவம் பெற்றது. உங்கள் வாக்கினால் அதற்கு ஒரு சிறப்புப் பாயிரம் இருந்தால் இதுவரையிலும் இல்லாத பெருமை உண்டாகுமென்று எண்ணுகிறேன்'' என்று அடிக்கடி கூறி வற்புறுத்திவந்தார். பிள்ளையவர்களோ ஒவ்வொரு முறையும் ஏதேதோ சமாதானம் கூறிவந்தார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் பிற்பகலில் பாரதியார் பிள்ளையவர்களது வீட்டையடைந்தார். அப்போது பிள்ளையவர்கள்

ஆகாரம் செய்துவிட்டு வழக்கம் போலவே துயின்றுகொண்டிருந் தார். அதனையறிந்த பாரதியார் வீட்டின் வெளித்திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டு பாடத்தொடங்கினர். சங்கீத வித்துவான் கள் தனியே இருக்கையில் இங்ஙனம் தாமே பாடி மகிழ்வது இயல்பு. பாரதியார் தாம் இயற்றிய நந்தனர் சரித்திரத்திலுள்ள கீர்த்தனங் கள் சிலவற்றைப் பாடினர். இவருடைய இன்னிசை பிள்ளையவர் களை எழுப்பிவிட்டது. அவர்கள் எழுந்து படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டார்கள். கீர்த்தனங்களின் இசையும் பொருளும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. உடனே எழுந்து சென்றல் பாரதியார் தாமே அநுபவித்துப் பாடுவதை நிறுத்தி விடுவாரென்று எண்ணி அங்கிருந்தபடியே கேட்கலானர்கள். பாரதியார், "கனகசபாபதி தரிசனம் ஒரு நாள் கண்டால் கலிதீரும்" என்ற கீர்த்தனத்தைப் பாடினர். பிள்ளையவர்கள் ஸ்ரீ நடராஜமூர்த்தி யினிடம் உறுதியான பக்தி பூண்டவர்கள்; அம்மூர்த்தியின் குஞ்சித சரணத்தை மறவாத உள்ளத்தினர்; தாம் இயற்றும் நூல்களின் இறுதியில் அச்சரணத்தை வாழ்த்தி நிறைவேற்றுவது அவர்களது வழக்கம். ஆதலின் ஸ்ரீ நடராஜமூர்த்தி விஷயமாகவுள்ள அக் கீர்த்தனம் அவர்கள் மனத்தை உருக்கியது. பாரதியார் பின்னும் சில கீர்த்தனங்களைப் பாடினர். பிள்ளையவர்கள் தம்மையே மறந்து அந்த இசைப் பாட்டுக்களில் ஈடுபட்டிருந்தார்கள்; பக்தி மிகுதி யினல் அவர்களுக்குக் கண்ணீர் வெளிப்பட்டது. உடனே எழுந்து வெளியே வந்தார்கள். பாரதியார் எழுந்து நின்றர். அவர்கள் பாரதியாருக்கு அஞ்சலி செய்தார்கள். பின்பு,

"கோமேவு திருத்தில்லை நடராசப் பெருமான்றுள்
  கூடி யுய்ந்த
பூமேவு பேரன்பர் திருநாளைப் போவார்தம்
  புனிதச் சீரைப்
பாமேவு பலவகைய விசைப்பாட்டா லினிமையுறப்
  பாடி யீந்தான்
ஏமேவு கோபால கிருட்டிணபா ரதியென்னும்
  இசைவல் லோனே"

என்னும் சிறப்புப்பாயிரப் பாடலொன்றை அன்புடன் பாடியளித் தார்கள்; அளித்துவிட்டு, பல நாளாக நீங்கள் விரும்பியபடி செய்ய இயலாததற்கு வருந்துகிறேன்; பரம சாம்பவர்களாகிய உங்களை இதுவரையில் அலைக்கழித்ததைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்று கூறினர்கள்.

உடனே பாரதியார், "எந்தக்காலத்தில் எது நிறைவேற வேண்டுமோ அந்தக்காலத்திலே தான் அது நிறைவேறும். தாங்கள் இப்பொழுதேனும் அளிக்கும்படி செய்த ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளை எண்ணிப் போற்றுகின்றேன்" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றுர்.

### வேதநாயகம் பிள்ளையின் பழக்கம்

பிரதாப முதலியார் சரித்திரம், நீதிநூல் முதலியவற்றை இயற்றியவராகிய வேதநாயகம் பிள்ளையென்பவர் சீகாழியில் முன்சீபாக இருந்து மாயூரத்துக்கு மாற்றப்பட்டு வந்தார். அவர் கிறிஸ்தவ மதத்தினராயினும் எல்லா மதத்தினரிடத்தும் அன்புடையவர்: மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்திற் சிலகாலம் பாடங் கேட்டவர்; அழகிய இனிய செய்யுட்களை எளியநடையில் இயற்றும் பழக்கமுடையவர்; தமிழில் கீர்த்தனங்களையும் இயற்றியிருக்கிருர்.

அவருக்கு இயல்பாகச் சங்கீதப்பயிற்சியில்லை. எனினும் யாரேனும் ஒருவர் ஒரு கீர்த்தனத்தைப் பாடக் கேட்டால் அந்த மெட்டை வைத்துக்கொண்டு புதிதாக ஒரு கீர்த்தனம் இயற்றிவிடுவார். அங்ஙனம் அவர் இயற்றிய கீர்த்தனங்கள் பல; அவற்றை அவர் கோர்ட்டில் உள்ள உத்தியோகஸ்தர்களிலும் வக்கீல்களிலும் சங்கீத ஞானமுள்ளவர்கள் தாமே மனனம் பண்ணி அன்புடன் பாடுவார்கள்; தங்கள் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுத்துப் பாடச் செய்வார்கள். இச்செயல்களாலும், அக்கீர்த்தனங்களின் எளிய நடை, தொடர்ந்த பொருட்சிறப்பு முதலிய அழகிய அமைப்புக்களாலும், அவை மாயூரத்திலும் அதைச் சார்ந்த இடங்களிலும் மிகுதியாக வழங்கலாயின.

வேதநாயகம் பிள்ளை சீகாழியிலிருந்தபோதே பாரதியாரைப் பற்றி அறிந்தவராதலின் மாயூரத்திற்கு வந்த பின்னர் இவரது பழக்கத்தை முயன்றுசெய்து கொண்டார்; இவர் இயற்றிய கீர்த்தனங்களை, அறிந்தவர்களால் அடிக்கடி சொல்லக்கேட்டு மகிழ்வார்; அவற்றைப் பின்பற்றித் தாம் இயற்றிய கீர்த்தனங்களை, இவரிடம் காட்டி, சங்கீத சம்பந்தமாக இவர் கூறும் யோசனைகளைக் கேட்டு அவற்றிற் கேற்ப அமைப்பார். இங்ஙனம் பழகி வந்ததால் இருவருக்கும் இருந்த அன்பு வளர்ச்சியுற்றது.

தாதுவருஷத்தில் நேர்ந்த கொடிய பஞ்சத்தால் ஜனங்கள் பலவகையான துன்பங்களை அடைந்தனர். அப்பொழுது வேத நாயகம் பிள்ளை தாமே பொருளுதவி செய்தும், பல பிரபுக்களிடம் சொல்லிப் பொருளுதவி செய்வித்தும் கஞ்சித்தொட்டிகளை அமைப்பித்து நாள்தோறும் பலபேர்களுக்குக் கஞ்சி வார்க்கச் செய்தார்; அதனால் பல ஏழைகள் இன்புற்றனர் இந்தத் தர்மச் செயலைக் கண்ட பாரதியார் உள்ளங்குளிர்ந்து வேதநாயகம் பிள்ளையின் மீது, ''நீயே புருஷமேரு'' எனத் தொடங்கும் ஒரு கீர்த்தனத்தைப் பாடினார். பாரதியார் இயற்றிய கீர்த்தனங்களுள் இவ்வொன்றே நரஸ்துதியாக உள்ளது. வேறு எந்தச் சமயத்திலும் யார்மீதும் பாடியதாகத் தெரியவில்லை.

### சில வித்துவான்களின் கூற்று

ஒரு சமயம் மாயூரத்தில் சில தர்க்க வியாகரண வித்துவான்கள் ஒரு பிரபுவின் வீட்டிலே கூடியிருந்தனர். வேறு சிலரும் அங்கே இருந்தனர். அப்பொழுது பாரதியாருடைய அன்பரொருவர், ''கோபாலகிருஷ்ண பாரதியாருடைய கீர்த்தனங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! அவருடைய ஞானம் ஆச்சரியகரமானது; சம்ஸ்கிருத நூல்களிலுள்ள விஷயங்கள் பல அவற்றில் உள்ளன'' என்று பாராட்டினார். அதைக்கேட்ட மேற்கூறிய வித்துவான்களுட் சிலர், ''அவருக்கு என்ன தெரியும்? காயகர்களுக்குப் பாஷா ஞானம் ஏது? சங்கீதம் அர்த்தமில்லாத சப்தஜாலந்தானே!'' என்று இழிவாகப் பேசினர். அப்பொழுது அங்கே இருந்த பாரதியாருடைய மாணாக்கராகிய இராமசாமி ஐயரென்பவர் அவர்களுடைய அறியாமையையும் பொருமையையும் உணர்ந்து நந்தனார் சரித்திரத்திலுள்ள,

''வாசியாலே மூலக்கனல் வீசியே சுழன்றுவரப்
பூசைபண்ணிப் பணிந்திடு மாசறக்குண் டலியைவிட்
டாட்டுமே - மனமூட்டுமே - மேலோட்டுமே - வழிகாட்டுமே''
''முப்பாழுந் தாண்டிவந்து அப்பாலே நின்றவர்க்கு
இப்பார்வை கிடையாது''
''குண்டலி சக்தியைக் கொண்டு
கிளம்பி மண்டலம் புகுந்து
சஞ்சரித்துக் கொண்டார்
குறையா அமிர்தமுண்டார்''

என்னும் கீர்த்தனப் பகுதிகளைச் சொல்லி, ''இவைகளெல்லாம்

உபயோகமற்றவைகளா? எங்கே இவைகளுக்கு அர்த்தம் சொல்லுங்கள் பார்ப்போம். உங்கள் வியாகரணத்தையும் தர்க்கத்தையும் கொண்டு இவற்றை அறிய முடியுமா?'' என்று கம்பீரமாகப் பேசினர். கேட்டவுடனே அவர்கள் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்து விட்டார்கள்.

### ஆறுமுக நாவலர் அன்பு

பாரதியார் ஒருமுறை சிதம்பரம் சென்றிருந்த காலத்தில் ஆலயத்திற் பாடிக் கொண்டிருக்கையில் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இவரைக் கவனித்தனர். அப்பொழுது அவர் இவருடைய கீர்த்தனங்களைக் கேட்டு அவை சிவபிரான் திருவருட்சிறப்பைப் பல வகையாக எடுத்துப் பாராட்டுவனவாக இருத்தலை யுணர்ந்து இன்புற்றுச் சென்ருர்; மறுநாள் ஆலயத்துக்கு வந்த காலத்தில் இவரைக்கண்டு தம்முடைய ஞாபகத்தின் அறிகுறியாக இருக்க வேண்டுமென்று பத்து ரூபாய் அளித்தனர்*

### வேறு சரித்திரங்கள்

நந்தனர் சரித்திரம் இயற்றப்பட்ட பிறகும் பாரதியார் அவ்வப்போது சிலசில கீர்த்தனங்களை இயற்றி வந்தார். நாகபட்டினத்திலுள்ள வைசியர்கள், ''எங்கள் மரபினராகிய நாயனர் ஒருவரது சரித்திரத்தை இயற்றியளிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டியபடியே இயற்பகை நாயனர் சரித்திரத்தை இவர் இயற்றினர். அதன் பிறகு சிதம்பரத்திலுள்ளார் சிலர் விரும்பியபடி திருநீலகண்ட நாயனர் சரித்திரத்தையும் இயற்றினர்.

இந்த இரண்டும் தமிழ்நாட்டில் நந்தனர் சரித்திரத்தைப்போல அதிகமாகப் பரவவில்லை. திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் இயற்பகை நாயனர் சரித்திரத்தை மிகவும் சிறப்பாகக் கதை பண்ணுவதுண்டு; வேறு பலரும் அவற்றைப் பிரசங்கம் செய்து வந்தார்கள்.

இவ்விரண்டு சரித்திரமும் அச்சிடப்படவில்லை. இவற்றைக் கதை பண்ணுவாரும் அரியராயினர். இவை முழு உருவத்தோடு இருக்கின்றனவோ இல்லையோ என்ற சந்தேகங்கூட இப்பொழுது

*இச் செய்தியைப் பாரதியாரே சொன்னதுண்டு.

உண்டாகிறது. முதியவர்களான சில சங்கீத வித்துவான்கள் இவ்விரண்டு சரித்திரங்களிலுமுள்ள சிலசில கீர்த்தனங்களை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். இவற்ருேடு பாரதியார் காரைக் காலம்மையார் சரித்திரத்தையும் இயற்றியதாகச் சிலர் கூறு கின்றனர்.

## நந்தனுர் சரித்திரத்தின் பிந்திய பதிப்புக்கள்

நந்தனுர் சரித்திரத்தின் பல பதிப்புக்கள் பலவகை உருவங் களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. துந்துபி வருஷம் ஆவணி மாதம் இரண்டாம் பதிப்பு வெளியாயிற்று அதன் முகப்புப் பக்கத்தில்,

"உ பெரிய புராணம் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒரு வராகிய நந்தனுரென்னும் திருநாளைப்போவார் திவ்ய சரித்திரக் கீர்த்தனையும் சிதம்பரக்கும்மியும். இவை சங்கீத சாஹித்ய வித்வாம்சராகிய ஆனை தாண்டாபுரம் - பாரதி கோபாலகிருஷ்ண யரால் நுதனமாக வியற்றியதைப் புதுவையிலிருக்கும் சேலம் வையாபுரி செட்டியார் குமாரராகிய காயல் வெல்ல வியாபாரம் வீரப்ப செட்டியார் அச்சிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி, திருவையாறு சாமிநாததேசிகரால் முன் ரிஜிஸ்டர் செய்தச்சிட்டது போல் இரண்டாமுறை விவேகவிளக்க அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன. துந்துபி வருஷம் ஆவணி மாதம்" என்பவை காணப்படுகின்றன. அப்பதிப்பிற் காணப்படாத பல தனிக் கீர்த்தனங்கள் பிற்காலப் பதிப்புக்களிலே சேர்த்து அச்சிடப் பட்டுள்ளன.

## எனது முதற் காட்சி

என் தந்தையாராகிய ஸ்ரீ வேங்கடசுப்பையரவர்கள் சிறந்த சங்கீத வித்துவானுதலின் பாரதியாருடைய பழக்கம் பல நாளாக அவருக்கு இருந்தது. என் ஐந்தாம் பிராயம் முதற்கொண்டே நந்த னுர் சரித்திரக் கீர்த்தனங்களை நான் அறிந்து மனனம் செய்து பாடு வதுண்டு. அச்சரித்திரத்திற்கு நாடெங்கும் இருந்த மதிப்பினை அறிந்த நான் கோபாலகிருஷ்ண பாரதியார் ஒரு மகானென்றும் அவரைத் தரிசிக்க வேண்டுமென்றும் எண்ணினேன். பாரதியார் மாயூரத்திலேயே இருந்து வருவதாக எந்தையார் கூறியிருந்தனர். ஆதலின் மாயூரத்திற்குச் சென்ருல் இவரைத் தரிசித்துப் பழகலா மென்னும் ஆவலுடையவனுனேன்.

பிரஜோத்பத்தி வருஷம் சித்திரை மாதம் (1871 ஏப்ரலில்), முதன்முதலாக ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரைத் தரிசித்துப் பழகும் பேறு எனக்கு வாய்த்தது. அக்காலத்தில் எனக்குப் பிராயம் பதினேழு.

என் தந்தையாரவர்கள் மாயூரத்திலிருந்த மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் என்னை ஒப்பித்துத் தமிழ் கற்பிக்கச் செய்ய எண்ணினர். அதன்பொருட்டு என்னை அழைத்துக் கொண்டு மாயூரம் சென்றனர்.*

என் தகப்பனுரும் நானும் மாயூரத்தில் மகாதானபுர அக்கிரகாரத்தில் ஓரன்பருடைய வீட்டுத்திண்ணையில் இருந்து பேசிக் கொண்டிருந்தோம். பிற்பகல் 3 மணி இருக்கும். வீதி வழியே ஒருவர் நடந்துவந்தார். அவரைக்கண்ட என் தகப்பனர் எழுந்து, "பாரதியாரவர்களா?" என்று கேட்கவே, வீதியிற் சென்ற அவர், "யார் அது? வேங்கடசுப்பையரவர்களா? ஏது இவ்வளவு தூரம்?" என்று சொல்லிக்கொண்டே நாங்கள் இருவரும் இருந்த திண்ணைக்கு வந்து அமர்ந்தார். உடனே என்னுடைய தந்தையாரின் கட்டளைப் படி அவரை நான் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன்.

வந்தவர் கோபாலகிருஷ்ண பாரதியாரென்பதை யறிந்த நான் மிக்க வியப்பை அடைந்தேன். அவருடைய புகழையும் நந்தனர் சரித்திரத்தின் அழகையும் உணர்ந்து ஈடுபட்டிருந்த என் இளைய உள்ளத்துக்குப் பாரதியார் ஓர் அழகிய உருவத்தையுடையவராக இருப்பாரென்ற காரண மில்லாத தோற்றமொன்று இருந்துவந்தது. நான் கண்ட காட்சியோ அதற்கு நேர்விரோதமாக இருந்தது.

அகலமான புறங்கால்களுக்குமேல் சூம்பின கால்கள்; பருத்த முழங்கால்கள்; தடித்த இடை; முழங்காலுக்கு மேல் வஸ்திரம்; கூனல் முதுகு; இறுகின கழுத்து; பெருத்த முண்டொன்று முன் வந்திருக்கும் குரல்வளை; அந்தக் கழுத்தில் ஏக (ஒற்றை) ருத்திராட்சம் மார்பில் வில்வ ஓட்டு வில்லையோடுள்ள ருத்திராட்ச கண்டி; பூனைக்கண்; குறுக்கே நீண்ட தலை; அதன்மேல் நாணற் பூவைப்போலப் பறந்துகொண்டிருக்கும் பத்துமயிர்; இந்தக்கோலத் தோடு பாரதியார் இருப்பாரென்று நான் கனவிலும் நினைத்த தில்லை. அத்தகைய உருவத்தினுல் இவருடைய சங்கீதத்துக்கோ

*இவ்வரலாறுகளை ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகத்திற் காணலாம்.

சிவபக்தி வைராக்கியத்துக்கோ இழுக்கு ஒரு சிறிதும் உண்டாக வில்லை. கோணலையுடைய வீணையிலிருந்தல்லவா இனிய இசை எழுகின்றது? ஜடமாகிற அதற்கே அவ்வளவு சக்தி இருக்கும் போது, ஈசுவரசக்தியினால் உண்டாகிய *சாரீர வீணைக்கு எவ் வளவு கோணல் இருந்தால்தான் என்ன?

பாரதியார் கையில் மூங்கிற் கம்பொன்றை ஊன்றிக்கொண்டு நடந்துவந்தார். அவருக்கு அக்காலத்தில் பிராயம் சற்றேறக்குறைய எழுபதுக்குமேல் இருக்கலாம். ஆயினும் பிரமசரியத்தின் சக்தி அவருடைய பிராயத்தை அடக்கிக்காட்டியது. அறுபதுக்குள்ளே தான் இருக்குமென்று தோற்றியது.

என் தந்தையாரும் பாரதியாரும் ஒருவரையொருவர் க்ஷேம லாபங்களை விசாரித்துக்கொண்டார்கள்.

பாரதியார்: நீங்கள் இங்கே வந்த விசேஷம் என்ன? இந்தப் பையன் யார்?

தகப்பனார்: இவன் என்னுடைய குமாரன்; தமிழ் படித்து வருகிறான். இங்கேயுள்ள மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களிடம் தமிழ் படிக்கச் செய்யலாமென்று எண்ணி அவர் களிடம் ஒப்பிக்க வந்திருக்கிறேன்.

பாரதியார்: சங்கீதத்தில் அப்பியாசம் பண்ணி வைக்க வில்லையா? கனம் கிருஷ்ணையருடைய சிஷ்ய பரம்பரை வீணாகப் போகாமல் விளங்கவேண்டாமா?

தகப்பனார்; சங்கீதமும் தெரியும். என்னிடமும் என் தம்பி சின்னசாமியிடமும் அப்பியாசம் செய்திருக்கிறான். பல உருப் படிகள் பாடம் உண்டு. இங்கே இருந்தால் உங்களிடமும் சில சமயங்களில் வந்து சொல்லிக்கொள்ளலாமல்லவா?

பாரதியார்: பிள்ளையவர்கள் மிகச் சிறந்த வித்துவானே. அவரைப்போன்ற கவிதா சாமர்த்தியமும் பாடஞ் சொல்லும் திறமையும், நற்குணமும், உபகார சிந்தையும் உள்ளவர்களைப் பார்க்கமுடியாது. ஆனாலும், அவர் சங்கீத விரோதியல்லவா?

---

*உடம்பைச் சாரீர வீணையென்பார் இசை நூலார்.

அவருக்கும் சங்கீதத்துக்கும் வெகுதூரம். இருக்கட்டும், இவனுக்குக் கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்கள் பாடமுண்டா? *''குஸுமகுந்த ளாம்பிகையே'' என்ற கீர்த்தனம் தெரியுமா?

உடனே என் தகப்பனுரது கட்டளையின்மேல் அந்தக் கீர்த்தனத்தையும் வேறு சில கீர்த்தனங்களையும் பாடினேன்; நந்தனுர் சரித்திரத்திலுள்ள சில கீர்த்தனங்களையும் பாடினேன். அவர் விரும்பியபடி என் தகப்பனுரும் பல கீர்த்தனங்களைப் பாடிக் காட்டினுர். நானும் உடன் பாடினேன்.

கேட்ட பாரதியார் மகிழ்ந்து, ''இவனுக்குச் சாரீரம் இருக்கிறது. உங்களுடைய வழிகளை நன்ருக அப்பியாசம் பண்ணியிருக்கிருன். பழக்கத்தை நிறுத்தாமல் மேலும் மேலும் விருத்தி பண்ணிக்கொண்டு வந்தால் நல்லது''என்ருர்.

தகப்பனுர்: தினந்தோறும் விடியற் காலையில் தங்களிடம் வந்து சிக்ஷை சொல்லிக்கொள்ளும்படி செய்விக்கிறேன். தாங்கள் கிருபை வைத்துச் சொல்லி வைக்கவேண்டும். இவனுக்குத் தெரிந்த கீர்த்தனங்களையும் கேட்டு ஆசீர்வாதம் செய்யவேண்டும். அதனுல் இதுவரையில் தெரிந்து கொண்டவற்றை மறவாமல் இருக்க முடியும். தாங்கள் இருக்கும்போது இவனுக்கு என்ன குறை?

பாரதியார்: ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் கிருபை பூர்ணமாக இருக்குமென்று நம்புகிறேன். இவன் என்னிடம் அப்பியாசம் பண்ணிவந்தால் எனக்கும் மிகவும் திருப்தியாக இருக்கும். கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்களைச் சுத்தமாகப் பாடும்படி சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள்.

## நான் சங்கீத சிக்ஷை தொடங்கி நிறுத்தியது

பிறகு பாரதியார் தம் இருப்பிடம் சென்ருர். நான் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்கத் தொடங்கினேன். தினந்தோறும் விடியற்காலையில் எழுந்து பாரதியாரிடம் சென்று இசைப்பயிற்சி செய்துவந்தேன். பாரதியார் எனக்குப் பாடமாயிருந்த கீர்த்தனங்களைக் கேட்டுத் திருத்துவார்; கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்களை

---

*இதனைக் கனம் கிருஷ்ணையர் சரித்திரத்தின்பின் சேர்த்துள்ள கீர்த்தனத் தொகுதியிற் காணலாம்.

அடிக்கடி பாடச் செய்து கேட்டு இன்புற்று உருகுவார்; அவற்றின் மெட்டைப் பாராட்டுவார். பாரதியார் இயற்றிய கீர்த்தனங்களையும் வேறு பல பழைய உருப்படிகளையும் அக்காலத்தில் நான் கற்றுக் கொண்டேன். மாலைக் காலங்களில் ஓய்விருந்தால் இவரோடு காவேரியாற்றுக்குச் சென்று சந்தியாவந்தனம் செய்துவருவேன்.

நாள்தோறும் நான் பாரதியாரிடம் சென்று பயின்று வருவது பிள்ளையவர்களுக்குத் தெரியாது. ஒருநாள் அப்புலவர் பெருமானும் பாரதியாரும் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது பிள்ளையவர்கள் பாரதியாரை நோக்கி, ''என்னிடம் ஒரு பிராமணச் சிறுவர் பாடங்கேட்கிறார்; செய்யுட்களை இசையோடு படிக்கின்றார்; காதுக்கு இனிமையாக இருக்கிறது. நீங்கள் கேட்டால் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும்'' என்றார்கள்.

பாரதியார்: எனக்கு அவனைத் தெரியும். அவனுடைய தகப்பனுருக்கும் எனக்கும் பலநாளாகப் பழக்கம் உண்டு. அவன் தினந் தோறும் என்னிடமும் வந்து சங்கீத அப்பியாசம் செய்துவருகிறான். சாரீர சம்பத்து இருக்கிறது. தங்களிடம் படித்து வருவதாக அவன் சொன்னான். அவனை நன்றாகப் படிப்பிக்க வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிள்ளையவர்கள் இதனைக் கேட்டபிறகு திடீரென்று பாரதி யாரிடம் விடைபெற்று நேரே தம் வீட்டுக்குவந்தார். அங்கே அன்பர்களுடன் பாடங்களைச் சிந்தனை செய்து கொண்டிருந்த நான் அவர்களைக் கண்டதும் எழுந்து நின்றேன்; அவர்கள் என் பால் வந்து, நீர் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசைப்பயிற்சி செய்வதுண்டோ?'' என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் அதுகாறும் அச்செய்தியை அறிவியாததை நினைந்து அஞ்சினேன்; மெல்ல, ''ஆம்; அவர்களிடம் சென்று அப்பியாசம் செய்யும்படி என் தகப்பனார் கட்டளையிட்டார்கள். இதுவரையில் பயின்ற வற்றை மறவாமல் இருக்கும்பொருட்டு அங்ஙனம் செய்துவரு கிறேன்'' என்றேன். அக்கவிஞர்பிரான், ''நீர் அங்ஙனம் செய்து வருவதை நான் இதுவரையில் அறிந்துகொள்ளவில்லை: இன்று தான் பாரதியார் சொன்னார்: இசையில் அதிகப் பயிற்சியும் ஊக்கமும் வைத்துக்கொண்டால் தமிழ் இலக்கிய இலக்கண நூல் களில் நன்றாகப் புத்திசெல்லாது. நூல்களின் கருத்தை நுணுகி ஆராய்ந்து படிக்கும் வழக்கத்தை அது தடுத்துவிடும்'' என்றார்கள்.

அவர்களுடைய நோக்கத்தை அறிந்து மறுநாள்முதல் பாரதியாரிடம் இசைபயில்வதை நிறுத்திக் கொண்டேன். வேறொன்றும் சொல்லாமல், ''இங்கே வருவதற்கு ஓய்வு இல்லை: படித்தவற்றைச் சிந்திக்க வேண்டும்'' என்று இவரிடம் சொல்லிவிட்டேன். அப்பால், நேர்ந்த காலங்களில் இடையிடையே மாயூரத்திற்குச் செல்லும் பொழுது இவரைப் பார்த்து இவருடைய ஆசீர்வாதம் பெற்று வருவேன்.

பிள்ளையவர்கள் என்னுடைய இசைப்பயிற்சியைப் பற்றிச் சொன்னபோது பாரதியார், ''அவர் சங்கீத விரோதி'' என்று கூறியதன் உண்மை புலப்பட்டது. அதனால் எனக்குப் பிள்ளையவர்களிடத்தில் சிறிதேனும் வெறுப்பு உண்டாகவில்லை. சங்கீதத்தில் இளமை தொடங்கியே இயல்பாகப் பிரியமிருந்தும், அக்காலம் முதற்கொண்டு என்னுடைய முக்கியமான நோக்கமும் முயற்சியும் தமிழாகவே இருந்தமையினால், அதன் பொருட்டு எதையும் தியாகம் செய்யும் இயல்பை மேற்கொண்டேன். இல்லையாயின், அந்தப் புலவர் சிகாமணியின் அன்புக்குப் பாத்திரமாகித் தமிழ்த்தாயின் திருத்தொண்டைச் செய்து இன்புற்றுவரும் நிலைமை மாறியிருக்கலாமல்லவா?

பிற்காலத்தில் பிள்ளையவர்கள் அயர்ச்சியுடன் இருக்கும் காலங்களில் தமிழ்ச் செய்யுட்களையும் கீர்த்தனங்களையும் என்னை இசையுடன் பாடச்செய்து கேட்பார்கள். சில சமயங்களில் நந்தனார் சரித்திரத்திலுள்ள கீர்த்தனங்களையும் நான் பாடுவதுண்டு. அவற்றைக்கேட்டு அத்தமிழ்ப் பெரியார் அவற்றிற் பொதிந்துள்ள சிவ பக்தியுணர்ச்சியைப் பாராட்டுவார்கள்.

## அன்பர்கள்

மகாவைத்தியநாதையரும் அவருடைய தமையனாராகிய இராமசாமி ஐயரும் மாயூரம் வருங்காலங்களில் பாரதியாரிடம் வந்து வணங்கிப் பேசியிருந்து மகிழ்வார்கள். பிற்காலத்தில் பாரதியார் மாயூரத்தில் தம் மாணாக்கராகிய இராமசாமி ஐயரென்பவர் வீட்டிலே இருந்துவந்தார். மாயூரத்திற்கு வந்தால் மகா வைத்திய நாதையரும் அங்கேயே தங்குவார். அச்சமயங்களில் அவர் பாரதியாருடைய கீர்த்தனங்களைக் கேட்டு மனனம் செய்து கொள்வார். அவருக்கு இவருடைய கீர்த்தனங்களிற் பல பாடம் உண்டு.

ஒரு சமயம், மகாவைத்தியநாதையருடைய மந்த்ரோபதேச குருவும், அதிவர்ணாசிரமியும், ஸூதஸம்ஹிதையை யாவருடைய மனமும் உருகும்படி பிரசங்கம் செய்ய வல்லவரும், சிவஸ்தலத் திருப்பணி செய்வதில் ஈடுபட்டவருமாகிய கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகளென்னும் பெரியார் மாயூரம் வந்திருந்தார். பாரதியார் அவருடைய வரவையறிந்து சென்று தரிசனம் செய்தனர். அவர் பாரதியாருடைய கீர்த்தனங்களைக் கேட்டு உருகுபவர்: அவற்றிலுள்ள பொருளமைதியால் இவருடைய பக்தி ஞான வைராக்கிய நிலைகளை உணர்ந்தவராதலின் இவரை, "சிவபக்தி யென்னும் பயிர் தமிழ்நாடு முழுவதும் தழைத்தோங்கும்படி உங்களுடைய கீர்த்தனங்களாகிய மழை செய்கின்றது. உங்கள் ஜன்மமே ஜன்மம். சிவபக்தர்களுடைய பெருமையை அறிந்து உருகுவது அருமை; பிறரையும் அறியப் பண்ணுவது அதனிலும் அருமை; அந்த அருமையான காரியத்தை நீங்கள் செய்து வருகிறீர்கள்" என்று பாராட்டி இவர் முதுகைத் தடவிக்கொடுத்தனர். பாரதியார், "எல்லாம் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவருளே. தாங்கள் லோகோபகாரமாகச் செய்து வரும் அருட்செயல்களால் பயனடைந்துவரும் நாங்கள் தங்களைப் பின்பற்றி நடப்பதுதானே முறை" என்று பணிவாக விடை பகர்ந்தார். பிறகு ஸ்வாமிகள் தாம் அச்சிட்ட வடமொழி வேதாந்த சாஸ்திரங்களாகிய பிரம கீதை, அமிர்தசாகரமென்னும் புஸ்தகங்களை இவருக்கு வழங்கினர்.

பாரதியாரை நான் பார்த்த காலத்தில் அவருடைய சாரீரம் கம்மலாக அருந்தது. இவர் பல காலத்துக்கு முன்பிருந்தே பிடில் வாத்தியத்தைப் பழக்கம் செய்து வந்ததுண்டு: முதுமைப்பிராயத்தில் தனியே இருக்கும் பொழுது அதை வாசித்துப் பொழுது போக்கி மகிழ்ந்து இன்புற்றிருப்பார்.

### சுப்பிரமணிய தேசிகர் பழக்கம்

திருவாவடுதுறை யாதீனத்தில் 16ஆம் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப் பாரதியாரிடம் மிக்க அன்பு உண்டு. அவருடைய கல்வியறிவையும் சங்கீத அபிமானத்தையும் தர்மசிந்தனையையும் அறிந்த பாரதியாருக்கும் அவர்பால் மதிப்பு இருந்தது. சுப்பிரமணியதேசிகர் மாயூரம் வந்த காலங்களில் இவர் அவரைச் சென்று காண்பார். அவர் மிக்க பிரியத்தோடு இவருடன் சல்லாபம் செய்து மகிழ்வார்.

இவர் கதைபண்ணுவதனுல் உண்டான வருவாயைச் சேமித்து வைத்திருந்தார். ஆடம்பரமில்லாத வாழ்வுடையவராதலின் இவருக்குப் பொருட்செலவு மிகவும் சுருக்கமாகவே இருக்கும். ஆதலின் இவருடைய முதியபிராயத்தில் மூவாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட தொகை இவரிடம் இருந்தது. அதில் தமது செலவுக்கு ஒரு சிறு தொகையை வைத்துக் கொண்டு, தம்மைப் போற்றிப் பாதுகாத்த இராமசாமி ஐயருக்கும் பிறருக்கும் உபகார நிதியாக ஒரு தொகையை வழங்கினுர். எஞ்சிய மூவாயிர ரூபாயைக் கொண்டு ஏதேனும் ஒரு சிவதர்மம் செய்ய எண்ணினுர். அத் தர்மத்தைச் செய்யும் கடமையை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் ஒப் படைத்தால் அது முட்டின்றி நடைபெறுமென்பது இவரது நம்பிக்கை. ஆதலின் ஒரு நாள் இவர் திருவாவடுதுறைக்குப் புறப் பட்டார். அப்பொழுது இவருடன் மாயூரத்திலேயே ஸ்தலவாஸம் செய்துவந்த சஞ்சீவி சிவராமையர் என்பவர் சென்ருர்.

சஞ்சீவி சிவராமையர் என்பவர் தஞ்சாவூரிலே பழைய சங்கீத வித்துவான்களின் சமூகத்திலுள்ள ஒருவர். அவருக்கு ஸுப்பராயர் என்ற ஒரு குமாரர் இருந்தார்: அவர் மகாவைத்தியநாதையர் பாடும் காலங்களில் உடன் இருந்து பிடில் வாசித்து வந்தவர்; அகாலத்தில் இறந்து போய்விட்டார். அதனுல் புத்திர சோகத்தை யடைந்த சிவராமையர் தம்முடைய மனச்சாந்தியை உத்தேசித்து, தஞ்சையை நீங்கி மாயூரத்தையடைந்து சிவதரிசனம் செய்து கொண்டு காலங்கழித்து வந்தார். அக்காலத்தில் பாரதியாருடைய பழக்கம் அவருக்கு ஆறுதலை அளித்தது.

பாரதியாரும் சிவராமையரும் திருவாவடுதுறை சேர்ந்தனர். பாரதியார் சுப்பிரமணிய தேசிகரிடம் தம் உள்ளக்கருத்தை வெளி யிட்டார். தம்மிடம் இருந்த ரூபாய் மூவாயிரத்தையும் கொடுத்து மாயூரம் சிவாலயத்தில் தாம் யோகம் செய்யும் இடத்திலெழுந்தருளி யுள்ள ஸ்ரீ அகஸ்தீசுவரருக்கு நாள்தோறும் அர்த்தசாமத்தில் தயிரன்னமாவது, சம்பா அன்னமாவது நிவேதனம்செய்து அந்த அன்னத்தைத் தேங்காய்த் துவையலுடன் தேசாந்தரிகள் ஆறு பேர்களுக்குக் கொடுக்கும்படி செய்விக்கவேண்டுமென்று விரும்பி னுர். அன்றியும் சிதம்பரத்திலும் சில கட்டளைகளை நடத்திவர வேண்டுமென்று கூறினுர். சுப்பிரமணிய தேசிகர் மிக்க மகிழ்ச்சி யுடன் அத்தொகையை ஏற்றுக்கொண்டு இவருடைய கருத்தின் படியே குறைவின்றி நடத்தி வந்தார்.

பாரதியார் பார்க்கவந்த காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவி லிருந்து ஒரு பெரிய பிரபு மடத்திற்கு வந்திருந்தார்; அப்பிரபு சங்கீத அபிமானம் உடையவராதலின் அவரை மகிழ்விக்கவிரும்பிய சுப்பிரமணிய தேசிகர் பல சங்கீத வித்துவான்களை வருவித்திருந் தார். அவர்களுள், சிவகங்கைப் பெரிய வைத்தியநாதையருடைய பக்கவாத்தியக்காரர்களாக இருந்த சாத்தனூர்ப் பஞ்சுவையர், பிடில் வாத்தியக்காரராகிய கூத்தனூர்ச் சாமுவையர், கடவாத்தி யத்தில் வல்ல போலகம் சிதம்பரையர், கிஞ்சிரா ராதாகிருஷ்ணையர் என்பவர்கள் முக்கியமானவர்கள். சுப்பிரமணிய தேசிகருடைய ஸம்ஸ்கிருத வித்யாகுருவும், சங்கீத வித்யாகுருவும், சங்கீதத்தில் வல்லவருமாகிய திருவாலங்காட்டுத் தியாகராஜ சாஸ்திரிகளும் இருந்தார்.

பாரதியாருக்கும் உவப்பாக இருக்குமென்றெண்ணிய சுப்பிர மணிய தேசிகர் மேற்கூறிய வித்துவான்களைக் கொண்டு ஒருநாள் சங்கீத வினிகை நடைபெறச் செய்தார். அப்பொழுது தியாகராஜ சாஸ்திரிகள் பாடினார். மற்ற வாத்தியக்காரர்களாகிய வித்துவான் கள் தங்கள் தங்கள் திறமையைக்காட்டினார்கள். அன்று சங் கீதத்தைக் கேட்ட பாரதியார் மகிழ்ந்து, அத்தகைய வித்துவான் களின் அருமையை யறிந்து ஆதரித்து வந்த சுப்பிரமணிய தேசிகரின் இயல்பைப் பாராட்டினார். வினிகை முடிந்தபிறகு, அதுகாறும் அதன் இனிமையில் ஈடுபட்டிருந்த சிவராமையர், "தஞ்சாவூரிலிருந்து வந்த பிறகு நல்ல சங்கீதத்தைக் கேட்கவே இல்லை; இன்றுதான் சுத்தமான சங்கீதத்தையும் சுத்தமான வாத்தியங்களையும் கேட் டேன். இத்தகைய சங்கீதத்தை இக்காலத்தில் இங்கேதான் கேட்க முடியும்; வேறு எங்கும் கேட்க இயலாது" என்று சொல்லி மகிழ்ந்தார்.

பிறகு தம் விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சுப்பிரமணிய தேசிகர் ஏற்றுக்கொண்டதனால் பாரதியார் தமக்குண்டான நன்றியறிவை வெளிப்படுத்தினார்; அப்பால் விடைபெற்று இவர் சிவராமையருடன் மாயூரம் வந்து சேர்ந்தார்.

### இந்துஸ்தானி மார்க்கம்

ஒருநாள் மாயூரத்தில் நான் பாரதியாருடன் பேசிக் கொண் டிருந்தேன். அப்பொழுது ஒருவர் இவரைப் பார்க்க வந்தார். சில நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு, வந்தவர் இவருடைய விருப் பத்தின்படி சில கீர்த்தனங்களைப் பாடினார்; அவற்றை நான்

முன்பு கேட்டிராமையால் பாரதியாரை நோக்கி, "இவை யாருடைய கீர்த்தனங்கள்?" என்று கேட்டேன். பாரதியார், "இவைகளிற் சில என்னுடைய சங்கீத குருவாகிய ஸ்ரீ ராமதாஸ் அவர்கள் இயற்றியவை; மற்றவை அவர்கள் பாடிவந்த உருப்படிகள். இவைகளை இவர் அவர்களிடத்தில் கற்றுக்கொண்டவர் அவர்களுடைய சிஷ்யர்களுள் இவரும் ஒருவர். கும்பகோணத்தில் தமிழ் வக்கீலாக இருக்கிருர்" என்று கூறிவிட்டு, ராமதாஸிடம் தாம் சங்கீதப்பயிற்சி செய்ததைப்பற்றி விரிவாக என்னிடம் கூறினர்.

பிறகு அந்த வக்கீல் சில ராகங்களைப் பாடினுர். அவை நான் அதுவரையிற் கேட்டிராத முறையில் இருந்தன. பின்பு சாவேரி ராகம் பாடும்படி அவரை நான் கேட்டுக் கொள்ள அவர் பாடினுர். எனக்கு அது வேறு ராகம்போலவே தோற்றியது. "இது வேறு ராகம் போல இருக்கிறதே; இவர் பாடிய கீர்த்தனங்களும் ராகங்களும் புது முறையாகத் தோற்றுகின்றனவே!" என்று பாரதியாரைக் கேட்டேன். "உமக்குக் கர்நாடக பாணியிற் கேட்ட வழக்கமட்டும் இருக்கிறது; அதனுல்தான் இவை நுதனமாகத் தோற்றுகின்றன. இவர் பாடிய ராகத்தைக் கர்நாடக ரீதியிற் பாடினுல் தெளிவாக உமக்குப் புலப்படும். இந்த நாட்டிற்கு இந்துஸ்தானி மார்க்கம் புதியது. ஸ்ரீ ராமதாஸ் அவர்களே அந்த மார்க்கத்தை இங்கே விருத்தி செய்தார்கள். என்னுடைய நந்தனுர் சரித்திரத்திலும் இப்படிப்பட்ட ராகவழிகளில் கீர்த்தனங்களை இயற்றி அமைத்திருக்கிறேன்" என்றுர்.

நந்தனுர் சரித்திரத்தில் இந்துஸ்தானி மார்க்கத்திலுள்ள கீர்த்தனங்களையும் பாரதியார் சேர்த்திருப்பது ஒரு புதிய அமைப்பென்று பின்பு எனக்கு விளக்கமாயிற்று.

## முதுமைப் பருவம்

பாரதியாருடைய முதுமைப் பருவத்தில் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்கு நேரவில்லை. ஆயினும் எப்பொழுதேனும் சந்திக்கும்போது அன்புடன் க்ஷேமத்தைப் பற்றி இவர் என்னை விசாரிப்பார். கும்பகோணத்திற்கு நான் சென்ற பிறகும் இவர் மாயூரத்தில் இருந்துவந்தார்.

இவர் தொண்ணூற்றைந்து பிராயம் வரையில் வாழ்ந்து வந்ததாக இவருடைய மாணுக்கர்களில் ஒருவராகிய சிதம்பரம் பிருஹ்மஸ்ரீ இராஜரத்தின தீக்ஷிதரவர்கள் சொன்னர்கள்; சிலர் அவ்வளவில்லையென்று கூறுவதும் உண்டு. இவருடைய பிரமசரிய விரதமே இவரது தீர்க்காயுளுக்குக் காரணமாகும். இவர் சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்த காலம் ஒரு சிவராத்திரி என்பர். சிவயோகச் செல்வராகிய இவருக்கு அத்தகைய வியோகம் நேர்ந்தது பொருத்தமுடையதேயாகும். இறைவனுடைய புகழை இசையிற் கரைத்துத் தமிழ் நாட்டிற் புகட்டிய இம்மகானுடைய பிறப்பும் வாழ்க்கையும் தேகவியோகமும் சிவபிரானுடைய தொடர்புடையனவாகவே இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

## இயல்புகள்

பாரதியார் எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவர். ஹாஸ்யச் சுவை இவருடைய பேச்சில் நிரம்பியிருக்கும். தம்மோடு பழகுபவர்களிடம் வேடிக்கையாக இவர் பேசும் போது இடையிடையே பழமொழிகளும் உபமானங்களும் விரவி வரும். நொடி பேசுவதில் இவர் மிகவும் சமர்த்தர்.

ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்லச் சொல்லி அந்த வார்த்தையை வைத்துக்கொண்டு ஒரு புராணக்கதையைக் ஆரம்பித்து முடிப்பார். ஒரு சமயம், கனைத்தானென்று நான் சொன்னேன். உடனே, ''யமன் கனைத்தான். எதற்குத் தெரியுமா? பரீக்ஷித்து மகாராஜன் தனக்கு இன்ன நாளில் மரணம் நேருமென்பதையறிந்து பெரிய பாதுகாப்பில் இருந்தான். அப்பொழுது அதனை யறிந்த யமன், 'நமக்கு, இவன் தப்பிப் போய்விடுவானு? பார்ப்போம்' என்று கனைத்தான்'' என்று சொல்லி அந்த வரலாற்றை விரிவாகவும் ரஸமாகவும் சொல்லி முடித்தார். இவ்வாறு நான் பல கதைகளை இவரிடம் கேட்டிருக்கிறேன்.

இவருடைய கற்பனுசக்தி நந்தனர் சரித்திரத்தில் வளர்ச்சியுற்றிருப்பதை முன்பு ஒருவாறு எடுத்துக் காட்டினேன். இவருடைய மற்ற இயல்புகளும் இவருடைய கீர்த்தனங்களிற் பிரதிபலிக்கின்றன.

## நந்தனர் சரித்திர ஆராய்ச்சி

பாரதியார் நந்தனர் சரித்திரக் கீர்த்தனத்தையாவரும் கதை பண்ணும் முறையில் அமைத்திருக்கிருர். அதற்கேற்றவாறு இடை

யிடையே கதை பண்ணுவோர் கூற்றுகச் சில வசனப் பகுதிகளை யும் சேர்த்திருக்கிறுர். நந்தனுர் முதலியோர் கூற்றுகச் சில வசனப் பகுதிகளையும் சேர்த்திருக்கிறுர். நந்தனுர் முதலியோர் கூற்றுக்களாக அமைத்த ஏசல், வாக்குவாதம் முதலியன இச் சரித்திரத்திற் கண்ட புது அமைப்புக்கள்.

நந்தனுர் சரித்திரத்தை இயற்றும் பொருட்டு இவர் பெரிய புராணத்தையும் உபமன்யு பக்த விலாசத்தையும் படித்து அவற்றி லுள்ள செய்திகளை மனத்திற்கொண்டு மேலே கற்பனை செய்திருக் கின்றுர். ஸ்காந்த புராணம் முதலிய நூல்களில் உள்ள பல உண்மைகள் இவருடைய கீர்த்தனைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இது பாரதியாரே நந்தனுர் சரித்திரத்தின் இடையிடையே சேர்த் தமைத்துள்ள வசன பாகங்களாகிய,

''இவ்வுலகில் பெரிதாகிய வேத சாஸ்திரங்களுக்குள்ளே மிகவும் சாரமாகிய பரமசிவ பக்தியை உண்டுபண்ணுகிற பக்த விலாசத்தை உபமன்யு பகவானுனவர் அநேகம் ரிஷிகள் கேட்கச் சொல்லு கிறுர். பெரிய புராணமென்று சொல்லப்பட்டநூல் சேக்கிழார் சுவாமிகளாலே செய்யப்பட்டது. ஸ்காந்த புராணத்திலும், பின்னும் அநேக புராணங்களிலும் சொல்லப்பட்ட பக்தி மார்க்கங்களாகிற கடலிலே நீரைக் கையாலள்ளிக் குடித்ததுபோலச் சில கீர்த்தனங் களினுலும் விருத்தங்களினுலும் சிவபக்தர்கள் சரித்திரங்களைக் கொண்டாடுவதுபோல உளறினேனென்று சிதம்பர கோபால கிருஷ்ணயன்! பெரியோர் அடிவணங்கி, ஆனந்தம் பெருகிச் சொல்லிய திருநாளைப் போவார் சரித்திரத்தை யாவரும் கேட்கும்படி சிரம்வணங்கி வினுவினேன்'' என்பதனுலும்,

''சைவ புராணமாகிய பெரிய புராணத்தில் திருநாளைப் போவார் நாயனுரென்னும் இவர் பெயர் சேக்கிழார் சுவாமிகள் சொல்லியிருப்பதால் இடையில் நந்தமாமுனி யென்று வழங்குகின்ற நாளைப் போவார் தில்லை மூவாயிர முனிவர்களோடே கூடப் பொன்னம்பலம் வந்தார். அதற்கப்பால் அவரைக் கண்ட பேர்கள் இல்லையென்று பெரிய புராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள் சொன்னது. அந்தத் திருநாளைப் போவாரென்னு முனியானவர் புரட்டாசி மாதம் உரோகிணி நட்சத்திரத்தில் கனக சபையில் வந்து கற்பூர ஜோதியைப் போல் தோன்றிச் சிவ சாயுஜ்யத்தை யடைந்தாரென்று உபமன்யு மகரிஷி பண்ணிய பக்த விலாசத் திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது''

என்பதனாலும் தெரிகின்றது. பெரிய புராணச் செய்யுட்களை இச் சரித்திரத்தின் இடையிடையே காணலாம்.

இவருக்கு நந்தனார் சரித்திரத்திலே மனம் சென்றதற்கு முக்கிய காரணம் சிதம்பர ஆலயத்திலுள்ள நந்தனாருடைய பிம்பமென்று முன்பு தெரிவித்தேன். சிதம்பர க்ஷேத்திரத்தில் நந்தனாரைப்போல் வேறு இருவர் முக்தி பெற்றனரென்ற செய்தி பாரதியாருடைய மனத்திலேயே இருந்து வந்தது. ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய சுலபத்தன்மையை அனுபவித்து உருகுவதற்கு இந்த நினைவு காரணமாயிற்று. அந்த மூவர்களைப்பற்றி இவர் பல இடங்களிற் கூறியிருக்கின்றார்:—

''இப்படியே பக்தி செய்தால் போதும், மற்றச்சாதி வர்ணாசிரமங்களினாலே ஒன்றும் பிரயோசனமில்லையென்று ஓர் இதிகாசத்தைத் சொல்லுகிறார்; பூர்வத்திலே தில்லை வெட்டியானென்றும், பெற்றான் சாம்பானென்றும், ஆதனூர் நந்தன் சாம்பானென்கிற திருநாளைப்போவானென்றும் பேறு பெற்ற இம்மூன்று பேர்களில்'' என்ற வசனத்தையும், இவர் இயற்றிய பஞ்சரத்னக் கீர்த்தனங்களில் ஒன்றாகிய, ''பிறவாத முத்தியைத் தாரும்'' என்பதில் உள்ள,

''ஈன சாதியான புலையர் மூவர்க்குப்
பேரின்பம் அளித்த தில்லையா''

என்ற பகுதியையும், ''சபாபதிக்கு வேறு தெய்வம்'' என்ற கீர்த்தனத்திலுள்ள,

''அரிய புலையர் மூவர்பதம்
அடைந்தாரென் றேபுராணம்
பரிந்து சொல்லக் கேட்டோம்''

என்ற பகுதியையும், காண்க.

பழைய தமிழ் நாடகக் கீர்த்தனைகளிற் காணப்படாத கட்கா, த்விபதை, த்ரிபதை, தண்டகம் முதலியன இவரது நந்தனார் சரித்திரத்திற் காணப்படும். இவை மகாராஷ்டிரம் முதலிய பாஷைகளிலுள்ள சரித்திரங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டவை.

''நீசனாய்ப் பிறந்தாலும் போதும்—ஐயா—ஆசையுடனம் பலவன் அடியிலிருந்தேத்தும், நீசனாய்ப் பிறந்தாலும் போதும்'' என்பது நந்தனார் சரித்திரத்தினால் அறியப்படும் நீதியாகும். இது நந்தனார் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும் சிந்தின் பின்பு அமைக்கப்பட்ட கீர்த்தனத்தால் அறியப்படும்.

இந்தச் சரித்திரம் இன்பத்தை அளிப்பது, பக்திச் சுவையை ஊட்டுவது, கேட்டவர்களுடைய பவ பந்தத்தை நீக்குதற்குக் காரணமாவ தென்பவற்றை,

(பல்லவி)

நந்தன் சரித்ர மானந்தம்—ஆனாலும் அத்தி
யந்தம் பக்திரச கந்தஞ்—சொல்லச் சொல்ல (நந்தன்)

(அநுபல்லவி)

நந்தன் சரித்ரம்வெகு—அந்தம்—சிவனாருக்குச்
சொந்தம்—தொலையும்பவ—பந்தம்—கேட்டபேர்க்கு (நந்தன்)

என்ற கீர்த்தனத்தால் இவர் புலப்படுத்துகின்றார்.

இங்ஙனமே திருநீலகண்ட நாயனார் சரித்திரத்தில்,

இராகம் : தேவகாந்தாரி

(பல்லவி)

திருநீலகண்டர் சரித்ரம்—அதிவிசித்ரம்
மிகப் பவித்ரம் (திருநீல)

என வரும் கீர்த்தனமொன்று உண்டு.

சில கீர்த்தனங்களில் பழமொழிகள் விரவி வரும்:—
''கப்பலோட்டிய கடன் கொட்டை நூற்றால் தீராதென்றார்''
''குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பென்றார்''
''கரும்பு தின்னக் கூலி கையில் கொடுப்பதுண்டோ''
''கதறினாலு மூர்க்குருவி கருடன்போ லாகுமோ—
அதி—வேகமோ';
''காய்க்காத மரத்தில் கல்லெறி யாரே''
''சலசலப்புக் கஞ்சி நரியோடே மாட்டாதே''
''இலவு காத்த கிள்ளை யாச்சே''
''ஏழை சொல் அம்பல மாச்சே''
''விழலுக் கிறைத்தாற் போலாச்சே''
''வேம்புக்குயர்ந்த மதுரங்கள் ஊட்டினும்
வீறு மதன்குணம் மாறாதெந் நாட்டினும்''.

கதைப் போக்கிலே பல அரிய விஷயங்களை இடத்துக்கேற்ற உவமைகளால் விளக்கிச் சொல்லும் முறை பாரதியாருடைய ஞானத்தை வெளிப்படுத்துகின்றது:—

''கள்ளமனக் குரங்கதனால் விஷய மாச்சு
கட்டியிருந் தாலிருந்த ப்ரவ்ருத்தி போச்சு''
''இந்தவிஷய சுகத்தை நாடுமோ
பாவி மனக்குரங்கும்
இருப்பிடங்காணும லோடுமோ''

என்ற விடங்களில் மனத்துக்குக் குரங்கை உவமையாகக் கூறினர். இப்பகுதிகள்,

''பாவிமனக் குரங்காட்டம் பார்க்க முடியாதே''

என்ற தாயுமானவர் பாடலை நினைவுறுத்துகின்றன.

''வித்துக் குள்ளே விருட்சம் விளங்கிய வாறுபோல்
சத்துக்குள் ளண்ட சராசரம்''

என்பதன் நயம் அறியத்தக்கது.

''பெண்டு பிள்ளைகள் வெறுங் கூட்டம்—அது
பேய்ச்சுரைக்காய்த் தோட்டம்''

என்ற உவமை எவ்வளவு நன்ருகப் பெண்டு பிள்ளைகளின் வெறுமையை விளக்குகின்றது!

நந்தனுருடைய நிலையைப்பற்றி ஆண்டையிடம் முறையிடும் சேரியார்,

''தூண்டில் மீனது போலே துள்ளித் துள்ளித்
துடிப்பான் பற்களைக் கடிப்பானே''

என்று தமக்குத் தெரிந்த உவமையைக் கூறுகின்றனர்.

''கட்டழகி [1]ஜாரனிடங் காதலது போலே
கடுகிவருங் கன்றருகிற் [2]கபிலையது போலே
கட்டவரைத் துணிகிடையாக் கசடனெருக் காலே
காவலனுர் பதம்வருகில் களிப்பதனைப் போலே''

பக்தி பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமென்று கூறும் பொழுது அவ்வுவமைகள் பல அரிய பொதுத் தன்மைகளை விளக்குகின்றன.

பிராரப்த வினையின் பயனுகப் பலவகையான துன்பங்களை இறைவன் கூட்டுவித்தாலும் அவனடிக்கு அன்பு பூண்டால் இன்பம் வருமென்பதை உவமைவாயிலாக,

---

1. ஜாரன்-கள்ள நட்புடையவன். 2. கபிலை-பசு.

''தாயடிக்கில் பால்குடிக்கத் தழுவுதல் த்ருஷ்டாந்தம்
சடலம்பொறுக் காமல்துயர் தருகிலும் ஏகாந்த
மாயிருந்து வழுத்திலிந்த மாயை உபசாந்தம்
ஆகு மென்று சாதனங்கள் வழங்குது வேதாந்தம்''

என்று குறிப்பிக்கின்ருர்.

நந்தனர், தம் குலத்திலில்லாத வழக்கத்தை மேற்கொண்ட தனல் வெறுத்துப் பேசிய யஜமானர் நந்தனருக்கு விளங்குகிற உவமையைக் கூறி,

''குலத்திலில்லாத வழக்கம்—நீயதைக்
கொண்டாடுகிறது முழக்கம்
வெளுத்தத ருலென்ன எருமைச் சாணியது
மேனியி லணிவாரோ—வையகந்தனில்''

என்று தம் கருத்தை வெளியிடுகிருர். பின்பு நந்தனருடைய பக்தியில் ஈடுபட்ட அந்தணர் அவரைக் கொண்டாடும்போது நந்தனர் தம் முடைய பணிவைப் புலப்படுத்துவதாக உள்ள,

''மேவுங் கீரைத்தண்டு மேருவைத் தாங்குமா
வீசுங் கதிர்முன் மின்னும்பூச்சி யோங்குமா
ஆவ தழிவ தெல்லா மையன் றன்னலே
ஆச்சுதென் ருலென்ன வாச்சுது என்னலே''

என்னும் பகுதியில் அவருடைய விநயத்தை நயமாக வெளிப் படுத்தும் உவமைகள் காணப்படுகின்றன.

''உள்ளன்பிலாதார் எவ்வளவு உயர்ந்த கல்வியறிவுடையவர் களாயினும் அவர்களுக்கு இறைவன் அரியன்; கருதுவார்க்கு மிகவும் எளியன்' என்ற சிறந்த கருத்து,

''ஈசன் கருணு லேச மிலாதவன்
எத்தனை வேதங் கற்ருலும்
எட்டாப் பெருங்கொம்பு—நெருங்கித்
தொட்டால் செங்கரும்பு''

என்ற உவமைகளால் தெளிய விளங்குகின்றதன்ருே?

ஒவ்வொருவருடைய கூற்றிலும் அவரவர்களுடைய உள்ளக் கருத்து விளங்குவதற்குரிய சொற்களை அமைத்திருத்தலால் இச் சரித்திரத்தைக் கேட்கும்போதே கேட்போருக்கு அந்த மனேபாவம் புலனுகின்றது:—

''நாளைப்போகாம லிருப்பேனே—இந்த
நாற்ற நரம்பையின்னஞ் சுமப்பேனே—நான்
நாளைப் போகாம லிருப்பேனே—இந்த
நாறு முடலைக் கண்டு களிப்பேனே''

என்று நந்தனர் கூறும் பகுதியில் அவர் இந்த உடலை வெறுத்து நின்ற நிலை புலப்படுகிறது.

''மானிடஜன்மமடா—கிழவா
மாண்டால் வருமோடா''

என்று நந்தனர் பெரிய கிழவனருக்கு உபதேசம் செய்வதில் இரக்கக் குறிப்பு நன்ருகக் காணப்படுகின்றது.

''அண்ணேவா வென்று சொல்லிக்
கிண்ணரங் கொட்டிக்
குதிப்பா ஞெருவேளை''

என்பதில் சாதிக்கேற்ற சொற்கள் அமைந்துள்ளன.

''சொல்லியே தொலேக்க வேணும்''
என்றவர்கள் கூற்றில் சினம் தொனிக்கின்றது.

''பல்லை யொடித்து விடுகிறேன் பாரடா தகடி
பஞ்சைப் பயலே சமர்த்துப் பார்ப்பேனடா''
''விட்டு விட்டு விட்டு விட்டு விடுவிடு
கெட்டுக் கெட்டுக் கெட்டுக் கெட்டுப் போகாதே''
''நட—ராயன் ராயன் ராயன் ராயன் சாட்சியாய்
தீயன் தீயன் தீயன் தீயன் உனைவிடேன்''

என்ற அந்தணருடைய பேச்சுக்களில் அவருடைய சினத்தைத் தெளிவுறுத்தும் சொற்கள் மிகுந்துள்ளன.

அந்தணருடைய அனுமதி கிடையாமல் நைந்துருகும் நந்தனருடைய மனவுருக்கத்தை,

''ஐயா தெய்வமே இந்த ஐயர்க்கடிமையானேன்
செய்யாவினை செய்தல்லவோ
உள்ளங் கரைந்துருகி யுய்யும் படிகேட்கில்
கல்லுங் கரையுமல்லவோ''

என்ற சொற்களும் அவற்றிற்கேற்ற யதுகுல காம்போதி ராகமும் வெளியிடுகின்றன.

நந்தனர் 'நல்ல பிள்ளை' யாய்விட்டாரென்று எண்ணிய அந்தணருடைய சந்தோஷத்தை,

''சட்டம் சட்டம்-நல்லது நல்லது-
மெத்த மெத்த ஸந்தோஷம்''
''ஓகோ பலே பலே சபாசு கண்டு கொண்டாய்''

என்ற பகுதிகள் எவ்வளவு நன்ருக விளக்குகின்றன!

நந்தனர் ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய கருணைத் திறத்தை நினைந்து,

''ஆத னூரிலொரு புலையனுக் காக
அம்பல நாடக மாடுவரோ
அருந்தவம் புரிந்தேனே-கனவினில்
வருந்தியு மிருந்தேனே''

என்று உருகுகையில் படிப்போர் நெஞ்சமும் உருகுமன்ரே?

''தஞ்சமென் றடைந்தேனிந்தச்
சடலத்தால் நொந்தேன் இனி என்னை
அஞ்ச வேண்டாமென் ெறாருதரஞ் சொல்லி
அழைத்தா லாகாதோ
அப்பாவுன் சரணந் தில்லைக்
கரசேயுன் சரணம்
ஒப்பா ரில்லா நாடகம் பயிலும்
ஒளியே நின்சரணம்''

என்ற பகுதியில் நந்தனருடைய சிவபக்திப் பெருக்கானது பொங்கி வழிகின்றது.

''அறிந்தறியாமலே செய்ததபராதமையா-என்னை
ஆண்டவனே தில்லைத் தாண்டவராயா
அடிமையுன் சரணம்''

என்றதில் அவருடைய அடிமைத்திறம் புலப்படுகின்றது.

,,கோத்துநெளியும் புழு ஊத்தை நரம்புகளும்
நாத்த மலங்க ளூறு மூத்திரக் கும்பியும்
போதும் போதுமையா-எடுத்த ஜன்மம்
போதும் போதுமையா''

என்ற பகுதியால் அவருடைய விரக்தி வெளியாகும்.

''இரக்கம் வராமற் போன தென்ன காரணம் ஸ்வாமி
கருணைக் கடலென்றுன்னைக் காதில்கேட்டு நம்பி வந்தேன்''

என்பதில் அவருடைய **ஏசறவு நிலையும்,**

''எப்படிக் கெட்டாலு முன்றன்
பொற்பதமறவே ஞனையா''

என்பதில் அவருடைய முறுகிய பக்தியும் புலனாகின்றன வல்லவா?

பாரதியார் சிதம்பரத்தில் வாசஞ்செய்து அங்குள்ள ஆலயச் சிறப்புக்களை நன்குணர்ந்தவராதலின் அவற்றைப்பற்றி அங்கங்கே சொல்லி வருகிருர்; கோபுர தரிசனம், கண்டாமணியோசை, பஞ்சாக்ஷரப்படி, பரமானந்தகூபம், தேவசபை, அர்த்தஜாம தரிசனம் முதலியவற்றைச் சிறப்பித்திருக்கிருர்.

ஸ்ரீ நடராஜப்பெருமான் தைப்பூசத்தில் நடனம் புரிந்தருளுவதைப் பல இடங்களில் கூறியிருக்கிருர்.

நந்தனுர் மூழ்குதற்குரிய ஓமகுண்டத்தை அமைக்கவேண்டுமென்று ஸ்ரீ நடராஜப்பெருமான் கனவிலே கட்டளையிடப்பெற்ற தீக்ஷிதர்கள் அந்த ஆச்சரியத்தைத் தம்முள் ஒருவருக்கொருவர் கூறிக்கொள்வதாகவுள்ள கண்ணிகளில் ஒன்ருகிய.

''என்ருரங்குச் சிவ சங்கர தீக்ஷிதர்
இன்னமுந் தாமச மேதோ—நீசன்
ஒன்றுந் திருச் சந்நிதிக்கு வருவதற்
கொருகால் உங்கட்குத்த காதோ!
சொல்லு மென்ருர்''

என்பதில் சிவசங்கர தீக்ஷிதரென்று ஒருவர்பெயரை அமைக்கின்ருர். இப்பகுதி பாரதியார் தம் நண்பராகிய சிதம்பரம் சிவசங்கர தீக்ஷிதரை நினைந்து அமைத்த தென்றே தோற்றுகின்றது.

பாரதியாருடைய வாக்கில் பல வேதாந்தக் கருத்துக்கள் மலிந்து விளங்கும். இவர் பிரபஞ்ச வாழ்க்கையைக் கற்பித மென்பர்:

''கற்பிதமான ப்ரபஞ்ச மீதைக்
கானல் ஜலம் போலே யெண்ணி''
''அநாதி மாயா கற்பித மிந்த
நாம ரூபாதி ப்ரபஞ்ச மெல்லாம்''
''விலாச கற்பித மிந்த ஜகம்''
''சொப்பன மென்றிவ் வுலகந் தோன்றிவரும்.''

அந்தக்கரண விருத்திகள் ஒழியவேண்டுமென்றும், விஷய சுகங்களில் நாட்டம் நீங்கவேண்டுமென்றும், இந்தத் தேகம் அநிருத சடதுக்க காரணமென்றும். ஞானம் பெற்ருல் சஞ்சித வினைகள் வறுத்த விதைகளைப் போலாகுமென்றும், தேகாத்ம பாவம் போய் நிஷ்டையிலிருந்து சிவோகம்பாவனை செய்வது இன்பத்தைத் தருமென்றும் உள்ள பல அரிய கருத்துக்களைப் பாரதியார் தம் கீர்த்தனங்களில் அங்கங்கே பதித்திருக்கிருர்.

யோக சம்பந்தமான செய்திகள் பலவற்றை இவர் வாக்கிலே காணலாம். மூலக்கனலை வாசியோகத்தால் எழுப்பிக் குண்டலி சக்தியைத் தூண்டி ஆருதார தரிசனம் செய்து பிரமரந்திரத்திலே யுள்ள சந்திர மண்டலத்தில் தாக்கச்செய்து அங்கிருந்து பொங்கி வரும் அமுதத்தை உண்டு இன்புறும் யோக தத்துவங்களையும், நாசிமுனையில் பார்வையை நிறுத்தித் தியானம் செய்யும் முறையையும், யோகிகள் பலவகை நாதங்களைக் கேட்கும் செய்தியையும் பல இடங்களிற் புலப்படுத்தி யுள்ளார்:—

''மையத்தி லாடி மனக்கயிறு பூட்டி
வையத்தி லிருப்பார் மதசம்ப்ர தாயம்''
''மூலக் கனல்தாண்டி மேலைக் கரைவந்து
பாலைக்குடி''
''உருவில்லாத குருவொன்றிருக்குதாம்—அது மூலக்கனலை
ஊதியெழுப்பிக் காண உருக்குதாம்''
''பாச மறுத்துடல் வாசி யொடுக்கி''
''முப்பாழுந் தாண்டி மூலத்தீ மூட்டிக்கொண்
டப்பாலே நின்ருல் ஆனந்தங் காணலாம்''
''நாசி நடுவிருந்து நாதனே தானென்று

பேசாமற் பேசிய பெருமையை''
''மூட்டுவார் மூலக் கனன்மதி மண்டல முகட்டில்''
''ஓராறு தாண்டியே யுண்மணிக் கோட்டைகள்
சீராறுங் காணுத சிதம்பர ரகசியம்''
''காலால் வீசிக் கனல் மூட்டிக்
கலைமதி மண்டல மேலோட்டிப்
பாலாறு பெருகவே யணைக்கூட்டிப்
பார்த்தது மில்லை நான்தோட்டி''
''மண்டலத்தோ ராசை தீர்ந்து
மண்டபமணி யோசை நேர்ந்து''
''வாசி யடங்கிநடு வணைவழி கண்டால்
தேசிக வடிவுடன் தெரிசனம் தந்திடும்''

—நந்தனார் சரித்திரம்.

''மூலத்துக் குண்டலியை முத்தீயை மூள எழுப்பிக்
கோலத்தைக் கண்டதில்லையோ''
''நட்ட நடுவணைச் சுழியிலே தச
நாத முழங்கிய முனையிலே''.

—தனிக் கீர்த்தனங்கள்:

நகைச்சுவை யமைந்த சில பகுதிகள் வருமாறு:—

நந்தனார் : சற்றேயாகிலும் சிவனை த்யானம் பண் என்றார்.

புலையர் : நத்தையோடு பாலைப் பானம் பண் என்றார்.

நந்தனார் : திருச்சிற்றம்பலமென்று ஜபிக்கச் சொன்னார்.

புலையர் : விரிச்ச கம்பளமென்று உரக்கச் சொன்னார்.

நந்தனார் : கொண்டாடித் தெய்வத்தைக் கொள்ளுவீரென்றார்.

புலையர் : பெண்டாட்டித் தெய்வமே பெருந்தெய்வமென்றார்.

உலக வழக்கச் சொற்களாகிய சேரி மொழிகளையும் மருஉச் சொற்களையும் இவர் விரவ வைத்துப் பாடுவார்:—

''அண்ணே நீ போகாதே''
''பாசம் வருகலாச்சே''
''சிவனென்று மூன்று வாட்டி—நாங்களும்
செப்ப வேணும்''

''போய் வருகவுத்தாரந் தாருமையே''
''சிடுசிடு மூஞ்சி காட்டிச் சில்விடம் போலே நெஞ்சம்
துடிதுடித் திடவே ஞாயந் தோசியும் பேசு வாரே''
''சார்ந்தா லல்லோ நல்ல சாபல்யமாம்''
''சண்டாளமாந் துட்டு.''

இவற்றிலுள்ள அண்ணே, வருகலாச்சே, வாட்டி, வருக, உத்தாரம், சிடுசிடு மூஞ்சி, தோசி, அல்லோ, துட்டு என்னும் சொற்களும் சொற்றெடர்களும் உலக வழக்காதல் காண்க, இவற்றைப்போல நூற்றுக்கணக்கான சொற்களும் தொடர்களும் இவர் வாக்கில் வந்துள்ளன.

நந்தன் சரித்திரத்தில் இடையிடையே உள்ள வசனப் பகுதி களிற் சில, எதுகை மோனை நயங்களுடன் விளங்கும்:—

'வீச்சுடன் சேற்றில் விழுந்தாலும் பிள்ளைப் பூச்சி மேலொட் டாது. அத்தன்மைபோல் எத்தனை காரியமிருக்கினும் முத்தியளிக்குங் கத்தனுகிய அத்தனைத் தனது சுத்தமாகிய சித்தத்தில் நித்தமும் வைத்து உத்தம பக்தி பெற்றிருந்தார்.

'அவ்வீதியில் மட்டை யூறுங் குட்டையைக் குளமாய் வெட்ட வேணுமென்று விசாரமுற்ருர். சுவாமி இதையறிந்து நாளைப் போவாராலே குளம் வெட்டத் தாளப் போகாதென்று தம்பிள்ளையை ஆளாப் போகச் சொன்னுர்'.

'சித்தந் தெளிந்து சிவமாய் நிறைந்து உற்றதுணர்ந்து ஒருவனு யிருந்து அத்தனடியாரருளிதுவென்று பக்தி மிகுந்து பரவசங் கொண்டு பேசத் தெரியாமற் பேசுவார்'.

இவருடைய கீர்த்தனைகளிலே கோபாலகிருஷ்ணன், பால கிருஷ்ணன் என்னும் இரண்டும் முத்திரையாக வந்துள்ளன. இவை பெரும்பாலும் திருமாலென்னும் பொருள்பட்டு அங்கங்கே உள்ள சரணப் பொருளோடு பொருத்தமுடையனவாக அமைந்து இருக்கும்.

## நந்தனுர் சரித்திரத்தின் சிறப்பு

நந்தனுர் சரித்திரத்தை முதலில் திருப்பழனம் சாமி ஐயரென் பவரும், பிறகு வேறு சிலரும், தஞ்சைக் கிருஷ்ண பாகவதரும், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் முதலியவர்களும் கதை பண்ணி வந்தார்கள்.

பாரதியார் முதல் முதலில் அமைத்திருந்த ராகங்களிற் பல பிற்காலத்திற் சிலரால் மாற்றப்பட்டன: கிருஷ்ண பாகவதரும் அங்ஙனம் மாற்றியிருப்பதுண்டு.

இச்சரித்திரத்தின் முதற்பதிப்பு, சென்ற துன்மதி வருஷத்துக்கு முந்திய துன்மதி (1861—2) ஆ பதிப்பிக்கப்பெற்றது; அடுத்த வருஷமாகிய துந்துபி (1862—3) யிலேயே இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. அந்தக் காலத்தில் இவ்வளவு விரைவில் இரண்டு பதிப்புக்கள் வெளிவந்தமையே இப்புஸ்தகமானது பலரால் வாங்கப் பட்டதென்பதையும், பலர் இதைப் படிக்க ஈடுபட்டனரென் பதையும், உணர்த்தும்.

### 'தில்லை, தில்லை'

திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள மறவனத்த மென்னும் ஊரில் சிதம்பரவுடையாரென்ற பெருஞ் செல்வரொருவர் இருந்தார். அவருடைய அன்பை மிகுதியாகப் பெற்ற என் தந்தையார் அடிக்கடி நல்ல கீர்த்தனங்களை அவரிடம் பாடிக் காட்டுவதுண்டு. ஒரு நாள் நந்தனர் சரித்திரத்திலுள்ள, ''தில்லை தில்லை யென்ருற் பிறவியில்லை யில்லை யென்று மறைமொழியும்'' என்ற கீர்த்தனத்தைப் பாடிக் காட்டினர். கேட்ட அவர் அதில் மிகவும் ஈடுபட்டு மனமுருகி நந்தனர் சரித்திரக் கீர்த்தனங்களை அடிக்கடி கேட்பவரானர். கேட்கக் கேட்கச் சிதம்பரஞ் ஸ்தலத்தில் அவருக்குப் பேரன்பு உண்டாயிற்று. பிறகு சிதம்பரஞ் சென்று தரிசனம் செய்து அங்கே சோமவாரக் கட்டளை முதலிய கைங்கரியங்களைச் செய்து வரலானர். ''தில்லை, தில்லை'' என்ற கீர்த்தனமே அவருக்கு ஜப மந்திரமாக இருந்தது. எவரேனும், ''யார்?'' என்று கேட்டால், தம் பெயரை அவர் ''தில்லை'' என்றே சொல்வார்.

### நான் கேட்ட முதற் கீர்த்தனம்

என்னுடைய ஏழாவது பிராயம் முதற்கொண்டே எனக்கு நந்தன் சரித்திரக் கீர்த்தனங்களில் அளவற்ற பற்று உண்டாயிற்று. ஒரு சமயம், உடையார்பாளையம் தாலுக்காவைச் சேர்ந்த பெரிய திருக் குன்றம் என்ற கிராமத்தில் நெருங்கிய பந்து ஒருவர் வீட்டில் நிகழ்ந்த ஒரு விசேஷத்திற்கு நான் போயிருந்தேன். அப்பொழுது அங்கே வந்திருந்த ஒருவர் சில கீர்த்தனங்களைப் பாடிவிட்டு நந்தனர் சரித் திரக் கீர்த்தனங்களையும் பாடினர். அவற்றுள் கானடா ராகத்தில் அமைந்த,

(பல்லவி)

*தீயினில் முழுகினுர் — திருநாளைப்போவார்
தீயினில் முழுகினுர்.

(அநுபல்லவி)

நாயிலுங் கடையென்று நயந்து துணிந்திடும்
மாயச் சடலம் போக்கி மறைமுனி யாகவே (தீயினில்)

(சரணங்கள்)

பாழும் நரகத்திற் படிந்திடும் பாவியான
ஏழையின் இடத்தினில் இரக்கமுற்ற தோவென்று (தீயினில்)

அரகர சங்கர அம்பல வாவென்று
பரிவுடன் குண்டத்தைப் பிரதக்ஷிண மாய்வந்து (தீயினில்)

என்ற கீர்த்தனத்தை அவர் சொன்னவுடன் எனக்கு அது பாடமா யிற்று; அதனை இடைவிடாமல் நான் பாடிக்கொண்டிருத்தலை என் தந்தையார் கேட்டு, "உனக்கு இந்தக் கீர்த்தனத்தை யார் சொல்லிக்கொடுத்தார்?" என்று கேட்டனர். நான் நடந்ததைச் சொன்னேன். அது முதல் எனக்கு அவர் சங்கீதப் பயிற்சியையும் செய்வித்து வரலானுர்.

எனவே, எனக்குச் சங்கீத சம்பந்தத்தை உண்டாக்கி வைப் பதற்கு முதற்காரணம் நந்தனுர் சரித்திரக் கீர்த்தனமென்றே சொல்லவேண்டும்.

இப்போது நந்தனுர் சரித்திரம் தமிழ்நாட்டின் இசைச் செல்வங் களில் ஒன்றுக நிலவுகின்றது. எவ்வளவு புதிய கீர்த்தனங்கள் வந்தாலும் அதன் ஒளி மங்காது. அதற்குக் காரணம் அச்சரித் திரத்தில் அமைந்துள்ள பக்திச்சுவையும் சங்கீத அமைப்பின் சிறப்புமேயாகும்.

இந்த அரிய இசை யிலக்கியத்தைத் தந்த ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாருடைய புகழ் என்றும் நின்று நிலவுமென்பதில் ஐயமில்லை. இவரை முற்றப் புகழ்வதென்பது இயல்வதன்று;

"பத்தியிற்கரை கண்டவன்
பார்த்துப் பார்த்து உண்டவன்"

என்று இவர் நந்தனுரைப்பற்றிக் கூறுவதையே இவருக்கும் கூறி வாழ்த்துவோமாக!

---

*இந்தக் கீர்த்தனம் முதற் பதிப்பில் மட்டும் காணப்படுகின்றது.

உ

# கீர்த்தனங்கள்

## 1. தனிக் கீர்த்தனங்கள்

### 1. இராகம் : ஆகிரி

பல்லவி

அற்புத நடனம் ஆடினு ளையா
அம்பலந்தனில் (அற்புத)

அநுபல்லவி

தற்பரத்துப் பொருள் ஆனவி லாஸன்
தரணி ஏழும் தழைக்குமுல் லாஸன்
கற்பித ப்ரபஞ்சா தீதப்ர காசன்
கருணை பொழிந்திடும் கனகச பேசன் (அற்புத)

சரணங்கள்

1. தத்தக தித்திமி மத்தள மடிக்க - மலரயனும்
தாளம் விளம்ப அறிந்து பயந்து பிடிக்க - அவரவர்கள்
கற்றிடும் வித்தைகள் முற்றிலும் கண்டு படிக்க - கந்தருவாதி
கன நய தேசிக மோதுவிதந் தடிக்க - பார்த்தபேரெல்லாம்
சித்திரப் பிரதிமைகள் போலத் துலங்கச்
சிந்தை மறந்து பரத்துள் ஒடுங்கப்
பக்த ஜனங்கள் ப்ரமித்து நடுங்கப்
பாதச் சிலம்புக ளதிர்ந்து உலுங்க (அற்புத)

2. பந்த மயக்க மறந்து வேறண்டத் தோட—அநேகஜன்ம
பாக்கிய பரம்பரை யார்க்குமிதுவென்று ஓட—பதஞ்சலியும்
சந்ததம் சனக மகாமுனி வோரும் கொண் டாட—வண்
[டைனவேதம்
சந்தைசொல் குவிந்து விழைந்தவர் பாட—தேவலோகத்தில்

இந்திர பதவி இகழ்ந்தவர் மாற
எங்குநிறைந்து புலன்தொழில் மாற
சந்திர சூரிய ருங்குறை ஆறச்
சாமி பராக்கென்று கட்டியம் கூற (அற்புத)

3. தில்லைமூ வாயிரம் பேர்கள் தவம் பலிக்க—
[கோபால கிருஷ்ணன்
செந்தமி ழாலே புகழ்ந்துபுகழ்ந்து துதிக்க—லபித்ததென்று
சொல்லுல கந்தனில் மானிட ஜன்ம மெடுக்கச்—சபலமென்று
சோகமோ காதிகள் ஆறும் அழிக்க
வல்லவன் டமருகம் ஓங்கி முழக்க
வானவர் மண்டலம் இழிந்து திறக்க
அல்ல லொழிந்திற வாமல் இருக்க
ஆனந்த சாகர மாடிச் சுகிக்க (அற்புத)

2. இராகம்: எதுகுல காம்போதி

பல்லவி

ஆடிய பாத தரிசனம் கண்டால்
ஆனந்தம் பெண்ணே (ஆடிய)

அநுபல்லவி

தேடிய பொருளும் கூட வராது
தெரிந்து பாரடி கண்ணே (ஆடிய)

சரணங்கள்

1. மந்திர தந்திரம் மழையும் சேரும்
வாரும் சில காலம் தங்கள்
அந்தக் கரணத் திருக லடங்கி
ஆற்ற லொழிந்தால் இந்திர ஜாலம்* (ஆடிய)

3. இராகம்: அசாவேரி

பல்லவி

ஆடிய பாதமே கதியென் றெங்கும்
தேடியும் காண்கிலேன் பதி அவன் (ஆடிய)

*மற்றச் சரணங்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

அநுபல்லவி

நாடு புகழ்ந்திடும் தில்லைச் சிதம்பர
நாதன் சபை துலங்க வேதகீதம் முழங்க (ஆடிய)

சரணங்கள்

1. நட்ட நடுவணைச் சுழியிலே தச
நாத முழங்கிய முனையிலே மறைக்
கெட்டொணுச்சிறு வழியிலே திரை
மறைவிலே வெட்ட வெளியிலே நின்று (ஆடிய)

2. திக்குத் திசையொன்றுந் தெரியாது-ஆதி
தேவன் நர்த்தன மாடிய போது
நெக்கு நெக்குருகியே வரை மாது வெகு
நேர்த்தியென் ருலிதற்கிணை யேது
தக்க புவனங்க ளேழும் அகன்றிடச்
சப்த சாகர நீர்கள் பெருகிட
மிக்குச் சேடன் தலைகள் நெரிந்திட
வீர வெண்டய ஒலியும் பொலிந்திட (ஆடிய)

3. அண்டர் மாமுனிகள்ஈ டேறப்—பரம
ஆனந்தம் பொங்கிக் குறை யாறச்
சந்திர சூரியர் தடு மாற
தன்மய மாகி வந்தவர் குறை யாற
நந்தி மத்தளமும் போட
நாரதர் தும்புருவும் பாட
சிந்தை மறந்தெல் லோரும் கூடச்
சித்சபேச னென்று கொண் டாட (ஆடிய)

4. பக்தியே யருளென்று வரும் தாசன்-கோ
**பாலகிருஷ்ணன்** தொழும் நடராசன்
சக்திசிவகாமி மகிழ் நேசன்-சர்வ
சாட்சியாய் நிறைந்திடும் ஜகதீசன்
வெற்றி பெருகிய மதனை வென்றவன்
வேட னெச்சிலை வாரி யுண்டவன்
அத்தி மாலையை மார்பிற் கொண்டவன்
அஞ்செழுத்துரு வாகி நின்றவன் (ஆடிய)

### 4. இராகம்: தேவகாந்தாரி

பல்லவி

எங்கே தேடிப் பிடித்தா யடி மானே
இந்த வடிவோனை (எங்கே)

அநுபல்லவி

பங்கமாகவுடல் முழுதிலும் எலும்பணி வாண்டி
பாம்பைத் தூக்கும் சிற்றம் பலத் தாண்டி (எங்கே)

சரணங்கள்

1. மெய்யி லெங்கும் வெண்ணீறு பூசி
வீதியிலெங்கும் வருவான் பர தேசி
துய்ய வேணிதனி லேயொரு வேசி
சுமக்குந் தலைவனே யென்று பேசி (எங்கே)

* * * *

3. **பாலகிருஷ்ணனைக்** கேட்டுநி தானம்
பண்ண வேணுமவன் கால்ஒரு ஊனம்
ஆலகால விஷ மேயதி பானம்
அடுத்துச் சொல்லக்கூடாதபி மானம்* (எங்கே)

### 5. இராகம்: கௌளிபந்து

பல்லவி

கண்ணே உனக்கு நமஸ்காரம்-பிற
மாதரைப் பாராதே (கண்ணே)

அநுபல்லவி

உன்னைத் தெய்வமென் றடிக்கடி போற்றுவேன்
என்னைக்கரை யேற்றிடுவ துன்றன் பாரம் (கண்ணே)

---

*2-ஆம் சரணம் கிடைக்கவில்லை.

சரணம்

இந்திரன் சந்திரன் விச்வா மித்திரன்
இலங்கை யரசன் இருடிக ளனைவரும்
தந்திர மான தவங்கள் குறைந்தது
தரணியில்அப கீர்த்தியு முண்டாச்சுது[1] (கண்ணே)

## 6. இராகம்: அடாணு

பல்லவி

கனக சபாபதி நமஸ்காரம் பண்ணடி கண்ணே (கனக)

அநுபல்லவி

சனக மகாமுனி சொல் போற்றும் சந்நிதியடி கண்ணே (கனக)

சரணம்

வீதிவலம் வந்து மேலைக்கோபுர வாசல் நுழைந்து
காதலுடன் சிவ காமிகளிக்கு மண்டபம் வந்து
மாதவன் **கோபாலகிருஷ்ணன்** பணியுமம்பல மறிந்து
நாதனே நீயே யடைக்கலமென்று மனமகிழ்ந்து (கனக)

## 7. இராகம் : மலகிரி

பல்லவி

கைவிட லாகாது காமதேனு அல்லவோ (கைவிட)

அநுபல்லவி

மெய்விடும் பொழுதந் நேரம் வந்து தில்லை
வெளியைக் காட்டி நல்ல வழியைச் சேருமுன் (கைவிட)

சரணம்

ஆதியந்த மில்லாத உன் மகிமை
ஆரறிந்து துதி செய்ய வல்லவர்
சோதிமா மறையும் கண்டதில்லையென்று
சொல்லக் கேட்ட தில்லையா

1. மேற்பாகம் கிடைக்கவில்லை.

நரதனே உனது பாத கமலங்களை
நம்பிவந்தவர் பந்தந் தீரவே
காத லோடும் **கோபாலகிருஷ்ணன்**
கவிக்கருள் புரிந்த நடராஜனே என்னைக்
(கைவிட)

8. இராகம் : ......

பல்லவி

சம்போ கங் காதரா
சந்த்ர சேக ராஹரா (சம்போ)

அநுபல்லவி

அம்பல வாணனே ஆதிரை நாளனே
அடைக்கல மென்று நம்பி வந்தேன்
ஆதரிப்பதுன் பாரம் சொன்னேன் (சம்போ)

சரணம்

காயமெடுத்த தெத்தனையோ என்
கணக்குன் பால் இருக்குது
மாயவலைக்குள் மாட்டிக் கொண்டு
மயங்குகிறேன் தய வில்லையா - பெற்ற
தாயுந் தந்தையும் நீயே உன்னைத்
தவிர வேறொருவரு மில்லை
மாயன் **கோபாலகிருஷ்ணன்** தொழுதேத்தும்
மலரடிபணிந்தேன் பிறவியைத் தீரும் (சம்போ)

9. இராகம்: கௌளை

பல்லவி

சரணாகதி யென்று நம்பிவந்தேன் - இரு
சரணங்களையுந் தா (சரணா)

அநுபல்லவி

கருணை கடாட்சம் பண்ணவேண்டும்
கனகசபையி லாடும் பிரபு அல்லவோ (சரணா)

சரணம்

ஜனனாதி பயங்கள் அணுகாமல் உன்றன் சிவ
சாயுஜ்யபதங்களைத் தரவேணும்
மனனாதிக ளறியேன் தவம் புரியேன்
**மாயன்கோ பாலகிருஷ்ணன்** தொழுதேத்திய (சரண)

10. இராகம் : நவ்ரோஜ்

பல்லவி

சிவ சம்போ மகா தேவா
தேவி மனோ ஹரா (சிவசம்போ)

அநுபல்லவி

சாதுஜன பரிபாலா சாம்பசிவ மூர்த்தே (சிவ)

சரணம்

மங்கை நல்லாள் மேனை மாது
வான நதி கொண்டு சிவ
சங்கரர்க்குப் பார்வதியைத்
தானம் பண்ணிக் கொடுத்தாள்* (சிவ)

11. இராகம் : காம்போதி ; தாளம் : ஆதி

பல்லவி

திருவடி சரணமென் றுனை நான் நம்பிவந்தேன்
தேவாதி தேவா உன் (திருவடி)

அநுபல்லவி

மறுபடியும் கருவடையுங் குழியில் தள்ளி
வருத்தப் படுத்த வேண்டாம் பொன்னம்பலவா! (திருவடி)

சரணங்கள்

எடுத்த ஜனனம் கணக் கெழுதத் தொலையாது
இரங்கி மகிழ்ந்து தேவரீர் வேணுமென்று

---

*பிற்பகுதி கிடைக்கவில்லை.

கொடுத்த மானிட ஜன்மம் வீணாகிப் போகுது
குறை தீர்ந்த பாடில்லையே
அடுத்து வந்தவென்னைத் தள்ள லாகாது
அரகரா வென்று சொன்னாலும் போதாதோ
தடுத்துவந் தருளச் சமயம் **கோபால கிருஷ்ணன்**
சந்ததம் மகிழ்ந்து பணிந்து போற்றும் (திருவடி)

12. இராகம் : நாதநாமக்கிரியை

பல்லவி

தேடியலைகிருயே பாவி மனதே (தேடி)

அநுபல்லவி

தேடி யலைகிருயே தில்லைபுரி ஈசனைக்
கூடிக் கலந்த தில்லையோ-பாவிமனதே (தேடி)

சரணங்கள்

1. நாடுபுகழுந் தில்லை நல்ல அம்பலத்தானைப்
பாடிப் படித்த தில்லையோ-பாவிமனதே (தேடி)

2. அகர முதலெழுத்தாம் ஐம்பத் தோரக்ஷரமாம்
தகரவித்தை கொள்ளவோ-பாவிமனதே (தேடி)

3. மூலத்துக் குண்டலியை முத்தியை மூளஎழுப்பிக்
கோலத்தைக் கண்ட தில்லையோ-பாவிமனதே (தேடி)

4. ஆமை யிருப்பது போல ஆணவ மலநீத்தே
ஊமை எழுத்தைச் சொல்லவோ-பாவிமனதே (தேடி)

5. வார்த்தைமேல் வார்த்தையாய் மாயன் கோபாலகிருஷ்ணன்
கீர்த்தனங் கேட்ட தில்லையோ-பாவிமனதே (தேடி)

13. இராகம் : கௌளிபந்து

பல்லவி

பிச்சைக் கார வேஷம் காட்டுறீர்-அம்பலப்
பொட்டெல்லாம் நிலை நாட்டுறீர் (பிச்சைக்)

அநுபல்லவி

இச்சை யானமட்டும் அளிக்கும்படிக்குத்தனம்
இருக்குது மனம் உருக்குதொன்றறியேன் (பிச்சைக்)

சரணங்கள்

1. கையில் உடுக்கெடுத்துப் பாடுறீர் - புண்ய
கதைகளைச் சொல்லிக்கூத் தாடுறீர்
வைய முழுதும்படி யளக்க வேணுமே - தில்லை
வனம் இருக்குது சொந்த ஜனம் இருக்குது போம் போம்
(பிச்சைக்)

2. மலைமகள் அருமைப் பெண் அல்லவோ - முத்து
மாணிக்கங்களை யெண்ணிச் சொல்லவோ
பலநிதிக் குடையவன் பாதகாணிக்கை கொண்டு
பார்த்திருக்கிருன் அவன் காத்திருக்கிருன் போம் போம்
(பிச்சைக்)

3. பால கிருஷ்ணன் தேடி வருகிருன் - வெண்
பாற்கடல் உமக் கொன்று தருகிருன்
காலில் சிலம்பிருக்கக் கதித்தமார்பினில்
வச்ரப்பதக்கம் ஒன்றிருக் கையில் (பிச்சைக்)

14. இராகம் : ஆரபி ; தாளம் : ஆதி

பல்லவி

பிறவாத முக்தியைத் தாரும் - இன்னும்
பிறவாத முக்தியைத் தாரும்

அநுபல்லவி

பிறந்திறந்து துன்பம் தொலையாது
பிரமாவா லுலும் சொல்லி முடியாது (பிறவாத)

சரணம்

ஆனி உத்தரம் மார்கழித்திரு வாதிரைக்கு
அன்புடன் வந்த தில்லையா - நின் அடியார்
வானத்தோர் போற்றும்உன் கனகசபையை
மனமகிழ்ந்து கண்ட தில்லையா

ஈனசாதி யான புலையர் மூவர்க்குப்பே
 ரின்பம் அளித்த தில்லையா - ஆனாலும்
தீன னான எனக்குக் கருணைசெய் தல்உன்
 சித்தம் **பால கிருஷ்ணன்** போற்றும் சிவனே (பிறவாத)

### 15. இராகம் : சாரங்கா

பல்லவி

பேயாண்டி தனைக்கண்டு நீயேண்டி மையல்கொண்டாய்
பெண்களுக் கழகாகுமோ (பேயாண்டி)

அநுபல்லவி

மாயாண்டி சுடலையில் வாழ்வாண்டி காளியுடன்
 வாதாடிச் சூதாடி வழக்காடு வாண்டி (பேயாண்டி)

சரணங்கள்

1. பாரில்முப் புரந்தன்னில் பல்லை யிளித்தாண்டி
 பஞ்சபா ணனைக் கண்டு பரக்க விழித்தாண்டி
 ஊரூராய்ப் பிச்சை யெடுத்துத் திரிந்தாண்டி
 உற்றார் பெற்றார் ஒருவரையும் அற்றாண்டி (பேயாண்டி)

2. கண்ணப்பன் எச்சிலை உகந்து தின்றாண்டி
 காலனைக் காலால் உதைத்துக் கொன்றாண்டி
 பெண்ணைச் சடை மீதினில் வைத்துக் கொண்டாண்டி
 பிட்டாசையினால் பிரம்படி பட்டாண்டி (பேயாண்டி)

3. சுந்தரர்க்குத் தூது நடந்தவன் இவன்றாண்டி
 தும்புரு நாரதர்பாட்டைக் கேட்டவன் இவன்றாண்டி
 சந்தோஷம்தான் வந்தாலுன்னைச் சேர்வாண்டி
 சமயம்வந் தாலொற்றைக் காலைத்தூக்கிக் கொள்வாண்டி
 (பேயாண்டி)

### 16. இராகம் : ஸ்ரீராகம்

பல்லவி

மறவாமல் எப்படியும் நினை மனமே (மறவாமல்)

அநுபல்லவி

பிறவாமல் எப்படியும் வரந்தருவான்
பேணித் தொழுது எப்பொழுதும் (மறவாமல்)

சரணம்

விரிவாகியமறை யோதின போதிலும் இந்த
விஷயஸம்சாரவலை பொல்லாது
மருவாமல் விடாது பிடி படாது
மாய மயக்கம் தெளியாது
திருவாதிரைத் திருநாளில் மகிழ்ந்து
வீதிவலம்வந்து தேவசபை நின்று-உள்ளம்
பரிவாகிய கனகசபை நின்று
பாடிக் **கோபாலகிருஷ்ணன்** பணிந்திடுந் திருவடியை
(மறவாமல்)

17. இராகம் : கௌளிபந்து

பல்லவி

மனது அடங்குவதால் முத்தி
மார்க்கம் பெற லாகும் (மனது)

அநுபல்லவி

அன நடையாள் உமை பாகன் திருச்சிற்
றம்பல வாணன் பாதார விந்தங்களில் (மனது)

சரணங்கள்

1. சொற்பனம் போல்விஷ யாதிகள் மட்டி
சுகமிது வென்பது நோயரி கட்டி
பற்பல வாதம் அடங்கும் பெட்டி
பாம்புபோல் அடங்கிட லேநலம் பட்டி (மனது)

2. மாதரைக் கண்டுபின் ஓடுவதொ ழித்து
வாங்குவ தேதுஜன் மாதிகள் வித்து
சாதனம் பெருகிய கல்விகள் கற்றுச்
சந்திர மண்டல ஸ்தானத்தை யொத்து (மனது)

3. எங்கள் **கோபாலகிருஷ்ணன்** பதம் பாடி
இயமநியம வாசனை பொருந்திய தோடிப்
புங்க மானபல சாத்திரம் தேடிப்
போவது மில்லை இருந்தது வாடி (மனது)

18. இராகம் : ஆனந்தபைரவி

பல்லவி

மனதே உனக் கிதமாயொரு
வார்த்தை சொல்கிறேன் கேட்டுக்கொள் (மனதே)

அநுபல்லவி

கனக சபையில் நடனம் புரியும்
கமல பதத்தைக் காத்துக்கொள்
காய மனித்த ஜடமறிந்து
காரி யங்களைப் பார்த்துக்கொள் (மனதே)

சரணங்கள்

1. மனிதரிடம் மயக்க மொழிந்து
மாதவங்களைச் சேர்த்துக்கொள்
மாய வலையைப் போக்கி முத்தி
மாணிக்கம் வெட்டிப் பேர்த்துக்கொள் (மனதே)

2. விரிந்து நின்ற விஷய விருத்தி
வேரறுபடத் தேற்றிக்கொள்
வேத சாஸ்த்ர சம்ப்ர தாய
விகித மென்று ஏற்றுக்கொள் (மனதே)

3. சுருதி மறையி லிருக்கு முதல்
சகல விஷயம் படித்துக் கொள்
காம க்ரோத லோப மோக
கள்வ ரகல அடித்துக்கொள் (மனதே)

4. பருவ வயதிற் குள்ளே உனது
பாவம் தொலைய ஆற்றிக்கொள்
பாரடங்கினும் சின்மயமென்று
பாவனை கொண்டு போற்றிக்கொள் (மனதே)

5. இரவுபகலும் இடைவி டாமல்
இருக்கும் மதியைச் சுருக்கிடு
எங்கும் நிறைந்த பூரண மென்று
ஹ்ருதய க்ரந்தியை நெருக்கிடு (மனதே)

6. நிருவிகற்ப நிஷ்டை யாலே
நிலையிற் சென்று நெருக்கிடு
நீடுகற்ப க்யாதியாக
நிச்சயத்தைப் பெருக்கிடு (மனதே)

7. பாட்டுக் கிசைந்த படிக்குத் தினமும்
பணமஞ்சு கொடுத் தாண்டவன்
**பாலகிருஷ்ண தாசன்** தனக்குப்
பவத்தை யொழித்து மீண்டவன் (மனதே)

8. நாட்ட முடனே பரம சிவத்தை
நம்பிக்கை யென்று நாடிக்கொள்
நன்மை தீமை யொழிந்து வரும்
ஞானக் கலையைத் தேடிக்கொள் (மனதே)

9. தேட்ட மாகித் துரியத்தி லிருந்து
தெளிந்து தெந்தனம் பாடிக்கொள்
சீரொளியை வெட்ட வெளியில்
சிறக்கக் கலந்து கூடிக்கொள் (மனதே)

## 2. திருநீலகண்ட நாயனர் சரித்திரம்

### 1. இராகம்: தேவகாந்தாரி

பல்லவி

திருநீல கண்டர் சரித்ரம்-அதி விசித்ரம்
மிகப் பவித்ரம் (திரு)

அநுபல்லவி

தாதிவீட்டிற் புகுந்ததும் அந்தச் சேதிமனையாளறிந்ததும்
[என்னைத்
தீண்டாதேயு மென்று இகழ்ந்ததும் (திரு)

சரணங்கள்

1. தில்லை நாயகர் தொடர்ந்ததும் ஒரு
தீரா வழக்கு நடந்ததும் பல
நாளும் யௌவனம் அடைந்ததும் (திரு)

2. பரதேசிக் கோட எிப்பதும்
நடராஜர் பதத்தைத் துதிப்பதும்
பக்திவிடா துள்ளங் களிப்பதும் (திரு)

3. * * * *

4. வாரும் வாருமென்று மலரடி பணிந்து
வருந்தி வருந்தியவ ளுள் அழைத்தாள்
மாரியி னனை ந்திடும் பெரியவ ருடம்பை
மலர்ப் பீதாம் பரத்தால் துடைத்தாள்

* * * *

2. இராகம் : சாமா

பல்லவி

மாதவமே ஓருருவாய் வந்ததுகாண் வழிவசமாய்
(மாதவமே)

அநுபல்லவி

ஆதவனைக் கண்ட பனி போலே
ஆச்சு தேளன் பாவந் தொலைய (மாதவமே)

சரணங்கள்

1. எத்தனையோ ஜன்மங்களை எடுத்தலுத்தேன் விதிவசமாய்
பெற்றபிறவி நீக்கவன்றோ பெரியவர் தரிசனம் கிடைத்தது
(மாதவமே)

2. * * * *

3. பாதிரா வேளை தன்னில் வலியவந்த பாக்கியமே
**பாலகிருஷ்ணன்** பணியப் பாலிக்கவருந்திவந்த என் சாமி
(மாதவமே)

## 3. இராகம் : தேவகாந்தாரி

பல்லவி

இந்த ஓடு உமதடைக்கல மாகவைத்த்
திருக்க வேணு மையா (இந்த)

அநுபல்லவி

அந்த ரங்கமுள்ள தொண்ட ரென்றிங்
கண்டி வந்தே னிந்த நன்றி மறந்திடேன் (இந்த)

சரணங்கள்

1. பொன்னும் மணியும் இதற் குவமையா காது
பூதலத்தில் இது போற்கிடை யாது
அன்ன மெடுத்துப் புசித்தாலுமா ளாது
ஆசை கொள்வார்க் கிதுலபி யாது (இந்த)

2. இருந்த விடங்களில் எங்கும்ப்ர காசம்
இந்த ஓடுதரு மேகயி லாசம்
அருந்தவம்புரி வார்க்குவிசு வாசம்
அஷ்ட சித்திபெற லாம்இது நேசம் (இந்த)

3. பார்த்த பேர்க்குப்பழி பாவங்கள் போக்கும்
பாதை காட்டிப் பரமானந்தம் தேக்கும்
கீர்த்தி யோங்கப் பெரு வாழ்வையுண் டாக்கும்
கேட்ட போதுதரு வீர்திரு வாக்கும் (இந்த)

## 4. இராகம் : கல்யாணி

பல்லவி

நான் மூழ்கித் தருகிறேன்
நங்கை கைதொடாமல் (நான்)

அநுபல்லவி

தேன் பொழிந்திடும் தில்லைச் சிதம்பர
தீக்ஷிதர்களைக் கொண்டு சாக்ஷி யாகவைத்து (நான்)

* * * *

## 3. இயற்பகை நாயனுர் சரித்திரம்

### 1. இராகம் : வீரவசந்தா

பல்லவி

பயமாயிருக்குது காண் இயற்
பகையா னென் செய்வேன் (பயமா)

அநுபல்லவி

நயகுண சீலா உதாரகம் பீரா
தயவுள்ள தீரா வீரா சூரா (பயமா)

சரணம்

கேட்டது கொடுப்பீர் கீர்த்தியும் பெறுவீர்
வாட்டமில் லாமல் வாயிற் கேட்கப் (பயமா)

### 2. இராகம் : தேவமனேகரி

பல்லவி

தருகிறே மென்று சொன்னுல்
தாரு மென்று கேட்பேன் நான் (தருகி)

அநுபல்லவி

அரிதுதான் காணும் தேகியென் றும்மை
அடுத்துக் கேட்பது வருத்த மல்லவோ (தருகி)

சரணம்

மாநிலந் தன்னிற் கேட்ட தளிக்கின்ற
வள்ளலென் றும்மைநான் கேட்ட துண்டு
நானுமோ ரற்ப காரியத் தால்
நாடிவந் தேன் காணும் கோடி கொடுப்பினும் (தருகி)

### 3. இராகம் : அமீர்கல்யாணி

பல்லவி

ஏழைப்பார்ப்பா னடி
இச்சைப்பட லாமோடி இவன் (ஏழைப்)

* * * *

மாசி லாதகன வேஷதாரிப்பர தேசி யென்று சொன்னேன் நீ
நம்ப வேண்டாமடி கண்ணே இவன் (ஏழைப்)

* * * *

---

### (கட்டளைக் கலிப்பா)

கோல மார்ந்தபொன் மன்றுள் நடித்தருள்
குஞ்சி தப்பதம் நெஞ்சிற் றியானித்தே
சீல மார்ந்த குணக்குன்ற மேபல
சீர்த்தி மேவிய கீர்த்தன மாகிய
சாலு நல்லனு பானத்தி லேசிவ
சரண வன்பு மருந்தை யளித்தகோ
பால கிருஷ்ணமா பாரதி யேநின்றன்
பத்தி யாற்றல்எம் சித்தம் உருக்குமே.

---

## கீர்த்தனங்களின் முதற்குறிப் பகராதி

[எண் : பக்க எண்]


அற்புத, 160
ஆடிய பாததரிசனம், 161
ஆடிய பாதமே, 161
இந்த ஓடு, 174
இனி இனிமேல், 103
எங்கள் குரு, 100
எங்கே தேடிப், 163
ஏழைப் பார்ப்பா, 176
கண்ணாலே, 116
கண்ணே, 163
கனகசபாபதி நமஸ், 164
கைவிடலாகாது, 164
சபாபதிக்கு வேறு, 109
சம்போ கங்காதரா, 165
சரணாகதி, 165
சிவசம்போ, 166
தருகிறேனென்று, 175
திருநீலகண்டர், 172
திருவடி சரண, 166
தீயினில் முழுகினார், 159
தேடியலைகிறாயே, 167
நந்தன் சரித்ர 126
நலங்கிட வாரும், 106
நான் மூழ்கி, 174
பயமாயிருக்குது, 175
பார்த்துக்கடன், 115
பிச்சைக்கார, 167
பிறவாத முக்தி, 168
பேயாண்டி, 169
மறவாமல், 169
மனது அடங்குவதால், 170
மனதே உனக், 171
மாதவமே, 173
ஹரஹர சிவ, 110


—

# முகவுரை

அவ்வப்பொழுது நான் எழுதி வெளியிட்டு வந்த சங்கீத வித்துவான்களுடைய சரித்திரங்களில் இது மூன்ருவதாகும். மகா வைத்தியநாதையரோடு பல வருஷங்கள் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அதனுல் அறிந்த பல செய்திகள் இதன்கண் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இது முதலில் '**கலைமகள்**' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

மகா வைத்தியநாதருடைய சரித்திரச் சுருக்கமொன்றை அவர் தமையனுராகிய ஸ்ரீ இராமஸ்வாமி ஐயர் 'மகாவைத்தியநாத விஜயஸங்கிரகம்' என்ற பெயரிட்டு வெளியிட்டிருக்கின்ருர். தம்முடைய இளவலின் மீதுள்ள அளவற்ற அன்பினுல் அவர் எழுதியிருக்கும் விஷயங்களிற் சில இக்காலத்தில் மிகைபோலத் தோற்றும். ஆயினும் அப்புஸ்தகத்திலிருந்து பல விஷயங்களை நான் அறிந்து கொண்டேன்.

சில வகைகளில் எனக்குக் குருவாகச் சொல்லத்தக்கவரும் சில விஷயங்களில் என்பால் மிக்க அன்பராக நினைக்கத்தக்கவருமாகிய மகா வைத்தியநாதையரைப் பற்றி என் ஞாபகத்திலேயே சுருண்டு கிடந்த இச்செய்திகளை இந்த உருவத்தில் வெளிப்படுத்தச் செய்த இறைவன் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

சென்னை
24-12-36.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

உ

கணபதி துணை

# மகா வைத்தியநாதையர்

(1844—1893)

## முன்னுரை

தமிழ்நாட்டில் சங்கீதக்கலையை முறையாகப் பயின்று கர்நாடக சங்கீதத்தினால் விளையும் இன்பத்தை யாவரும் நுகரும் வண்ணம் செய்த வித்துவான்களுக்குள்ளே சமீபகாலத்தில் மிகவும் சிறந்து விளங்கிய மகா வைத்தியநாதையரென்னும் சங்கீத சிகாமணியின் புகழானது இந்நாடு முழுவதும் நிறைந்திருக்கிறது. மகா வைத்திய நாத சிவனென்றும் அவர் வழங்கப்படுவார். அவரது இசையின் இனிமையை நேரே அனுபவித்து உணர்ந்து இன்புற்றவர்களிற் சிலர் இக்காலத்திலும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பழைய ஞாபகம் உண்டாகும் போதெல்லாம் மகா வைத்தியநாதையருடைய நயமான இசை காதில் ஒலித்துக்கொண்டிருப்பதாகவே தோற்றும். தஞ்சையில் இருந்து விளங்கிய தாளப்பிரஸ்தாரம் சாமாசாஸ் திரிகள், பல்லவி கோபாலையர், வீணைப் பெருமாளையர், த்ஸௌகம் சீனுவையங்கார் முதலிய 'பெரிய வித்துவான்களுக்குப் பிறகு சிறந்த கீர்த்தியுடன் விளங்கியவர் அவர்.

## இயற்கை

அழகிய பொன்னிறமான வடிவம், திருநீறும் கண்டிகையும் தரித்த சைவத்திருக்கோலம், குளிர்ந்த பார்வை, அடக்கமான தோற்றம், இனிய வார்த்தைகள், காட்சிக்கு எளிமை, சிவபக்தி ஆகிய இவ்வளவும் வைத்தியநாத சிவத்தை நினைக்கும்பொழுது மனத்தில் ஒருங்கே தோன்றி இன்புறுத்துகின்றன. அவருக்கு அவரே ஒப்பு. மற்றொருவரைக் கண்டு, 'மகா வைத்தியநாத சிவத்தின் ஞாபகம் வருகிறது என்று சொல்ல முடியாது. அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் உலவி, தாம் கானம் செய்யும் இடங்களையெல்லாம் கந்தர்வலோகம் ஆக்கிய அந்தச் சங்கீதசாகரத் தினுடைய திறமை பிற்காலத்தில் ஒருவருக்கும் அமையவில்லை; முன்பு இருந்ததாகவும் தெரியவில்லை.

## ஊரும் தந்தையாரும்

வைத்தியநாத சிவத்தைத் தன் பெயரோடு சார்த்தி வழங்கும் பேறுபெற்ற ஊர் வையைச்சேரி என்பது. அது சோழநாட்டில் தஞ்சாவூருக்குக் கிழக்கே திட்டையென்னும் ஊருக்கு வடக்கே உள்ளது; மிகவும் புராதனமான சிவஸ்தலம்; அங்கே எழுந்தருளி யுள்ள ஸ்வாமியின் திருநாமம் அகஸ்தீசுவரரென்பது. அவ்வூரில் தமிழிலும் சங்கீதத்திலும் பயிற்சியுள்ளவர்களும் சிவபக்திச் செல்வம் வாய்ந்தவர்களுமாகிய சிலர் இருந்தனர். அவர்களுள் துரைசாமி ஐயரென்ற வித்துவான் ஒருவர். அவர் தந்தையாரும் சங்கீத வித்துவானுக விளங்கியவர். துரைசாமி ஐயர், ''பெருஞ்சரண்மா மறையோரும்'' என்று காளமேகத்தால் திருவானைக்காவுலாவிற் சிறப்பிக்கப் பெற்ற மழநாட்டுப் பிரகசரண வகுப்பைச் சார்ந்தவர்; அவர் கௌண்டின்ய கோத்திரத்தினராவர். பஞ்சநதையரென்பது அவரது சர்மா நாமம். பழைய காலத்திலிருந்த பெரிய சங்கீத வித்துவான்களால் இயற்றப்பெற்ற தமிழ் வடமொழி தெலுங்குக் கீர்த்தனங்கள் பல அவருக்குப் பாடம் உண்டு. தஞ்சை அரண் மனையைச் சார்ந்த சங்கீத வித்துவான்களுடைய கோஷ்டியிற் பெயர் பெற்றவர்களும் ஸம்ஸ்கிருதம் தமிழ் தெலுங்கு ஆகிய மூன்று பாஷைகளிலும் கீர்த்தனங்கள் இயற்றியவர்களும் பல்லவி பாடுவதில் திறமை உடையவர்களும் வையைச் சேரியை ஊராக உடையவர்களுமான ஆனை, ஐயா என்பவர்களின் பரம்பரையிற் பிறந்த ஒருவருடைய குமாரியையே அவர் பத்தினியாக அடைந்தனர்.

துரைசாமி ஐயர் சிறந்த சிவபக்தர். அடிக்கடி திருவையாறு சென்று ஸ்ரீ பிரணதார்த்திஹரர் சந்நிதியிலும் ஸ்ரீ தர்மசம்வர்த்தினி அம்பிகை சந்நிதியிலும் நின்று மனமுருகிப் பக்தி பரவசராகிக் கீர்த்தனங்கள் பாடித் துதிப்பது அவருடைய வழக்கம். சித்திரை மாதத்து ஸப்த ஸ்தானஉத்ஸவத்தில் ஸ்ரீ பிரணதார்த்திஹரர் திருப்பழனம் முதலிய ஸ்தலங்களுக்கு எழுந்தருளுகையில் அவர் பஜனை செய்யும் கோஷ்டியோடு சேர்ந்து பாடிக்கொண்டே உடன் செல்வார். அவருக்கு நான்கு குமாரர்கள் இருந்தனர். அவர்களுள் மூன்றும் புதல்வரே வைத்தியநாதையர். அவர் பிறந்த வருஷம் குரோதி. வைத்தியநாதையருக்கு மூத்தவர்கள் சாம்பமூர்த்தி ஐயர், இராமசாமி ஐயர் என்னும் இருவர்; இளையவர் அப்பாசாமி ஐயர் என்பவர்.

## இளமைப் பருவம்

துரைசாமி ஐயர் தம் குமாரர்களுக்கு உரியகாலத்தில் சங்கீதம் பயிற்றுவிக்கத் தொடங்கினர். அவர்களுள் இராமசாமி ஐயரும் வைத்தியநாதையருமே அதிற் சிறந்த அறிவு வாய்ந்தவராயினர்.

சங்கீதம் பயின்றதோடு தமிழிலும் வடமொழியிலும் உள்ள கருவி நூல்களை அவ்விருவரும் கற்று வந்தனர். வைத்தியநாதையருடைய சாரீரம் மிகவும் இனிமையுடையதாக இருந்தது. அவரும் இராமசாமி ஐயரும் ஒருங்கே தந்தையாரிடத்தில் இசை பயின்று வரும்போது இருவரின் திறமைகளும் தந்தையாருக்கு மிக்க மகிழ்வை ஊட்டின. தமக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவையும் அவ்விருவருக்கும் துரைசாமி ஐயர் கற்பித்தார். பின்பு சங்கீத லட்சண சாஸ்திரங்களை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்னும் அவா அவருக்கு உண்டாயிற்று. தந்தை மகற்கு ஆற்றும் நன்றியாகிய அவையத்து முந்தி இருப்பச் செயலுக்கு உரிய வழிகளை அவர் தேடலானர். அக்காலத்தில் தஞ்சையைச் சார்ந்த மகாநோன்புச் சாவடியில் * வேங்கட சுப்பிரமணிய ஐயர் என்னும் சிறந்த சங்கீத வித்துவான் ஒருவர் இருந்தார். அவர் சங்கீதப் பயிற்சியும் சங்கீத லட்சண சாஸ்திரங்களில் சிறந்த அறிவும் உடையவர். அவர்பால் தம் குமாரர்கள் இருவரையும் துரைசாமி ஐயர் ஒப்பித்துக் கற்கச் செய்தார்.

## இரட்டையர்

இளமை தொடங்கியே இராமசாமி ஐயரும் வைத்தியநாதையரும் இரட்டையர்களைப் போலவே பழகிவந்தனர். தசரத சக்கரவர்த்தியின் குமாரர்கள் நால்வருள் இராமனும் லக்ஷ்மணனும் ஒருங்கே சேர்ந்து பயின்றதைப்போல இவர்கள் இருந்தனர். இராமசாமி ஐயருக்குத் தமிழில் மிகுதியான விருப்பம் உண்டு. ஆதலின் சில தமிழ்நூல்களைத் தக்கவர்களிடம் ஓய்வு நேரங்களில் பாடங்கேட்டு வந்தார். வைத்தியநாதருடைய சாரீர இனிமை இராமசாமி ஐயருடையதைக் காட்டிலும் சிறந்து விளங்கியது. ஆயினும் அவர் இராமசாமிஐயர்பால் மரியாதையும் அன்பும் உடையவராகவே ஒழுகி வந்தார்.

---

*பட்டணம் சுப்பிரமணிய ஐயர் இவர்பால் சங்கீதம் பயின்றவர் என்பர்.

## இளமையில் முதிய அறிவு

வைத்தியநாதையர் ஏழாம் பிராயத்திலேயே இராகம் பல்லவி பாடும் திறமையை அடைந்தார். ஒன்பது பிராயத்திற்குள் சங்கிரக சூடாமணி, சங்கீத ரத்னுகரம் முதலிய லட்சண நூல்களைக் கற்று ஆராய்ந்து தெளிந்தனர். அவருடைய சாரீரம் அவர் நினைத்த வழியெல்லாம் இயங்கிவந்தது; மூன்று ஸ்தாயியிலும் அது செல்லும். ஆறுகாலமும் அவர் பாடுவார். ஆதலின் லட்சண சாஸ்திரங்களில் உரைக்கப்பட்டவைகளை அவர் தாமே பழக்கம் செய்து அவ்விலக் கணங்களை அனுபவ சாத்தியமாக்கி இன்புற்றனர்.

தஞ்சை நகரத்திலும் அதனைச் சார்ந்த மெலட்டூர் திருவையாறு என்னும் ஊர்களிலும் அக்காலத்தில் சங்கீத வித்துவான்கள் சிலர் இருந்துவந்தனர். சங்கீதக் கலையின் பல துறைகளில் பயின்று தனித்தனியே ஒவ்வொரு வகையிலும் அவர்கள் சிறப்புப் பெற்று அங்கங்கே இருந்தபிரபுக்களின் ஆதரவைப்பெற்று வாழ்ந்தனர். வைத்தியநாதையருடைய தந்தையார் அவரைப் பல சங்கீத வித்து வான்களுக்குப் பழக்கம் செய்வித்தனர். அதனுல் அவர்கள்பால் தனித்தனியே அமைந்திருந்த ஆற்றல்களையெல்லாம் அவர் உணர்ந்து அத்தகைய துறைகளிற் பயின்று சங்கீதத்தின் பரப்பை நன்ருக அறிந்தனர்.

சிறிய பிராயத்தில் பெரிய துறைகளிலெல்லாம் லட்சண அறி வுடன் பயிற்சி வாய்ந்த அவருடைய பெருமை அப்போது சங்கீத வித்துவான்கள்பாலும் பிரபுக்கள்பாலும் பரவலாயிற்று. பிரபுக்கள் தங்கள் வீட்டில் நடைபெறும் விவாகம் முதலிய விசேஷங்களுக்கு அவரை வருவித்து அவருடைய சங்கீதத்தைக்கேட்டு உபசரித்து ஸம்மானம் செய்து அனுப்புவார்கள். அவர் பாடும்பொழுதெல்லாம் உடனிருந்து இராமசாமி ஐயரும் பாடிவருவார். பல மகாசபை களில் அவருடைய பாட்டு நடைபெறலாயிற்று. 'வைத்தியநாதையர் சங்கீதம்' என்ருல் திரள் திரளாக ஜனங்கள் கூடிக் கேட்க வருவார்கள்.

## புதுக்கோட்டையிற் பெற்ற சிறப்பு

அவருடைய பத்தாவது பிராயமாகிய ஆனந்த வருஷத்தில், புதுக்கோட்டை ஸமஸ்தானுதிபதியாக விளங்கிய இராமசந்திரத் தொண்டைமானென்னும் வேந்தர் அவரைத் தம் தர்பாரில் பாட

வேண்டுமென்று விரும்பி அழைத்தனர். அவர் சென்றார். பச்சை மிரியன் ஆதிப்பையருடைய பரம்பரையினராகிய வீணை சுப்புக் குட்டி ஐயர், வீணை சுப்பையர் முதலிய சங்கீத ரத்தினங்கள் கூடிய மகாசபையில் அவ்விளைய சங்கீத சிகாமணி இசையமுதத்தைப் பொழிந்தார். அதனை நுகர்ந்து இன்புற்றயாவரும், "இவர் தெய்வப் பிறவியே!" என்று கொண்டாடினார்கள். சங்கீத வித்துவான்கள், "இவ்வளவு இளமையில் இத்தகைய தேர்ச்சியும் சாரீர இனிமையும் வாய்ந்தவர்களைக் கண்டறியோம்; கேட்டும் அறியோம். சங்கீதத்தின் தவப்பயனே இங்ஙனம் வந்ததுபோலும்!" என்று கூறி மகிழ்ந்தார்கள். தம்முடைய காலமெல்லாம் சங்கீதத்துக் கென்றே அர்ப்பணம் செய்து பயின்றவர்க்கல்லவா அதனுடைய அருமை பெருமை தெரியும்? புதுக்கோட்டை அரசர் பின்னும் சில நாட்கள் அவரை அங்கே இருக்கச் செய்து அவருடைய சங்கீத வெள்ளத்தில் மூழ்கி மகிழ்ந்து பல உயர்ந்த ஸம்மானங்களைச் செய்தனர். அங்கே இருந்தகாலத்தில் அந்நகரில் இருந்த சுப்புக் குட்டி ஐயர் முதலிய சங்கீத வித்துவான்களிடத்தில் வைத்தியநாதையர் சங்கீத சம்பந்தமான பல விஷயங்களை அறிந்து கொண்டனர்.

தமிழ்ப்பயிற்சியை விருத்தி செய்துகொண்ட இராமசாமி ஐயர் செய்யுள், கீர்த்தனம் முதலியவற்றை நன்றாக இயற்றும் ஆற்றலைப் பெற்றனர். நினைத்த பொருளை அமைத்து விரைவிற் பாடுவார். புதுக்கோட்டையில் இருந்தபொழுது மழவராயனேந்தலிலிருந்து வந்த தமிழ் வித்துவானொருவர் அங்கே அரசர் முன்னிலையில் அவதானம் செய்தனர். அப்பொழுது அந்தச் சபையில் வைத்தியநாதையரும் இராமசாமி ஐயரும் இருந்தனர். அவதானம் நிறைவேறியபின்பு அதனைச் சிறப்பித்து ஒரு கீர்த்தனத்தை இராமசாமி ஐயர் இயற்றிப் பாடிக்காட்டினார். அவருடைய கவித்துவசக்தியை யாவரும் பாராட்டினார்கள்.

## முத்துராமலிங்க சேதுபதி மன்னர் பாராட்டியது

தமது பதினோராம்பிராயத்தில், வைத்தியநாதையர் மதுரையில் இருந்த பல அன்பர்கள் விரும்பியபடி அங்கே சென்று ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்திலும் சில பிரபுக்கள் வீட்டிலும் இனிய கானம் செய்து ஸம்மானங்கள் பெற்றனர். அப்பொழுது மதுரையில் சிரஸ்தேதாராக இருந்தவரும் மாம்பழக்கவிச்சிங்க நாவலர்

முதலியவர்களை ஆதரித்தவருமாகிய வேங்கடசாமி நாயுடு என்பவர் அவருடைய பேராற்றலில் ஈடுபட்டுப் பலவகையில் உதவி புரிந்தனர். மேலூர்த் தாசில்தாராக இருந்த சீதாராமையரென்ற கனவானும் அவரைச் சிறப்பாக ஆதரித்தனர்.

அக்காலத்தில் இராமநாதபுர அரசராக விளங்கியவரும் சங்கீதத்திலும் தமிழிலும் சிறந்த பழக்கம் உடையவரும் ரஸிகசிரோமணியுமான முத்துராமலிங்க சேதுபதிமன்னர் வைத்தியநாதையருடைய கீர்த்தியை முன்பே அறிந்திருந்தனர். வைத்தியநாதையர் மதுரைக்கு வந்திருத்தலை அவர் அறிந்து இராமநாதபுரத்திற்கு வரும்வண்ணம் தக்கவர்களை அனுப்பி அழைத்தனர். அங்கே சென்று சேதுவேந்தருடைய அன்பையும் ஆதரவையும் பெற்று அவருடைய சபையில் வைத்தியநாதையர் பாடி மகிழ்வித்தனர். அவருடைய சங்கீதத்தைச் சில நாட்கள் கேட்டமட்டில் திருப்தியடையாத சேதுவேந்தர் அங்கேயே மூன்றுமாதம் அவரை இருக்கச் செய்தனர். வைத்தியநாதையர் அங்கே இருந்த ஒவ்வொரு நாளும் ஒரு விழாவாகவே தோன்றியது. அவர் தங்யிருந்த மூன்று மாதங்களில் அவருடைய சங்கீதம் நாள்தோறும் அங்கேயிருந்த சங்கீத வித்துவான்களுடைய ஆதரவினால் புதுமையுடையதாகி விளங்கியது.

தமிழில் நல்ல பயிற்சியுற்றிருந்த முத்துராமலிங்க சேதுபதி அரசர் அவ்விருவர்பாலும் தமிழ்ப் பயிற்சி இருத்தலையும் இராமசாமி ஐயருக்குச் செய்யுள் இயற்றும் ஆற்றல்வாய்ந்திருப்பதையும் அறிந்து மகிழ்ந்தனர். வைத்தியநாதையர் பின்னும் முயன்று தமிழ் பயின்றால் அப்பயிற்சி அவருடைய பெருமையை மிகுதியாக்கும் என உணர்ந்த சேது வேந்தர் தம் கருத்தை அவரிடம் தெரிவித்தனர்; அன்றியும் கந்தபுராணச் சுருக்கப் பிரதி ஒன்றை அவரிடம் கொடுத்து, ''இந்த நூலை வாசித்துவந்தால் இன்னும் மிகுதியாகத் தமிழ்ப்பயிற்சி உங்களுக்கு உண்டாகும். அப்பால் சர்க்கரைப் பந்தரில் தேன்மாரி பெய்தது போல் இருக்கும்'' என்று அன்புடன் கூறினார். அதுமுதல் அவர் அதனைப் பாராயணம் செய்து வந்தனர்; தமிழ்ப்பயிற்சியில் ஊக்கம் உடையவராகித் தம் தமையனாராகிய இராமசாமி ஐயரிடத்திலும் பிறரிடத்திலும் பல நூல்களைக் கற்றுத்தேர்ந்தனர். இதனை இராமசாமி ஐயரே தாம் எழுதிய **'மகா வைத்தியநாத விஜய சங்கிரகம்'** என்ற புத்தகத்தில், ''மஹாராஜா அவர்கள்......கந்தபுராணச் சுருக்கப் புஸ்தகத்தையும்

முதல் இலக்கியமாகச் சம்மானித்தார்கள் கற்பகம் போன்ற கைக்கமலங்களாற்கொடுத்த நாள்முதல் என்னிடத்தில் இனிய தமிழ் பயின்று திரியிலேற்றிய தீவட்டிபோல் என்னினும் சிறந்த கல்வியுடையவராய் விளங்கினர்'' என்று புலப்படுத்தி யிருக்கிறுர். நூல்களில் உள்ள நயங்களை நுண்ணிதாக ஆராய்ந்து தெரிந்து அவற்றைச் சுவைதோன்ற எடுத்துரைத்தலும், மிகவும் கடினமான நூற்பகுதிகளை அறிந்து எளிதில் விளக்குதலும், செய்யுள் இயற்றுதலுமாகிய ஆற்றல்கள் நாளடைவில் அவர்பால் உண்டாகி வளர்ச்சி பெற்றன.

## எட்டையபுரத்தில் அடைந்த சிறப்பு

இராமநாதபுரத்திலிருந்து அவர் எட்டையபுரம் சென்றனர். அங்கே முத்துசாமி தீட்சிதர் வம்சத்தினராகிய சுப்பராம தீட்சிதரென்பவர் ஸமஸ்தான சங்கீத வித்துவாளுக விளங்கிவந்தனர். வைத்தியநாதையர் அங்கே பாடி ஸம்மானங்கள் பெற்றனர். அப்பொழுது இராமசாமி ஐயர் சில வித்துவான்களின் விருப்பத்தின்படி தமிழில் இராகமாலிகை ஒன்று பாடிப் பல வித்துவான்கள் கூடிய சபையில் அரங்கேற்றினர். அந்த ராகமாலிகை பிற்காலத்திற் பல இடங்களில் வழங்கிவரலாயிற்று.

## திருநெல்வேலிக்குச் சென்றது

அப்பால் திருநெல்வேலி சென்று * திருக்கோயிலை வலம் வந்து ஸ்ரீ நெல்லையப்பரையும் ஸ்ரீ காந்திமதிப் பிராட்டியாரையும் தரிசித்துச் சந்நிதானத்திலிருந்து அந்நகரவாசிகளெல்லாரும் விரும்பிக் கேட்ப இனிய கானமழை பெய்து குளிரச் செய்தனர். பிரபுக்கள் பலர் ஸம்மானம் செய்தனர். அக்காலத்தில் அந்நகரில் இருந்தவரும் அத்வைத நூல்களிற் பயிற்சி மிக்கவருமாகிய ஐயாசாமி பிள்ளை முதலியவர்களுடைய பழக்கம் அவருக்கு உண்டாயிற்று. அங்கே இருந்த பஜனைமடம் சிதம்பரம் பிள்ளையென்பவர் அவருடைய முதிர்ந்த அறிவை வியந்து அந்த நகரில் இருக்கும் வரையில் தமது பஜனை மடத்திலேயே இருக்கச்செய்து வேண்டிய சௌகரியங்களைச் செய்வித்தனர்.

---

* மகா வைத்தியநாத விஜய சங்கிரகம்.

திருநெல்வேலியில் அவர் இருத்தலையறிந்து ஆழ்வார்குறிச்சித் தளவாய் குமாரசாமி முதலியார் என்பவர் தம்முடைய அரண்மனைக்கு அவரை வருவித்து அவருடைய சங்கீதத்தைக்கேட்டுச் சிறந்த உபசாரங்கள் செய்வித்து ஆறுமாதம் இருக்கச்செய்தார்; அப்பால் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று செந்திலாண்டவனைத் தரிசிக்கச் செய்து பலர் கூடிய சபையில் அவரைப் பாடுவித்துக் கௌரவித்தனர். அங்கே இருந்த திரிசுதந்தரர்களுள் (முக்காணியர்களுள்) படித்தவர்களாகியசிலர் அவர்பால் அளவிலா அன்பு பூண்டு பாராட்டி வந்தனர். சிலநாள் அங்கே தங்கித் தரிசனம் செய்துவருகையில் இராமசாமி ஐயர் திருச்செந்திற் சந்த விருத்தம், திருச்செந்தில் யமக அந்தாதி என்னும் இரண்டு பிரபந்தங்களை இயற்றிப் பலபுலவர் கூடிய சபையில் அரங்கேற்றினர். சந்தவிருத்தம் முதலியவற்றை வைத்தியநாதையர் மனனம் பண்ணித் தம் இனிய சாரீரத்தால் அழகுபடுத்திப் பாடிவந்தனர். பிறகு தளவாய் முதலியார் மூலமாக, அக்காலத்தில் வடமொழி தென்மொழிகளிற் பயிற்சியுடையவராக விளங்கிய சொக்கம்பட்டி ஜமீன்தாருடைய பழக்கத்தையடைந்து சிலகாலம் அவருடன் இருந்து அவரைத்தம் இசைத்திறமையால் மகிழ்வித்துப் பலவகைப் பரிசு பெற்றனர்; அங்கிருந்து வேறு பல இடங்களுக்கும் சென்று தம் ஆற்றலை வெளிப்படுத்தி ஸம்மானம் பெற்றார். இங்ஙனம் வைத்தியநாதையர் பாண்டி நாட்டிலும் தம்முடைய இசைவெள்ளத்தைப் பரப்பி யாவருடைய மனத்தையும் குளிரச் செய்து புகழ் சிறந்து விளங்கினர்.

## மகா வைத்தியநாதையரும் திருவாவடுதுறை ஆதீன கர்த்தரும்

தமிழையும் வடமொழியையும் சங்கீதத்தையும் வளர்த்து வந்த தாயகங்களில் **திருவாவடுதுறையாதீனம்**ஒன்று. வித்துவான்களைப் போற்றி ஆதரித்துப் பலவகைக் கல்வியையும் பரப்பும் சிறந்த உபகாரத்தைப் பழங்கால முதற்கொண்டே அவ்வாதீனம் இயற்றி வந்திருக்கிறது. தமிழ்ப்புலமையும் வடமொழிப் பயிற்சியும் இசையை உணர்ந்து இன்புறும் தன்மையும் உடைய பலர் அவ்வாதீனத்தலைவர்களாக இருந்து விளங்கி வந்தனர். இன்றளவும் புலவர்களுக்கு இயன்றவரையில் உதவி செய்துவரும் அவ்வாதீனத்திற்கு, இயல்பாக அமைந்த புகழை மிகவும் பெருக்கிய பெருமையை உடையவர் *மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகராவர். திருவாவடு

*மேலகரம் என்பது தென்காசியிலிருந்து திருக்குற்றாலத்துக்குப் போகும் மார்க்கத்தில் உள்ள ஊர். சுப்பிரமணிய தேசிகருடைய பூர்வாசிரம பரம்பரையினர் இப்போதும் அங்கே இருக்கின்றனர்.

துறையாதீனத்தில் பதினாரும் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்து அவர் இயற்றிய செயல்களுள் அம்மடத்தைக் கலைமகள் களி நடஞ்செய்யும் இடமாக ஆக்கியது ஒன்றாகும். அவர் காலத்தில் தமிழ்ப்புலவர்களும் வடமொழி வித்துவான்களும் சங்கீத வித்துவான்களும் அந்த மடத்திற்கு வந்துவந்து தங்கள் ஆற்றல்களைப் புலப்படுத்தி ஆதரிக்கப்பெற்று ஊக்கமடைந்து மேன் மேலும் வளர்ச்சி பெற்றார்கள். தமிழுலகம் முழுதும் தமது பெரும் புலமைத்திறத்தையும் புகழையும் நாட்டிய திரிசிரபுரம் வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களை மகாவித்துவானாக்கி அப்புலவர் பெருமானுடைய சிறந்த ஆற்றல்களை உலகம் அறியச் செய்ததற்கு முக்கிய காரணமாக இருந்தவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரே. அங்ஙனமே வையை வைத்தியநாதையரையும் **மகா வைத்திய நாதையராக்கி** என்றும் அச்சிறப்புப்பெயருடன் வழங்கும்படி செய்வித்தவரும் அவரே. அவர் அன்புடன் அளித்த அப்பெயர் இன்றும் தமிழ்நாட்டாருடைய நாவில் மலர்ந்து விளங்குகின்றது.

வைத்தியநாதையர் அந்தப்பட்டத்தைப் பெற்ற காலம் அவருடைய பன்னிரண்டாவது பிராயமாகும். அக்காலத்தில் மேற் கூறிய சுப்பிரமணிய தேசிகர் சின்னப்பண்டார சன்னிதியாக இருந்தார். அப்போது அந்த ஆதீனத்தின் பெரியபட்டத்தில் விளங்கியவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகரென்பவர். திருவாடுதுறை ஆதீனத்துக்குரிய முக்கிய ஸ்தானங்களுள் ஒன்றும் சின்னப் பட்டத்திற்குரிய தலைமையிடமுமாகிய *கல்லிடைக்குறிச்சி மடத் தில் சுப்பிரமணிய தேசிகர் தம்முடைய சின்னப்பட்டத்தில் பெரும் பாலும் இருந்து வந்தார். அவர் இருந்து வந்த காலங்களிலெல்லாம் அவ்விடத்தில் வித்துவான்களுடைய கலையாரவாரமும் பிரபுக் களுடைய சல்லாபங்களும் நிறைந்திருந்தன. திருவனந்தபுரத்திற்குச் சென்று ஸம்மானம் பெறும் வித்துவான்கள் அங்கும்வந்து பரிசு பெற்றுச் செல்வார்கள். அக்காலத்தில் சுப்பிரமணிய தேசிகரால் ஆதரிக்கப் பெற்ற சங்கீத வித்துவான்களுள் சிவகங்கை வித்து வானாகிய பெரிய வைத்தியநாதையரும், சின்னவைத்தியநாதை யரும் சிறந்தவர்கள். சின்னவைத்தியநாதையர், பெரியவைத்திய நாதையருக்கு அடுத்தபடியாக நினைக்கப்படுபவர். அவர்களிடத்தில் தேசிகருக்கு மிக்க அன்புண்டு. அவர்களும் அடிக்கடி தேசிகர் பால் வந்து பாடி ஸம்மானம் பெற்றுச் செல்வார்கள்.

---

*இது திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் தாலூகாவிலுள்ளது.

பாண்டிய நாட்டிற் பல இடங்களில் தமது சங்கீதத்திறமையை வெளிப்படுத்தி வந்த வையை வைத்தியநாதையர், கல்லிடைக் குறிச்சிக்குத் தம் தமையனுருடன் சென்ருர். அவருடைய புகழைச் சுப்பிரமணிய தேசிகர் முன்பே அறிந்து அவர்பாட்டைக் கேட்க வேண்டுமென்று நினைத்திருந்தார். அது தற்செயலாக நிறை வேறியது. ராக்ஷச வருஷம் தை மாதம் (1856) வைத்தியநாதையர் கல்லிடைக்குறிச்சிக்கு வந்தாரென்று தெரிகிறது. தேசிகர் அவ ருடைய இன்னிசையைச் செவியாரக் கேட்டு உள்ளங்குளிர்ந்தார்; அதுகாறும் கேட்டிராத தனி வசீகரத்தன்மை ஒன்று அவ்விசையில் அமைந்திருந்ததையும், இளமையில் உயர்ந்த அறிவும் சிறந்த குணமும் சிவபக்திச் செல்வமும் அவர்பாற் பொருந்தியிருத்தலையும் அறிந்து வியந்தார். பின்பு செய்யவேண்டிய செயல்களைப் பல காலத்துக்கு முன்னரே மனத்துள் எண்ணி அவற்றிற்கு ஆவன புரியும் இயல்புடைய தேசிகரது உள்ளத்தில் தம்முடைய சபைக்கு அணிகலனுக வைத்தியநாதையர் விளங்கும்படி செய்ய வேண்டு மென்னும் எண்ணம் அப்பொழுதே உண்டாயிற்று.

தைமாத அசுவதி நக்ஷத்திரம் திருவாவடுதுறை ஆதீன ஸ்தாபகராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தியின் குருபூஜைக்கு உரிய நாள். கல்லிடைக் குறிச்சியிலும் திருவாவடுதுறையில் நடைபெறு வது போன்ற சிறப்புடனே அந்தக் குருபூஜை நிகழும். அந்த வருஷம் குருபூஜை வரையில் வைத்தியநாதையர் கல்லிடைக் குறிச்சியிலேயே தேசிகர் விருப்பத்தின்படி இருந்தார். குருபூஜைக்கு வழக்கம்போல் தென்மொழி வடமொழிப் பண்டிதர்கள் வந்திருந் தனர். பெரிய வைத்தியநாதையர், சின்னவைத்தியநாதையர், வீணை - சின்னையா *பாகவதர், ஸ்ரீவைகுண்டம் சுப்பையர், பிச்சுமணி பாகவதர் முதலிய பெரிய சங்கீத வித்துவான்களும் வந்திருந்தனர். இளமையில் நிரம்பிய இசையறிவு வாய்ந்த வையை வைத்தியநாதையரிடத்தில் அவர்களுள் சிலருக்குப் பொருமை இருந்துவந்தது; அவரைச் சுப்பரமணிய தேசிகர் பாராட்டுதலை அவர்கள் விரும்பவில்லை. "இந்தச் சிறு பையனைப் பண்டார சன்னிதி இவ்வளவு தூரம் கொண்டாடுகிருரே; இவனுக்கு என்ன தெரியும்?" என்று சிலர் தம்முட் பேசிக் கொள்ளலாயினர்.

---

*சங்கீத வித்துவான்களைப் பாகவதரென்பர் தென்பாண்டி நாட்டார்.

அதனை யறிந்த தேசிகர் குருபூஜைக்காக வந்திருந்த பல வித்துவான்களின் முன்னிலையில்வையை வைத்தியநாதையருடைய ஆற்றலைக்காட்டச்செய்து சிறப்பிக்க வேண்டுமென்று எண்ணினர்; பலர் கூடும் சமயம் வேறொன்று வாய்ப்பது அரிதாதலின் வைத்திய நாதையருடைய உண்மை மதிப்பை வித்துவான்களும் அவர்கள் மூலமாக மற்றவர்களும் அறியும்படி செய்வதற்கு அதுவே ஏற்ற சமயமென்று நிச்சயித்தார்; வந்திருந்த வித்துவான்களுட் சிறந்த வர்களாகிய பெரிய வைத்தியநாதையர், சின்ன வைத்தியநாதைய ரென்னும் இருவரோடும் வைத்தியநாதையரைப் பாடச் செய்தால் இந்த இளைய வித்துவான், அவர்களுக்கு இளையா வித்துவானாக இருத்தலை யாவரும் அறிந்துகொள்ளக் கூடுமென்று நினைத்தார். அப்பொழுது அங்கே தமிழில் அரிய புலமையும் வடமொழியிலும் இசையிலும் நல்ல பயிற்சியும் உடையவரும், ஆதீனவித்துவானும், தேசிகருடைய தமிழ் ஆசிரியரும், அவரால் நன்கு மதித்து மரி யாதையோடு உபசரிக்கப் பெற்றவருமாகிய [1]தாண்டவராயத் தம் பிரானென்பவர் உடனிருந்தார். அவர்பால் தேசிகர் தம் கருத்தை அறிவித்தனர். அவர் அது மிகவும் பொருத்தமானதென்று கூறினர். பின்பு தேசிகருடைய கட்டளையின்படி அவர் வைத்திய நாதையரை அணுகி, ''பெரிய வைத்தியநாதையர் சின்ன வைத் தியநாதையரென்னும் இருவருடனும் உங்களைப் பாடச்செய்ய வேண்டுமென்பது சந்நிதானத்தின் திருவுள்ளம். அவர்களுடைய திருவுள்ளக் கருத்து அளவற்ற அரிய பயன்களைத் தருவதாகவே இருக்கும். நீங்கள் அஞ்சாமற் பாடுவீர்களா?'' என்று கேட்டார். வைத்தியநாதையர், [2]''நாங்கள் அவர்களைவிட மிக்க இளைஞர் களாயினும் சிவபெருமான் திருவருளால் எங்களால் இயன்ற வரையில் பாடுவோம். இறைவன் திருவருளும் சந்நிதானத்தின் பேரன்பும் எங்களுக்குத் துணையாக இருக்கும்பொழுது நாங்கள் அஞ்சுவதற்குக் காரணமே இல்லை'' என்று கூறி,

(திருச்சிற்றம்பலம்)

[3]''மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்

1. மகாவித்துவான் ஸ்ரீ மீனட்சி சுந்தரம்பிள்ளையவர்களை ஆதீனவித்துவா னுக்கியதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் இவரே.

2. வைத்தியநாதையர் பேசும்பொழுது தம்முடைய தமையனாரையும் உளப்படுத்திக் கொண்டே பேசுவார்; அவரும் அங்ஙனமே பேசிவருவார்.

3. இது சைனரை வெல்ல இயலுமாவென்றஞ்சிய மங்கையர்க்கரசியாரை நோக்கி ஞானசம்பந்தர் அருளிச்செய்தது.

ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல வல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே''

என்ற தேவாரத்தையும் சொன்னார். வித்தியா வீரராகிய அவருக்கு அச்சம் ஏது? அவருடைய சொற்களைக் கேட்ட தாண்டவராயத் தம்பிரான் அவரது இளமையையும் சிறந்த அறிவையும் சிவபிரான் அருளை மறவா நினைவையும் அறிந்து உருகினார். அவர் கூறிய தேவாரத்தைக் கேட்டு, *''திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் இங்ஙனமே இருப்பார்போலும்!'' என்றெண்ணி மகிழ்ந்தார்.

பெரியவைத்தியநாதையர் பெரிய சங்கீத வித்துவான். பிறருடைய ஆற்றலைக் கண்டு அழுக்காறு கொள்பவரல்லர். வையை வைத்தியநாதையருடைய ஆற்றலை நன்கு உணராத குறையினாலும் உடனிருந்த வித்துவான்கள் அழுக்காற்றால் தூண்டிய சொற்களாலும் சுப்பிரமணியதேசிகர் வையைவைத்தியநாதையரைப் பாராட்டி வந்ததை அவர் விரும்பவில்லை. அவரைப் போலவே சின்ன வைத்தியநாதையரும் இருந்தனர்.

மூன்று வைத்தியநாதையர்களும் பாடுவார்களென்ற செய்தி எவ்விடத்தும் மெல்லப் பரவியது. வந்திருந்த யாவரும் அன்றைத் தினம் நடைபெறும் சங்கீதப் போட்டியைக் காணவேண்டுமென்ற ஆவலோடு கூடினர். குருபூஜைக்கு மறுநாள் இரவு சுப்பிரமணிய தேசிகரது முன்னிலையில் சபை கூட்டப் பெற்றது. சங்கீத வித்துவான்கள், வடமொழி தென்மொழிப் புலவர்கள், தம்பிரான்கள், பிரபுக்கள் முதலியோர் கூடியிருந்தனர். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய விருப்பத்தின்படி தாண்டவராயத் தம்பிரானே அந்தச் சபையை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். வீணை - சின்னையா பாகவதர் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டனர். சுப்பிரமணிய தேசிகர் விருப்பத்தின்படி அங்கேயிருந்த சங்கீத வித்துவான்களுள் மேம்பட்டு விளங்கும் பெரிய வைத்தியநாதையர் முதலியவர்கள் முறையே தனித்தனியே பாடினார்கள். சின்ன வைத்தியநாதையர், பெரிய வைத்தியநாதையருக்குத் தம்பி முறையினர்; வையை வைத்தியநாதையரை விடச் சில ஆண்டுகளே மூத்தவர்.

*திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அவதரித்த கௌண்டின்ய கோத்திரந்திலேயே இந்நூலின் தலைவர் அவரித்தமை இந்நிகழ்ச்சியாற் சிறப்புறுகின்றது.

பின்பு தாண்டவராயத் தம்பிரான், "சின்ன வைத்தியநாதையரையும் வையை வைத்தியநாதையரையும் ஒருங்கே பாடும்படி சொல்லலாமா?" என்று பெரிய வைத்தியநாதையரைக் கேட்டனர். அவர், "அப்படியே செய்யலாம்" என்றார். "பாடுங்காலத்தில் குற்றம் யாரிடமேனும் காணப்படின் அதனை மற்றவர் எடுத்துக் கூறலாம்" என்று தாண்டவராயத் தம்பிரான் கூறினர். நாட்டை முதலிய கனராகங்களை இருவரும் தனித்தனியே பாடிவந்தனர். இடையே ஒரு சமயத்தில் சின்ன வைத்தியநாதையர் பாடுவதில் பிழையிருப்பதை வையை வைத்தியநாதையர் உணர்ந்து, "இந்த ராகத்திற்கு இந்த ஸ்வரம் வர்ஜ்யம்" என்றார். சின்ன வைத்திய நாதையர் "நான் சரியாகவே பாடினேன்" என்றார். மத்தியஸ்த ராகிய சின்னையா பாகவதர் மீண்டும் அவரைப் பாடச்செய்து அவர் பாடியபடி அதனைத் தம் வீணையில் வாசித்துக் காட்டினார்; அப்பொழுது அது பிழையென்பது எல்லோருக்கும் தெளிவாக விளங்கியது. வையை வைத்தியநாதையர் கூறியது சரியென்பதை யாவரும் உடனே அறிந்தனர்.

பிறகு வையை வைத்தியநாதையர் தனியேபாடி வந்தார். அப்பொழுது அவர் பல வகையான ஆற்றல்களை வெளிப்படுத்தினார். [1]'அனுமந்தரம் முதல் தொடங்கி மந்தரம், மத்திமம், தாரம் என்னும் மூன்று ஸ்தானங்களையும் மும்முறை மேன்மேலேற்றி வீணையில் விரல் நடப்பதுபோல் குரலை நடாத்தி அவ்வாறே அவரோகணமுறையாகச் சிரல் வீழ்ச்சிபோற் குரலை இறக்கிப்' பாடிக்காட்டினார். அவருடைய இசை அன்று வெற்றி உணர்ச்சியோடு விளங்கியது. அவர் பாடப்பாட அந்தச் சபையோரெல்லாம் ஆச்சரியமுற்றுச் சித்திரப்பாவைகளைப் போல் ஆகிவிட்டனர். பெரிய வைத்தியநாதையருக்கு அப்பொழுதுதான் உருவத்தின் சிறுமைகண்டு தாம் அவமதித்தது பிழையென்பது மனத்திற்பட்டது; வையை வைத்தியநாதையருடைய இசையில் மனம் உருகித் தம்மையே மறந்தனர். அதில் ஈடுபட்டுச் சிரச்கம்பம் செய்தார்: இடையிடையே, 'பேஷ்! பேஷ்!' என்று கூறினர். பகைவர்களும் மதிக்கும் வீரமே சிறந்த வீரமென்று பெரியோர் கூறுவதுண்டு. அத்தகைய வீரம் சங்கீதக்கலையில் வையை வைத்தியநாதையர் பால் இருந்தமை அன்று வெளிப்பட்டது.

---

1. மகாவைத்தியநாத விஜயசங்கிரகம்.

வையை வைத்தியநாதையர் பாடிக்கொண்டே வந்தார். இடையில் ஓர் இராகத்தை மிக விரிவாகப் பாடத்தொடங்கினார். அங்கே இருந்த வித்துவான்களால் இன்ன இராகமென்று அதனைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. பெரிய வைத்தியநாதையருக்கும் தெரியவில்லை. வித்துவான்கள் ஒருவரையொருவர் முகக் குறிப்பினால், 'என்னராகம் இது?'' என்று வினாவிக்கொண்டிருந்தனர். அதனை அறிந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மனமகிழ்ந்து அங்கிருந்த வித்துவான்களை நோக்கி, ''இப்பொழுது இவர் பாடுவது என்ன ராகம்?'' என்று முறையே ஒவ்வொருவரையும் கேட்டார். ஒருவரும் விடை கூறவில்லை. பெரிய வைத்தியநாதையரையும் கேட்டார். நெடுநேரமாக அந்த இராகம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாமல் யோசித்துக் கொண்டிருந்த அவர், ''அது தானே தெரியவில்லை; ரக்திராகமாக இருந்தால் தெரிந்துகொள்ளலாம். பையன் தஞ்சாவூர்ப்பக்கத்தில் அப்பியாசம் பண்ணின ஏதோ சங்கதியை எடுத்து விடுகிறான். அபூர்வராகமாயிருக்கிறது'' என்றார். தேசிகர் உடனே வையை வைத்தியநாதையரைப் பார்த்து, 'நீங்கள் பாடுவது என்ன ராகம்?'' என்று கேட்டார். அவர், ''இது *சக்கரவாகமென்னும் ராகம்; சங்கீதரத்னாகரத்தில் இதன் இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது'' என்று அவ்விலக்கணத்தை ஆதாரத்துடன் எடுத்துச்சொல்லி, அதனை அமைத்து விரிவாகப் பாடிக் காட்டினார். சபை முழுவதும் ஆனந்தக்கடலில் முழுகியிருந்தது. பெரிய வைத்தியநாதையர் மூக்கில் சுட்டுவிரலை வைத்து வியப்பேவடிவமாக அமர்ந்திருந்தார். வீணை-சின்னையா பாகவதர் முதலியோர் மெய்ம்மறந்து இன்புற்றனர்.

அந்தச் சமயத்தில் சுப்பிரமணிய தேசிகர் பெரிய வைத்தியநாதையரை நோக்கி, ''இவருடைய திறமை எப்படி இருக்கிறது? உங்களுடைய அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார்.

**பெரிய:**—வெகு புத்திசாலி; மிகவும் நன்றாக அப்பியாசம் பண்ணியிருக்கிறான்.

**சுப்பிரமணிய தேசிகர்:-** இந்தச் சபையில் உங்களைப் போன்ற பெரியவர்கள் இருக்கும் பொழுது அஞ்சாமல் நிர்வாகம் செய்த இவருக்கு உங்களுடைய பூர்ண ஆசீர்வாதம் உரியதல்லவா?

---

*இந்த இராகம் அக்காலத்திற் பாடப்பட்டுப் பழக்கத்துக்கு வாராமையால் பலருக்குத் தெரியாமல் இருந்தது.

**பெரிய:**—அதில் தடை என்ன? சிரஞ்சீவியாக வாழ்ந்து சங்கீதவித்தையின் பெருமையை மேன்மேலும் வெளிப்படுத்தி விளங்க வேண்டும்.

**சுப்பிர:**—இப்படி மனமுவந்து சொல்லுகிற உங்களுடைய பெருந்தன்மையை என்னவென்று சொல்வோம்! உங்களுடைய ஆசீர்வாதம் இவருக்கு நல்ல க்ஷேமத்தை உண்டாக்குமென்பதில் தடையேயில்லை. இவருடைய சங்கீத சாமர்த்தியத்தை உங்களைப் போல வேறு யாராவது நன்ருக அறியமுடியுமா?

**பெரிய:**—முடியவே முடியாது.

**சுப்பிர:**—இவருக்கு இந்தச் சமயத்தில் ஒரு பட்டம் கொடுப்பது உசிதமாக இருக்குமல்லவா?

**பெரிய:**—அவசியம் கொடுக்க வேண்டியது தான். அப்படிக் கொடுப்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.

**சுப்பிர :**—தங்களுக்குப் பெரிய வைத்தியநாதையரென்ற பட்டப் பெயர் இருப்பதால் இவருக்குப் 'பெரிய' என்ற பட்டம் பொருந்தாது.

**பெரிய :**—பொருந்தாதுதான்.

**சுப்பிர :**—சின்ன வைத்தியநாதையர் என்று கொடுப்பதும் உசிதமாக இராது; அன்றியும் அந்தப் பட்டப்பெயர் உங்களுடைய தம்பிக்கு இருக்கிறது. நடு வைத்தியநாதையரென்ற பெயர் நன்ருக இல்லை. ஏதாவது கௌரவமுள்ள பட்டமாக இருக்க வேண்டுமல்லவா?

**பெரிய :**—ஆமாம்!

**சுப்பிர :**—இவருடைய வித்தைக்கு ஏற்ற பட்டமாக இருந்தால்தான் நன்ருக இருக்கும். நீங்களும் மற்றவர்களும் உள்ள இவ்வளவு பெரிய சபையில் யோசியாமல் எதையாவது கொடுத்து விடுவது இவருடைய திறமையை வெளிப்படுத்தாது. எவ்வளவோ அரிய விஷயங்களை இவர் கற்றிருக்கிருர் அல்லவா? இவருடைய கீர்த்தி பரவுவதற்கும் எக்காலத்திலும் இந்தச்சபையையும் உங்களைப்

போன்ற பெரியவித்துவான்களுடைய ஆசீர்வாதத்தையும் இவர் மறவாமல் இருப்பதற்கும் ஏற்றபடி பெரியபட்டமாக இருக்க வேண்டும்.

**பெரிய :**—சந்நிதானம் சொல்வது மிகவும் சரி.

**சுப்பிர :**—இவருக்குத் தெரிந்த விஷயங்களிற் சில தங்களுக்குக்கூடப் பழக்கம் இல்லையென்று தெரிகிறது. இப்பொழுதே இவர் இப்படி இருக்கும் பொழுது தங்கள் பிராயம் வந்தால் எப்படி விளங்குவாரோ?

**பெரிய :**—சிறந்த புத்திசாலியாக இருப்பான்; நன்ருகப் பிரகாசிப்பான்.

**சுப்பிர :**—ஆகையால், இவருக்கு **மகா வைத்திய நாதையர்** என்ற பெயர் வழங்கலாமா?

**பெரிய :**—ஆஹா! தடையில்லாமல் செய்யலாம்; எனக்கு மிகவும் சந்தோஷமே.

இருவருக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணையைச் சபையினர் கவனித்துவந்தனர்; எந்தப் பட்டம் அளிக்கலாமென்று தீர்மானமாகிறதோ என்பதை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்தனர். தேசிகர் பெரிய வைத்தியநாதையருக்கு வருத்தம் உண்டாகாதபடி அவரோடு மிகவும் சாதுரியமாகப் பேசிவருவதைத் தாண்டவராயத்தம்பிரான் அறிந்து மகிழ்ந்தார்; பெரிய வைத்திய நாதையர் உண்மையான வித்தைக்கு மதிப்புக் கொடுக்கும் தன்மையுடையவரே என்பதை உணர்ந்து வியந்தார். அந்தச் சபையில் நிகழ்ந்த வாதத்தில் வெற்றியுற்ற வையை வைத்தியநாதையர் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவருளை நினைத்துக்கொண்டிருந்தார்.

'மகா வைத்தியநாதையர்' என்னும் கௌரவப் பெயரை வழங்கலாமெனத் தேசிகர் கூறவும் பெரிய வைத்தியநாதையர் உடன்பட்டவுடனே சபையோர் யாவரும் அதுகாறும் அடக்கி வைத்திருந்த ஆனந்தக் குறிப்பைக் கரகோஷத்தாலும் சிரக்கம்பத்தாலும் வெளியிட்டார்கள். எல்லாருடைய கண்களும் வைத்தியநாதையருடைய மலர்ந்த முகத்தை நோக்கின.

சுப்பிரமணியதேசிகர் வையை வைத்தியநாதையரை நோக்கி "இன்று இவ்வளவு பெரியோர்கள் முன்னிலையில் உங்களுடைய அரிய ஆற்றல்களை வியந்ததற்கு அறிகுறியாக **மகா வைத்திய நாதையர்** என்னும் பெயரைத் திருவருளை முன்னிட்டு உங்களுக்கு வழங்குகிறோம். உங்களுடைய ஆற்றல் நாள்தோறும் வளரும் வண்ணம் ஸ்ரீ நடராஜமூர்த்தி திருவருள் பாலிக்கவேண்டும்!" என்று சொல்லி உயர்ந்த ஸம்மானங்களை வழங்கினார். சபையில் இருந்த ஒவ்வொருவரும் தத்தமக்கு அந்தக்கௌரவம் கிடைத்த தாகவே எண்ணி மகிழ்ந்தனர். தேசிகர் அப்பொழுது கல்லிழைத்த தோடாக்களை மகா வைத்தியநாதையர் கைகளில் அணி வித்தார்.

## பாராட்டுப் பாட்டுக்கள்

அப்பொழுது தாண்டவராயத் தம்பிரான் தம்முடைய மகிழ்ச்சி யைப் புலப்படுத்தி இரண்டு செய்யுட்களை இயற்றிக் கூறிப் பாராட்டினார். அவை வருமாறு:—

(கட்டளைக் கலித்துறை)

1. "வையை வயித்திய நாத மறையவன் வாய்மலரும்
துய்யசங் கீதச் சுவையமு தார்ந்திடிற் றுங்கவிண்ணோர்
பையர வார்த்துப் பருவரை நட்டுமுன் பாற்கடலைக்
கைகள் வருந்தக் கடையப் பெறுரென்பர் கற்றவரே"

2. "கற்றுத் திகழும் வயித்திய நாதக் கவின்மறையோன்
கொற்றத்தி ஞற்களி கூர்ந்திசை பாடுமிக் கொள்கைதனை
முற்றத் துறந்த முனிவருங் கேட்க முயல்வரென்றால்
மற்றத் துறையினர்க் குண்டாகும் வேட்கைக்கு
மட்டுளதே"

இந்த இரண்டு செய்யுட்களையும் சொல்லி மிக விரிவாக இவற்றின் பொருளை எடுத்து அவர் பிரசங்கம் செய்தார்.

பிற்காலத்தில் மகா வைத்தியநாதையருக்கு இந்தப் பட்டத்தை யளித்த வரலாற்றை ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர்பால் நான் கேட்டிருக் கிறேன். மேலே உள்ள செய்யுட்களைச் சொல்லிவிட்டுப் பிரசங்கம் செய்தபொழுது பதசாரமாகத் தாண்டவராயத்தம்பிரான் சொன்ன ரென்று தேசிகர் கூறியவற்றுள் சில வருமாறு:—

"வையைச்சேரி என்பது வையை என்று மருவி வந்தது. ஒற்றெழுத்தைத் தள்ளி எண்ணிஞல் வையைச்சேரி என்பது நான்கெழுத்தாலாகிய மொழியாக இருக்கிறது; இரண்டெழுத்து மொழியாக அது மருவியது. இவர்களும் நான்கு சகோதரர்களே; அவர்களுள் இந்த இருவரே ஒருவரோடொருவர் மருவிமனங்கலந்து எங்கும் வந்து புகழடைகின்றனர். வையை என்னும் இரண்டு எழுத்துக்களும் ஒன்பதாவது உயிரோடுகலந்த உயிர்மெய்கள். இவ்விருவரும் *ஒன்பது சுவைகளும் அமையப் பாடுபவர்கள். 'வாய் மலரும்' என்றது பாடும்பொழுது தலை அசைத்தல் முதலிய உடற்குற்றங்களின்றி இருந்தவண்ணமே இருந்து மலரிலிருந்து தேன்வடிதலைப்போலப் பாடுவதைக்குறிப்பது. 'சுற்றுத்திகழும்' என்றது இசையின் இலக்கணங்களையும் இயற்றமிழையும் கற்று விளங்குவதைக் குறிக்கும். 'கொற்றத்திஞல் களி கூர்ந்து' என்றது இந்த மகா சபையில் நடந்த வாதத்தில் வெற்றி பெற்றதைச் சுட்டியது".

'முற்றத்துறந்த முனிவருங்கேட்க' என்றது ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் கேட்டு மகிழ்ந்ததை நிணைத்துக் கூறியவென்பர்.

அன்றுமுதல் வையை வைத்தியநாதையருக்கு மகா வைத்திய நாதையர் என்னும் அழகிய பெயர் வழங்கலாயிற்று. சுப்பிரமணிய தேசிகருடைய அன்புடைமையை அவர் எந்நாளும் மறந்தவரல்லர்.

குருபூஜைக்கு வந்திருந்த வித்துவான்கள் ஸம்மானங்களைப் பெற்றுத் தங்கள் தங்கள் ஊர் சென்றனர். மகா வைத்தியநாதையர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் அவர் விருப்பத்தின்படி கல்லிடைக் குறிச்சியிற் சிலகாலம் இருந்தனர். அடிக்கடி தேசிகர் அவருடைய கானத்தைக் கேட்டுக் கேட்டு இன்புற்றனர். ஒருநாள் திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்து பிரபுக்கள் பலரும் ஜமீன்தார்கள் சிலரும் வந்திருந்தபொழுது அவருடைய இசைப் பாட்டு நடைபெற்றது. அப்பொழுது தாண்டவராயத் தம்பிரான் மகிழ்ந்து இயற்றிப் பாராட்டிய பாடல் ஒன்று வருமாறு:—

---

*இராகங்களில், இன்னராகம் ஒன்பது சுவைகளுள் இன்ன சுவையைப் புலப்படுத்துமென்னும் வரையறையுண்டு.

(ஆசிரிய விருத்தம்)

[1]''நிலைபெறுதல் லிசைத்தமிழ்முந் நீர்கடக்கும் பாரதியாய்
நிலவும் வையைத்
தலைநகர்வாழ் மாவைத்திய நாதனெனும் பூசுரன்சங்
கீதங் கேட்டுக்
கலைமகளும் வேதனையுற் றுடல்வெளுப்புண் டன்னமிறங்
காமற் கற்பாள்
அலைகடல்சூழ் புவியிடத்தும் அம்பரத்தும் பம்பரம்போல்
அலைகின் றளே''.

சிலநாட்களுக்குப் பின்பு திருநெல்வேலி ஜில்லா சிரஸ்தேதாரும் சுப்பிரமணிய தேசிகர்பால் அளவற்ற பக்தியுடையவருமாகிய வீர பத்திரபிள்ளையென்பவர் தேசிகரைத் திருநெல்வேலிக்கு எழுந்தருள வேண்டுமென்று வேண்டினர். அவருடைய வேண்டுகோளின் படியே தேசிகர் பரிவாரத்துடன் திருநெல்வேலிக்குச் சென்றார், மகா வைத்தியநாதையரும் இராமசாமி ஐயரும் உடன் சென்றனர். அங்கே வீரபத்திரபிள்ளை தெற்குப் புதுத்தெருவில் தென்சிறகில் உள்ள தம்முடைய வீட்டுக்குத் தேசிகரை எழுந்தருளச் செய்து ராஜோபசாரத்தோடு மகேசுவர பூஜையும் பட்டணப்பிரவேசமும் செய்வித்து வழிபட்டனர். சுப்பிரமணிய தேசிகர் அங்கே இருந்த சில நாட்களுள் ஒருநாள் பல ஜமீன்தார்களையும் பிரபுக்களையும் வித்துவான்களையும் அழைத்துத் தேசிகர் முன்னிலையில் ஒரு மகா சபை கூட்டி வீரபத்திரபிள்ளை தாம் தேசிகர் மீது இயற்றியிருந்த பல தமிழ்ப்பாடல்களையும் தமிழ்க் கீர்த்தனங்களையும் அரங்கேற்றி னார். அப்பால் மகா வைத்தியநாதையருடைய சங்கீத [2]வினிகை நடந்தது. சபைக்குத் தக்கபடி அந்தச் சங்கீதம் சிறப்புற்று விளங்கியது, அப்பொழுது தாண்டவராயத்தம்பிரான் ஒரு செய்யுள் கூறினார். அது வருமாறு :

---

[1] குறிப்பு : இசைத்தமிழ் முந்நீர்-இசைத் தமிழாகிய கடல். பாரதி-தோணி. கலைமகள் பிரமனை அடைந்து திருமேனி வெண்மையையுடையவளாகி அன்ன வாக னத்திலிருந்து இறங்காமல் பூமியிலும் ஆகாசத்திலும் உலாவுகின்றாள்; துன்பத்தை அடைந்து நாணத்தால் தேகம் வெளுத்து உணவு இறங்காமல் கற்றுக்கொள்ளும் பொருட்டு அலைகின்றாளென்னும் வேறொரு பொருள் இவ்வடிகளில் தொனிக்கின்றது. வேதனை-பிரமனை, துன்பம். அன்னம்-அன்னப்பறவை, உண்ணும் அன்னம். அம்பரம்-ஆகாசம்.

[2] வினிகை-சங்கீதக் கச்சேரி.

(ஆசிரிய விருத்தம்)

''பொன்ஞடும் புகழ்வையை மாவைத்ய நாதனெனும்
பூசு ரன்றன்
நன்ஞவாற் பாடுமிசை தனைக்கேட்டு நாமகளும்
நயந்து நாடி
இந்நாளி லிழந்திடுமூக் கன்றேயீர்ந் தென்மானம்
எனக்குத் தந்த
மன்ஞவென் றருள்வீர பத்திரனை வாழ்த்தியுளம்
மகிழ்வுற் ருளே''.

இந்தச் செய்யுளில் அமைந்துள்ள கற்பனை நயம் வருமாறு: ''மகா வைத்தியநாதையர் பாடும் இசையை நாமகள் வந்து கேட்டாள். அது மிகவும் சிறந்ததாக இருந்தது. தன்ஞலும் அப்படிப் பாடமுடியாதென்று அறிந்தவுடன் மனத்தில் தனக்கு அவமானம் தோற்றியது. 'மகா வைத்தியநாதையரால் மூக்கறுபட்ட வளென்று யாவரும் சொல்லும்படியான நிலை வந்துவிடுமே' என்று எண்ணுகையில் தக்கயாக சங்காரத்தில் வீரபத்திரக் கடவுள் தனது மூக்கை யரிந்தமை ஞாபகத்திற்கு வந்தது. ஒரு வீரனுக்கு, பெண்ணுகிய தான் தோல்வியுற்றதில் அவளுக்கு வருத்தம் உண்டாக வில்லை. வித்தையில் தோல்வியுறுதலே பெரிய அவமானமாகத் தோற்றியது. அதஞல், 'என்மூக்கு இப்பொழுது அறுபடுவதற்கு வழியில்லாமல் முன்பே தனது வீரத்தால் அறுத்து என் மானத்தைக் காப்பாற்றிய வீரபத்திரக் கடவுள் வாழ்க!' என்று வாழ்த்தி மகிழ்ந்தாள்''.

இந்தக் கற்பனையை அறிந்து யாவரும் மகிழ்ந்தார்கள்; அன்றி 'வீரபத்திரன்' என்பதற்கு அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி வீரபத்திரபிள்ளையென்னும் பொருளும், வீரபத்திரபிள்ளை செய்யுட்களை அரங்கேற்றியபொழுதே அவரால் கலைமகள் கல்வியில் அவமான மடைந்தாளென்னும் குறிப்பும் தோன்றுவதை உணர்ந்து வியந்தனர்.

இங்ஙனமே மகா வைத்தியநாதையரது பேராற்றலை அப்பொழுது பலர் புகழ்ந்து பாராட்டினர். வீரபத்திரபிள்ளை அவருக்குத் தக்க மரியாதைகள் செய்தார்.

மகா வைத்தியநாதையர் சுப்பிரமணிய தேசிகருடன் கல்லிடைக்குறிச்சி சென்று பின்னும் சில காலம் இருந்து பின்பு விடைபெற்றுத் தம்மூர் சென்றனர். அடிக்கடி வந்துபோகவேண்டுமென்று தேசிகர் விரும்பியபடி இடையிடையே வந்து வந்து பாடி அவரை மகிழ்வித்து வந்தார்.

## சிவகதை செய்தல்

இளமையிலிருந்தே மகா வைத்தியநாதையர் சிவபக்தி வாய்ந்தவராக விளங்கினார்; தம்முடைய தந்தையாரிடம் பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொண்டார்; பெரிய புராணத்தைப் படித்து நாயன்மார்களுடைய இயல்புகளை அறிந்து உருகுதலும் சிவபிரானுடைய பேரருளை நினைந்து நினைந்து இன்புறுதலும் தேவார திருவாசகங்களை இசையுடன் ஓதி மகிழ்ந்து பிறரை மகிழ்வித்தலும் ஆகிய செயல்கள் அவர்பால் மேன்மேலும் வளர்ச்சியுற்று வந்தன. அதிவர்ணாசிரமியும் சூதசம்ஹிதை முதலியவற்றைப் பிரசங்கம் செய்து யாவருக்கும் சிவபக்தியை வளரச் செய்தவரும் ஏகருத்திராட்சதாரணம் செய்துகொள்ளும் வழக்கத்தைப் பலர்பால் உண்டாக்கியவரும் ஆகிய கோடக நல்லூர் *சுந்தரஸ்வாமிகள் என்பவரிடம் வேறு சில மந்திரோபதேசம் பெற்றனர்; அன்றியும் வடமொழி நூல்களை அவரிடம் பாடங்கேட்டனர்; வடமொழிச் சைவ நூல்களில் நல்ல அறிவுடையவராகிய அவர்பால், சதுர்வேத தாத்பர்ய சங்கிரகம், சிவதத்வ விவேகம், சூதசம்ஹிதை முதலிய நூல்களையும் கேட்டு ஆராய்ந்து தெளிந்தனர். பின்பு பழமாநகரிச் சுந்தர சாஸ்திரிகள், திருவையாறு பாலகிருஷ்ண சாஸ்திரிகள் முதலிய வடமொழி வித்துவான்களிடம் பல சைவநூல்களைப் பாடங் கேட்டார். அதனால் வடமொழி நூல்களிலும் சைவ சம்பந்தமான விஷயங்களிலும் மகா வைத்தியநாதையர் நல்ல பயிற்சியை அடைந்தனர். தமிழ், வடமொழி, சங்கீதம் என்பவற்றில் தாம் அடைந்திருந்த பயிற்சியினால் அவர் சிவகதைகளை உபந்நியாசம் செய்யத் தொடங்கினார்; உண்மைச் சிவபக்தி அமைந்த உள்ளமும், எதையும் இனிமையாக எடுத்துக்கூறி விளக்கும் சொல்வன்மையும், யாவரையும் மகிழ்விக்கும் இன்னிசை யாற்றலும், நல்லறிவும் ஒருங்கு வாய்ந்த அவருடைய சிவகதாப் பிரசங்கத்தின் இனிமை யாவர் மனத்தையும் கவர்ந்தது. தமிழ்நாட்டார் அவருடைய சங்கீதத்தோடு சிவகதையையும் கேட்டு அனுபவித்து மகிழ்ந்தனர்.

---

*இவர் 'மனோன்மணீயம்' என்னும் நூலின் ஆசிரியராகிய திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளை முதலியவர்களின் குரு ஆவர்.

## சுப்பிரமணிய தேசிகர் ஆதரவு

தமக்குப் பட்டம் வழங்கித் தம்முடைய புகழ் பரவும்படி செய்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்பால் மகா வைத்தியநாதையர் மிக்க நன்றி யறிவுடையவராகி எப்பொழுது அவர் அழைத்தாலும் உடனே விரும்பிச் சென்று தமது சங்கீதத்தாலும் சிவகதாப் பிரசங்கத்தாலும் அவரை மகிழ்வித்து வந்தார். தேசிகரும் மேன்மேலும் மகா வைத்திய நாதையரைப் பல வகையிலும் ஆதரித்து வந்தனர்.

ஒரு சமயம் தேசிகர் கல்லிடைக் குறிச்சியிலிருந்து திருவாவடு துறைக்கு விஜயம் செய்த பொழுது, மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் தேசிகருடைய விருப்பத்தின்படி அவருடன் வந்தனர். அப்பொழுது இடையிடையே உள்ள ஊர்களில் இருந்த அன்பர்களால் தேசிகருக்குப் பல வகைச் சிறப்புக்கள் செய்யப்பட்டன. அங்கங்கே மகா வைத்தியநாதையருடைய சங்கீத வினிகைகளும் நடைபெற்றன. அவ்வப்பொழுது சுப்பிரமணிய தேசிகர் சால்வை, பொற்காப்பு, பொற்சங்கிலிகள், வைரக் கடுக்கன், சிறிய ருத்திராட்சங்களைப் பொற்கம்பியிற் கோத்த சரங்கள் ஐந்தடங்கிய மாலை முதலியவற்றை அவருக்கும் அவர் தமையனாருக்கும் வழங்கினர்.

## தியாகராஜ சாஸ்திரிகள்

தேசிகர் திருவாவடுதுறைக்கு அருகில் மேற்கேயுள்ள நாரசிங்கம் பேட்டை மடத்தில் வந்து தங்கினர். அப்போது திருவாலங்காடு, திருவாவடுதுறை, திருவிடைமருதூர் முதலிய இடங்களிலிருந்து வடமொழியில் வல்ல சாஸ்திரிகள் பலர் வந்து பார்த்துச் சென்றார்கள். சுப்பிரமணிய தேசிகருடைய வடமொழி யாசிரியர்களுள் முக்கியமானவரும், அவருக்கு வடமொழி நூல்கள் பலவற்றின் நயங்களை எடுத்துக் காட்டியவரும், புதுக்கோட்டை அரசாங்க வக்கீலாக இருந்தவருமாகிய தியாகராஜ சாஸ்திரிகள் என்பவர் அங்ஙனம் வந்தவர்களுள் ஒருவர். அவர் சங்கீதப் பயிற்சியும் உடையவர். வீணை வாசித்தலிலும் இனிமையாகப் பாடுதலிலும் வல்லவர். அவரிடம் தேசிகருக்கு மிக்க அன்புண்டு. மகா வைத்திய நாதையர் சுப்பிரமணிய தேசிகரால் பலவகையான மரியாதைகளைப் பெற்றிருத்தலையும் தேசிகர் அவரை மிகவும் ஆதரித்து அருகில் இருக்கும்படி செய்திருப்பதையும் சாஸ்திரிகள் கேட்டிருந்தனர். அவர் சுப்பிரமணிய தேசிகரைப் பார்த்த பொழுது அங்கே

உடனிருந்த மகா வைத்தியநாதையரும் அவருடைய தமையனரும் பலவகையான ஆபரண அலங்காரத்துடன் அருகில் இருத்தலைக் கண்டனர். சாதுரியமாகவும் மிக்க தைரியமாகவும் பேசுவதில் வல்லவராகிய தியாகராஜ சாஸ்திரிகள் தேசிகரிடம் கையுறையாக ஒரு தேங்காய் அளிக்கும்பொழுது வழக்கப்படி ஒரு சுலோகம் சொன்னர். அன்று அவர் கூறிய சுலோகம் அவருடைய உட்கருத்தை வெளிப்படுத்தியது. அது குவலயானந்தமென்னும் அலங்கார சாஸ்திரத்தில் உள்ளது; "* முன்பு நாம் இருவரும் ஓருயிர் ஈருடலாகப் பயின்ருேம்; பின்பு பிரியன் பிரியை என்னும் முறையில் இருந்தோம்; இப்பொழுது கணவன் மனைவி என ஆனேம். இனி, சில நாட்களில் எங்ஙனம் ஆவோமோ!" என்று ஒரு தலைவி தலைவனை நோக்கிக் கூறுவதாக அமைந்தது அது. வரவர அன்பு குறைவதை அச்சுலோகம் சுட்டுகிறது. அதனைக்கேட்டு, குறிப்பறிவதில் வல்லவராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் புன்னகை கொண்டு சாஸ்திரிகளை நோக்கி, "மகா வைத்தியநாதையருக்கு நாம் செய்யும் மரியாதைகளை மனத்தில் வைத்துக்கொண்டு சாஸ்திரிகள் இந்தச் சுலோகத்தை இப்பொழுது சொன்னதாகத் தோற்றுகிறது" என்ருர்.

**சாஸ்திரிகள்:** ஆமாம்! இவ்வளவு சிறிய பிராயத்தினராகிய இவரிடம் அளவற்ற பிரியம் கொண்டிருப்பதை அறிந்து, 'எங்கே

---

*குவலயானந்தத்தில் பரியாயமென்னும் அலங்காரத்திற்கு உதாரணமாகக் காட்டப் பட்ட சுலோகமே இங்கே குறிப்பிக்கப் பட்டது; அது வருமாறு:—

पुराभूदस्माकं प्रथममविभिन्ना तनुरियं
ततो नु त्वं प्रेयान् वयमपि हताशाःप्रियतमाः।
इदानीं नाथस्त्वं वयमपि कलत्रं किमपरं
हतानां प्राणानां कुलिशकठिनानां फलमिदम्॥

அதன் தமிழ் மொழி பெயர்ப்பு:

(கட்டளைக் கலித்துறை)

"முன்ரு ளிருவரும் யாக்கையொன் ருக முயங்கினமால்
பின்ருட் பிரியன் பிரியையென் ருயினம் பேசலுறும்
இந்நாட் கணவன் மனைவியென் ருயினம் எண்ணினினிச்
சின்ருளி லெப்படி யோமன்ன வாவிங்குச் செப்புகவே."

[பாலபோத இலக்கணம்—அணியிலக்கணம்.]

சந்நிதானம் நம்மை அலட்சியம் செய்யக்கூடுமோ!'' என்ற எண்ணம் உண்டாகிவிட்டது.

**சுப்பிர:** ஒருகாலும் இல்லை. இவ்வளவு காலம் தங்களிடத்தில் இருந்த அபிமானம் இனிமேற் குறைவதற்கு நியாயமேயில்லை. இங்ஙனம் நாம் செய்வதற்குக் காரணம் தாங்களே. தங்களுடைய ஸல்லாபத்தினுலேதான் வித்துவான்களுடைய தாரதம்யத்தை அறிந்து கொடுக்கும் வழக்கம் நமக்கு ஏற்பட்டது. வித்துவான்களுடைய சாமர்த்தியத்தை அறிந்து ஆதரிப்பது நமது கடமையல்லவா? பாராட்டுபவர்கள் இருந்தால்தானே கல்விமான்கள் கல்வியில் வளர்ச்சியடைவார்கள்? தாங்கள் இவருடைய ஆற்றலை அறிந்தால் இங்ஙனம் சொல்லமாட்டீர்களென்று எண்ணுகிறேம்.

**சாஸ்திரிகள்:** சந்நிதானம் சொல்வது வாஸ்தவமாக இருந்தாலும் பிராயத்தில் மூத்த என்னைப் போன்றவர்களுக்கு மனத்தில் சிறிது வித்தியாசமான எண்ணம் தோற்றுவது இயல்புதான்.

உடனே தேசிகர், மகா வைத்தியநாதையரை நோக்கி அப்பைய தீட்சிதர் இயற்றிய சில சுலோகங்களை இசையுடன் சொல்லச் செய்தனர்; பின்பு சூதசம்ஹிதை முதலிய நூல்களிலுள்ள சுலோகங்களையும் சொல்லும்படி விரும்பினர். அங்ஙனமே அவர் தமது இனிய இசையுடன் கலந்து சிவபக்தியை மேன்மேலும் உண்டாக்கும் அரிய கருத்துக்கள் அடங்கிய சுலோகங்களைச் சொன்னுர்; வடமொழியறிவு வாய்ந்தவராதலின், எந்த எந்த இடங்களில் நிறுத்திச் சொல்லவேண்டுமோ அங்கங்கே நிறுத்திச் சொன்னுர். சுலோகத்தின் கருத்து எளிதில் விளங்கும் வண்ணம் அவர் அவற்றை இசையுடன் கலந்து சொன்னபொழுது சாஸ்திரிகள் கேட்டுப் பேரானந்தமுற்று மெய்ம்மறந்தனர்; ''ஹா! ஹா! இத்தகைய சங்கீதத்தைக் கேட்டதேயில்லை. சங்கீதமே பிரதானமென்று எண்ணி விஷயமே தெரியாமல் சுலோகங்களைக் கொலை பண்ணும் வித்துவான்கள் பலருடைய பாட்டைக் கேட்டு என் காது புண்பட்டிருந்தது. இவர் இவ்வளவு அழகாகச் சொல்வாரென்று கனவிலும் நினைக்கவில்லை. சிவபக்தி பூர்ணமாக இருந்தாலொழிய இப்படிச் சொல்லமுடியாது. சம்ஸ்கிருத ஞானம் நன்றுக இருப்பதனுல் சுலோகத்தின் அர்த்தத்தைத் தாமே அனுபவித்துச் சொல்லுகிறுர்; அதனுலேதான் அவை மற்றவர்களுக்கும் சுலபமாக விளக்கி இன்பத்தை அளிக்கின்றன. சுலோகத்திலுள்ள பாவத்தை இவ்விதம்

தெளிவாக வெளிப்படுத்தி ஏற்ற ராகத்தோடு சொல்லும் இவரைக் கந்தர்வாவதாரமென்றே சொல்லவேண்டும். இதிற் சந்தேகமே இல்லை'' என்று பாராட்டினார். பின்பு மகா வைத்தியநாதையர் வேறு சில சுலோகங்களைச் சொல்லி அவற்றின் பொருளையும் கூறினார். பிறருக்கு எளிதில் விளங்கும்வண்ணம் அழகாகச் சுலோகங்களின் கருத்தைச் சொல்வதைக் கேட்ட சாஸ்திரிகள் பின்னும் சந்தோஷமடைந்தார்.

**சுப்பிர:** உண்மையான வித்வத்தை அறியும் இயல்பையுடைய தாங்கள் முதலில் நினைத்த அபிப்பிராயம் நிலையாக இராதென்றே எண்ணினேம். இப்பொழுது தங்களுக்கு இவருடைய சக்தி தெரிந்ததைப் பற்றிச் சந்தோஷம் அடைகிறேம். இவ்வளவு அருமையான திறமை இவரிடம் உள்ளதென்பது யாருக்கும் பார்த்தவுடன் தோற்றுது.

சாஸ்திரிகள், ''சந்நிதானம் செய்யும் காரியங்ளெல்லாம் உசிதமானவையே என்பதை முன்னமே அறிந்திருந்தும் ஏதோ சொல்லிவிட்டேன். இவருடைய யோக்கியதைக்கு எவ்வளவு சிறப்புச் செய்தாலும் தகும்'' என்று கூறிக் கொண்டாடினர்.

அக்காலமுதல் தியாகராஜ சாஸ்திரிகள் மகா வைத்தியநாதையர்பால் மிக்க அன்பு பூண்டவரானுர்.

## பிள்ளையவர்கள் பழக்கம்

சுப்பிரமணிய தேசிகருடைய ஆதரவைப் பெற்ற பிறகு, திருவாவடுதுறையில் வருஷந்தோறும் தைமாதம் அசுவதி நட்சத்திரத்தில் நடைபெறும் குருபூஜைக்கு மகா வைத்தியநாதையரும் அவர் தமையனுரும் தவருமல் செல்வார்கள்.

அக்காலத்தில் திருவாவடுதுறையில் ஆதீன கர்த்தராக இருந்தவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர். திரிசிரபுரம் மகாவித்துவானும் என்னுடைய தமிழாசிரியருமாகிய ஸ்ரீமீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களை ஆதீனவித்துவானுக அம்பலவாண தேசிகர் நியமித்த வருஷத்தில் நிகழ்ந்த குருபூஜைக்கு வழக்கம்போல் மகா வைத்தியநாதையரும் அவர் தமையனுரும் வந்திருந்தார்கள். அவ்விருவரும் பிள்ளையவர்களுடைய பெருமையைப் பலர் வாயிலாகக் கேட்டிருந்தனர். அக்கவிஞர் கோமான் இயற்றிய சூதசங்கிதை முதலிய நூல்

களிலுள்ள சுவையான பாடல்கள் இருவருக்கும் மனப்பாடமாக இருந்தன. மகா வைத்தியநாதையர் சிவகதை பண்ணும்பொழுது அந்நூலிலிருந்து சில செய்யுட்களைச் சொல்லிப் பொருள் கூறுவதுண்டு. அச் செய்யுட்களில் ஈடுபடுந்தோறும் அத்தகைய கவிகளை இயற்றிய கவிஞர்தலைவரைப் பார்த்துப் பழகவேண்டுமென்னும் அவா அவ்விருவருக்கும் அதிகமாகிக் கொண்டேவந்தது. திருவாவடுதுறைக்கு வந்தபொழுது அங்கே பிள்ளையவர்கள் இருத்தலை அறிந்து அவர்களைப் பார்த்து அளவளாவலாமென்று எண்ணி மகிழ்ந்தனர்.

குருபூஜைத்தினத்து இரவில் அம்பலவாண தேசிகருக்கு வழக்கம்போல மிகவும் சிறப்பாகப் பட்டணப் பிரவேசம் நடைபெற்றது. அப்பொழுது சின்னப்பட்டத்திலிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நடந்து சிவிகையுடன் வந்தனர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் அவருடைய மாணவர்களும் தொடர்ந்து உடன் சென்றனர். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சிறிது தளர்ச்சியுற்றவராகித் திருக்குளத்தின் தென்கரையிலுள்ள சத்திரமொன்றன் திண்ணையில் தங்கினுர். முன்னரே மகா வைத்தியநாதையரும் அவர் தமையனுரும் அங்கே தங்கியிருந்தனர். அப்பொழுது ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மகா வைத்தியநாதையரையும் அவர் தமையனுரையும் பற்றிப் பிள்ளையவர்களுக்கும், பிள்ளையவர்களைப் பற்றி அவ்விருவருக்கும் கூறிப் பழக்கஞ் செய்து வைத்தனர்.

அவர்கள் பிள்ளையவர்களுடைய புகழைத் தாங்கள் அறிந்து நேரிற் பார்க்கவேண்டுமென்று நெடுநாட்களாக ஆவலுள்ளவர்களாக இருந்ததைத் தெரிவித்து அக்கவிஞர்பிரானைப் பாராட்டினுர்கள். அப்பால் தேசிகரவர்கள் விரும்பியபடி மகா வைத்தியநாதையர் சில தமிழ்ச்செய்யுட்களை இசையுடன் பாடிக்காட்டினுர். அவற்றைக் கேட்ட பிள்ளையவர்கள், "இவை எந்த நூலில் உள்ளவை?" என்று கேட்டனர்.

**மகா:** தாங்கள் இயற்றிய சூதசங்கிதையில் பிரமன் முதலியோர் தில்லையில் நோற்று ஞானம் பெற்ற அத்தியாயத்தில் உள்ளவை.

**மீ:** அப்படியா! இன்னும் அந்தநூலில் வேறு செய்யுட்கள் உங்களுக்குப் பாடம் உண்டா?

**மகா:** பல செய்யுட்கள் பாடம் உண்டு. கோடக நல்லூர்ச் சுந்தரஸ்வாமிகள் எங்களை அடிக்கடி சொல்லச் சொல்லிக்கேட்டு மகிழ்வார்கள். அவர்கள் வடமொழிச் சூதசங்கிதையில் நல்ல பழக்கமுடையவர்களாதலால் இந்தப்பாடல்களைக் கேட்டு மிகவும் ஆச்சரியப் படுவதன்றித் தங்களையும் பாராட்டிக் கொண்டே யிருப்பார்கள்.

**மீ:** இந்த நூலை நான் செய்ததாகச் சொன்னீர்களே! *அதனை அறிந்த தெப்படி?

**மகா:** திருநெல்வேலியில் வேதாந்த நூற்பயிற்சியுடையவராக வுள்ள ஸ்ரீ ஐயாசாமிப்பிள்ளையவர்களும் வேறு சில வித்துவான் களும் இந்த உண்மையைத் தெரிவித்தார்கள்.

அப்பொழுது சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களை நோக்கி, "அந்த உண்மையை நீங்கள் எவ்வளவு மறைத்தாலும் மறைவு படுமா? உங்கள் கவித்துவத்தையும் புகழையும் யாரால் மறைக்க முடியும்? சூரியனை மறைப்பதற்கு யாரால் இயலும்?" என்று சொல்லி மகிழ்ந்தார்.

அக்கவிஞர் பிரான் உள்ளமுவந்து மகா வைத்தியநாதையரைப் பார்த்து, "ஐயா! அந்தப் பாடல்கள் உங்கள் வாக்கிலிருந்து வரும் பொழுது தனிச்சுவையை உடையனவாக இருக்கின்றனவே. உங் களைப்போல் தமிழ்ப்பாடல்களை இவ்வளவு அழகாகச் சொல்பவர் களை இதுகாறும் கண்டிலேன். உங்களுடைய க்ஷேமத்தைக் குறித்துப் பரமசிவனைப் பிரார்த்திக்கிறேன். உங்களுடன் அடிக்கடி பழகவேண்டுமென்பது எனது விருப்பம்" என்றார்.

மகா வைத்தியநாதையர், "எங்களுடைய நல்வாழ்விற்குக் காரணம் சந்நிதானமே. அவர்களுடைய அன்பே உங்களையும் பார்க்கும்படி கூட்டிவைத்தது. உங்களைப் பார்த்துப் பழகிப் பாடங் கேட்க வேண்டுமென்று நீண்டநாளாகக் காலத்தை எதிர்பார்த் திருந்தோம். இன்று எங்கள் பாக்கியத்தால் அது நிறைவேறியது. எல்லாவற்றிற்கும் காரணம் சிவகிருபையே" என்று கூறினர்.

---

*பிள்ளையவர்கள் இயற்றிய சூத சங்கிதையும், குசேலோபாக்கியானமும் அவர் களுடைய மாணாக்கராகிய வல்லூர்த் தேவராச பிள்ளை இயற்றியனவாக வழங்கி வருகின்றன. ஆதலின் உண்மையை மகா வைத்தியநாதையர் அறிவதற்கு வழி ஏது என்ற ஐயம் அப்புலவர் பிரானுக்கு உண்டாயிற்று.

அவருடைய வார்த்தைகளில் நன்றியறிவும் சிவபக்தியும் ததும்பிக் கொண்டிருப்பதை யுணர்ந்த அக்கவிநாயகர், "இவர் களே உலகம் உய்யும் வழிகாட்டுதற்குரிய கலைஞர்கள். இவர்களிடம் இருக்கும் சங்கீதந்தான் சங்கீதம். அதுதான் சிவபக்திப்பயிரை வளர்க்கும்" என்றெண்ணி மனமுருகினூர்.

மறுநாள் மடத்தில் மகா வைத்தியநாதையருடைய வினிகை நடைபெற்றது. அப்பொழுது பிள்ளையவர்கள் அவருடைய இசை யிலும், சிவபக்தி புலப்படும்படி பாடும் முறையிலும் ஈடுபட்டு மகிழ்ந்தனர். மகிழ்ச்சி மிகுதியினூல் அக் கவிஞர் தலைவர் அப் பொழுது பின்வரும் இரண்டு செய்யுட்களை இயற்றிப் படிக்கும்படி செய்வித்தார்:

(விருத்தம்)

1. "பொருவில்மகா வைத்தியநா தன்பாடும் இசைப்பெருஞ்சீர்
பொருவா னெண்ணின்
ஒருவிலருட் டுறைசையெங்கள் குருமணியம் பலவாணன்
ஒளிர்கூ டற்கண்
வெருவில்சிறப் புறமுனம்பா டிசைப்பெருஞ்சீ ரேபொருவும்
விருத்த ரூபம்
மருவிலனிந் தனச்சுமையு மெடுத்திலன்வேற் றுமையிவையே
மதிக்குங் காலே."

[**குறிப்பு:** பொருவில் - ஒப்பில்லாத. பொருவான் - ஒப்பா தலை. இந்தனச்சுமை - விறகுகட்டு].

2. "அனைநிகர்சுப் பிரமணிய மணியொடுமா வடுதுறையில்
அமரா நின்ற
தனைநிகரம் பலவாண பரசிவன்மற் றெங்கள்குரு
சாமி மேன்மேற்
புனையும்வயித் தியநாதன் இசைவிரும்பி ஞனிதுவும்
புகழோ வென்னின்
இனையன்வயித் தியநாத னிசைவிரும்பல் பரம்பரையில்
இயைந்த வாறே."

[**குறிப்பு:** ஞானுசிரியர்களைப் பரமசிவனுகப் பாவித்தல் மர பாதலின் அம்பலவாண தேசிகரை, 'பரமசிவன்' என்ருர். பரம

சிவனுடன் சுப்பிரமணியக் கடவுள் இருத்தலைப்போல அவருடன் சுப்பிரமணிய தேசிகர் இருத்தல் இச்செய்யுளிற் குறிப்பிக்கப்பட்டிருக் கிறது. வயித்தியநாதன் இசை - மகா வைத்தியநாத ஐயருடைய சங்கீதத்தை, வயித்தியநாதப் பெருமானுடைய புகழை. வைத்திய நாதரென்பது திருவாவடுதுறை மடத்துப் பெரிய பூசையிலுள்ள உடையவர் திருநாமம்.]

அக்காலமுதல் பிள்ளையவர்களுக்கும் மகா வைத்தியநாதை யருக்கும் நெருங்கிய நட்பு உண்டாயிற்று. திருவாவடுதுறை மடத் திற்கு வரும்போதெல்லாம் மகா வைத்தியநாதையரும் அவர் தமை யனாரும் பிள்ளையவர்களோடு சல்லாபம் செய்து தமிழ் நூல்களில் தமக்கு இருந்த ஐயங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொண்டு செல்வார் கள். அப்புலவர் பிரான் எங்கேனும் புராணம் அரங்கேற்றப் போயிருக்கும்போது அவ்விடத்திற்கு அவ்விருவரும் போக நேர்ந்தால், சில நாள் இருந்து புராணப் பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்து செல்வதும் வழக்கம்.

### வேதநாயகம்பிள்ளை பாடல்

ஒரு சமயம் மகா வைத்தியநாதையர், மாயூரத்திலுள்ள சில பிரபுக்கள் வேண்டுகோளின்படி அந்நகருக்குச் சென்று பல பிரபுக் களும், கோபால கிருஷ்ண பாரதிகள் முதலிய பல சங்கீத வித்து வான்களும் கூடிய மஹாசபையில் வினிகை நடத்தினர். அப்பொழுது அந்நகரில் முன்ஸீபாக இருந்த வேதநாயகம் பிள்ளை அச்சபையில் தலைவராக வீற்றிருந்தனர். அவர் தமிழில் எளிய இனிய செய்யுட்களையும் கீர்த்தனங்களையும் இயற் றும் ஆற்றலுடையவர்; ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களுள் ஒருவர். அந்தப் பக்கத்தில் இருந்த யாவருக்கும் அவரிடத்தில் பெருமதிப்பு உண்டு.

மகா வைத்தியநாதையருடைய பாட்டு நடைபெற்றபின்பு வேத நாயகம்பிள்ளை அதனைப் பாராட்டித் தக்க ஸம்மானம் செய்து ஒரு செய்யுள் கூறினர். அது வருமாறு :

(ஆசிரிய விருத்தம்)

''கானசையு மலங்கலனி மகாவைத்ய நாதகவி
  கல்லும் புல்லும்
தானசையத் தேனிசையச் சொலுமிசையைக் கேட்டனந்தன்
  தலைய சைக்கின்

வானசையு மண்ணசையு மன்னுயிரெல் லாமசையும்
வருந்து மென்றே
தேனசையு மலரோனச் சேடனைக்கா திலனுகச்
செய்தான் மன்னே.''

[குறிப்பு: அனந்தன் - ஆதிசேஷன். ஆதிசேஷன் பாம்பாதலாலும், பாம்பு கண்ணையே காதாக உடையதாதலாலும் 'காதிலன்' என்ருர்]

சிறந்த அதிகாரத்தில் இருந்த வேதநாயகம் பிள்ளை இங்ஙனம் கூறிப் பாராட்டவே மாயூரம் முதலிய இடங்களிலுள்ள யாவரும் மகா வைத்தியநாதையர்பால் மேன்மேலும் மதிப்பு வைத்து விசேஷ காலங்களில் அவரை வருவித்து அவருடைய இசையையும் சிவ கதையையும் கேட்டு மகிழ்வுற்றனர்.

### சிருங்ககிரியிற் சிறப்புப் பெற்றது

அப்பால், சிருங்ககிரி மடத்தில் ஆசார்ய மூர்த்தியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ சச்சிதானந்த சிவாபி நவ நவநரஸிம்மபாரதி ஸ்வாமிகளவர்களால் கட்டளையிடப்பட்டு ஒரு நவராத்திரி காலத்தில் அவ்விரு சகோதரர்களும் சிருங்ககிரி சென்ருர்கள். அங்கே மகா வைத்தியநாதையர், ''ஸ்ரீ சங்கர குருவரம், சிந்தயாமி பவஹரம்'' என்னும் பல்லவியையுடைய வடமொழிக் கீர்த்தனமொன்றை இயற்றிப் பாடி ஆசார்ய மூர்த்தியைத் துதித்தனர். வழக்கம்போல் சங்கீதமும் சிவகதையும் நடந்தன. கேட்ட ஆசார்ய ஸ்வாமிகள் அவருடைய சிவபக்தி முதிர்வையும் வடமொழி தென்மொழி அறிவையும் இசை இனிமையையும் உணர்ந்து திருவுள்ள மகிழ்ந்து பலவகையான ஸம்மானங்கள் செய்தார்கள். அன்றியும் *''மஹாதேவம்'' என்னும் முதற்குறிப்பையுடைய சுலோகத்தை அருளிச் செய்து அவரை ஆசீர்வதித்தார்கள். பின்பும் பலமுறை மகா வைத்தியநாதையர் சிருங்ககிரி மடத்திற்குச் சென்று தம் இசைத்திறனைப் புலப்படுத்தி வழிபட்டு ஸ்வாமிகளுடைய ஆசீர்வாதத்தையும் ஸம்மானங்களையும் பெற்றுவந்தார்.

---

* महादेवं महावैद्यं त्वं पालय कृपालय ।
शूलिनस्ते सदापेक्ष्यः खलपायुर्वेद पारगः ॥

## பெரிய புராணக் கீர்த்தனம்

இராமஸ்வாமி ஐயர் தமிழ்ச் செய்யுள் இயற்றும் திறமையும் இசையிலக்கண வன்மையும் உடையவராதலின் நகரத்தார்களுட் சில சிவநேசச் செல்வர்கள் பெரிய புராணத்தைக் கீர்த்தனமாகச் செய்தால் உபகாரமாக இருக்குமென்று அவரிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். சிவகதை செய்வதற்கு அத்தகைய நூல் மிகவும் பயன்படுமென்றறிந்த இராமஸ்வாமி ஐயர் அதற்கு உடன்பட்டு இயற்றத்தொடங்கினர். சில மாதங்களில் பெரிய புராணக் கீர்த்தனம் இயற்றி நிறைவேறியவுடன் அதனை அரங்கேற்ற விரும்பினர். அதற்குத் திருவாவடுதுறையே ஏற்ற இடமென்று தெளிந்தார். ஆதலின் அங்கே சென்று, ஆதீனத்தலைவராகிய ஸ்ரீ அம்பலவாண தேசிகரும் மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரும் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய வித்துவான்களும் வேறு பல சங்கீத வித்துவான்களும் செல்வர்களும் நிறைந்திருந்த சபையில் அந்நூலை அரங்கேற்றினர். மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் அதிலுள்ள கீர்த்தனங்களைப் பாடும்பொழுது யாவரும் கேட்டு உருகினர். பெரிய புராணக் கருத்துக்கள் அழகாக அங்கங்கே சிவபக்தி உணர்ச்சி ததும்பம்படி அமைந்த அந்நூலின் இயல்பு, இசையமைப்போடு பொருந்தி மகா வைத்தியநாதையருடைய இனிய வாக்கிலிருந்து வரும்போது பொன்மலர் நன்மணம் பெற்றதுபோல விளங்கியது. அப்பொழுது மகா வித்துவான் பிள்ளையவர்கள் அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரமாக *ஐந்து செய்யுட்களை இயற்றியளித்தனர். வேறு சில வித்துவான்களும் அங்ஙனமே இயற்றி அளித்தார்கள். அக்காலமுதல் மகா வைத்தியநாதையர் நாயன்மார்கள் சரித்திரத்தைக் கதைபண்ணும் பொழுது அந்நூலிலுள்ள கீர்த்தனங்களையே பாடிப் பொருள் கூறி யாவரையும் மகிழ்வித்து வந்தனர்.

## பலவகை நன்மதிப்பு

பின்பு மகா வைத்தியநாதையர் திருவாங்கூர் ஸமஸ்தானாதிபதியாகிய ஆயில்யம் திருநாள் மகாராஜா அவர்களால் இரண்டு முறையும் அவருக்குப் பின் பட்டத்தில் வீற்றிருந்த விசாகந்

*இவற்றை ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தின் முதற் பாகம் 302-3-ஆம் பக்கங்களிற் காணலாம்.

திருநாள் மகாராஜா அவர்களால் ஒருமுறையும் வருவிக்கப்பெற்றுத் தம் இசையின் ஆற்றலை நன்கு புலப்படுத்தி மகிழ்வித்துப் பல விதமான பரிசுகளை அடைந்ததோடு வெள்ளியாலே செய்யப்பட்ட பூஜாபாத்திரங்களையும் பெற்று வந்தனர். அக்காலத்தில் அங்கே ஸமஸ்தான வித்துவான்களாக இருந்த பரமேசுவர பாகவதர் முதலியவர்களும் கோயம்புத்தூர் ராகவையர் முதலியவர்களும் அவருடைய திறமையை மிகவும் பாராட்டினார்கள்.

ஒருசமயத்தில், தஞ்சாவூர் அரண்மனையில் பண்டைக் காலத் திருந்த சங்கீத வித்துவான்களால் இயற்றி வைக்கப்பட்டுப் பாடப் படாமல் மழுங்கியிருந்த 72 மேளகர்த்தா மாலிகைக்குச் சிவாஜி மகாராஜா அவர்களுடைய மாப்பிள்ளையாகிய ஸகாராம் ஸாஹேப் அவர்களுடைய விருப்பத்தின்படி வர்ண மெட்டுக்களை மகா வைத்தியநாதையர் அமைத்து அரண்மனை வித்துவான்களாகிய வீணை ஆதிமூர்த்தி ஐயர் முதலியவர்கள் இருந்த மகா சபையில் அரங்கேற்றி மிக்க கீர்த்தியை அடைந்தார்.

பிறகு மைஸூர் மகாராஜா அவர்களால் மூன்று முறை நவ ராத்திரி காலங்களில் வருவிக்கப்பெற்று அப்பொழுதப்பொழுது தக்க மரியாதைகளைப் பெற்றனர். அங்கே இருந்தபொழுது அந்த ஸமஸ் தான வைணிக வித்துவச் சிரோமணிகளாகிய சேஷண்ணு, சுப் பண்ணு முதலியவர்களால் அழைக்கப்பெற்று அவர்கள் வீடுகளில் கூட்டப்பெற்ற சபைகளிற் பாடி அவர்களாலும் நன்மதிப்பையும் பரிசுகளையும் பெற்றனர்.

இங்ஙனம் மடாதிபதிகள், மகாராஜாக்கள், ஜமீன்தார்கள், தமிழ் வடமொழி வித்துவான்கள், சங்கீத வித்துவான்கள், செல் வர்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களால் பலவகையில் ஆதரிக்கப் பெற்ற மகா வைத்தியநாதையருடைய இசைவெள்ளம் இந்நாட்டைக் குளிர்வித்து விளங்கியது.

### நான் முதலிற் கண்ட இன்பம்

நான் படித்துக் கொண்டிருந்த காலத்திலும் பின்பும் மகா வைத்தியநாதையரோடு பழகி அவருடைய சங்கீத ஆற்றலையும் சிவபக்தியையும் அருங்குணங்களையும் அறிந்து மகிழ்ந்திருந்தேன். *பிரஜோற்பத்தினு (1871) ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் திருவாவடு

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், 2-ஆம் பாகம், பக்கம் 93-6.

துறைக்கு வந்தனர்; அவருடன் மகா வைத்தியநாதையரும் அவருடைய தமையனாரும் வேறு பலரும் வந்திருந்தனர். அக்காலத்திற்கு முன்பே ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மூலம், மகா வைத்தியநாதையர் பட்டம் பெற்றமை, அவரது சங்கீதத்திறமை முதலியவற்றை அறிந்திருந்தமையால் அவரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் எனக்கு இருந்தது. அவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய விருப்பத்தின் படி ஒரு நாள் வினிகை நடத்தினார். முதன் முறையாக அவருடைய கானத்தைக் கேட்ட எனக்கும் மற்ற அன்பர்களுக்கும் அப்பொழுது உண்டான இன்பத்திற்கு எல்லையேயில்லை. அச்சமயத்தில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களிலிருந்து பல பாடல்களை அவர் இசையுடன் பாடிக்காட்டினார். பிள்ளையவர்களுடைய செய்யுட்களில் எனக்கும் என்னோடு பயின்ற மாணவர்களுக்கும் இயல்பாகவே ஈடுபாடு உண்டு; ஆயினும் மகா வைத்தியநாதையருடைய இசையோடு கலந்து வரும்போது அச்செய்யுட்கள் மிக்க இன்பத்தை அளித்தன. அந்த மடத்திற்கு வரும் பல சங்கீத வித்துவான்களுடைய கோஷ்டியில் மகா வைத்தியநாதையர் ஒரு சூரியனைப்போல் விளங்கினார்.

## தமிழறிவு

பின் ஒரு முறை அவர் அந்த மடத்திற்கு வந்திருந்தபோது திருக்குற்றாலப் புராணத்தின் அச்சுப் பிரதியொன்று பிள்ளையவர்களுக்குக் கிடைத்தது. அந்நூலில் நெடுங்காலமாக இருந்த அன்பினால் பிள்ளையவர்கள் அதை உடனே படிப்பித்துக் கேட்டு முதலிலிருந்து பொருள்வரையறை செய்துகொண்டே சென்றார்கள். அவ்வப்பொழுது தத்தமக்குத் தோற்றிய அபிப்பிராயங்களை உடனிருந்த மாணவர்களும் மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் சொல்லி வந்தனர். பொருளாராய்ந்து வருகையில் அப்புராணத்திலுள்ள சண்டிகேசுவர வணக்கமாகிய,

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

*"தான்பிறந்த தந்தையையு மினிப்பிறக்கும் நிந்தையையும்
தடிந்து சேயென்
றூன்பிறங்கு மழவிடைமே லொருவரழைத் திடவிருவர்
அயிர்ப்ப வேகிக்

---

*சேய்-குழந்தாய்; விளி. அயிர்ப்ப-ஐயமுற. ஒருவர்-சிவபெருமான். கான்-வாசனை. வான்புலவர்-தேவர்கள். கடவுட்சேடத்தையும் பேற்றையும் பெற்றவனை.

கான்பொலிதா ரரிபிரமா தியர்க்குமெய்தா விருக்கையெய்திக்
கடவுட் சேடம்
வான்புலவர் பெருப்பேறு பெற்றவனை நற்றவனை
வழுத்தல் செய்வாம்''

என்னும் செய்யுளில், 'சேயென்று ஒருவர் அழைத்திட இருவர் அயிர்ப்பவேகி' என்ற பகுதியிலுள்ள 'இருவர்' என்பது இன்னுரைச் சுட்டியதென்று விளங்கவில்லை. பிள்ளையவர்கள் யோசிக்கத் தொடங்கினார்கள். உடனிருந்தவர்களும் யோசித்தார்கள். சிலர், 'பிரம விஷ்ணுக்கள்' என்றனர்; வேறு சிலர் வேறு விதமாகக் கூறினர். அவற்றுள் ஒன்றேனும் பொருத்தமாகத் தோற்றவில்லை. அப்பொழுது மகா வைத்தியநாதையர், 'இருவரென்பதற்கு விநாயகர் சுப்பிரமணியரென்று பொருள் சொல்லலாமோ?' என்று மெல்லச் சொன்னார். அந்தப்பொருள் அவ்விடத்திற்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. 'அதுதான் பொருளாயிருக்கவேண்டும்' என்று பிள்ளையவர்கள் உணர்ந்து, நெடுநேரம் யோசித்துப் பலருக்குப் புலப்படாமல் மகா வைத்தியநாதையருக்கு மட்டும் புலப்பட்டதை அறிந்து மனமுருகினார்; ''ஐயா, நீங்கள் சொன்னது தான் நன்றாக இருக்கிறது. உங்களுடைய ஈசுவர பக்தியே இவ்வாறு தோன்றச் செய்தது'' என்று அவரைப் பாராட்டிக் கூறினார்கள். அவருடைய தமிழறிவை ஒரு மகாவித்துவானே கொண்டாடினாரெனின் நான் வேறு புதிதாக என்ன சொல்லவேண்டும்?

### மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரிவிற்கு இரங்கியது

பிள்ளையவர்களுடைய கவித்திறத்தை மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் நன்றாக அறிந்தவர்கள். எப்பொழுது மடத்திற்கு வந்தாலும் பிள்ளையவர்களைத் தனியே வந்து பார்த்துப் பேசித் தங்களுக்கு உள்ள ஐயங்களைத் தீர்த்துக் கொண்டும் தாங்கள் பாடிய செய்யுட்களைச் சொல்லிக் காட்டியும் அப்புலவர் பிரானுடைய செய்யுட்களைக் கேட்டும் மகிழ்ந்து போவார்கள். அவ்விருவருக்கும் அவர்களிடத்தில் இருந்த மதிப்பும் பேரன்பும் அதிகம்.

அக்கவிஞர் கோமான் யுவ வருஷம் தைமாதம் (1876, பிப்ரவரி மாதம்) பூவுலகை நீத்தனர். அக்காலத்தில் மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் தாம் யாத்திரை சென்

றிருந்த இடத்தில் அச்செய்தியை உணர்ந்து மனந்துடித்து வருந்தினர். இருவரும் தம் ஆற்றுமை புலப்படச் சில செய்யுட்களைப் பாடினர். அவற்றுள் மகா வைத்தியநாதையர் பாடியவை வருமாறு :—

(தரசு கொச்சகக் கலிப்பா)

*"தூவலரு மீனுட்சி சுந்தரப்பேர் கொண்டிலகும்
நாவலர் பிரானரன்ருள் நண்ணினனன் ஞனிடத்தே
ஆவலரா மாணவக ராரிடத்தே தமிழ்பயில்வார்
சேவலர்பி ரான்புகழ்சால் செழுங்கவியாப் பவரெவரே."

"விண்ணுடும் பெருங்கவிஞன் மீனுட்சி சுந்தரவேள்
மண்ணுத மணியனையான் மாதேவன் மலரடிசார்ந்
துண்ணுநின் றனனின்பம் உலப்புறுவார் மாணவரென்
றெண்ணுநின் றனனிலையே என்னேயிவ் வுலகியல்பே."

இப்பாடல்களினுல், பிள்ளையவர்கள் மாணுக்கர்களுக்குப் பாடம் சொல்வதிலும் சிவபிரான் புகழைச் செய்யுளிலமைத்துப் பாடுவதிலும் வல்லவர்களென்பதை அவர் புலப்படுத்தி யிருக்கின்ருர். "இனிமேல் சிவஸ்துதியை அவர்களைப்போல் வேறு யார் பாடப் போகிருர்கள்!" என்று அவர் மனமுருகிப் பல முறை வருந்தியதை நான் கேட்டதுண்டு.

## 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'

மகா வைத்தியநாதையருடைய சிவகதைகள் பெரும்பாலும் கோயில்களிலும் பஜனை மடங்களிலும் நடைபெறும். திருவிடைமருதூர்க் கோயிலில், வைகாசி மாதத்தில் திருக்கல்யாண உத்ஸவம் நடைபெற்ற காலத்தில் ஆதீனகர்த்தர் விருப்பத்தின்படி அவர் பார்வதி கல்யாண சரித்திரத்தைக் கதை பண்ணினுர். அதற்குமுன் அந்தக் கதையை அவர் வேறிடங்களிற் பண்ணியதில்லையாயினும், கந்தபுராணத்தில் அவருக்கு இருந்த பயிற்சியினுலும் இயல்பாகவே பல வடமொழி தென்மொழி நூல்களிலுள்ள பழக்கத்தினுலும் அதனை மிகவும் சிறப்பாகச் செய்து நிறைவேற்றினுர்.

---

*தூ-பரிசுத்தம். ஆவலர்-அன்புடையார். சே-இடபம். மண்ணுத-கழுவாத. உலப்புறுவார்-வருந்துவார்.

அப்பால், ஆதீனத்தலைவர்களுடைய விருப்பப்படி இராமஸ்வாமி ஐயர் பார்வதி கல்யாண சரித்திரத்தைக் கீர்த்தன உருவத்தில் இயற்றினார். பிறகு மகா வைத்தியநாதையர் அதை வைத்துக் கொண்டு கதை செய்து வரலாயினர்.

வெகுதான்ய வருஷம் (1878) அவர் இராமேசுவர யாத்திரை போனார்; அப்போது இராமநாதபுரத்தில் தங்கினார். அங்கே 'ரிஸீவர்' ஆக இருந்த ஸ்ரீநிவாஸ மூர்த்தி ஐயங்காரென்பவர் அவரைத் தக்கவண்ணம் உபசரித்துச் சிலநாள் இருக்கச் செய்தனர்; ஒருநாள் பிரகலாத சரித்திரத்தைக் கதைபண்ண வேண்டுமென்று விரும்பினார். மகா வைத்தியநாதையர் சிவ கதையன்றி வேறு சரித்திரங்களைச் செய்ததில்லை. ஆனாலும் ஹரிகதை செய்வதில் அவருக்கு வெறுப்பு இல்லை. அவர் சமரஸமான நோக்கமுடையவர். ஆதலின் ஐயங்கார் விரும்பியபடியே அங்கே ஒரு தினம் பிரகலாத சரித்திரத்தைக் கதை பண்ணினார். அந்தச் சரித்திரத்திற்கு வேண்டிய உருப்படிகள் அவருக்குத் தெரியாவிட்டாலும் கம்பராமாயணத்திற் பயிற்சிமிக்க அவர் அதிலுள்ள இரணியன் வதைப்படலச் செய்யுட்களைச் சொல்லிப் பொருள் கூறிச் சபையினரை இன்புறுத்தினர்; அன்றியும் திருநாவுக்கரசு நாயனார் சமணரால் துன்புறுத்தப் பெற்ற சிலவகைச் செய்திகள் பிரகலாதனுடைய சரித்திரச்செய்திகள் சிலவற்றோடு ஒப்புமையுடையனவாக இருத்தலின் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி அந்நாயனார் சரித்திரத்தில் உபயோகப்படும் சில கீர்த்தனங்களையும் விஷயங்களையும் பொருத்திச் சொன்னார். கேட்டவர்களும், "இவ்வளவு இனிமையான ஹரிகதையை யாரிடத்திலும் கேட்டதில்லை" என்று கூறி வியந்தார்கள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' அல்லவா?

### சுப்பிரமணிய தேசிகவிலாசப் பாட்டு

திருவாவடுதுறை யாதீனத்தைச் சார்ந்த *செவ்வந்தி புரத்தில் பெரிய காறுபாருக இருந்த ஸ்ரீ வேணுவனலிங்கத் தம்பிரானென்பவர் ஒரு பெரிய மடம் கட்டுவித்து அதற்கு, 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' என்னும் பெயரை அமைத்தார். பின்பு அவருடைய வேண்டுகோளின்படி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அங்கே

---

*இது திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூகாவில் தாம்பிரபர்ணி உற்பத்தியாகும் பாபநாசத்துக்கு 4-மைல் தூரத்தில் உள்ளது; திருநெல்வேலிப் பக்கத்துக் கிராமங்களுக்குத் திருவாவடுதுறை மடத்துப் பெரிய காறுபாருக இருக்கும் தம்பிரான்களுக்குத் தலைமையிடம்.

விஜயஞ் செய்திருந்த பொழுது அம்மடாலயத்தைச் சிறப்பித்துப் பலர் பல பாடல்களை இயற்றினர்கள். அக்காலத்தில் அங்கே வந்திருந்த மகா வைத்தியநாதையரும் அவர் தமையனுரும் வேறு பலரும் பல செய்யுட்களை இயற்றிக்கூறினுர்கள். அவற்றுள் மகா வைத்தியநாதையர் இயற்றியது வருமாறு :—

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

''மும்மையா லுலகாண்ட மூர்த்தியார் முன்செய்பணி
முட்டும் வண்ணம்
வெம்மையா ரோரரசால் விளைந்ததெனுஞ் சொன்மாற
விடைநீத் தீசன்
இம்மையார் பலவரசும் படர்பதிச்சுப் பிரமணிய
இறையாய் மும்மைச்
செம்மையார் வேணுவன லிங்கன்செய் திருமடத்திற்
றிகழ்ந்துற் ருனுல்.''

நாயன்மார்களுடைய சரித்திரங்களிலே ஈடுபட்டிருந்த மகா வைத்தியநாதையர் இச்செய்யுளில் மூர்த்தி நாயனுருடைய வரலாற்றை அமைத்திருக்கின்றனர். ''திருநீறு, கண்டிகை, சடை முடி என்னும் மூன்றையும் தமக்குரிய சின்னங்களாகக் கொண்டு பாண்டிநாட்டை ஆண்ட மூர்த்திநாயனுர் செய்துவந்த சந்தனக் காப்புத் திருப்பணியானது தடைப்படும் வண்ணம் ஓர் அரசனுல் நிகழ்ந்ததென்னும் பழிச்சொல் மாறும்படி, இடபவாகனத்தை நீத்து விட்டுச் சிவபெருமானே, பல அரசுகளும் படருகின்ற இடமாகிய திருவாவடுதுறையில் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகராக எழுந்தருளிப் பின்பு மேற்கூறிய மூன்று வகைச் சின்னங்களையும் உடைய வேணுவனலிங்கத் தம்பிரான் இயற்றிய மடாலயத்தில் வீற்றிருந்தார்'' என்பது இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட பொருள். ஓர் அரசனுல் துன்பம் உண்டாகியதைப் போக்கப் பல அரசர்களும் படரும் பதியில் வந்தாரென்பது இதன் பாலுள்ள நயம். படரும் கொடியரசு திருவாவடுதுறை ஸ்தல விருட்சம். ஆதலின் அர சென்றது இங்கே இரண்டு பொருளையும் குறித்து நிற்கின்றது. இச் செய்யுளினுல் மகா வைத்தியநாதையருக்குச் சுப்பிரமணிய தேசிக ரிடத்தில் இருந்த பேரன்பு விளங்கும்.

## 'வைத்தி பாகவதர்'

பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் செவ்வந்தி புரத்திலிருந்து பல இடங்களுக்குத் தம் பரிவாரங்களுடன் சென்றனர். அப்போது மகா வைத்தியநாதையரும் சிலகாலம் உடன் இருந்தனர். ஓரூரில் தங்கியிருந்தபொழுது ஒரு நாள் இரவில் அவ்வூரிலுள்ள ஒரு சத்திரத்துத் திண்ணையில் மகா வைத்தியநாதையரும் வேறு சிலரும் சயனித்திருந்தனர்; அவர்களுள் நானும் ஒருவன். பாதி இரவில் ஓர் இறைச்சல் கேட்டது. நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. ஐம்பது பேர்களுக்குக் குறையாமலுள்ள ஒரு பெரிய கூட்டம் அந்தச் சத்திரத்தை நோக்கி வந்தது; வரும்பொழுதே அந்தக் கூட்டத்தினர், ''வைத்தி பாகவதர் எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தனர். அவர்கள் யாரைத் தேடுகிறார் களென்றும் எதற்காகத் தேடுகிறார்களென்றும் எங்களுக்கு விளங்க வில்லை. அவர்கள் உண்டாக்கிய சப்தத்தால் நாங்கள் யாவரும் எழுந்துவிட்டோம்.

''இங்கே பண்டாரசன்னிதிகளுடன் வைத்தி பாகவதர் வந் திருக்கிறாராமே. அவர் எங்கே இருக்கிறார்?'' என்று மீட்டும் அவர்கள் கேட்டார்கள். எங்களுள் ஒருவர் அவர்களை மெல்ல விசாரிக்கத் தொடங்கி, ''நீங்கள் யார்? யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று கேட்டார். ''நாங்கள் பக்கத்து ஊரில் வசிப்பவர்கள். வைத்தி பாகவதரைப்பற்றி மிகவும் சிறப்பாகக் கேள்விப்பட்டிருக் கிறோம். அவருடைய பாட்டைக் கேட்கவேண்டுமென்பது எங்கள் ஆசை. இந்த ஊருக்கு அவர் பண்டாரசன்னிதிகளுடன் வந் திருப்பதாகக் கேள்விப்பட்டோம். இப்பொழுது அவகாசம் இருக்கு மாதலால் வந்து பார்த்து ஒரு தேவாரமாவது ஒரு சுலோகமாவது கேட்டுப்போகலாமென்று புறப்பட்டோம்'' என்றார்கள். அவர்கள் மகா வைத்தியநாதையரைத் தேடி வந்தவர்களென்று எங்களுக்கு அப்பொழுதுதான் தெரியவந்தது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வர்கள் சங்கீத வித்துவான்களெல்லோரையும் பாகவதரென்றே அழைப்பது வழக்கம். சோழ நாட்டினராகிய எங்களுக்கு அது தெரியாததலின் அவர்கள் இன்னாரைக்குறித்துக் கேட்கிறார் களென்று முதலில் தெரியவில்லை. அவர்களுடைய செயல் எங் களுக்கு வியப்பை உண்டாக்கியது. பாதிராத்திரியில் அவர்கள் நினைத்த வண்ணம் பாட இயலாததலின், மறுநாள் சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் வினிகை நடைபெறுமென்றும் அப்பொழுது

வந்து கேட்கலாமென்றும் இராமஸ்வாமி ஐயர் சொல்லி அனுப்பினுர். அவர்கள் மகா வைத்தியநாதையரைப் பார்த்ததனுலேயே ஒருவகைத் திருப்தியையும் சந்தோஷத்தையும் அடைந்து சென்ருர்கள்; மறுநாள் வந்து அவருடைய சங்கீதத்தையும் கேட்டு இன்புற்ருர்கள்.

## 'அகப்பட்டுக் கொண்டாயா?'

ஒரு வருஷம் ஐப்பசி மாதத்தில் வழக்கம்போல் துலாஸ்நானத்திற்காக ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறையிலிருந்து மாயூரம் சென்று தெற்கு வீதியிலுள்ள கட்டளை மடத்தில் இருந்து வந்தார். அங்கே நாள்தோறும் வித்துவான்கள், பிரபுக்கள் முதலியோருடைய சல்லாபங்கள் இடைவிடாமல் நடக்கும். மகா வைத்தியநாதையர், இரட்டைப் பல்லவி சிவராமையர், கோபால கிருஷ்ணபாரதியார், திருவாலங்காட்டுத் தியாகராஜ சாஸ்திரிகள், சாத்தனூர்ப் பஞ்சுவையர் முதலிய சங்கீத வித்துவான்கள் அங்கே வந்திருந்தனர்.

மாயூரத்தில் அக்காலத்தில் கோவிற் பாடகராக ஒரு முதிய அந்தணர் இருந்தார். அவர் யாரைப் பார்த்துப் பேசினுலும், ''* அபயாம்பிகா கடாட்சம் உங்களுக்கு உண்டாகவேண்டும்'' என்று சொல்வார். அதனுல் அவரை யாவரும், 'அபயாம்பிகா கடாட்சம்' என்றே அழைப்பாராயினர். அவருடைய இயல்பு ஒரு தனிவகையைச் சேர்ந்தது. அடிக்கடி அவர் மடத்திற்கு வந்து போவார். வருஷத்துக்கு ஒருமுறை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவருக்கு முக்கால் ரூபாய் ஸம்மானம் செய்வது வழக்கம். அப்படிச் செய்யும்பொழுதெல்லாம், ''மகா வைத்திக்குக்கூட ரூபாய் பத்து இருபது கொடுக்கிறீர்களே? நான்மட்டும் தாழ்ந்தவனு? அந்தப் பையன் வரும்போது அவனை என்னேடு பாடும்படி செய்தால் என் யோக்யதை உங்களுக்குத் தெரியவரும்'' என்று சொல்வார். சுப்பிரமணிய தேசிகர் நகைத்துக் கொண்டே, ''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லியனுப்புவார்.

முன்பு குறிப்பிட்ட வருஷத்தில் யாவரும் கூடியிருந்த சபையில் 'அபயாம்பிகா கடாட்சம்' தற்செயலாக வந்தார்; வழக்கம்போல்

---

* அபயாம்பிகை யென்பது அத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

ஸம்மானம் பெற்றுக் கொண்டார்; பிறகு தேசிகரைநோக்கி மகா வைத்தியநாதையருடன் சேர்ந்து பாடச்செய்தால் தம்முடைய மதிப்பு விளங்குமென்று சொன்னார். அவர் அதற்கு முன் மகா வைத்தியநாதையரைப் பாராதவராதலின் அவர் அங்கே இருத்தலை அறியவில்லை. சுப்பிரமணிய தேசிகர் புன்சிரிப்போடு, ''இவர்களே மகா வைத்தியநாதையரவர்கள்'' என்று கூறிச் சுட்டிக்காட்டினார். அந்தப் பிராமணர் உடனே திடுக்கிட்டு எழுந்து போய்விடுவா ரென்று நாங்கள் யாவரும் எண்ணினோம். அவர் சிறிதேனும் அஞ்சாமல், ''அப்படியா! நல்லவேளை! இப்பொழுது அகப்பட்டுக் கொண்டாயா? பாடு பார்க்கலாம். நானும் பாடுகிறேன். நான் பாடிக்காட்டுகிறபடி பாடுவாயா?'' என்று கேட்டுவிட்டு, 'மொட் டைச்சுவர் - கட்டைச்சுவர் - தட்டைச்சுவர் - குட்டைச்சுவர்' என்று தம் வாய்க்கு வந்தவற்றைப் பல்லவியாக எடுத்துப் பாட ஆரம்பித் தார். மகா வைத்தியநாதையர் சிரித்தார்; உடனே அந்த முதிய வர், ''என்ன சிரிக்கிறாய்? சிரித்துவிட்டால் ஏமாந்து போவே னென்று நினைக்கிறாயோ? பாடு பார்க்கலாம். பேசாமல் ரூபாயை வாங்கி முடிந்துகொண்டு போக மாத்திரம் தெரியுமா? சால்வை, பட்டு, சோமன், ஜோடு எல்லாம் வாங்கிக் கொள்ளத் தெரியுமா? நான் இல்லாத காலத்தில் வந்து பண்டாரசன்னிதிகளை ஏமாற்றிப் பணம் வாங்குகிறாயா? எங்கே இதைப் பல்லவியாக வைத்துப் பாடு பார்க்கலாம்'' என்று உத்ஸாகத்தோடு சொல்லிவிட்டு எல்லோரு டைய முகத்தையும் பார்த்தார். உடன் இருந்த யாவரும் சிரித் தனர்.

உடனே அங்கிருந்த தியாகராஜ சாஸ்திரிகள் அந்தப் பிரா மணரைப் பார்த்து, ''ஓய், இங்கே வாரும். என்ன அவரிடம் போய்க் குழறுகிறீர்? இங்கே வந்து பாடும். நான் பாடிக்காட்டுகிறேன்'' என்று சொன்னார். அம்முதியவரும் அப்படியே வந்து அஞ்சாமல் பாடினார். தியாகராஜ சாஸ்திரிகள் அவர் பாடினபடி யெல்லாம் பாடிக் காட்டினார்; அவர் அபஸ்வரமாகப் பாடும்பொழுதெல்லாம் சாஸ்திரிகளும் அப்படியே பாடினார். இந்த விநோதக் காட்சியினால் சபையிலிருந்தவர்கள் யாவரும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். ஒன்றும் தெரியாத ஸாதுவாகிய 'அபயாம்பிகா கடாட்சம்' சிறிது நேரம் பாடிவிட்டுத் தம்முடைய பேச்சு அங்கே ஏறுதென்றெண் ணிப் போய்விட்டார்.

## என்பாலுள்ள அன்பு

நான் கும்பகோணம் காலேஜில் வேலையில் நியமிக்கப்பட்டதை யறிந்த மகா வைத்தியநாதையர் ஒருசமயம் கும்பகோணம் போயிருந்தபோது 'காலேஜ்' பிரின்ஸிபால் ராவ்பஹதூர் தண்டலம் கோபால ராவ் அவர்களின் வீட்டிற்குச் சென்று, என்னை நியமித்ததைக் குறித்து நன்றி பாராட்டி விட்டு வந்தார். அதற்குக் காரணம் என் தந்தையாரிடத்தில் அவருக்கு இருந்த பிரியமே ஆகும். கோபாலராவவர்கள் மகா வைத்தியநாதையரிடம் நன்மதிப்பை உடையவர்கள்; அவரைப்பற்றி, ''கேட்பவர்களுடைய மனமறிந்து பாடும் திறமை உடையவர்'' என்று கூறிப் பாராட்டுவதுண்டு.

## சமயோசித அறிவு

ஒரு சமயம் திருப்பனந்தாளுக்குச் சென்றிருந்த போது மகா வைத்தியநாதையரும் அவர் தமையனாரும் திருவாப்பாடி, சேய்ஞலூர் என்னும் ஸ்தலங்களைத் தரிசித்துவர எண்ணினார்கள். அப்பொழுது அங்கே காசிமடத்துத் தலைவராக இருந்த ஸ்ரீ குமாரசாமித் தம்பிரானவர்கள் ஒரு வண்டி கட்டுவித்து அனுப்பினார்கள். நானும் உடன் சென்றேன்.

சாலையிலிருந்து சேய்ஞலூருக்குத் திரும்பும் சமயத்தில் அந்த வண்டி பள்ளத்திற் சாய்ந்துவிட்டது. நாங்கள் யாவரும் கீழே விழுந்தோம்; உடனே எழுந்து உடம்பைத் துடைத்துக் கொண்டோம். அப்பொழுது மகா வைத்தியநாதையர், ''பரமசிவனால் அளிக்கப்பட்ட முத்துச் சிவிகையில் எழுந்தருளியிருந்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் இதன் எல்லைக்கு வந்தவுடன், இந்த ஸ்தலம் சண்டிகேசுவர நாயனார் அவதரித்த ஸ்தலமென்று இறங்கி நடந்து சென்றார். அதனை அறிந்திருந்தும் நாம் வண்டியில் வந்தது தவறென்று திருவருளே அறிவித்து விட்டது'' என்று கூறி,

(கலிவிருத்தம்)

*''ஞானசம் பந்தரும் நாய னார்சடைத்
தூ நறுத் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்

---

*நாயனார்-சிவபெருமான். தொடையல் முன்-மாலை முதலிய சேடங்களை. பிள்ளையார்-சண்டிகேசுவரர். நித்திலயானம்-முத்துப்பல்லக்கு. இழிந்து-இறங்கி.

பான்மையில் வரும்பதி யென்று நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினர்''
(பெரிய. திருஞான. 244)

என்னும் பெரியபுராணச் செய்யுளைச் சொன்னர். அவருக்கு நாயன் மார்களிடத்தில் இருந்த அன்பின் முதிர்வையும் பெரியபுராணப் பயிற்சியையும் ஞாபக சக்தியையும் சமயோசித புத்தியையும் உணர்ந்து வியந்து யாவரும் நடந்தே சென்ருேம்.

## 'சங்கீதத்தைக் காப்பாற்றுபவர்'

சென்னைக்கு ஒருமுறை மகா வைத்தியநாதையர் சென்றிருந்த பொழுது அவரைப் பார்க்கவேண்டுமென்று ராவ்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியார் விரும்பினர். அப்பொழுது சென்னையில் இருந்த நான் அவரை அழைத்துக் கொண்டு முதலியார் வீட்டிற்குச் சென்றேன். மகா வைத்தியநாதையருக்குத் தமிழ்நூற்பயிற்சியும் உண்டென்பதை அறிந்திருந்த அரங்கநாத முதலியார் தமிழ் நூல்கள் பலவற்றைப் பற்றி அவருடன் பேசிக்கொண்டிருந்தார்; பல செய்யுட்களை இடையிடையே எடுத்துக் கூறினர். மகா வைத்தியநாதையரும் அப்படியே பல செய்யுட்களைச் சலிப்பில்லாமல் எடுத்துக் கூறிப் பேசிக் கொண்டிருந்தார். அங்ஙனம் பேசும் பொழுது செய்யுட்களை இசையோடு அவர் சொல்லுவாரென்றும் அதனுல் அவருடைய சாரீர இனிமையை அறிந்து மகிழலாமென்றும் முதலியார் எண்ணியிருந்தார். ஆனுல் மகா வைத்தியநாதையரோ செய்யுட்களைச் சொல்லும் பொழுது இசையோடு சொல்லாமல் பேசுவது போலவே சொன்னர். அவர் போன பிறகு முதலியார் என்னிடம், ''இவர் சங்கீதத்தை நன்ருகக் காப்பாற்றுபவர். மிக்க சதுரர். சங்கீதம் தெரியாதவர்களெல்லாம் பாட்டோ சுலோகமோ சொல்லும்போது சங்கீதம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள எண்ணி அபஸ்வரமாகச் சொல்லித் தாங்களே சந்தோஷிக்கிருர்கள். நான் இவரோடு பேச்சுக் கொடுத்து ஏதாவது ஒரு பாட்டைச் சாரீரத்துடன் இவர் சொல்லக் கேட்கலாமென்றிருந்தேன். நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். இவர் எவ்வளவோ தமிழ்ச் செய்யுட்களைச் சொன்னர். ஆனுல் ஒன்றையாவது இசையுடன் சொல்லவில்லை. அப்படிக் காப்பாற்றினுல் தானே அதற்குக் கௌரவம் உண்டாகும்?'' என்ருர். பின்பு அரங்கநாத முதலியார் சென்னையிலுள்ள பல பிரபுக்களின் ஆதரவில் மகா வைத்தியநாதையரை ஒரு வினிகை நடத்தச் செய்து அவருக்குத் தக்க ஸம்மானம் செய்வித்து அனுப்பினர்.

### சிரமமில்லாமல் ஸம்மானம் பெற்றது

அந்தக் காலத்தில் சென்னைக்கு வந்திருந்த வேங்கடகிரி மகா ராஜா மகா வைத்தியநாதையருடைய திறமையைப்பற்றிக் கேள்வி யுற்று அவரைப் பார்க்க விரும்பினர். அவர் அவ்வரசர்பால் சென்றனர். அவ்வரசர் சங்கீத சாஸ்திரத்தில் நல்ல பயிற்சி உடையவர்; ஆதலின் வைத்தியநாதையருடன் அந்தச் சாஸ்திர விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவரும் பல நூற்பயிற்சி யுடையவராதலின் அரசர் அவருடைய ஸம்பாஷணையால் மிக்க திருப்தி அடைந்தார்.

வேங்கடகிரி ஸமஸ்தானத்தில் வித்துவான்களுக்கு உத்தம ஸம்பாவனையாகக் கொடுக்கும் தொகை 108-ரூபாய். மகா வைத்தியநாதையருடைய ஞானத்தை அறிந்து மகிழ்ந்த ஸமஸ் தானதிபதி உத்தம சம்மானத்தின் இரண்டு பங்காகிய 216-ரூபா யைக் கொடுத்து வேறு மரியாதைகளையும் செய்தார். மகா வைத் தியநாதையர் அங்கே வினிகையாவது சிவகதையாவது நடத்த வில்லை. இந்த நிகழ்ச்சியைப்பற்றிப் பின்பு ஒருகால் மகா வைத்திய நாதையரே, ''பாட்டைக் கேட்பாரென்று எண்ணியிருந்தேன். சங்கீத லக்ஷணங்களைப்பற்றிப் பேசினரே யொழியப் பாடவேண்டு மென்று சொல்லவேயில்லை. வேறோரிடமாக இருந்தால் கசக்கிப் பிழிந்து விடுவார்கள். யாதொரு சிரமமும் இல்லாமல் உயர்ந்த ஸம்மானத்தை அவரிடம் பெற்றேன். இதுவும் ஓர் அதிர்ஷ்டந் தான்'' என்று என்னிடம் சொன்னர்.

### பெரிய புராணக் கீர்த்தனப் பிரசங்கம்

ஒருகாலத்தில் சிவபுண்ணியச் செல்வர்களாகிய நகரத்தார் களுடைய ஊர்களுக்கு மகா வைத்தியநாதையர் சென்று அங்கங்கே பலருடைய விருப்பத்தின்படி சிவகதைபண்ணி ஸம்மானம் பெற்ற னர். தேவகோட்டையில் ஐந்து மாதம் இருந்து பெரிய புராணக் கீர்த்தனக் கதாப்பிரசங்கம் செய்து எல்லோருடைய ஆதரவையும் உயர்ந்த ஸம்மானங்களையும் பெற்றனர்; அன்றியும் அவர்கள் மகா வைத்தியநாதையருக்கு நாயன்மார்களிடத்திலிருந்த பேரன்பை எண்ணி அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய படங்களையும் செய்வித்து வழங்கினர்.

### பாஸ்கர சேதுபதி

இராமநாதபுரத்தில் இருந்த ஸ்ரீ பாஸ்கரசேதுபதி மன்னரவர் களுடைய திருமண வைபவத்திற்கு மகா வைத்தியநாதையர்

சென்றிருந்தனர். அங்கே சில காலம் இருந்து வினிகையும் சிவ கதையும் செய்து ஸம்மானங்களைப் பெற்றனர். பின்பும் பாஸ்கர ஸேதுபதி மன்னர், [1]'பட்டாபிஷேக வைபவகாலத்தில் வருவித்து வெகுமதி செய்ததுமன்றி, மாதந்தோறும் சம்பளமும், வருடந் தோறும் நவராத்திரி மகோத்ஸவத்திற்கு வரும்படியாகச்செய்து வருஷாசனமும் நியமனம் செய்ய, அவ்வாறே சென்று வெகுமதி பெற்று வந்ததுமன்றி, இடையில் எக்காலத்தில் அழைத்தாலும் அக்காலந்தோறும் சென்று மகாராஜா அவர்களுக்குக் கர்ணாநந்த மான காணாநந்தத்தைப் புகட்டி உத்தம ஸம்மானம் பெற்று' வந்தனர்.

## திருவையாற்று வாஸம்

திருவையாற்றில் ஸ்ரீ பிரணதார்த்திஹரரைத் தரிசித்துக்கொண்டு இருக்கவேண்டுமென்றெண்ணி, ஸ்ரீ தருமஸம்வர்த்தினி அம்பிகை சந்நிதியிலுள்ள பாவாஸாமி அக்கிரகாரத்தில் மேற்குக்கோடியில் வடசிறகில் இரண்டு வீடுகளை அவர் வாங்கினார். அவற்றுள் ஒன்றில் தாம் தம் தமையனாருடன் இருந்துகொண்டு மற்றொன்றில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் படத்தையும் அறுபத்துமூவர் படத்தை யும் வைத்துத் தினமும் மாலையில் பஜனை செய்துவந்தார்.

அவர் ஸப்தஸ்தான உத்ஸவத்தில் ஸ்ரீ பிரணதார்த்திஹர ருடன் எல்லா ஸ்தலங்களுக்கும் நடந்து செல்வதுண்டு. இடை யிடையே நேர்ந்த ஸ்தலங்களில் பூஜை செய்துவிட்டுச் செல்வார். திருநெய்த்தானத்தில் சுவாமி எழுந்தருளியிருக்கும் பொழுது காவேரி மணலில் தாமே இன்புற்றுப் பாடுவார். இங்ஙனம் ஒவ்வொரு வருடமும் நடைபெற்றுவந்தது. அப்பொழுது கேட்பதற்காகப் பல பேர்கள் வந்து கூடுவார்கள்.

## நோயுற்றுத் தீர்ந்தது

ஒரு வருஷத்தின் இடையில் மேற்கூறிய திருவிழா யாத்திரை யில் ஓரூரில் [2]ஒரு வீட்டிற் பூஜை செய்துவிட்டு ஆகாரம் செய்த

---

[1] ஸ்ரீ மகா வைத்தியநாத விஜய ஸங்கிரகம்.

[2] அவர்பால் பொறாமையுற்ற சிலருடைய தீயமுயற்சியால், 'ஏவல்' உபத்திரவம் உண்டாயிற்றென்றும், கணபதியக்கிரகாரத்தில் இருந்தவரும் மந்திரசாஸ்திரங்களில் வல்லவருமான ஒரு சாஸ்திரிகளிடம் ரக்ஷாபந்தனம் செய்துகொண்டபின் அது நீங்கிற்றென்றும் சிலர் கூறுவர்.

பொழுது நேர்ந்த அபத்தியத்தால் வைத்தியநாதையருக்கு மிக்க அசௌக்கியம் உண்டாயிற்று. எழுந்து நடக்கவும் உண்ணவும் இயலாமல் படுக்கையாகவே வையைச்சேரியில் இருந்து விட்டார். அதனை யறிந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவருடைய தேகநிலையை அறிந்து வரும்படி அடிக்கடி தக்கவர்களை அனுப்பிவந்ததன்றி அவருடைய சௌகர்யத்திற்காகப் பணமும் கொடுத்தனுப்பினர். அவ்வாறு கொண்டுபோய்க் கொடுத்தவர்களுள் நானும் ஒருவன். பிறகு நோய் தீர்ந்து அவர் சுப்பிரமணிய தேசிகர்பால் வந்து தம் நன்றியறிவைப் புலப்படுத்திப் பாராட்டினர்; "என்னால் பிரயோ ஜனம் இல்லாத காலத்திலும் என்னை மறவாமல் 'பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்றபடி எனக்கு வேண்டிய சௌகரியங்களைப் பண்ணுவித்த சந்நிதானத்தின் பேரருளை நான் என்னவென்று சொல்வேன்!" என்று சொல்லிச் சொல்லி மனங் கனிந்தார்.

### சுப்பிரமணிய தேசிகர் பிரிவிற்கு இரங்கியது

சர்வஜித்து வருஷம் மார்கழி மாதத்தில் (1888) மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பரிபூரணமடைந்த பொழுது, தம்மைப் பல வகையிலும் ஆதரித்துத் தமக்கு உண்டாகிய பெரும்புகழுக்குக் காரணமாக இருந்து விளங்கிய அவருடைய பிரிவாற்ருமையால் மிக வருந்தினர்; தம் வருத்த மிகுதியைப் புலப்படுத்திப் பாடிய செய்யுட்கள் சில உண்டு. அவற்றுள் ஒன்று வருமாறு:

(தரவு கொச்சகக்கலிப்பா)

"ஏரளித்த வடமொழிதென் மொழியளித்தா யிசையளித்தாய்
சீரளித்த துறைசையிற்சுப் பிரமணிய தேசிகநின்
நாரளித்த பேரவைக்கண் மகாவைத்ய நாதனெனும்
பேரளித்தா யெங்களைவிட் டெங்கொளித்தாய் பேசுகவே"

[இசை-சங்கீதம் ; நார்-அன்பு]

இச்செய்யுளில் அவர், தேசிகர் தமக்கு மகா வைத்தியநாதை யரென்னும் பெயர் வழங்கியதைப் பற்றிக் கூறியிருக்கின்றனர்.

### ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப் பிறகு திருவாவடுதுறையா தீனத் தலைவராக வீற்றிருந்தவரும், வித்வத்ஜன பரிபாலகரும்,

ரஸிக சிரோமணியும் வடமொழி, தென்மொழி, சங்கீதம் இவற்றில் நல்ல பயிற்சியுள்ளவரும், தரமறிந்து அளிக்கும் தாதாவுமான ஸ்ரீ அம்பலவாண தேசிகர் மகா வைத்தியநாதையரை அடிக்கடி முக்கியமான சமயங்களில் வருவித்து அவருடைய சங்கீதத்தையும் சிவகதாப்பிரசங்கங்களையும் கேட்டுக்கேட்டு இன்புற்று உயர்ந்த ஸம்மானங்களை அவ்வப்போது செய்துவந்தனர். சில சமயங்களில் மகா வைத்தியநாதையருடைய கானமும் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் பிடிலும் சேர்ந்தே நடக்கும்.

## பிரிவு

நந்தன வருஷத்தில் மகா வைத்தியநாதையருக்குத் தேக அசௌக்கியம் உண்டாயிற்று. அவர் திருவையாற்றில் இருந்து வந்தார். அக்காலத்தில் குடும்பக் கவலை நேராதபடி ஸ்ரீ அம்பலவாண தேசிகரும் பாஸ்கரசேதுபதி மன்னரும் பச்சாம்பேட்டையில் வித்துவான்களுக்குப் பேராதரவாக விளங்கிய நடராஜையரென்னும் செல்வரும் பொருளுதவி செய்து வந்தனர்.

நந்தன வருஷம் தை மாதம் பதினைந்தேதி வெள்ளிக்கிழமை (27—1—1893) பகல் ஒன்றரை மணிக்கு மகா வைத்தியநாதையர் தமது நாற்பத்தொன்பதாம் பிராயத்தில் ஸ்ரீ பிரணதார்த்திஹரருடைய திருவடி நீழலையடைந்தனர். உயிர்பிரியும் இறுதி நேரம் வரையில் அவருடைய திருநாவானது சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டே யிருந்தது; "நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" என்னும் சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவாக்குக்கு இலக்கியமாக அவர் இருந்தார்.

## இரங்கற் செய்யுட்கள்

அவரது பிரிவாற்றாமையினால் அவருடைய தமையனாராகிய இராமஸ்வாமி ஐயர் மிகவருந்திப் பல செய்யுட்களைப் பாடினார். அவற்றுள் இரண்டு வருமாறு :

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

1. "கானநூற் கற்பகமே யறுபத்து மூவர்முதற்
 கடவுட் காதை
 ஆனசீர் வளந்தருசிந் தாமணியே யமுதடியார்க்
 களிக்கும் காம

தேனுவே யெனக்கினிய சிங்கமே யென்னுயிரே
சிவமெஞ் ஞான
பானுவே கலைக்கடலே யுனைப்பிரிந்திங் காற்றகிலேன்
பாவி யேனே.''

2. *''உயிரிழந்த காத்திரம்போ லொளியிழந்த நேத்திரம்போல்
உயர்செஞ் சாலிப்
பயிரிழந்த பண்ணையைப்போற் பதியிழந்த மங்கையைப்போற்
படர்கொள் கொம்பின்
இயலிழந்த விளங்கொடிபோ லிறகிழந்த பறவையைப்போல
இறைவன் காக்கும்
செயலிழந்த குடிகளைப்போ லுனையிழந்திங் கிடருழந்தேன்
தீமை யேனே.''

மகா வைத்தியநாதையருடைய பிரிவினால் தமிழ்நாட்டுச் சங்கீத வித்துவான்களெல்லாம் ஒரு பெரிய நிதியை இழந்தவர்களைப் போல இடருற்று வாடினார்கள். ''அவருடைய சங்கீதத்தின் இனிமையையும் சிவ கதைகளையும் இனி யாரிடம் கேட்டு இன்புறுவோம்!'' என்று தமிழ் நாட்டார் வருந்தினர். அந்தச் சங்கீத சாகரத்தின் இயல்பை நினைக்குந்தோறும் எனது மனம் உருகுகின்றது.

அவருடைய அன்பும் எளிமையும் பிறருடைய மனங்களைக் கவர்ந்து நின்றன. அவர் வாழ்வில் சங்கீதம் ஒரு புது மலர்ச்சியை அடைந்தது. தமிழ் நாட்டின் புகழைப் பரப்பியவர்களுள் அவரும் ஒருவர். எவ்வளவோ சங்கீத வித்துவான்களைத் தமிழுலகம் கண்டிருக்கிறது; ஆயினும் மகா வைத்தியநாதையரைப்போல ஒருவரைப் பெறவேண்டுமாயின் அது பெருந்தவம் செய்திருக்க வேண்டும். அவரைப்போல இசைத்திறமும், தமிழ்வடமொழியறிவும், எல்லோரும் விரும்பும் குணமும், சிவபக்திச் செல்வமும், தூய்மையும், தோற்றப் பொலிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவராகப் பல ஆயிரம் பேர்களுள் ஒருவரே பிறக்கின்றனர். இல்லையெனின், அத்தகைய பெரும்புகழ் அவருக்கு உண்டாவதற்குக் காரணம் இல்லையன்றோ?

*காத்திரம்-உடல். சாலி-நெல். பண்ணை-வயல். பதி-கணவன்.

## இயல்புகள்

மகா வைத்தியநாதையருடைய அருங்குணங்களும் ஒழுங்கான வாழ்க்கையும் இணையற்ற புகழும் அவரை மறவாமல் என்றும் நினைக்கச் செய்வன. அவரைக் குணமணியாகக் கண்டு அன்பு பூண்டவர்களும், சிவபக்தரென அறிந்து ஈடுபட்டவர்களும், சங்கீதக்களஞ்சிய மென்று உணர்ந்து புகழ்ந்தவர்களும், கல்வி மானெனத் தெளிந்து விரும்பியவர்களும் பலர். அவரிடத்தில் அமைந்திருந்த தூய ஒழுக்கத்தாலும், யாவருக்கும் எளியராம் தன்மை முதலியவற்ருலும் எத்தகையவர்களும் அவரிடம் மரியாதை யாக நடந்துகொண்டார்கள்.

## சிவபக்தி

அவருடைய சிவபக்தியும் சிவபக்தர்கள்பால் அவருக்கு இருந்த பேரன்பும் எக்காலத்திலும் குறையவேயில்லை. இளமை தொடங்கியே, நாள்தோறும் சிவபூஜை செய்யும் நியமம் உடைய வர் அவர்; பூஜை செய்தபிறகே உணவு கொள்வார். பூஜை செய்யும் காலத்தில் சிரம், காது, கைகள், கழுத்து முதலிய இடங் களில் ருத்திராட்சங்களைத் தரித்துக் கொள்வார். ஒவ்வொரு நாளும் ருத்ரம், சமகம், புருஷ சூக்தம் ஆகியவற்றைச் சொல்லி அபிஷேகம் செய்வார்; பாலபிஷேகமும் வில்வார்ச்சனையும் இன்றிப் பூஜை செய்யார்; ஏகலிங்கார்ச்சனை செய்தலே அவரது வழக்கம்.

நாள்தோறும் மாலைக்காலத்தில் சிவதரிசனம் செய்வார். வினிகையேனும் கதையேனும் பிற்பகலிற் செய்யநேரின் ஸந்தியா காலத்திற்குள் நிறைவேற்றிவிட்டு ஸந்தியாவந்தனம் செய்து பின்பு சிவ தரிசனத்திற்குப் போய்விடுவார். இந்த நியமம் எந்தக் காலத்தும் தவறியதில்லை. அங்ஙனம் செல்லும்போது தாம் காலையில் தொடுத்துவைத்திருந்த புஷ்பமாலையைக் கொண்டு போவார். அவர், தாம் பிறந்த வையைச்சேரியின்கண் உள்ள சிவாலயத்தில் நடராஜ விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தார். தமக்குக் கிடைத்த ஸம்மானங்களாகிய பீதாம்பரம் முதலிய பொருள்களிற் சிலவற்றை அவ்வாலயத்திலுள்ள மூர்த்திகளுக்கு உபயோகமாகும்படி அளித்துவிட்டனர்.

## பணிவு

அவர் மிக்க மதிப்புடன் விளங்கினாராயினும் தருக்கின்றி யிருந்தார். பிறருடைய திறமையை அறிந்து பாராட்டும்

அருமையான குணம் அவரிடம் அமைந்திருந்தது. மூத்தவர்களிடமும் கல்விமான்களிடமும் மிகவும் மரியாதையோடு ஒழுகுவார். தம் அன்னையாரிடம் எப்பொழுதும், ''வாருங்கள், போங்கள்'' என்று பன்மையாகவே பேசுவார். சங்கீத வினிகைகளுக்குப் பிறர் வந்து அழைத்தால் ஒருவிதமான நிபந்தனையும் பேசிக்கொள்ளாமலே போவார். அதனால் அவருக்கு ஒரு குறைவுமில்லாமல் தக்க மரியாதையே கிடைத்துவந்தது. இக்காலத்தில் அவர் இருப்பாரானால் ஒரு வினிகைக்கே மிகவும் சுலபமாக 500 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். தாம் பெறும் ஸம்மானங்களெல்லாவற்றையும் தமையனாராகிய இராமஸ்வாமி ஐயரிடம் ஒப்பித்து விடுவார். தமையனாருடைய சொல்லுக்கு மாறுபேசவே மாட்டார். மகா வைத்தியநாதையரால் இராமஸ்வாமி ஐயருக்கு அதிக மதிப்புண்டாயிற்று; ஆயினும் அவர் எப்பொழுதும் தமையனாருக்கு அடங்கியே ஒழுகுவார். இராமஸ்வாமி ஐயருடைய முயற்சிகளாலும் அவ்வப்பொழுது இன்னவாறு நடக்கவேண்டுமென்று அவர் அறிவுறுத்திவந்த செயலாலும் மகா வைத்திய நாதையர் அடைந்த பயன்கள் பல.

மகா வைத்தியநாதையருடன் எப்பொழுதும் இருந்து அவரை இன்ன இன்ன உருப்படிகளைப் பாடவேண்டுமென்று இராமஸ்வாமி ஐயர் சொல்லி வருவார். அதனாற் சிலருக்கு வைத்திய நாதையர் தம்முடைய தமையனார் உதவியின்றி ஒன்றும் செய்யும் சக்தியில்லாதவரென்ற எண்ணம் உண்டாயிற்று. ஒரு சமயம் இராமஸ்வாமி ஐயர் நோய்வாய்ப்பட்டமையால் வைத்தியநாதையர் சில இடங்களுக்குத் தனியே சென்று வினிகைகளும் கதைகளும் நடத்தி வந்தார். அதைக் கேட்டபிறகு அவர்களுக்கு இருந்த அந்த எண்ணம் அடியோடே நீங்கியது.

### விருப்பமான பொருள்கள்

சுருக்கமான உணவையே அவர் விரும்புவார். வற்றற்குழம்பு, வெந்தயக்குழம்பு, சீரகரசம், நீர்மோர் ஆகியவற்றில் அவருக்கு விருப்பம் உண்டு. எலுமிச்சம்பழம் சேர்த்துக்கொள்ளார். பால் உட்கொள்ளும் வழக்கம் இல்லை. நெய் ஒரு கரண்டி முட்டையளவு தான் சேர்த்துக் கொள்வார். ஆடம்பரமான உணவு வகைகளில் அவருக்கு அவா இல்லை. வெளியூர்களுக்குச் செல்லுங் காலங்களில் அவல், சீடை, பொரிமா முதலியவற்றைக்கொண்டு செல்வார். அவற்றை அவசியமாயின் பிற்பகலில் உண்பார். அவரிடம் கைலாசையர் என்ற பரிசாரகர் எப்பொழுதும் உடனிருந்து வந்தார்.

## பாண்டவ பாஷை

சகோதரர்களோடு பேசுங்காலத்தில் ஏதோ ஒரு பாஷையில் அவர் பேசுவார்; அஃது இன்ன பாஷையென்று யாருக்கும் விளங்காது. ஒரு முறை நான் என்னபாஷை யென்று கேட்டேன்; அவர், "இதனைப் பாண்டவபாஷையென்று சொல்வதுண்டு. விராட நகரத்தில் பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்த காலத்தில் தமக்குள் வழங்கிவந்ததைப் போன்றதென்று கேள்வி" என்றார்.

## சங்கீதத் திறமை

அவருடைய சங்கீதத்திறமை தனிச்சிறப்புடையது. ஒன்றரை மணிக்கு மேல் அவர் தொடர்ந்து பாடுவதில்லை; சிவகதை இரண்டு மணிநேரம் செய்வார். இராக ஆலாபனம் செய்யும்போது வாய்க்கு வந்த சொற்களையும் எழுத்துக்களையும் வழங்காமல் 'சங்கரா' என்றே ஆலாபனம் செய்வார். அவருடைய சிவபக்தியே அங்ஙனம் செய்வதற்குக் காரணமாகும். முகவேறுபாட்டைக் காட்டாமலும், பலவிதமான அங்க சேஷ்டைகள் இல்லாமலும், கைகளை ஓங்காமலும், இருந்தபடியே அசையாமல் பாடுவார். பாடுவதற்கு முன் தொண்டையைச் சரிப்படுத்திக் கொள்ளுதல், சுருதியோடு பொருத்துவதற்குச் சில நேரத்தைக் கழித்தல், இடையிடையே பல வகைப் பானங்களை உட்கொள்ளல் முதலியவைகளை அவரிடம் ஒரு போதும் நான் கண்டதில்லை. அவருடைய உணவின் ஒழுங்கும், தூய ஒழுக்கமும், வரையறையோடு பாடும் முறையும் அவருடைய சாரீரத்தை ஒரே நிலையில் இருக்கச் செய்தன. ஆதலின் எந்தச் சமயம் வேண்டுமானாலும் அவர் பாடுவதற்கு ஸித்தராக இருப்பார்.

ஒருமுறை அவர் திருவாவடுதுறைக்கு வந்திருந்தபோது விடுதியிலிருந்து மடத்திற்குப் பாடுவதற்காகப் போய்க்கொண்டிருந்தார். அவருடன் அவர் தமையனார் சென்றார். நானும் பிறரும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றோம். அப்பொழுது மகா வைத்தியநாதையர், "ராமஸாமி, ராமஸாமி" என்று உரக்கக் கூப்பிட்டார். 'இவருடைய தமையனாராகிய இராமஸ்வாமி ஐயர் அருகில் வரும்பொழுதே இவர் ஏன் கூப்பிடுகிறார்?' என்றெண்ணினேன். மறுநாள் இராமஸ்வாமி ஐயரை விசாரித்தேன்; "சாரீரம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டான்" என்று

அவர் கூறினர். அப்பொழுது எனக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவேயில்லை. சாரீரத்தைப் பரீட்சிப்பதற்காக எவ்வளவோ நேரத்தைக் கழிக்கும் பல வித்துவான்களுக்கும் அவருக்கும் உள்ள வேற்றுமையை நினைந்து நினைந்து வியந்தேன்.

## சிவகதை செய்யும் முறை

திருவாவடுதுறை மடத்திற்கு வந்த காலங்களில் அவருடைய பாட்டு ஒருநாளும், சிவகதை ஒருநாளுமாக மாறி மாறி நடைபெறும். சிவகதை, ஹரிகதையாகியவற்றிற்கு ஒரேவிதமான ஆரம்பங்களும் பூர்வ பீடிகைகளும் சொல்லும் சங்கீத வித்துவான்கள் பலர் இக்காலத்தில் இருக்கின்றனர்; மகா வைத்தியநாதையருடைய சிவகதையின் போக்கு, தொடக்க முதல் இறுதி வரையில் சம்பிரதாய விரோதமில்லாமலும் புதிய புதிய விஷயங்களைக் கொண்டதாகவும் இருக்கும். 'சங்கரா' என்று ஆரம்பிக்கும் போதே மந்திரத்தாற் கட்டுண்டவர்கள்போல் சபையினர் யாவரும் மெய்ம்மறந்து விடுவார்கள். சிவபரமான கீர்த்தனங்களும் சுலோகங்களும் பாடல்களும் அவருடைய வாக்கிலிருந்து அமுத மழைபோல வெளிவரும்.

முதன் முதலில் ''வாதாபிகணபதிம்'' என்ற விநாயகர் வணக்கத்தை அவர் பாடுவார். பிறகு பெரியபுராணக் கீர்த்தனத்திலுள்ள ''எக்காலத்து மறவேனே'' என்ற நடராஜ ஸ்துதியைப்பாடுவார். நாயன்மார் சரித்திரங்களாயின் திருத்தொண்டத் தொகையில், ''தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்'' என்று தொடங்கி எந்த நாயனர் சரித்திரத்தைச் சொல்ல வேண்டுமோ அந்த நாயனர் திருநாமம் உள்ள திருப்பாடல்வரையிற் பாடி விட்டுக் கதையைத் தொடங்குவார். தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் காட்டவேண்டு மென்ற கருத்தால் ஸம்பிரதாய விரோதமானவற்றையும் இடத்திற்குப் பொருத்தமில்லாத விஷயங்களையும் புகுத்திச் சொல்லும் தன்மை அவர்பால் இல்லை; அங்ஙனம் செய்யும்படி நிர்ப்பந்திப்பவர்களும் அக்காலத்திற் பெரும்பாலும் இல்லை. எடுத்துக் கொண்ட சரித்திரத்தினல் அறியப்படும் உயர்ந்த கருத்துக்களை விளக்கும் ஆன்றோர் வாக்குக்களை மேற்கோளாகக் காட்டிப்பொருள் கூறும்பொழுது அந்த நூல்களைப் பயிலவேண்டு மென்னும் விருப்பமும் அந்த நீதியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்னும் எண்ணமும் கேட்பவர்களுக்கு உண்டாகும். அவருடைய கதாப்பிரசங்கத்தில் அடிமுதல் இறுதி வரையில் சிவபக்தி உணர்ச்சியை வளர்க்கும் அமைப்பே காணப்படும்.

சிவகதைகளுக்கு மகாராஷ்டிர பாஷையிலுள்ள நிருபணங்கள் முதலியவற்றைப் பாடுவார். வடமொழிச் சுலோகங்களையும் தமிழ்ச் செய்யுட்களையும் இடத்திற்கேற்பச் சொல்லும்பொழுதும் அவற்றின் பொருளைக் கூறும்பொழுதும் அவருடைய கல்வித் திறமை நன்ருக விளங்கும். அவர் பாடும்பொழுது மனம் ஸ்தம்பித்து நின்றுவிடும். கதையைக் கூறி விஷயங்களை விளக்கும்பொழுது பருந்தோடு செல்லும் நிழலைப்போலக் கேட்போர் மனம் அக்கருத்துக்களைப் பின் தொடர்ந்தே செல்லும்; அவ்வக்கருத்துக்களுக் கேற்ற மெய்ப்பாடு களைக் கேட்போரிடம் விளங்கக் காணலாம். பக்திரஸம் ததும்பும் விஷயங்களைச் சொல்லும்பொழுது எத்தகைய வன்னெஞ்சமும் கனிந்துவிடும்; கேட்போர்கள் கண்ணீர் உகுத்துப் பரவசரா வார்கள்.

கதை செய்யும்போது மகா வைத்தியநாதையர் இக்கால வழக்கப்படி எழுந்திருந்து நில்லாமல் உட்கார்ந்தபடியே பாடி உபந்யாசம் செய்வார். பக்கவாத்தியக்காரர்களும் உடன் உட் கார்ந்திருப்பார்கள். இதற்காக ஒரு பீடத்தையோ தனி யாசனத் தையோ அவர் உபயோகிப்பதில்லை. பாடும்போதும் கதை செய் யும் போதும் இராமஸ்வாமி ஐயர் தம்புரு மீட்டிக் கொண்டிருப் பார்.

## பதசாரங்கள்

மகாவைத்தியநாதையர் கூறும் பதசாரங்கள் கற்பனைத் திறமும் நுண்மையும் உடையனவாக இருக்கும். பெரியபுராணம், தேவாரம், சூதசங்கிதை முதலிய தமிழ் நூல்களிலிருந்தும் மேற்கோள்களைக் காட்டிப் பொருள் சொல்லுகையில் அவருடைய ஆராய்ச்சியின் ஆழம் புலப்படும். தேவாரக் கருத்துக்களுக்கும் உபநிஷத் கருத்துக் களுக்கும் உள்ள ஒப்புமையை அவர் எடுத்துக் கூறுவார். மங்கள மாக, சஹானராகத்திலுள்ள, ''நந்திகேசாய மங்களம்'' என்னும் கீர்த்தனத்தைப் பாடி அவர் பூர்த்தி செய்வார்.

அவர் கூறிய பதசாரங்களுள் என் நினைவில் உள்ள இரண் டைத் தெரிவிக்கிறேன்:

அப்பூதிநாயனர் சரித்திரப் பிரசங்கத்தைச் செய்தபொழுது பெரியபுராணக் கீர்த்தனத்திலுள்ள ''அப்பூதியார் திருமனையில் வந்தார்'' என்ற கீர்த்தனத்தைப் பாடிப் பொருள் கூறினர்.

அதன் மூன்ரும் சரணத்தில் ''திங்களூர்மாடத்திங்களூர்'' என்ற ஒரு தொடர் உள்ளது. அதற்குப் பதசாரம் சொல்லுகையில் கற்பனை நயம் விளங்க, ''சந்திரன் மேல் ஊர்ந்துசெல்லும் மாடங்களையுடைய திங்களூர் என்பது அர்த்தம்; சந்திரன் குருத்துரோகமாகிய மகா பாதகத்தை அறிந்து செய்தவனுதலின், குருபக்தியிற் சிறந்த அப் பூதியடிகள் வசிக்கும் ஊரிலுள்ள மாடங்களின் ஸ்பரிசத்தாலாவது தன் தோஷம் தீருமென்று எண்ணி வந்ததுபோல இருந்தது'' என்று சொன்னுர்.

சோமாசிமாற நாயனுர் சரித்திரப்பிரசங்கம் ஒருசமயம் அவரால் திருவாவடுதுறை மடத்திற் செய்யப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனுருடைய உதவியால் ஸ்ரீ தியாகேசப்பெருமானைத் தாம் செய்யும் யாகத்துக்கு எழுந்தருளச் செய்யவேண்டுமென்று சோமாசிமாறர் எண்ணினுர்; அதன் பொருட்டுச் சுந்தரமூர்த்தி நாயனுரது விருப்பத்தைப் பெற நினைந்து அவருக்கு உவப்பான தூதுவளைக்கீரையை நாள்தோறும் மாறர் கொடுத்துவந்தாரென்ற செய்தியொன்று, பக்த விலாசத்தைத் தழுவிப் பெரியபுராணக் கீர்த்தனத்தில் அமைக்கப் பட்டிருந்தது. அதைக் கூறும் கீர்த்தனம், ''தூதுவளைக் கீரையைக் காதலாய்க் கொடுத்துவந்தார்'' என்று தொடங்குவது. இதைப் பாடிப் பிரசங்கம் செய்கையில் வைத்தியநாதையர், ''அந்தக் கீரையின் பெயராகிய தூதுவளை யென்பது சுந்தரமூர்த்திநாயனுருக்கு, 'உங்களுக்குத் தூதாகச் சென்ற சிவபெருமானை இணங்கச் செய்ய வேண்டும்' என்ற சோமாசிமாறர் கருத்தைக் குறிப்பித்தலைப்போல இருந்தது'' என்ருர். தூது வளைப்பாயாக வென்று அத்தொடரைப் பிரித்துப் பொருளும் கூறினுர்.

## சிலேடைப் பேச்சு

மகா வைத்தியநாதையரும் அவருடைய தமையனுரும் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர்கள்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் தென்னுட்டு யாத்திரை சென்றிருந்த போது சிலகாலம் மகா வைத்தியநாதையரும் அவர் தமையனுரும் உடன் சென்றனர். நானும் போயிருந்தேன். கம்பனேரி புதுக்குடி என்ற இடத்தில் நாங்கள் மூவரும் அணிந்திருந்த ஏறுமுக ருத்திராட்ச கண்டியிலிருந்த தங்க முலாங்கொடுத்த வெள்ளி வில்லைகளை நீக்கித் தங்க வில்லைகளையே போடும்படி தேசிகர் செய்வித்தனர். அப்பொழுது இராமஸ்வாமி ஐயர், ''வெள்ளிவில்லை தங்கவில்லை'' என்று சாதுரியமாகக் கூறி மகிழ்வித்தார்.

ஒரு சமயம் மகா வைத்தியநாதையர் தம் தமையனுர் முதலியோருடன் குற்ருலம் செல்லும்போது அவருடைய தமையனுர், “எவ்வளவு கல் தாண்டியிருப்போம்?” என்ருர்; மகா வைத்திய நாதையர், “எல்லாங் கல்லுத்தானே!” என்றனர்.

## பக்கவாத்தியத் துணைவர்கள்

மகாவைத்தியநாதையருடன் பக்கவாத்தியம் வாசிப்பவர்களுக்கு அவருடைய சம்பந்தத்தால் உண்டாகும் மதிப்பு அதிகம். வாத்தியக்காரர்களுடைய திறமையை அவர் உரிய காலங்களில் வெளிப்படுத்தச் செய்து பிரகாசப் படுத்துவார். அவருடைய வினிகைகளில் வாத்தியம் வாசிக்கும் கௌரவத்தை வாத்தியங்களிற் புகழ்பெற்றவர்கள் யாவரும் விரும்புவார்கள். அவருடன் இருந்து பிடில் வாசித்தவர் பலர். அவர்களுள், தஞ்சாவூர் சங்கீதவித்துவான் இரட்டைப் பல்லவி சிவராமையருடைய குமாரராகிய சுப்பராயரென்பவரும், பதினைந்து மண்டபம் துரைசாமி ஐயரென்னும் சங்கீதவித்துவானுடைய பேரராகிய சாம்பசிவையரென்பவரும், திருக்கோடிகாவல் கிருஷ்ணையரும் முக்கியமானவர்கள். புகழ்பெற்ற வீணை வைத்தியநாதையரென்பவர் சில சமயங்களில் வீணை வாசிப்பார். சாமராவ் என்னும் தஞ்சை மகாராஷ்டிரர் ஒருவர் பல வருஷங்கள் அவருடன் இருந்து மிருதங்கம் வாசித்துவந்தார். தஞ்சாவூரில் இருந்தவரும் மிருதங்கம் வாசிப்பதில் இணையற்றவரும் வாய்ப்பாட்டில் வல்லவரும் ஆகிய நாராயணசாமி அப்பா என்பவர் சில சமயங்களில் மகா வைத்திய நாதையருடைய வினிகைகளில் மிருதங்கம் வாசித்ததுண்டு; அக்காலங்களில் அந்தச் சங்கீத சிகாமணியின் பாட்டைக் கேட்டு அவர் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையில்லை.

## மாணுக்கர்கள்

மகா வைத்தியநாதையரிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டவர்கள் இராமநாதபுரம் பூச்சி ஐயங்காரென்னும் ஸ்ரீநிவாசையங்காரவர்கள், திருப்பெருந்துறை ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி சிவனவர்கள், சிதம்பரம் அண்ணுமலை சங்கீதக் கல்லூரிப் பிரின்ஸிபால் *ஸ்ரீ சபேசையரவர்கள், உமையாள்புரம் ஸ்ரீ ஸ்வாமிநாதையரவர்கள் முதலியோர்.

*இவர்கள் பல வித்துவான்களுடைய கீர்த்தனங்களைத் தொகுத்து ஒரு புஸ்தகம் வெளியிட்டிருக்கிருர்கள். அதில் ஸ்ரீ மகா வைத்தியநாதையரும் அவருடைய தமையனுரும் இயற்றிய கீர்த்தனங்கள் காணப்படும்.

இவர்களுள் பின்னுள்ள மூவர்களும் இப்பொழுது சங்கீதத்தைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள்.

## சந்ததியார்

மகா வைத்தியநாதையருக்கு வேதாரணிய ஐயர், விசுவநாதையர் என்ற இரண்டு குமாரர்கள் இருந்தனர். இருவரும் இப்பொழுது இல்லை. இருவருடைய சந்ததியார்கள் இப்பொழுது உத்தியோகங்களில் இருந்து வருகிறார்கள்.

## தலைமைப்புகழ்

மகா வைத்தியநாதையருடைய திறமையை அறிந்த வித்துவான்கள் அவருக்குமுன் பாடுவதற்கு அஞ்சுவார்கள். திருவாவடுதுறை மடத்தில் சிலசமயங்களில் சங்கீதவித்துவான்கள் பாடலாமென்று வருவார்கள். அக்காலத்தில் மகா வைத்தியநாதையர் வந்திருந்தால், தங்கள் எண்ணத்தை வெளியிடாமல், ''மகா வைத்தியநாதையரவர்களுடைய பாட்டைக் கேட்டுப் போகவந்தோம்'' என்று சொல்லிவிடுவார்கள். அவருடைய காலத்திலிருந்த வித்துவான்களிற் பெரும்பாலோர் சமஸ்தானங்களிலும் ஆதீனங்களிலும் அவர் இல்லாத காலத்திலே வந்து பாடிப் பரிசு பெற்றனர். அவர் சங்கீதத்தைக் கேட்ட இடத்தில் தங்கள் சங்கீதம் இனிமையைத் தராதென்ற எண்ணமே அதற்குக் காரணம். அவர் காலத்தில் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலிய பிரபல வித்துவான்கள் இருந்தார்கள்.

அவரை ஜயித்ததாகச் சில வித்துவான்கள் வெளியிடங்களிற் சொல்லிக்கொள்வதுண்டு; அஃது உண்மையன்று. அவருடைய தமையனார் மந்திரசக்தியால் மற்ற வித்துவான்களை அடக்கினாரென்று பொறாமைக்காரராகிய சிலர் கூறுவர்; அதுவும் உண்மையன்று.

அவருக்கு அவர்காலத்தில் இருந்த தலைமையான புகழ் வேறு யாருக்கும் இல்லை. ஒருமுறை சென்னையிற் சில கனவான்கள் கவர்னருக்கு விருந்து நடத்தினார்கள். அந்த விருந்தில் ஒரு கர்நாடக சங்கீதக் கச்சேரியை நடத்திக் கவர்னரை மகிழ்விக்க அவர்கள் எண்ணினார்கள். அவ்விருந்துக்கு வரும் பெரிய கனவான்களுக்கிடையே பாடும் தகுதியுடையவர் மகா வைத்தியநாதையரே யென்று தேர்ந்து அவரை வருவித்துப் பாடச்செய்தார்கள்.

அவர் அந்தச் சபையின் பெருமைக்கு ஏற்றவண்ணம் பாடினுர். கவர்னருக்கு விருப்பமாக இருக்குமென்று இங்கிலீஷ் நோட் முதலியவற்றையும் பாடி மகிழ்வித்தார். அந்த விருந்து எல்லா வகையிலும் மேம்பட்டதாக இருந்தது. அதில் மகா வைத்திய நாதையர் வழங்கிய இசைவிருந்து எல்லாவற்றிற்கும் கிரீடம் வைத்தது போல அமைந்தது. அதுகாறும் கவர்னருக்கு முன் கர்நாடக சங்கீத வித்துவான்கள் பாடியதில்லை யென்பர்; ஆதலின் அந்நிகழ்ச்சியால் மகா வைத்தியநாதையருக்கு இருந்த மதிப்பு அதிகமாயிற்று.

மகா வைத்தியநாதையர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் சிறப்புப்பெற்ருர். அவர் சங்கீதத்தைக் கேட்டபேர்களெல்லாம் இன்பக்கடலில் ஆழ்ந்தனர். அவர் கதையைக் கேட்டவர்களெல் லாம் சிவபக்தியுணர்ச்சி பெற்றனர். அவருடைய சங்கீதத் திறமை தமிழ் நாட்டிற்குப் புகழை உண்டாக்கியது; சங்கீத வித்துவான்களுக்கும் பெருமையை அளித்தது. அவர் இன்றும் பலருடைய உள்ளக்கோயில்களில் தெய்வமாக இருந்து விளங்கு கிருர்.

*''வசையுணருமுழு மூடர் துளைச்செவிக்கும் இன்பன்றி
வழங்கல் செய்யா
இசையுணரு மியலுணர்வுங் கவிநவிலு மியலுணர்வும்
ஈசன் பாத
நசையுணர்வும் வழுவா நன் னடையுணர்வு மோருருவா
நணுகி வந்த
திசையுணரு மிசையுளமா வயித்தியநாதன்''

என்று கும்பகோணம் காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்த தியாகராஜ செட்டியார் மனங்கரைந்து அவரைப் பாராட்டி யிருக்கிருர்; அவருடைய உண்மையான உருவம் நான்கு தன்மை களாலாகியதென்பது இச்செய்யுளிற் கூறப்பட்டிருக்கிறது. அவை மூடர்களுக்கும் இன்பந்தரும் சங்கீத ஞானம் அருந்தமிழ்ச் செய்யுள் ஆக்கும் தமிழறிவு, சிவபக்தி, வழுவாத நல்லொழுக்க மென்பவை. இந்த நான்குமே மகா வைத்தியநாதையரின் உருவம். இக்குணங்கள் அழியாதவை; இவை உள்ளவரையில் மகா வைத்தியநாதையரும் அழியா உடம்பினை உடையவரே யாவர்.

---

*பெரிய புராணக் கீர்த்தனச் சிறப்புப்பாயிரம்.

## சிறப்புப்பெயர்கள் முதலியன


அகஸ்தீசுவரர், 143
அசுவமேதப்பிரதக்ஷிணம், 101
அபயாம்பிகாகடாட்சம், 217
அம்பலவாணதேசிகர், 187
அமரசிம்மர் 15, 26
ஆதிப்பையர், 7, 97
ஆதிமூர்த்தி ஐயர் (வீணை), 210
ஆயில்யம் திருநாள், 209
ஆறுமுகநாவலர், 135
ஆனை, ஐயா, 97, 180
இந்துஸ்தானிமார்க்கம், 144
இயற்பகைநாயனுர், 135
இராமசந்திரதொண்டைமான், 182
இராமசாமி ஐயர், 115
இராமபத்திரமூப்பனுர், 13, 25
உடையாளூர், 18
எட்டையபுரம், 185
ஐயாசாமிப்பிள்ளை, 185, 205
ஓமக்குளம், 124
கந்தப்பசெட்டியார், 119
கபிஸ்தலம், 13
கல்லிடைக்குறிச்சி, 188
கலக்டர் ஸிஸே, 123
கீரையர்ச்சனை, 39
குவலயானந்தம், 201
கேசவையா, 8
கோபாலகிருஷ்ணபாரதி, 24
கோவிந்தசிவம், 98
கோவிந்தராஜப்பெருமாள், 113
சக்கரவாகம், 192
சஞ்சீவி சிவராமையர், 143
சடகோப ஐயங்கார், 105
சண்பகமன்னுர், 7, 97
சபேசையர், 232
சாமாசாஸ்திரிகள், 179
சாமுவையர் (கூத்தனூர்), 144
சாரீரவீணை, 138
சிதம்பர உடையார், 158
சிதம்பரஐயர் (போலகம்), 144
சிதம்பரக்கும்மி, 113
சிருங்ககிரி, 208
சிவகதை, 118
சிவசங்கரதீக்ஷிதர், 111
சின்னவைத்தியநாதையர், 187
சின்னையாபாகவதர் (வீணை), 188
சீனுவையங்கார், 179
சுந்தர சுவாமிகள், 142
சுப்பண்ணு, 210
சுப்பராமதீட்சிதர் (கோடக நல்லூர்) 185
சுப்பிரமணிய தேசிகர், 142, 186
சுப்பிரமணியர் (நாகசுரம்) 23
சுப்புக்குட்டிஐயர், (வீணை), 183
சுப்பையர் (வீணை), 183
சுப்பையர் (ஸ்ரீவை), 188
சூத சங்கிதை, 204
சென்னை, 24
சேய்ஞலூர், 219
சேஷண்ணு, 210
தத்துவராயர் பாடுதுறை, 99
தக்ஷிணுமூர்த்தி சிவன், 232
தாண்டவராயத்தம்பிரான், 189
தாயுமானவர் பாடல், 99
தியாகராச செட்டியார், 234

தியாகராஜ சாஸ்திரிகள், 144
தியாகையர், 22, 107
திரிசுதந்தரர், 186
திருக்குன்றம், 5
திருச்சேறை, 20
திருநீலகண்டநாயனுர்சரித்திரம், 135
திருநெல்வேலி, 185
திருப்புன்கூர், 124
திருவாப்பாடி, 219
திருவாவடுதுறை, 186
திருவையாறு, 222
தில்லை தில்லை, 158
துரைசாமி ஐயர், 180
நந்தனுர் உருவம், 112
நந்தனுர்சரித்திரம், 119
நமச்சிவாயமூர்த்தி, 188
நரிமணம், 98
பஞ்சாபகேச சாஸ்திரிகள், 135
பஞ்சுவையர் (சாத்தனுர்), 144
பட்டணம் சுப்பிரமணிய ஐயர், 233
பல்லவி கோபாலையர், 179
பார்த்துக்கடன் கொடுங்கள், 114
பாஸ்கரசேதுபதி, 221
பிச்சுமணிபாகவதர், 188
பிரபோதசந்திரோதயம், 99
புதுக்கோட்டை, 182
பூச்சி ஐயங்கார், 232
பூண்டி அரங்கநாத முதலியார், 220
பெரிய புராணக் கீர்த்தனம், 209
பெரிய வைத்தியநாதையர், 187
பொன்னுசாமி தீக்ஷிதர், 111
மகாவைத்தியநாதையர், 141
மன்ரோ சாஹிபு, 24
மாம்பழக்கவிச்சிங்க நாவலர், 183
மாயூரம், 109
மீனுட்சிசுந்தரம்பிள்ளை, 131, 140-141
முடிகொண்டான், 98
முத்துராமலிங்க சேதுபதி, 183
முத்தைய மூப்பனுர், 7
முதுமக்கட்டாழி, 6
ராதாகிருஷ்ணையர் (கிஞ்சிரா) 144
ராமதாசர், 16
ராமதாஸ், 101, 145
ராஜரத்னதீக்ஷிதர், 111
விசாகந்திருநாள், 209-10
வினிகை, 197
வீணைப்பெருமாளையர், 179
வீரபத்திரபிள்ளை, 197
வெள்ளிநாகசுரம், 23
வேங்கடகிரி மகாராஜா, 221
வேங்கடசுப்பையர், 40, 136
வேதநாயகம் பிள்ளை, 133
ஸ்வாமிநாதையர், 232
ஸகாராம்ஸாஹேப், 210
ஸ்ரீநிவாஸன், 97

# ERRATA

| Page | Line | For | Read |
|---|---|---|---|
| iii | 19 | and physically | and was physically |
| ,, | 20 | so taxing, as | so taxing, that |
| iv | 2 | with slang | full of slang |
| ,, | 16 | intensively | intensely |
| ,, | 22 | saiva apostles | saiva devotees |
| vi | 4 | left | held |
| ,, | 12 | composition | compositions |